This is a digital copy of a book that was preserved for generations on library shelves before it was carefully scanned by Google as part of a project to make the world's books discoverable online.

It has survived long enough for the copyright to expire and the book to enter the public domain. A public domain book is one that was never subject to copyright or whose legal copyright term has expired. Whether a book is in the public domain may vary country to country. Public domain books are our gateways to the past, representing a wealth of history, culture and knowledge that's often difficult to discover.

Marks, notations and other marginalia present in the original volume will appear in this file - a reminder of this book's long journey from the publisher to a library and finally to you.

Usage guidelines

Google is proud to partner with libraries to digitize public domain materials and make them widely accessible. Public domain books belong to the public and we are merely their custodians. Nevertheless, this work is expensive, so in order to keep providing this resource, we have taken steps to prevent abuse by commercial parties, including placing technical restrictions on automated querying.

We also ask that you:

+ *Make non-commercial use of the files* We designed Google Book Search for use by individuals, and we request that you use these files for personal, non-commercial purposes.

+ *Refrain from automated querying* Do not send automated queries of any sort to Google's system: If you are conducting research on machine translation, optical character recognition or other areas where access to a large amount of text is helpful, please contact us. We encourage the use of public domain materials for these purposes and may be able to help.

+ *Maintain attribution* The Google "watermark" you see on each file is essential for informing people about this project and helping them find additional materials through Google Book Search. Please do not remove it.

+ *Keep it legal* Whatever your use, remember that you are responsible for ensuring that what you are doing is legal. Do not assume that just because we believe a book is in the public domain for users in the United States, that the work is also in the public domain for users in other countries. Whether a book is still in copyright varies from country to country, and we can't offer guidance on whether any specific use of any specific book is allowed. Please do not assume that a book's appearance in Google Book Search means it can be used in any manner anywhere in the world. Copyright infringement liability can be quite severe.

About Google Book Search

Google's mission is to organize the world's information and to make it universally accessible and useful. Google Book Search helps readers discover the world's books while helping authors and publishers reach new audiences. You can search through the full text of this book on the web at `http://books.google.com/`

ANDOVER-HARVARD LIBRARY
AH 62ZX A

HARVARD DEPOSITORY
SPECIAL COLLECTION
CIRCULATION RESTRICTED

Digitized by Google

E. Walker,
Binder.

Duplicate.

816.9
Tamil
1839
cop. 2

Digitized by Google

10.11
Tamil

Digitized by Google

India

இது

சத்திய வேதப் புத்தகத்தில் அடங்கிய

காரியங்களைக் காட்டிய

வேதப்பொழிப்பு.

A

COMPENDIUM

OF

SCRIPTURE HISTORY.

Published by the Jaffna Religious Tract Society.

AMERICAN MISSION PRESS, MANEPY.
3d. Ed. 30,000.
1839.

Digitized by Google

31,550

Digitized by Google

சத்திய

வேதப் பொழிப்பு.

---

௧. அதிகாரம்.

உலகம் உண்டான நாள் முதற்கொண்டு சலப்பி
ரளயம் உண்டான நாள்மட்டுஞ் சென்ற வரு
ஷம், ௲௬௱௫௬.

*ஆதி. 1. † கிறி. 4004.

௧. ஆதியிலே பராபரன் உலகத்தைச் சிஷ்டிக்கச் சித்தமாய் முதல் வெளிச்சத்தை உண்டாக்கினார்.

பின்பு ஆகாயவிரிவை உண்டாக்கித் தண்ணீரை ஆகாயத்திலும் பூமியிலும் பிரிந்திருக்கும்படி செய்தார்.

பராபரன் எத்தனை நாளைக்குள்ளே சருவத்தையும் உண்டாக்கினார்?

முதல்நாளில் என்னத்தைப் படைத்தார்?

இரண்டாம் நாளில் என்னத்தைப்படைத்தார்?

* இதில் (ஆதி) என்னும் அடையாளத்துடனே வருகிற இலக்கம் ஆதாம் படைக்கப்பட்டதின் பின்வருஷங்களையும் † (கிறி) என்னும் அடையாளத்துடனே வருகிற இலக்கம் கிறிஸ்து தோன்ற முன் வருஷங்களையுங் காட்டும்.

Digitized by Google

மறுபடி பூமியிலே இருந்த தண்ணீர் ஒருபக்கத்திலே அடங்கி நிற்கவும் பூமியிலே மரம் முதலான தாபரங்கள் உண்டாகவுஞ் செய்தார்.

அதின்மேற் சந்திர சூரிய நட்சத்திரங்களை உண்டாக்கினார்.

அதின்பின் நீர்வாழுஞ் செந்துக்களையும் பறவைகளையுஞ் சிஷ்டித்தார்.

பின்பு தவள்சாதிகளையும் ஊர்வனவற்றையுஞ் சிஷ்டித்து இவைகள் வத்திக்கக்கடவதென்று ஆசீர்வதித்துப் பின்பு அவைகளை எல்லாம் ஆளும்படிக்கு வல்லமையும்ஞானமுஞ் சுத்தமுமுள்ள ஒருமனுஷனை மண்ணினாலும் ஒருமனுஷியை அவன் விலாவெலும்பினாலும் உண்டாக்கினார். இவ்விதமாய் வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள யாவற்றையும் ஏழுநாளுக்குள்ளே உண்டாக்கி முடித்து ஏழாம்நாளிலே ஓய்ந்து அந்த நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார்.

மூன்றாம் நாளில் என்னத்தைப் படைத்தார்?
நாலாம் நாளில் என்னத்தைப் படைத்தார்?
ஐந்தாம் நாளில் என்னத்தைப் படைத்தார்?
ஆறாம் நாளில் என்னத்தைப் படைத்தார்?
ஏழாம் நாளில் என்னத்தைப் படைத்தார்?
எத்தனை பேரை உண்டாக்கினார்?
மனுஷனை என்னத்தினாலே உண்டாக்கினார்?
மனுஷியை என்னத்தினாலே உண்டாக்கினார்?

Digitized by Google

௨. தாம் உண்டாக்கின அந்த மனுஷனுக்கு ஆதாமென்றும் மனுஷிக்கு ஏவாளென்றும் பேரிட்டுப் பரதீசென்னும் ஒரு தோட்டத்திலே அவர்களை வாசம்பண்ணும்படி வைத்துப் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் அவர்களுக்கு ஆட்சியாகக் கையளித்து அந்தத் தோட்டத்தின் நடுவில் இருக்கிற நன்மை தீமை அறியத்தக்க ஒரு விருட்சந் தவிர மற்றெல்லாவிருட்சங்களின் கனிகளையும் புசிக்கச் சொல்லியுந் தாம் விலக்கின மரத்தின் கனியைப் புசித்தால் நிச்சயமாகச் சாவீர்களென்றுஞ் சொன்னார்.

௩. அந்தக் கட்டளைப்படி அவர்கள் நடந்துவந்த காலத்தில் மிகுந்த பாக்கியராய் இருந்தார்கள். பின்னுலே பசாசு ஒரு பாம்பினது வடிவமாய் வந்துசெய்த வஞ்சனையினுலே அந்த மனுஷி பராபரன் புசிக்கவேண்டாமென்று விலக்கின

---

௨. அவர்களுடைய நாமங்கள் என்ன?
அவர்களை எங்கே வைத்தார்?
அவர்களுக்கு என்னத்தைக் கொடுத்தார்?
அவர்களுக்கு என்ன கட்டளையிட்டார்?
விலக்கினமரத்தின் கனியைப்புசித்தால் அவர்களுக்கு என்ன சம்பவிக்குமென்றார்?

௩. அந்தக் கட்டளைப்படி நடக்கையில் என்னசிராய் இருந்தார்கள்?
அந்தக் கட்டளையை ஏன் கடந்தார்கள்?

Digitized by Google

மரத்தின்கனியை எடுத்துத் தானும் புசித்துத் தன் கணவனுக்குங் கொடுக்க அவனும் வாங்கிப் புசித்ததினால் இருவரும் பராபரனுடைய கட்டளையைக் கடந்து தங்கள் நற் குணத்தையும் மனப் பாக்கியத்தையும் இழந்துவிட்டதுமல்லாமல் தங்கள்பின்சந்ததியாரையும் பராபரனுடைய சாபத்துக்கேதுவாக்கினார்கள்.

௪. இப்படி அவர்கள் தம்முடைய கட்டளையை மீறினதினாலே பராபரன் அவர்களையும் அவர்களை வஞ்சித்த பசாசையும் அவர்கள் இருக்கும்படி தாம் உண்டுபண்ணின பூமியையுஞ் சபித்தார். எப்படியெனில், மனிதன் வேர்வையுடனே வேலைசெய்து சீவனம் பண்ணுவதும், மனுஷி வேதனையோடே பிள்ளைப் பெறுவதுமன்றி, அவர்களுக்கு மரணமும் வருமென்றும், பாம்பு வயிற்றினாலே ஊர்ந்து மண்ணைத்தின்னு

கட்டளையை மீறிக் கனியை முதற் புசித்ததார்?
ஆதாமுந் தின்னும்படி செய்ததார்?
பசாசு என்னவேஷங் கொண்டுவந்தது?
அந்தக் கட்டளையைக் கடந்ததினால் என்னத்தை இழந்து போய்விட்டார்கள்?
வேறென்னத்துக்கேதுவானார்கள்?
ஆதாமுக்குப் பராபரன் சொன்ன சாபம் என்ன?
ஏவாளுக்குச் சொன்ன சாபம் என்ன?
சருப்பத்துக்குச் சொன்ன சாபம் என்ன?

Digitized by Google

மென்றும், பசாசுக்கும் இஸ்திரிக்கும் பசாசின் வித்துக்கும் இஸ்திரியின் வித்துக்கும் பகை உண்டாயிருக்குமென்றும், அவர்கள் நிமித்தம் பூமி சபிக்கப்பட்டு முள்ளுக்களை முளைப்பிக்குமென்றுஞ் சபித்துத் தோட்டத்தை விட்டு அவர்களைப் புறம்பே துரத்திவிட்டார்.

௫. அப்படிச் சபித்தும் அவர்கள் மேல் இரக்கங்கொண்டபடியால் அவர்கள் சந்ததியிலே தம்முடைய குமாரன் மனிதனாகவந்து பிறந்து பசாசைக் கீழ்ப்படுத்தி அவர்களையும் அவர்கள் சந்ததியாரையும் ஈடேற்றுவார் என்பது விளங்கும் படி இஸ்திரியின் சந்ததியாற் பசாசின் தலை நசுங்குமென்று ஒரு குறிப்புச் சொன்னார்.

௬. பின்பு அவர்களிடத்திலே காயீனென்றும் ஆபேலென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் விசுவாசமற்றவனாகிய காயீன் பழங்களையும் விசுவாசமுடையவனாகிய ஆ

பூமிக்குச் சொன்ன சாபம் என்ன?
அந்தச் சாபம் பூமிக்கோ மனிதனுக்கோ?
பின்னும் அந்தத் தோட்டத்திலேதான் இருந்தார்களா?
அவர்களுக்கு யாதொரு இரக்கமுஞ் செய்யவில்லையா?
அப்படி அவர் சொன்ன வாக்குத்தத்தத்தின் கருத்தென்ன?
ஆதாமுக்கும் ஏவாளுக்கும் எத்தனை பிள்ளைகள் உண்டு?
அவர்களுடைய பேர் என்ன? [ளுன்?
பலிசெலுத்தும்படி காயீன் என்னத்தைக்கொண்டுபோ

Digitized by Google

பேல் ஆட்டுக்குட்டியையுங் கத்தருக்கு நேர்த்திக்கடனுகக் கொண்டுவந்தார்கள். கத்தர் காயீன் கொண்டுவந்த நேர்த்தியை ஏற்றுக்கொள்ளாமல் ஆபேல் கொண்டுவந்ததை ஏற்றுக்கொண்டார்.

எ. அப்பொழுது காயீன் தன் சகோதரனுகிய ஆபேலின் பேற்பொருமைகொண்டு அவனைக் கொன்றுபோட்டபடியாற் பராபரன் அவனை நோக்கி உன் சகோதரனுடைய இரத்தம் பூமியில் இருந்து என்னை நோக்கிச் சத்தமிட்டுக்கொண்டிருக்கின்றது. உன் சகோதரனுடைய இரத்தத்தை உன்கையிலே வாங்கிக்கொள்ளும்படி வாயைத்திறந்த இந்தநிலத்திலே நீ இராதபடிக்குச் சபிக்கப்பட்டிருக்கிருய். நீ நிலத்திற் பயிரிடுகிற பொழுது அது தன் பலனை உனக்குக் கொடாது. பூமியிலே நிலையற்றவனுமாய் அலைகிறவனுமாயிருப்பாயென்றுசொல்லி அனுப்பிவிட்டார்.

ஆபேல் என்னத்தைக் கொண்டுபோனுன்?
பராபரன் ஆபேலுடைய பலியை ஏன் ஏற்றுக்கொண்டார்?
காயீனுடைய பலியை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை?
காயீன் ஆபேலை ஏன் கொன்ருன்?
பராபரன் காயீனுக்குஎன்ன சொன்னுர்?
அதின் நிமித்தம் அவனுக்குவந்த தண்டனைஎன்ன?

Digitized by Google

இந்தப்படம் என்னத்தைக்காட்டுகிறது?
ஆபேல் எவன்?
பலிபீடம் எந்தப்பக்கத்தில் இருக்கின்றது?

Digitized by Google

பின்பு அவனிடத்திற் பிறந்தபுத்திரர் பலபல தேசங்களுக்குப்போய் லௌகிக சம்பாத்தியத்திலே தேறினும் தேவபத்தி இல்லாதபடியினாலே மனிதனுடைய குமாரரென்று பேர்ப்பட்டார்கள்.

அ. அதற்குப் பின்பு ஆதாம் தேவபத்தனான சேத்தென்பவனையும் வேறுசில பிள்ளைகளையும் பெற்றான். அவனுடைய ஆயுள்நாள் ௯௱௩௰.

இந்தச் சேத்தினுடைய புத்திரர் தேவபத்தியுள்ளவர்களாகித் தேவ புத்திரர் என்று அழைக்கப்பட்டார்கள்.

சேத், ஏனோஸ் முதலான சிலபிள்ளைகளைப் பெற்றான். இவனுடைய ஆயுள் ௯௱௰௨.

ஏனோஸ் கேனானையும் வேறு பிள்ளைகளையும் பெற்றான். இவனுடைய ஆயுள் ௯௱௫.

கேனான் மகலாலேயேலைப் பெற்றான். இவனுடைய ஆயுள் ௯௱௰.

பத்தியில்லாதவர்கள் என்ன பெயர்ப்பட்டார்கள்?
ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வேறு பிள்ளைகளும் உண்டோ?
சேத்தென்கிறவருடைய புத்திரர் எப்படிப்பட்டவர்கள்?
அவர்கள் என்ன பேர்ப்பட்டார்கள்?

Digitized by Google

மகலாலேயேல், யாரேத்தைப் பெற்றான். அவனுடைய ஆயுள் ௮௱௯௫.

யாரேத், ஏனோக்கைப் பெற்றான். அவனுடைய ஆயுள் ௯௱௬௨.

ஏனோக், மேத்துசலாக்கையும் வேறுபிள்ளைகளையும் பெற்றுப் பராபரனுக்கு உவந்தவனென்று சாட்சிபெற்றுக்கொண்டு மரணமடையாமல் மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். அவனுடைய ஆயுள் ௩௱௬௫.

மேத்துசலாக், லாமேகைக்யும் வேறு பிள்ளைகளையும் பெற்றான். அவனுடைய ஆயுள் ௯௱௬௯.

லாமேக், நோவாவைப்பெற்றான். அவனுடைய ஆயுள் ௭௱௭௭.

௧. நோவா, சேம், காம், யாப்பேத்தென்கிற மூன்று புத்திரரைப்பெற்றான். இப்படியே ஒவ்வொருவரிடத்திலுஞ் சந்தானம் பெருகி உலகம் உண்டாகி ஆயிரம் வருஷமளவிலே சனங்

ஆதாம் முதல் நோவா இருக எத்தனை தலைமுறை உண்டு? அவர்கள் எத்தனை எத்தனை வருஷங்களுக்கு இருந்தார்கள்?

அவர்களுடைய பேர் என்ன?

நோவாவுக்கு எத்தனை பிள்ளைகள்.

Digitized by Google

கள் உலகத்தில் மிகுதியாய்ப் பரம்பி மனிதபு த்திரரென்று அழைக்கப்பட்டவர்களோடே தேவ புத்திரரென்று அழைக்கப்பட்டவர்கள் சம்ப ந்தங்கலந்து அக்கிரமக்காரராய்ப் போன பொழுது தேவபத்தியுள்ளவனை நோவாவும் அவனுடைய மனைவியும் மக்கள் மருமக்களுமே அல்லாமல் மற்றவர்கள் எல்லாரும் பொல்லாதவர்களாயிருந்ததினிமித்தம் பராபரன் அவர்கள் குணப்பட்டு நல்லவர்களாகாதிருந்தாற் சலப்பிரளயத்தினாலே அழித்துப்போடுவோம், ஆதலால் நீயும் உன் குடும்பத்தாரும் அதற்குத் தப்பிக்கொள்ளும்படி ஒரு பேழையை உண்டுபண்ணிக்கொள்ளென்று நோவாவுடனே சொன்னார்.

ம. அவன் அதைக் கேட்டபின் ஒரு பேழையைச் செய்து முடிக்க நூற்றிருபது வருஷஞ் சென்றது. அந்த நூற்றிருபது வருஷமும்

அந்நாட்களிலே இருந்த சனங்களுடைய குணம் என்ன?
அவர்கள் செய்த கொடுமையான பாவம் என்ன?
குணப்படாதிருந்தால் அவர்களுக்கு என்னசெய்வோமென்றார்?
சலப்பிரளயத்துக்குத் தப்பிக்கொள்ள நோவாவை என்ன செய்யச் சொன்னார்?
பேழை செய்து முடிக்க எத்தனைவருஷஞ் சென்றது?

Digitized by Google

இந்தப்படம் என்னத்தைக்காட்டுகிறது?

பராபரன் அவர்களுக்கு அவனைக்கொண்டு நல்ல புத்திகளைச் சொல்லுவித்தும் அவர்கள் கேளாததினாலே நோவாவும், அவன் மனைவியும், சேம், காம், யாப்பேத்தென்னும் மூன்று பிள்ளைகளும், அவர்களுடைய மனைவிகளுஞ், சுத்த சீவன்களில் ஏழேழு சோடுஞ், சுத்தமற்றவைகளில் ஒவ்வொரு சோடும் அந்தப் பேழைக்குட்புகும்படி செய்தபின் நாற்பது நாளாக இரவும் பகலுஞ் சோனாமாரியாக மழை பெய்யவுஞ் சமுத்திரங்களைப் பெருகவும் பண்ணினார்.

௰௩. அப்பொழுது மலைகளுக்கு மேலே பதினைந்து முழ உயரத்துக்குத் தண்ணீர் பெருகி நின்றது. அதினாலே பேழைக்குட்பட்ட மனிதருஞ் சீவப்பிராணிகளுமேயன்றி மற்றுஞ் சருவமும் அழிந்தது.

பராபரன் சொன்னவைகளை நோவா சனங்களுக்குச்சொன்னாரோ?
அவர்கள் கேட்டார்களோ?
நோவாவுடனே கூடப்பேழைச்குட்பட்டவர்கள் ஆர்?
அவர்களேயன்றி வேறென்ன பேழைக்குட்பட்டது?
ஒவ்வொரு சாதியில் எத்தனை?
பூமியிலே சலப்பிரளயம் எப்படி வந்தது?
தண்ணீர் எவ்வளவு உயரத்துக்கு நின்றது?
சருவசீவாத்துமாக்கள் அழிந்ததோ?

Digitized by Google

௨. அதிகாரம்.

சலப்பிரளயம் முதற்கொண்டு ஆபிரகாமை
அழைத்தநாள் மட்டுஞ் செல்ற
வருஷம். ௪௱௨௭.

ஜ. 1656. கிறி. 2348.

௧. இந்தச் சலப்பிரளயம் உலகம் உண்டாய் ௲௬௱௫௰௬, வருஷத்துக்குப்பின் சம்பவித்தது. தச் சலப்பிரளயத்தின் காரியஞ் சத்தியவே புத்தகத்திலே மாத்திரமல்ல, வேறு சரித்தி புத்தகங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றது.

௨. இந்தச் சலப்பிரளயம் வந்து ௱௫௰ நாட் சென்றபின் அந்த வெள்ளத்தில் பதினைந்து முழமட்டாகவற்றிப் பேழை ஆராத்தென்ற மலையிலே வந்து பொறுத்தது. நோவா முதலானவர்களுஞ் சீவசெந்துக்களும் பேழைக்குட்பட்டநாள் முதல் அவர்கள் வெளியே வந்தநாள்வரைக்கும் ஒருவருஷமும் பத்துநாளுஞ் சென்றது.

உலகம் உண்டாய் எத்தனை வருஷத்துக்குப்பின் சலப்பிரளயஞ் சம்பவித்தது?

இதைப்பற்றி வேறுசரித்திரங்களிலுஞ் சொல்லியிருக்கின்றதோ?

எத்தனை நாளைக்குப்பின்பு தண்ணீர் குறைந்தது?

பேழை தங்கினபோது தண்ணீர் எத்தனை முழமட்டாகக் குறைந்தது?

என்னத்தின்மேலே பேழை பொருந்தது? [சென்றது?

நோவாமுதலானவர்கள்பேழையிலிருக்க எத்தனைகாலஞ்

Digitized by Google

இந்தப்படம் என்னத்தைக்காட்டுகிறது?
இந்தமனுஷன் ஆர்?
இந்தமனுஷன் என்னசெய்கிறான்?

Digitized by Google

௩. பின்பு பராபரன் அவர்களைப் பார்த்து நீங்கள் உலகத்திலே திருத்தியடைந்திருங்கள். நாம் இனிச் சலப்பிரளயத்தினாலே மனிதரை அழிப்பதில்லை என்று திருவாக்கருளினார்.

௪. அதின்பின்பு யாப்பேத், கோமோ முதல் எழுபிள்ளைகளைப் பெற்றான். கோமோ அஸ்கேனஸ் முதலாக மூன்றுபிள்ளைகளைப் பெற்றான். காம், கூஸ், மிஸ்றயீம், பூத், கானான் என்கிற நாலு பிள்ளைகளைப் பெற்றான். கூஸ், சேபா முதலான ஐந்து பிள்ளைகளைப்பெற்றான். மிஸ்றயீம், லூதீம் முதலிய எழுபிள்ளைகளைப் பெற்றான். கானான் சீதோன் முதலிய பதினொரு புத்திரரைப் பெற்றான். சேம், ஏலாம், ஆராம் அற்பக்சாத் முதலிய ஐந்து புத்திரரைப் பெற்றான்.

நோவாவின் பின்சந்ததியும் அவர்கள் வயதும்.

	வயது,	பிள்ளைகள்.
நோவா	௯௱௫௰	சேம், காம், யாப்பேத்து.
சேம்	௯௱	அற்பக்சாத்து முதல்.
அற்பக்சாத்து	௪௱௩௮	சாலாக்.
சாலாக்	௪௱௩௩	ஏபேர்.

பராபரன் நோவாவுடனே பண்ணின உடன்படிக்கை என்ன?
நோவாவுடைய பிள்ளைகளுக்குப் பேர் என்ன?
மூத்தகுமாரனுக்குப் பேர் என்ன?
இயாப்பேத்துடைய வமிசத்தார் ஆர்?

Digitized by Google

	வயது	பிள்ளைகள்
ஏபேர்	௪௱௬௪	பேலேக்.
பேலேக்	௨௱௩௯	ரேகூ.
ரேகூ	௨௱௩௯	செருக்.
செருக்	௨௱௩௰	நாகோர்.
நாகோர்	௱௪௮	தேராக்.
தேராக்	௨௱௫	ஆபிரகாம், நாகோர், ஆரான்,
ஆபிரகாம்		ஈசாக்கு.
நாகோர்	பெத்துவேல், ரேபேக்காளுடைய பிதா	
ஆரான்		லோத்.

௫. இப்படியே சில வருஷத்துக்குள் அநேக சனங்கள் மறுபடியும் பெருகி ஒரேயிடத்தில் ஒருகூட்டமாயிருந்து ஒரே பாஷையைப் பேசினார்கள். இவர்களிற் சிலர்தவிர மற்றவர்கள் எல்லாரும் பொல்லாதவர்களானார்கள். அக்காலத்திலே அவர்களுக்குள்ளே அநேகர் பலசாலிகளும் பேர்பெற்ற வீரவான்களுமாயிருந்ததினால் எல்லாரும் ஒன்றாய்த் திரண்டு தாங்கள் கீர்த்தியடையும்படி ஒரு பெரிய கோபுரங் கட்ட நி

நோவாமுதல் ஆபிரகாம் வரைக்கும் உண்டான தலைமுறை என்ன?
அவர்களுடைய குணம் என்ன?
அவர்களுக்கு எத்தனை பாஷைகள்?

Digitized by Google

இந்தப்படம் என்னத்தைக்காட்டுகிறது?
இதிற்கோபுரமேது?
இந்தமனிதர் என்னவேலைசெய்கிறார்கள்?

Digitized by Google

னைத்து அதற்கு வேண்டிய பொருள்களை எ

பாபேல் ல்லாஞ் சம்பாதித்துக்கொண்டு கோபு
கிறி. ரத்தைக் கட்டுகையில் அவர்கள் முயன்
2,347. றகாரியம் முடியாதபடிக்குப் பராபர

ன் ஒருவர் பேசுவது ஒருவருக்குவிளங்காமல் அவர்கள் பேச்சைத் தலைதடுமாற்றமாக்கினார். இதினாலே அப்பட்டணத்துக்குப் பாபேலென்றபேர் வந்தது.

௬. அப்பொழுது அவர்களுக்குள்ளே ஒருவர் பேச்சு ஒருவருக்குத் தெரியாததினாற் கோபுரங் கட்டுகிறதைவிட்டுச் சேர்ந்தசேர்ந்த படியே பலபல திக்கிலுஞ் சிதறுண்டு யாப்பேத்துடைய வமிசத்தார் ஐரோப்பாக் கண்டத்திற்சேர்ந்து சில காலத்தின் பின் உரோமை முதலான சிலபட்டணங்களைக் கட்டி அங்கே குடியிருந்தார்கள்.

௭. காமுடைய வமிசத்தார் ஆபிரிக்காக் கண்டத்திலுஞ் சீரிய தேசத்திலுஞ் சேர்ந்து பாபி

என்னத்தைக் கட்டினார்கள்?
அவர்கள் கட்டின பட்டணம் என்ன?
முயன்றவேலையை முடித்தார்களோ?
இயாப்பேத்தின் வமிசத்தார் எங்கேசேர்ந்தார்கள்?
மனிதர் பலபல பாஷைகளாய்ப்பேசினகாரணம்என்ன?
காமுடைய வமிசத்தார் எங்கே போனார்கள்?

லோன், சோதோம், கொமோரா, நினிவே, தீரு, சீதோன் முதலான பட்டணங்களைக்கட்டி அங்கே குடியேறினார்கள்.

அ. சேமுடைய வமிசத்தார், இந்த தேசத்திலுஞ் சீனதேசத்திலுஞ் சேர்ந்து பலபட்டணங்களைக்கட்டிப் பலசாதியாகப் பிரிந்து பல இடங்களிலுங் குடியேறி இருந்தார்கள். உலக இரட்சகராகிய கிறிஸ்துநாதர் பிறந்த யூதச்சாதியாரும் இந்தச் சேமுடைய வமிசத்தாராயிருந்தார்கள்.

௯. இப்படியே இவர்கள் சிதறுண்டு மெய்யான தேவனைமறந்து போனபோன திக்கிலே தங்கள் இஷ்டப்படியே தெய்வமல்லாதவர்களையும் விக்கிரகங்களையும் வணங்கிவந்தார்கள்.

௰. இப்படி மனுஷர் எல்லாருந் தம்மை மறந்து போனதைப் பராபரன் கண்டு மனிதருக்குள்ளே தம்மை அறிகிற அறிவு தலைப்படப்பண்ணநினைத்துக் கலுதேயாநாட்டிலே ஊர் என்றந

என்னென்னபட்டணங்களைக் கட்டினார்கள்?
சேமுடைய வமிசத்தார் எங்கேபோனார்கள்?
அவர்களும்பட்டணங்களைக் கட்டினார்களோ?
கிறிஸ்து ஆருடைய வமிசம்?
அந்தக் காலத்தில் அவர்கள் எல்லாரும் என்ன விதமான வணக்கமுடையவர்கள்?
அவர்களுக்குள்ளே தம்மை அறிகிற அறிவு தலைப்படப்பண்ணப் பராபரன் என்ன கட்டளை கொடுத்தார்?

Digitized by Google

கரியிலிருந்த ஆபிரகாமென்பவனையழைத்தார்.

௰க. அப்படி அழைத்து நீ உன்னினத்தையும் உன் ஊரையும் விட்டு நான் சொல்லுகிற தேசத்திலே வந்து தங்கியிரு. உன் வமிசத்தைச் சமுத்திரக் கரையின் மணலைப் போலப் பெருகப் பண்ணுவோம். சகல சனங்களுக்கும் உன்னாலே ஆசீர்வாதம் வருமென்று சொன்னார்.

௰உ. இப்படியே சலப்பிரளயம் வந்து சாஉஎ. வருஷத்தின் பின் கர்த்தர் ஆபிரகாமை அழைத்து இதைச்சொன்னார்.

---

௩. அதிகாரம்.

ஆபிரகாம் அழைக்கப்பட்ட நாள்முதற்கொண்டு இஸ்ரவேற் சனம் எகிப்த்துத் தேசத்தை விட்டுப் புறப்பட்டநாள்மட்டுஞ் செல்றவஷநம் சாஙய.

ஆதி. 2,083. கிறி 1,921.

க. ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளையுந் தன் சகோதரனுடைய மகனாகிய லோத்தை

ஆபிரகாமுக்குப் பராபரன் என்ன கட்டளை கொடுத்தார்?
ஆபிரகாமுடனே பண்ணின உடன்படிக்கை என்ன?
சலப்பிரளயத்துக்கு எத்தனை வருஷத்திற்குப்பின் ஆபிரகாமை அழைத்தார்? சஉஎ

Digitized by Google

யுங் கூட்டிக்கொண்டு கர்த்தர் சற்பித்த படி கானான் தேசத்துக்குப் போய் அங்கே குடியிருந்தான்.

௨. அப்படியே இருந்து சில காலத்திற் பின் லோத்துப் பிரிந்து காமுடைய வமிசத்தார் கட்டிய சோதோம் பட்டணத்திலே போய்க் குடியிருந்தான்.

௩. அந்தச் சோதோம் பட்டணத்தார் மிகுந்த கடினமுள்ளவர்களுந் தீமைக்கு அஞ்சாத கொடியவர்களும் மிகவும் அருவருப்பான பாவங்களைச் செய்கிறவர்களுமாய் இருந்தார்கள். அதின் நிமித்தம் பராபரன் லோத்தையும் அவன் மனைவியையும் அவனுடைய இரண்டு புத்திரர்களையுஞ் சேவாருக்கு அனுப்பி அந்தப் பட்டணத்தின் மேல் அக்கினியுங் கந்தகமும் வானத்தில் இருந்து வரப்பண்ணி அதை எரித்துப்போட்டார்.

௪. அந்தப்பட்டணத்தை விட்டுப் புறப்படும்பொழுது அதைத் திரும்பிப்பாராமலும் வ

பின்பு ஆபிரகாம் எந்த ஊருக்குப் போனான்?
அவனுடனே கூடப்போனதார்?
பின்பு லோத்து எங்கே போனான்?
சோதோம்பட்டணத்தார் எவ்விதகுணமுள்ளவர்கள்?
பராபரன் அவர்களை என்ன செய்தார்?

Digitized by Google

ழியிலே நில்லாமலும் போகவேண்டுமென்று கத்தர் சொன்ன வார்த்தையைக் கேளாமல் லோத்தின் மனைவி இடைவழியிலே நின்று அதைத் திரும்பிப்பார்த்ததினாலே அவள் உப்புத் தூணாய்ப் போனாள். மற்றவர்கள் சோவாருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ரு. ஆபிரகாங்கானான் தேசத்தில் இருந்து அடிமைப் பெண்ணாகிய ஆகாருடனே இஸ்மவேலையுந் தனது குடிப்பெண்ணாகிய சாராளுடனே கூடி ஈசாக்கையும் பெற்றான். அப்பொழுது பராபரன் ஆபிரகாமிடத்தில் இருந்த விசுவாசத்துக்குந் தாம் அவனோடே பண்ணப் போகிற வாக்குத்தத்தத்துக்கும் அடையாளமாக உன்னிடத்திற் பிறக்கிற ஆண்பிள்ளைகளை எல்லாம் விருத்தசேதனம் பண்ணுவாயாகவென்று அவனுக்குக் கட்டளையிட்டார்.

உலோத்தும் அவன் சமுசாரமுங் கூட அழிந்துபோனதோ?
உலோத்தின் மனைவிக்குச் சம்பவித்ததென்ன?
மற்றவர்கள் எங்கே போனார்கள்?
ஆபிரகாமுக்கு எத்தனை பிள்ளைகள்?
அவர்களுடைய பேர் என்ன?
அவர்களுடைய தாய்மார் ஆரார்?
ஆபிரகாமுக்கு விருத்தசேதனத்தைக் கட்டளையிட்ட முகாந்தரம் என்ன?

Digitized by Google

௬. அக்காலந் தொடுத்து விருத்தசேதனம் பண்ணுகிற வழக்கம் நடக்கத் தலைப்பட்டது. ஆபிரகாமின் அடிமைப்பெண்ணாகிய ஆகாருடைய மகனான இஷ்மவேலுடைய வமிசத்தார் பெருகி அராபிய தேசத்திலும் மற்றுஞ் சுற்றுப்புறங்களிலுங் குடியேறித் தங்கள் தகப்பனாகிய இஷ்மவேலைப்போலத் துணிகரமனமுள்ளவர்களாய் இருந்து மற்றெல்லாருக்கும் இவர்கள் விரோதிகளாயும் மற்றவர்கள் இவர்களுக்கு விரோதிகளாயும் இருக்கிறதுமன்றிக் கிறிஸ்துநாதரை அறியாததினாலே இதுவரைக்குஞ் சுன்னத்தும் பண்ணி வருகிறார்கள்.

௭. பின்பு பராபரன் தாம் என்னென்ன கட்டளையிட்டாலும் அதின் அதின் படியே ஆபிரகாங்கேட்டு நடப்பான் என்பதை அறிந்தும் அதைப் பிறருக்கும் வெளிப்படுத்தும் பொருட்டு அவனுடனே நீ உன்னுடைய புத்திரனாகிய ஈசாக்கை நீ அழைத்துக்கொண்டு மோரியர்தேச

விருத்தசேதனம் எப்போது தொடங்கினது?
இஷ்மவேலருடைய வமிசத்தார் எங்கே இருந்தார்கள்?
இஷ்மவேலருக்கு என்ன குணம்?
இக்காலத்திலே சுன்னத்துப்பண்ணுகிறவர்கள் ஆர்?
ஆபிரகாமுடைய தேவபத்தியைப் பராபரன் எப்படிச் சோதித்தார்?
எங்கே போகச் சொன்னார்?

Digitized by Google

த்துக்குப் போய் அங்கே நான் உனக்குச் சொல்லும் மலையின்மேலே அவனைப் பலியிடுவாயாகவென்று கட்டளையிட்டார்.

அ. அவனும் அப்படியே செய்யத்துணிந்து அதிகாலமே எழுந்திருந்து தன் கழுதையின்மேல் ஏறிக்கொண்டு தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையுங் கூட்டிக்கொண்டு தகனப் பலிக்குக் கட்டைகளை

கி.மு. 1871. யும் எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போய் மூன்றாம் நாளிலே பராபரன் தனக்குக் குறித்துச்சொன்ன தலத்தைத் தூரத்திலே கண்டவுடனே தன் வேலைக்காரரைப் பார்த்து நீங்கள் இங்கே கழுதையோடே நில்லுங்கள். நானும் என் மகனும் அவ்விடம் மட்டும் போய்ப் பராபரனைப் பணிந்துகொண்டு திரும்பிவருவோமென்று சொன்னான். பின்பு கட்டைகளை எடுத்துத் தன் குமாரனாகிய ஈசாக்கின்மேற் சுமத்தித் தன் கையிலே நெருப்பையுங் கத்தியையும் எடுத்துக் கொண்டு இருவருங் கூடிப் போகையில் ஈசாக்குத் தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கித் தகப்பனே, நெருப்புங் கட்

ஆபிரகாம் ஆரைக்கூட்டிக்கொண்டுபோனான்?
வேறென்னத்தைக் கொண்டு போனான்?
தன் வேலைகாரருடனே என்னத்தைச் சொன்னான்?

டையும் இங்கே இருக்கின்றதே, தகனப்பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கேயென்றான்.

௬. அப்பொழுது ஆபிரகாம் மகனே, தமக்கு யோக்கியமான ஆட்டுக்குட்டியைக் கத்தர் தாமே சம்பாதித்துக் கொள்வாரென்றான். அப்புறம் இருவரும் நடந்து பராபரன் குறித்துச் சொன்ன தலத்திலே போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது ஆபிரகாம் அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கி அதின் மேற் கட்டைகளை அடுக்கித் தன் குமாரனைக் கட்டி அதின்மேற் கிடத்தித் தன் கையை நீட்டி அவனுடைய கழுத்தை அறுக்கும்படிக்குக் கத்தியை எடுத்தான்.

ம. உடனே கத்தர் ஆபிரகாமே, ஆபிரகாமே, உன் மகன் மேல் உன் கையை நீட்டி அவனுக் கொன்றுஞ் செய்யாதே, நீ உன்னுடைய ஒரேபேறான குமாரனென்றும் பாராமல் அவனை நமக்குப் பலி இடுகிறதற்கு ஒருப்பட்டதினால் உன்னுடைய பயபத்தியை அறிந்திருக்கிறோமென்றார். ஆபிரகாந் திரும்பிப் பார்க்கை

ஈசாக்கு என்ன கேட்டான்?

ஆபிரகாம் ஈசாக்குக்கு மறுமொழியாக என்ன சொன்னான்?

ஆபிரகாம் இசாக்குக்கு என்ன செய்தான்?

ஆபிரகாம் இசாக்கை ஏன் பலியிடவில்லை?

Digitized by Google

யில் ஒரு செடியிலே கொம்பை மாட்டிக்கொண்டு நிற்கிற ஆட்டுக்கடாவைக் கண்டு கிட்டப்போய் அதைப் பிடித்துப் பராபரனுக்குப் பலியிட்டுத்தன் குமாரனை அவிழ்த்து விட்டான்.

௰௧. இப்படியே பராபரன் ஆபிரகாமைச் சோதித்து எல்லாவற்றிலும் உத்தமனென்று கண்டு அவனைநோக்கி உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவுங் கடற்கரை மணலைப்போலவும் பெருகப்பண்ணுவோம் என்றும் உன் சந்ததியினாலே பூமியின் சனங்கள் எல்லாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றுஞ் சொல்லி ஆசீர்வதித்தார்.

௰௨. அவனும் பராபரனை மிகுந்த பத்திவிசுவாசத்துடனே வணங்கிவந்ததினால் அவனை விசுவாசிகளுக்குப் பிதாவென்றும் விசுவாசிகளை அவனுடைய பிள்ளைகளென்றுஞ் சொல்லுவார்கள்.

௰௩ முன் சொல்லிய ஆபிரகாமுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு ஏசாவென்றும் யாக்கோ

ஆபிரகாம் வேறேயென்னத்தைப் பலிசெலுத்தினன்?
ஆபிரகாம் பராபரனுடைய பார்வைக்கு எப்படித்தோற்றினன்?
அவனுக்கு என்ன ஆசீர்வாதஞ் சொன்னார்?
இதினால் ஆபிரகாமுக்குக் கிடைத்த பேர் என்ன?

Digitized by Google

பென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அ
வர்களில் மூத்தவனாகிய ஏசாவு தன் முதலுரிமை
ச் சுதந்திரத்தை மதியீனத்தினால் அற்பமாக நி
னைத்து அந்த ஒரு வேளைப் போசனத்துக்காகத்
தன் தம்பியாகிய இயாக்கோபுக்குக் கொடுத்து
இழந்துவிட்டான்.

யச. அதின் பின்பு இசாக்கு முதிர்வயதான
பொழுது தன் மூத்தகுமாரனாகிய ஏசாவை ஆ
சீர்வதிக்க நினைத்திருப்பதை இயாக்கோபு அறி
ந்து தாய் சொல்லிக்கொடுத்த யுத்தியினாலே தக
ப்பனிடத்திற் போய்த் தந்திரமாக அதைப் பெ
ற்றுக்கொண்டான்.

யரு. பின்பு இயாக்கோபு பராபரனை மன்றாடு
கிற பொழுது பத்திவயிராக்கியத்தைச் சாதித்து அ
வருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட
படியால் அவனுக்கு இஸ்ரவேலென்ற பேரும்
அவனுடைய சந்ததியாருக்கு இஸ்ரவேற் சனங்

இசாக்குக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தார்கள்?
அவர்களுடைய பேர் என்ன?
எவன் மூத்தவன்?
ஏசாவு இயாக்கோபுக்கு என்னத்தை விற்றான்?
இயாக்கோபு முதற்பிறப்புச் சுதந்திரத்தைத் தகப்பனி
டத்தில் எப்படிப் பெற்றான்? [ற்று?
இயாக்கோபுக்கு ஏன் இஸ்ரவேலென்ற பேர் உண்டாயி

Digitized by Google

கனென்ற பேரும் உண்டாயிற்று.

௰கூ. இந்த இயாக்கோபுக்கு இலேயாளென்றும் இராகேலென்றும் இரண்டுமனைவிகள் இருந்தார்கள். அவர்களில் இலேயாளிடத்தில், ரூபன், சிமேயோன், லேவி, யூதா, இசகார், செபுலோன் என்கிற ஆறு பிள்ளைகளும்; அவளுடைய வேலைக்காரியாகிய சில்பாளிடத்திலே, காத்து, ஆசேர் என்னும் இரண்டு பிள்ளைகளும்; இராகேலிடத்தில், இயோசேப்பு, பென்யாமின் என்னும் இரண்டு பிள்ளைகளும்; அவளுடைய வேலைக்காரியாகிய பில்க்காளிடத்திலே தான், நபுதலி என்னும் இரண்டு பிள்ளைகளுமாக இயாக்கோபுக்குப் பன்னிரண்டு புத்திரர் பிறந்தார்கள்.

௰எ. இந்தப் பன்னிரண்டு பிள்ளைகளும் பிற்காலத்திற் பெருகிப் பன்னிரண்டு கோத்திரமானார்கள். இந்தப் பன்னிரண்டு பேருக்குள்ளே

அவனுடைய சந்ததியாருக்கு என்ன பேர்உண்டாயிற்று?
இயாக்கோபுக்கு எத்தனைமனைவிகள் உண்டு?
பிள்ளைகள் எத்தனை?
இலேயாளுடைய பிள்ளைகள் ஆர்?
சில்பாளுடைய பிள்ளைகள் ஆர்?
இராகேலுடைய பிள்ளைகள் ஆர்?
பில்க்காளுடைய பிள்ளைகள் ஆர்?
இந்த நாலு பேருங் குடிப் பெண்களா?

Digitized by Google

இயோசேப்பென்கிறவன் தானுந் தன் சகோதரரும் வயல் வெளியிலே அரிவிகளை வெட்டிக் கட்டுகையில் தன்னுடைய அரிவிக்கட்டு நிமிர்ந்து நிற்க அவர்களுடைய அரிவிக்கட்டுக்கள் அதைச் சுற்றி வணங்கினதாகவுஞ் சூரியனுஞ் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் வந்து தன்னை வணங்கினதாகவும் இரண்டு கனவு கண்டு அதைத் தன்னுடைய சகோதரருக்குச் சொன்னான்.

யஅ. அதை அவர்கள் கேட்டு நீ, எங்கள் மேலே துரைத்தனம்பண்ணி எங்களை ஆளப் போகிறயோ என்று சொல்லி அந்தக் காரியத்தினலுந் தகப்பன் அவன் மேலே அதிக பட்சமாயிருந்ததினாலும் பொறுமையாய்க் கோபங்கொண்டு அவனைத் தனித்த இடத்திலே கொன்றுபோட முயற்சிபண்ணினார்கள்.

யகூ. பின்னும் அந்த ஆலோசனையை விட்டு எகிப்துத் தேசத்திலே வியாபாரஞ் செய்யப்போகிற இஷ்மவேலருக்கு இருபது வெள்ளிக்

இயோசேப்புக் கண்ட சொப்பனங்கள் என்ன? [ளா?
அவனுடைய சகோதரர் அவனோடே அன்பாயிருந்தார்க
என்னத்தைச் செய்ய வகை தேடினார்கள்?
அவனை வனாந்தரத்திலே என்ன செய்தார்கள்?
அவனை ஆருக்கு விற்றார்கள்?
எவ்வளவுக்கு விற்றார்கள்?
இஷ்மவேலர் ஆர்?

Digitized by Google

காசுக்கு விற்றுப்போட்டுத் தங்கள் தகப்பனு
கிறி. க்கு அவனை மிருகம் கொன்றுபோட்டதெ
1728 ன்று சொல்லத் தகப்பனும் மெய்யென்
று நம்பி மிகுந்த வியாகுலப்பட்டுக்கொண்டி
ருந்தான்.

௨௰. இஷ்மவேலரோ இயோசேப்பைக்கொண்டுபோய் எகிப்த்தின் இராசாவாகிய பார்வோனுடைய சேனைத்தலைவனாகிய போத்திப்பாருக்கு மறுவிலைக்கு விற்றுப்போட்டார்கள். அந்தத் தலைவன் அவனைத் தன் வீட்டு விசாரிப்புக் காரனாக வைத்தான்.

௨௧. அப்படி இருக்கையில் அந்தத் தலைவனுடைய மனைவி இயோசேப்பின்மேல் இச்சை கொண்டு தன்னுடனே சேரும்படி கேட்டாள். அதற்கு அவன் மறுத்ததினாலே அவன் தன்னைச் சேரும்படி கேட்டானென்று மாறிப் பொய்யான ஒருகுற்றத்தைச் சார்த்தி அவனைச் சிறைச் சாலையில் வைப்பித்தாள்.

இஷ்மவேலுடைய தாய் தகப்பன் ஆர்?
இயோசேப்பின் சகோதரர் வந்து அவனைக்குறித்தென்ன சொன்னார்கள்?
இஷமவேலர் இயோசேப்பை ஆருக்கு விற்றார்கள்?
போத்திப்பார் அவனை என்ன வேலைக்குவைத்தான்?
பின்பு அவனை ஏன் சிறைச்சாலையில்வைப்பித்தான்?

Digitized by Google

௨௨. அப்படியே மூன்று வருஷமாக அவன் சிறைச்சாலையில் இருக்கும் பொழுது ஒருநாட் பார்வோன் இராசா ஒரு கனவைக்கண்டு அதின் பலனைத் தனக்குச் சொல்லும்படி அனேக சாஸ்திரிகளை அழைத்துக் கேட்க அவர்கள் எல்லாருஞ் சொல்லமாட்டாமற் போனார்கள்.

௨௩ பின்பு சிறைச்சாலையிலே இருக்கிற இயோசேப்பு அதைச் சொல்லுவானென்று தன் வேலைக்காரராலே கேள்விப்பட்டு அவனை அழைப்பித்துக் கேட்க அவன் அந்தக் கனவின் பலனைச் சரிவரச் சொன்னதினாலே அந்த இராசாச் சந்தோஷப்பட்டு அவனுடைய சிறைத்தனத்தையும் நீக்கி அவனுக்கு அனேக உபகாரங்களும் பண்ணித் தனக்கு மந்திரியாகவும் வைத்துக்கொண்டான்.

௨௪. அந்த இராசாக் கண்ட கனவின்படி முதல் ஏழு வருஷம் தேசம் எல்லாம் செழிப்பாய்

இயோசேப்பு எவ்வளவுகாலம் சிறைச்சாலையிலிருந்தான்? அவன் எப்படி விடுதலை பெற்றான்?

அவன் அந்தக் கனவின் பலனைச் சொல்வானென்று இராசாவுக்கு அறிவித்ததார்?

கனவின் பலனைச் சொல்லும்படி மறுபேரை அவன் கேட்கவில்லையா?

பார்வோன் இயோசேப்பை என்ன உத்தியோகத்தில் வைத்தான்?

Digitized by Google

விளையுமென்றும் பின்பேழு வருஷம் தேசம் வி
ளைவில்லாமற் பஞ்சம் உண்டாகுமென்றும் இ
யோசேப்புச்சொன்னதினாலே இராசா அவனு
டனே செழிப்பான காலத்திலே தானியங்களை
எடுத்துச் சேகரம்பண்ணிப் பஞ்சமான காலத்
திற்கும் வைக்கக் கற்பித்தான். அவனும் அப்படி
யேசெய்தான்.

உரு. முன் சொன்னபடியே ஏழுவருஷமுஞ்
சென்று பஞ்சமான காலம் வந்தபொழுது அ
தினால் வருந்திப் பலபல தேசங்களில் உள்ளவர்
களும் இயோசேப்பிடத்திலே வந்து தங்கள்தங்
கள் உடைமை, பண்டம், ஆடுமாடு, காணிபூமி
மற்றுமுள்ளவைகளை எல்லாங் கொடுத்துத் தா
னியம்வாங்கி இற்றிலே தங்களையும் அடிமைகளா
கக் கொடுத்து வாங்கினார்கள்.

உசா. அப்பொழுது இயோசேப்பினுடைய
சகோதரருந் தங்கள் தகப்பனாகிய இயாக்கோபி

பார்வோன் கண்ட சொப்பனத்தின் பலன் என்ன?
பார்வோன் இயோசேப்புக்கு என்ன கட்டளையிட்டான்?
இயோசேப்புத் தானியத்தை எத்தனை வருஷமாகச் சே
ர்த்து வைத்தான்?
எந்தெந்த ஊரிலே பஞ்சம் வந்தது?
இயோசேப்பிடத்திலே தானியம் வாங்கப்போனதார்?
என்ன கொடுத்து வாங்கினார்கள்?
உகள் எல்லாம் முடிந்தபின்பு எப்படி வாங்கினார்கள்?

னுடைய உத்தரவினாலே கானான் தேசத்தில் இரு ந்து எகிப்த்துத் தேசத்துக்குத் தானியங்கொ ள்ளவந்தார்கள். இயோசேப்பை அவர்கள் அறி யாமல் இருந்தும் அவன் அவர்களை இன்னாரென் று அறிந்துகொண்டு தண்டிக்கிறவனைப்போலப் பலவிதமாய் அவர்கள் கருத்தைச் சோதித்துப் பின்பு தன்னை இன்னானென்று வெளிப்படுத்தி அவர்களை அனுப்பித் தனது பிதாவையுஞ் சுற் றத்தாரையும் அந்தத் தேசத்துக்கு அழைப் பித்தான்.

௨௭. இவ்விதமாய் இயோசேப்புத் தான் முன்னே கண்ட கனவுகளின்படியே நடந்து நிறைவேறி வரக்கண்டபொழுது இராசாவா கிய பார்வோனிடத்துக்கு அவர்களை அழைத் துக் கொண்டுபோய் அவனுடைய உத்தரவின் படி அவர்களை அந்த எகிப்த்துத் தேசத்திற்குடி யேற வாசம்பண்ணச்செய்தான். அப்படியே

எகிப்த்தியரல்லாமல் வேறெந்தத் தேசத்தார் தானியங் கொள்ளப்போனார்கள்?
இயோசேப்புஞ் சகோதரரும் ஒருவரையொருவர் அறிந்தா ர்களா?
இயோசேப்பை இன்னானென்று அவன் சகோதரருக்கு அறிவித்ததார்?
தன்சகோதரரையுந் தகப்பனாகிய இயாக்கோபையும் எ ங்கே அழைப்பித்தான்?

Digitized by Google

அவர்கள் அங்கே இருக்குங் காலத்திற் பராபரன் அவர்கள் முற்பிதாக்களுக்கு இட்டிருந்த திருவாக்கின்படியே மிகவும்பெருகினார்கள்.

௨௮. இயாக்கோபு முதிர்வயதானபொழுது தன் பிள்ளைகளை அழைத்து அவர்களை ஆசிர்வதித்து அவர்களுடனே ஆபிரகாங் கானான்தேசத்திலேகொண்ட மக்பேலாவென்னப்பட்ட நிலத்தின் கெபியிலே அவனையும் அவன் மனைவியாகிய இரெபேக்காளையும் அடக்கம்பண்ணினார்கள். நான் இலேயாளையும் அவ்விடத்திற்றானே அடக்கமபண்ணினேன். என்னையும் அங்கேதான் அடக்கம்பண்ணுங்களென்று சொல்லி அவர்களுக்குக் கட்டளையிட்டபின்பு இயாக்கோபு காலஞ்சென்றுவிட்டான்.

௨௯. அந்தத் தேசத்திலேதானே இயோசேப்பும் இறந்துபோனான். பிற்காலத்திலே வேறொருவன் அந்தத் தேசத்துக்கு இராசாவாகி

எகிப்த்தில் இருக்கிறபொழுது அவர்களுடைய விருத்தி எப்படி இருந்தது?

இயாக்கோபு மரணமடையும்பொழுது பிள்ளைகளை அழைத்து என்னசொன்னான்?

இயாக்கோபும் இயோசேப்பும் எவ்விடத்திலே மரித்தார்கள்?

அவனை எங்கே அடக்கம்பண்ணினார்கள்?

Digitized by Google

இந்த இஸ்ரவேற் சனங்களுடைய மிகுதியையும் பெருக்கத்தையுங் கண்டு அவர்களுக்குப் பயந்து அவர்களைக் கிளம்ப விடாமற் கீழ்ப்படுத்திக் கடினமாக நடத்தினதுமன்றி அவர்களிடத்திற் பிறக்கிற ஆண்பிள்ளைகளையுங் கொன்றுபோடக் கட்டளையிட்டான்.

௩௧. அப்படியே அவர்களிடத்திற் பிறந்த ஆண்பிள்ளைகளை எல்லாங் கொன்று கொன்று வருங்காலத்தில் அந்தத் தேசத்திலேதானே லேவி கோத்திரத்தில் மோசே என்பவன் பிறந்தான். அவன் மிகுந்த அழகுள்ள பிள்ளையாயிருந்ததினால் அவனுடைய தாய் இராசாவுக்குப் பயந்து மூன்றுமாதவரைக்கும் ஒளித்துவைத்துப் பின்பு ஒரு புற்பெட்டிக்குள்ளே வைத்து ஆற்றிலே விட்டாள்.

௩௨. அந்த இராசாவின் மகள் நீராடப்போனவிடத்தில் அந்தப் பிள்ளையைக்கண்டெடுத்து அதை வளர்க்கிறதற்கு ஒரு கைத்தாயைத் தேடும்

இவர்களுக்கு நன்மைசெய்த இராசா இறந்தபின் இவர்களுக்கு என்ன சம்பவித்தது?
இவர்களை ஏன் அடிமைகளாக்கினான்?
அந்த இராசா இவர்களுக்குச் செய்த கொடுமை என்ன?
அப்பொழுது தப்பிக்கொண்டதார்?
மோசே எப்படித் தப்பிக்கொண்டான்?
அப்பொழுது அவன் எத்தனை மாதக் குழந்தை?

Digitized by Google

பொழுது அந்தப் பிள்ளையைப் பெற்றதாய்தானே அதற்குக் கைத்தாயாகவர இராச குமாரத்தியும் அந்தப் பிள்ளையை அவளிடத்திற் கொடுத்துத் தன் வீட்டிலே வைத்து வளர்க்கும்படி பண்ணினாள்.

௩௨. இப்படியே அவளிடமாக இருந்து வளருங்காலத்திற் பராபரன் அவனுக்கு அருள் செய்ததினாலே அவன் தேவபத்தியுள்ளவனாகி அந்த இராசாவின் வமிசத்தாரை விட்டுப் பிரிந்து பராபரனுடைய சனமுந் தன் இனமுமாகிய இஸ்ரவேலருடனே சேர்ந்துகொண்டு எகிப்த்தியருக்கு விரோதஞ் செய்ததை அந்த இராசாக் கண்டறிநால் அவன் பயந்து அந்த ஊரை விட்டு மீதியோன்என்னும்ஊருக்குப்போனான்.

௩௩. இப்படி இருக்குங்காலத்தில் எகிப்த்தின் இராசாவாகிய பார்வோனிடத்தில் இஸ்ரவேற் சனங்கள் வருத்தமான பணிவிடைகளைச்செய்து வருந்துவதைப் பராபரன் கண்டு இரங்கி மோ

பார்வோனின் குமாரத்தி அந்தப் பிள்ளைக்குக் கைத்தாய் வேண்டுமென்று தேடினபொழுது வந்ததார்?
அந்தப்பிள்ளை ஆருடைய வீட்டிலே இருந்து வளர்ந்தது?
வளர்ந்தபொழுது என்னத்தைச் செய்தான்?
எந்தஊருக்குப் போனான்? [அறிந்ததார்?
'த்தின் இராசாவால் இஸ்ரவேலர்வருத்தப்படுவதை

Digitized by Google

மோசேக்குத் தரிசனையாகி அவர்கள் தம்முடைய சனமாயிருப்பதினால் அவர்களைத் தான் சொல்லுகிற ஒரு தேசத்துக்குப்போக விடும்படி எகிப்த்தின் இராசாவிடத்திற் போய்ச்சொல்லக் கட்டளையிட்டனுப்பினார். அப்படியே மோசே போய் அந்த இராசாவிடத்திற் சொல்ல அவன் அதைக்கேட்டும் அவர்களை விடாதபடியால் பராபரன் பத்துவிதமான வாதைகளை அவனுடைய இராச்சியத்திலே வரப்பண்ணினார். எப்படியெனில்;

௧௪. ௧வது. அந்தத் தேசத்தின் தண்ணீர்களை இரத்தமாக்கினார்.

௨.) தேசமெல்லாம் தவளைகளை வரப்பண்ணினார்.

௩.) தேசமெங்கும் பூமியின் தூசியைப் பேன்களாகப் பண்ணினார்.

மோசேக்குத் தரிசனையானதார்?
பராபரன் மோசேக்கு என்ன கட்டளை கொடுத்தார்?
மோசே சொன்னபடி பார்வோன் செய்தானோ?
சனங்களைப் பார்வோன் போகவிடாததினால் அவனுக்கு வந்ததென்ன?
எத்தனை விதவாதைகளைப் பராபரன் அனுப்பினார்?
முந்தவாதைகள் என்னென்ன?

Digitized by Google

கனென்ற பேரும் உண்டாயிற்று.

௰௬. இந்த இயாக்கோபுக்கு இலேயாளென்றும் இராகேலென்றும் இரண்டுமனைவிகள் இருந்தார்கள். அவர்களில் இலேயாளிடத்தில், ரூபன், சிமேயோன், லேவி, யூதா, ஈசகார், செபுலோன் என்கிற ஆறு பிள்ளைகளும்; அவளுடைய வேலைக்காரியாகிய சிலுப்பாளிடத்திலே, காத்து, ஆசேர் என்னும் இரண்டு பிள்ளைகளும்; இராகேலிடத்தில், இயோசேப்பு, பென்யாமின் என்னும் இரண்டு பிள்ளைகளும்; அவளுடைய வேலைக்காரியாகிய பிலுக்காளிடத்திலே தாண், நபுதலி என்னும் இரண்டு பிள்ளைகளுமாக இயாக்கோபுக்குப் பன்னிரண்டு புத்திரர் பிறந்தார்கள்.

௰௭. இந்தப் பன்னிரண்டு பிள்ளைகளும் பிற்காலத்திற் பெருகிப் பன்னிரண்டு கோத்திரமானார்கள். இந்தப் பன்னிரண்டு பேருக்குள்ளே

அவனுடைய சந்ததியாருக்கு என்ன பேர் உண்டாயிற்று?
இயாக்கோபுக்கு எத்தனை மனைவிகள் உண்டு?
பிள்ளைகள் எத்தனை?
இலேயாளுடைய பிள்ளைகள் ஆர்?
சிலுப்பாளுடைய பிள்ளைகள் ஆர்?
இராகேலுடைய பிள்ளைகள் ஆர்?
பிலுக்காளுடைய பிள்ளைகள் ஆர்?
இந்த நாலு பேருங் குடிப் பெண்களா?

Digitized by Google

இயோசேப்பென்கிறவன் தானுந் தன் சகோதரரும் வயல் வெளியிலே அரிவிகளை வெட்டிக்கட்டுகையில் தன்னுடைய அரிவிக்கட்டு நிமிர்ந்து நிற்க அவர்களுடைய அரிவிக்கட்டுக்கள் அதைச் சுற்றி வணங்கினதாகவுஞ் சூரியனுஞ் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் வந்து தன்னை வணங்கினதாகவும் இரண்டு கனவு கண்டு அதைத் தன்னுடைய சகோதரருக்குச் சொன்னான்.

௰௮. அதை அவர்கள் கேட்டு நீ, எங்கள் மேலே துரைத்தனம்பண்ணி எங்களை ஆளப் போகிறாயோ என்று சொல்லி அந்தக் காரியத்தினாலுந் தகப்பன் அவன் மேலே அதிக பட்சமாயிருந்ததினாலும் பொறாமையாய்க் கோபங்கொண்டு அவனைத் தனித்த இடத்திலே கொன்றுபோட முயற்சிபண்ணினார்கள்.

௰௯. பின்னும் அந்த ஆலோசனையை விட்டு எகிப்துத் தேசத்திலே வியாபாரஞ் செய்யப் போகிற இஷ்மவேலருக்கு இருபது வெள்ளிக்

இயோசேப்புக் கண்ட சொப்பனங்கள் என்ன? [ளா?
அவனுடைய சகோதரர் அவனோடே அன்பாயிருந்தார்க
என்னத்தைச் செய்ய வகை தேடினார்கள்?
அவனை வனாந்தரத்திலே என்ன செய்தார்கள்?
அவனை ஆருக்கு விற்றார்கள்?
எவ்வளவுக்கு விற்றார்கள்?
இஷ்மவேலர் ஆர்?

Digitized by Google

காசுக்கு விற்றுப்போட்டுத் தங்கள் தகப்பனு
கி.மு. 1728 க்கு அவனை மிருகங் கொன்றுபோட்டதெ
ன்று சொல்லத் தகப்பனும் மெய்யென்
று நம்பி மிகுந்த வியாகுலப்பட்டுக்கொண்டி
ருந்தான்.

௨௰. இஷ்மவேலரோ இயோசேப்பைக்கொ
ண்டுபோய் எகிப்த்தின் இராசாவாகிய பார்
வோனுடைய சேனைத்தலைவனாகிய போத்திப்
பாருக்கு மறுவிலைக்கு விற்றுப்போட்டார்கள்.
அந்தத் தலைவன் அவனைத் தன் வீட்டுவிசாரிப்புக்
காரனாக வைத்தான்.

௨௧. அப்படி இருக்கையில் அந்தத் தலைவ
னுடைய மனைவி இயோசேப்பின்மேல் இச்சை
கொண்டு தன்னுடனே சேரும்படி கேட்டாள்.
அதற்கு அவன் மறுத்ததினாலே அவன் தன்னைச்
சேரும்படி கேட்டானென்று மாறிப் பொய்
யான ஒருகுற்றத்தைச் சார்த்தி அவனைச் சிறைச்
சாலையில் வைப்பித்தாள்.

இஷ்மவேலுடைய தாய் தகப்பன் ஆர்?
இயோசேப்பின் சகோதரர் வந்து அவனைக்குறித்து என்ன சொன்னார்கள்?
இஷ்மவேலர் இயோசேப்பை ஆருக்கு விற்றார்கள்?
போத்திப்பார் அவனை என்ன வேலைக்குவைத்தான்?
பின்பு அவனை ஏன் சிறைச்சாலையில்வைப்பித்தான்?

Digitized by Google

௨௨. அப்படியே மூன்று வருஷமாக அவன் சிறைச்சாலையில் இருக்கும் பொழுது ஒருநாட் பார்வோன் இராசா ஒரு கனவைக்கண்டு அதின் பலனைத் தனக்குச் சொல்லும்படி அனேக சாஸ்திரிகளை அழைத்துக் கேட்க அவர்கள் எல்லாருஞ் சொல்லமாட்டாமற் போனார்கள்.

௨௩ பின்பு சிறைச்சாலையிலே இருக்கிற இயோசேப்பு அதைச் சொல்லுவானென்று தன் வேலைகாரராலே கேள்விப்பட்டு அவனை அழைப்பித்துக் கேட்க அவன் அந்தக் கனவின் பலனைச் சரிவரச் சொன்னதினாலே அந்த இராசாச் சந்தோஷப்பட்டு அவனுடைய சிறைத்தனத்தையும் நீக்கி அவனுக்கு அனேக உபகாரங்களும் பண்ணித் தனக்கு மந்திரியாகவும் வைத்துக்கொண்டான்.

௨௪. அந்த இராசாக் கண்ட கனவின்படி முதல் ஏழு வருஷம் தேசம் எல்லாம் செழிப்பாய்

இயோசேப்பு எவ்வளவு காலம் சிறைச்சாலையிலிருந்தான்?
அவன் எப்படி விடுதலை பெற்றான்?
அவன் அந்தக் கனவின் பலனைச் சொல்வானென்று இராசாவுக்கு அறிவித்ததார்?
கனவின் பலனைச் சொல்லும்படி மறுபேரை அவன் கேட்கவில்லையா?
பார்வோன் இயோசேப்பை என்ன உத்தியோகத்தில் வைத்தான்?

Digitized by Google

விளையுமென்றும் பின்பேழு வருஷம் தேசம் வி
ளைவில்லாமற் பஞ்சம் உண்டாகுமென்றும் இ
யோசேப்புச்சொன்னதினாலே இராசா அவனு
டனே செழிப்பான காலத்திலே தானியங்களை
எடுத்துச் சேகரம்பண்ணிப் பஞ்சமான காலத்
திற்கும் வைக்கக் கற்பித்தான். அவனும் அப்படி
யேசெய்தான்.

௨௫. முன் சொன்னபடியே ஏழுவருஷமுஞ்
சென்று பஞ்சமான காலம் வந்தபொழுது அ
தினால் வருந்திப் பலபல தேசங்களில் உள்ளவர்
களும் இயோசேப்பிடத்திலே வந்து தங்கள்தங்
கள் உடைமை, பண்டம், ஆடுமாடு, காணிபூமி
மற்றுமுள்ளவைகளை எல்லாங் கொடுத்துத் தா
னியம்வாங்கி ஈற்றிலே தங்களையும் அடிமைகளா
கக் கொடுத்து வாங்கினார்கள்.

௨௬. அப்பொழுது இயோசேப்பினுடைய
சகோதரருந் தங்கள் தகப்பனாகிய இயாக்கோபி

பார்வோன் கண்ட சொப்பனத்தின் பலன் என்ன?
பார்வோன் இயோசேப்புக்கு என்ன கட்டளையிட்டான்?
இயோசேப்புத் தானியத்தை எத்தனை வருஷமாகச் சே
ர்த்து வைத்தான்?
எந்தெந்த ஊரிலே பஞ்சம் வந்தது?
இயோசேப்பிடத்திலே தானியம் வாங்கப்போனதார்?
என்ன கொடுத்து வாங்கினார்கள்?
அவைகள் எல்லாம் முடிந்தபின்பு எப்படிவாங்கினார்கள்?

Digitized by Google

னுடைய உத்தரவினாலே கானான் தேசத்திலிரு ந்து எகிப்த்துத் தேசத்துக்குத் தானியங்கொ ள்ளவந்தார்கள். இயோசேப்பை அவர்கள் அறி யாமலிருந்தும் அவன் அவர்களை இன்னாரென் று அறிந்துகொண்டு தண்டிக்கிறவனைப்போலப் பலவிதமாய் அவர்கள் கருத்தைச் சோதித்துப் பின்பு தன்னை இன்னானென்று வெளிப்படுத்தி அவர்களை அனுப்பித் தனது பிதாவையுஞ் சுற் றத்தாரையும் அந்தத் தேசத்துக்கு அழைப் பித்தான்.

உஎ. இவ்விதமாய் இயோசேப்புத் தான் முன்னே கண்ட கனவுகளின்படியே நடந்து நிறைவேறி வரக்கண்டபொழுது இராசாவா கிய பார்வோனிடத்துக்கு அவர்களை அழைத் துக் கொண்டுபோய் அவனுடைய உத்தரவின் படி அவர்களை அந்த எகிப்த்துத் தேசத்திற்று னே வாசம்பண்ணச்செய்தான். அப்படியே

எகிப்த்தியரல்லாமல் வேறெந்தத் தேசத்தார் தானியங் கொள்ளப்போனார்கள்?

இயோசேப்புஞ் சகோதரரும் ஒருவரை ஒருவர் அறிந்தா ர்களா?

இயோசேப்பை இன்னானென்று அவன் சகோதரருக்கு அறிவித்ததார்?

தன்சகோதரரையுந் தகப்பனாகிய இயாக்கோபையும் எ ங்கே அழைப்பித்தான்?

Digitized by Google

அவர்கள் அங்கே இருக்குங் காலத்திலே பார்வோன் அவர்கள் முற்பிதாக்களுக்கு இட்டிருந்த திருவாக்கின்படியே மிகவும் பெருகினார்கள்.

௨அ. இயாக்கோபு முதிர்வயதானபொழுது தன் பிள்ளைகளை அழைத்து அவர்களை ஆசீர்வதித்து அவர்களுடனே ஆபிரகாம் கானான்தேசத்திலேகொண்ட மக்பேலாவென்னப்பட்ட நிலத்தின் கெபியிலே அவனையும் அவன் மனைவியாகிய இரெபேக்காளையும் அடக்கம்பண்ணினார்கள். நான் இலேயாளையும் அவ்விடத்திலேதானே அடக்கம்பண்ணினேன். என்னையும் அங்கேதான் அடக்கம்பண்ணுங்களென்று சொல்லி அவர்களுக்குக் கட்டளையிட்டபின்பு இயாக்கோபு காலஞ்சென்றுவிட்டான்.

௨௯. அந்தத் தேசத்திலேதானே யோசேப்பும் இறந்துபோனான். பிற்காலத்திலே வேறொருவன் அந்தத் தேசத்துக்கு இராசாவாகி

எகிப்திலே இருக்கிறபொழுது அவர்களுடைய விருத்தி எப்படி இருந்தது?

இயாக்கோபு மரணமடையும்பொழுது பிள்ளைகளை அழைத்து என்னசொன்னான்?

இயாக்கோபும் இயோசேப்பும் எவ்விடத்திலே மரித்தார்கள்?

அவனை எங்கே அடக்கம்பண்ணினார்கள்?

Digitized by Google

இந்த இஸ்ரவேற் சனங்களுடைய மிகுதியையும் பெருக்கத்தையுங் கண்டு அவர்களுக்குப் பயந்து அவர்களைக் கிளம்ப விடாமற் கீழ்ப்படுத்திக் கடினமாக நடத்தினதுமன்றி அவர்களிடத்திற் பிறக்கிற ஆண்பிள்ளைகளையுங் கொன்றுபோடக் கட்டளையிட்டான்.

௧௰. அப்படியே அவர்களிடத்திற் பிறந்த ஆண்பிள்ளைகளை எல்லாங் கொன்று கொன்று வருங்காலத்தில் அந்தத் தேசத்திலேதானே லேவி கோத்திரத்தில் மோசே என்பவன் பிறந்தான். அவன் மிகுந்த அழகுள்ள பிள்ளையாயிருந்தனால் அவனுடைய தாய் இராசாவுக்குப் பயந்து மூன்றுமாதவரைக்கும் ஒளித்துவைத்துப் பின்பு ஒரு புற்பெட்டிக்குள்ளே வைத்து ஆற்றிலே விட்டாள்.

௧௨. அந்த இராசாவின் மகள் நீராடப்போனவிடத்தில் அந்தப் பிள்ளையைக்கண்டெடுத்து அதை வளர்க்கிறதற்கு ஒரு கைத்தாயைத் தேடும்

இவர்களுக்கு நன்மைசெய்த இராசா இறந்தபின் இவர்களுக்கு என்ன சம்பவித்தது?
இவர்களை ஏன் அடிமைகளாக்கினான்?
அந்த இராசா இவர்களுக்குச் செய்த கொடுமை என்ன?
அப்பொழுது தப்பிக்கொண்டதார்?
மோசே எப்படித் தப்பிக்கொண்டான்?
அப்பொழுது அவன் எத்தனை மாதக் குழந்தை?

Digitized by Google

பொழுது அந்தப் பிள்ளையைப் பெற்றதாய்தானே அதற்குக் கைத்தாயாகவர இராச குமாரத்தியும் அந்தப் பிள்ளையை அவளிடத்திற் கொடுத்துத் தன் வீட்டிலே வைத்து வளர்க்கும்படி பண்ணினாள்.

௫௨. இப்படியே அவளிடமாக இருந்து வளருங்காலத்திற் பராபரன் அவனுக்கு அருள் செய்ததினாலே அவன் தேவபத்தியுள்ளவனாகி அந்த இராசாவின் வமிசத்தாரை விட்டுப் பிரிந்து பராபரனுடைய சனமுந் தன் இனமுமாகிய இஸ்ரவேலருடனே சேர்ந்துகொண்டு எகிப்த்தியருக்கு விரோதஞ் செய்ததை அந்த இராசாக் கண்டதினால் அவன் பயந்து அந்த ஊரை விட்டு மீதியோன்என்னும்ஊருக்குப்போனான்.

௫௩. இப்படி இருக்குங்காலத்தில் எகிப்த்தின் இராசாவாகிய பார்வோனிடத்தில் இஸ்ரவேற் சனங்கள் வருத்தமான பணிவிடைகளைச்செய்து வருந்துவதைப் பராபரன் கண்டு இரங்கி மோ

பார்வோனின் குமாரத்தி அந்தப் பிள்ளைக்குக் கைத்தாய் வேண்டுமென்று தேடினபொழுது வந்ததார்?
அந்தப்பிள்ளை ஆருடைய வீட்டிலே இருந்து வளர்ந்தது?
வளர்ந்தபொழுது என்னத்தைச் செய்தான்?
எந்தஊருக்குப் போனான்? [அறிந்ததார்?
எகிப்த்தின் இராசாவால் இஸ்ரவேலர்வருத்தப்படுவதை

Digitized by Google

மோசேக்குத் தரிசனையாகி அவர்கள் தம்முடைய சனமாயிருப்பதினால் அவர்களைத் தான் சொல்லுகிற ஒரு தேசத்துக்குப் போகவிடும்படி எகிப்த்தின் இராசாவிடத்திற் போய்ச் சொல்லக் கட்டளையிட்டனுப்பினார். அப்படியே மோசே போய் அந்த இராசாவிடத்திற் சொல்ல அவன் அதைக்கேட்டும் அவர்களை விடாதபடியால் பராபரன் பத்துவிதமான வாதைகளை அவனுடைய இராச்சியத்திலே வரப்பண்ணினார். எப்படியெனில்;

௧. கவது. அந்தத் தேசத்தின் தண்ணீர்களை இரத்தமாக்கினார்.

௨.) தேசமெல்லாம் தவளைகளை வரப்பண்ணினார்.

௩.) தேசமெங்கும் பூமியின் தூசியைப் பேன்களாகப் பண்ணினார்.

மோசேக்குத் தரிசனையானதார்?
பராபரன் மோசேக்கு என்ன கட்டளை கொடுத்தார்?
மோசே சொன்னபடி பார்வோன் செய்தானோ?
சனங்களைப் பார்வோன் போகவிடாததினால் அவனுக்கு வந்ததென்ன?
எத்தனை விதவாதைகளைப் பராபரன் அனுப்பினார்?
அந்தவாதைகள் என்னென்ன?

Digitized by Google

௪.) பலவிதமான வண்டுகளை வரப்பண்ணினார்.
௫.) பெருவாரிக் காய்ச்சலை வரப்பண்ணினார்.
௬.) குருநோயை வரப் பண்ணினார்.
௭.) கன்மழையை வரப்பண்ணினார்.
௮.) வெட்டுக் கிளிகளை வரப்பண்ணினார்.
௯.) கனவிருளை வரப்பண்ணினார்.

௫௫. இப்படியே ஒன்பது விதமான வாதைகளும் ஒவ்வொன்றாக வரவர இஸரவேலரை அனுப்பி விடுகிறேன் விடுகிறேன் என்று சொல்லியும் பராபரன் அந்த வாதைகளை மாற்றினஉடனேயும் அவர்களை விடுதலைபண்ணாமல் இருந்தான். ஆனபடியினாலே பராபரன் மோசேயுடனே பார்வோன் முதல் எகிப்த்துத் தேசத்தார் அனைவருடைய தலைப்பிள்ளைகளையும் அழித்துப்போடும்படி நாம் ஒரு தூதனை அனுப்புவோம். அவன் வரும்பொழுது உங்கள் பிள்ளைகளையுங் கொல்லாதபடிக்கு ஒவ்வொருவீட்டிலும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியை அறுத்து அதின் இரத்தத்தைக் கதவுநிலைகளிலேபூசி அதின் இறைச் — கிறி. 1491.

இவைகளில் ஒன்பதுவித வாதைகளும் வரவர என்ன சொன்னான்?
பத்தாம் வாதையென்ன?
அந்த வாதை இவர்களுக்கும் வராதபடிக்குப் பராபரன் மோசேயை என்னசெய்யச்சொன்னார்?

Digitized by Google

சியைச் சமைத்துப் புசியுங்கள். நம்முடைய தூ தன்வந்து இரத்தத்தைக் கதவுநிலைகளிலே பூசி யிருக்கக் கண்டவீடுகளைவிட்டு மற்ற வீடுகளிலு ள்ள பிள்ளைகளைக் கொன்றுபோடுவானென்று ம் அப்பொழுது பார்வோன் இராசா உங்களை வி டுதலையாக்குவானென்றுஞ் சொன்னார். அப்ப டியே இஸ்ரவேற்சனங்கள் கத்தர் நியமித்த ஒரு இரவிலே ஒவ்வொருவீட்டாருந் தாங்கள் புசிக் கத் தக்க ஒவ்வொரு ஆட்டுக்குட்டியை அறுத் து அதின் இரத்தத்தைக் கதவு நிலைகளிலே பூசி இறைச்சியைச் சமைத்துச் சாப்பிட்டார்கள்.

௫௯. அப்பொழுது பராபரன் எகிப்த்துத் தேசத்தாருடைய தலைப்பிள்ளைகளை எல்லாம் அழித்துப் போட்டதினாலே பார்வோன் இரா சாப் பயந்து இஸ்ரவேற் சனங்களை விட்டுவி ட்டான். இஸ்ரவேற் சனங்கள் வருஷந்தோறு ங் கொண்டாடுகிற பஸ்காவென்னும் பெருநா

இந்த விருந்துக்குப் பேர் என்ன? —பஸ்கா.

இதின் கருத்தென்ன? —கடந்துபோதல்.

அதை எவ்வளவு காலத்துக் கொருமுறை கொண்டாடி னார்கள்?

எத்தனையாம் வாதைக்குப் பின்பு பார்வோன் அவர்களைப் போகவிட்டான்?

ள் இந்தக் காரணத்தினாலேதான் உண்டாயிற்று. ஆபிரகாமைப் பராபரன் அழைத்த காலந்தொடுத்து இஸ்ரவேல் சனங்கள் எகிப்துத் தேசத்தை விட்டுப் புறப்பட்ட காலம் வரைக்குஞ் சென்ற வருஷம் ௪௱௩௰.

---

௬. அதிகாரம்.

இஸ்ரவேலர் எகிப்துத்தேசத்தைவிட்டுப் புறப்பட்டநாள்முதற் சாலமோன் என்ற இராசாத்தேவாலயங்கட்டினநாள்வரைக்குஞ்சென்றவருஷம், ௪௱௮௰.

ஆதி. 2513. கிறி. 1491.

௧. இஸ்ரவேலர் பிரயாணப்பட்டுப் போகிற பொழுது பராபரன் அவர்களுக்குப் பகலிலே மேகத் தூணாகவும் இரவிலே அக்கினித்தூணாகவும் நின்று வழிகாட்டிக் கொண்டு முன்னே போனார்.

ஆபிரகாமைப் பராபரன் அழைத்த காலந்தொடுத்து இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்ட காலம் வரைக்குஞ் சென்றவருஷம் எத்தனை?—௪௱௩௰

பராபரன் அவர்களுக்கு எப்படி வழிகாட்டினார்?

Digitized by Google



இந்தப்படம் என்னத்தைக்காட்டுகின்றது?
என்னத்துக்கூடாகப்போனார்கள்?
எந்தச்சனம் அமிழ்ந்திப்போனார்கள்?

உ. அப்படி அவர்கள் பிரயாணம்பண்ணும் பொழுது பார்வோன் இராசா இஸ்ரவேற் சனங்களைப் போகவிடாமற் றிருப்பிக்கொண்டு வரநினைத்துத் தனது சேனைகளுடனே தொடர்ந்து போய் நாணற் சமுத்திரத்தின் கரையிலே அவர்களைக் கண்டான்.

ங. அப்பொழுது பார்வோன் இராசாத் தன்னுடைய சேனைகளோடே அவர்களைக் கிட்டினதினாலே இஸ்ரவேற் சனங்கள் தங்களையிரட்சிக்கும்படிக்குப் பராபரனை வேண்டுதல் பண்ணினார்கள். அவரும் அவர்களுக்குத் தலைவனாகிய மோசேயுடனே உன் கையிற்கோலினாற் சமுத்திரத்தில் அடியென்றார்.

ச. அவன் அப்படியே அடித்தபொழுது சமுத்திரம் இரண்டாகப் பிரிந்து தண்ணீர் இரண்டு பக்கமும் ஒதுங்கி வழிகொடுக்க அந்த வ

பார்வோன் அப்பொழுது அவர்களுக்கு என்ன செய்ய நினைத்தான்?

எங்கே போய் அவர்களைக் கண்டான்?

இஸ்ரவேற் சனங்கள் சமுத்திரத்தைக் கடந்து போகும்படிக்குப் பராபரன் மோசேயை என்னசெய்யச் சொன்னார்?

அவன் அப்படிச் செய்தபொழுது சமுத்திரம் ஏன் இடங் கொடுத்தது?

Digitized by Google

ழியாய் நடந்து போனார்கள். இராசாவுஞ் சேனைகளும் அதைக்கண்டு தாங்களும் அந்த வழியாய் நடந்து இடைநடுவிலே செல்லும்பொழுது கத்தர் மோசேயுடனே சமுத்திரத்தின்மேல் உன் கையை நீட்டென்று சொல்ல அவனும் அப்படியே நீட்டினான்.

௫. அப்பொழுது தண்ணீர்கள் மறுபடியும் முன்போலப் பெருகிப் பார்வோனையும் அவனுடைய சேனைகளையும் அமிழ்த்திப்போட்டது. இப்படியே பராபரன் அந்த இராசாவையுஞ் சனங்களையும் அழித்து இந்த இஸ்ரவேலரை இரட்சித்தார்.

௬. அவர்கள் நாணற்சமுத்திரத்தைக் கடந்து சூர் வனாந்தரத்திலே மூன்றுநாள் இராப்பகலாய் நடந்து தண்ணீர் கிடையாமல் வருத்தப்பட்

பார்வோனுஞ் சனங்களும் எந்த வழியாய்த் தொடர்ந்தார்கள்?

மறுபடி பராபரன் மோசேக்கு என்னகற்பித்தார்?

பார்வோனுக்கும் அவன் படைசனங்களுக்கும் என்ன சம்பவித்தது?

இஸ்ரவேற்சனங்கள் எவ்விதமான இடத்திலே வந்தார்கள்?

அங்கே என்ன தாழ்ச்சி வந்தது?

எவ்வளவு நாளாகத் தண்ணீர் கிடையாமல் இருந்தது?

Digitized by Google

டு மாராவிலே வந்து தங்கி அங்குள்ள தண்ணீரு ங் குடிக்கக்கூடாமற் கசப்பாயிருந்ததினாற் பராபரனுக்கும் மோசேக்கும் விரோதமாகக் குறை சொன்னபொழுது மோசே கருத்தாவை நோக்கி வேண்டுதல் செய்தான். அப்பொழுது அவர் அதை நல்ல சலமாக்கினார்.

எ. அங்கே அதில் இருந்து புறப்பட்டு ஏலிம் என்னும் இடத்துக்கு வந்து தங்கிப் பின்பு அவ்விடத்தையும் விட்டுச் சீனவனாந்தரத்திலே வந்து தங்கினார்கள். அப்பொழுது போசனங் கிடையாமற்றுய்ச்சிப்பட்டு மோசேயுடனே நாங்கள் எகிப்த்தில் இருக்கும்பொழுது எங்களுக்குப் போசனத்தினாற் குறைச்சல் வந்ததில்லை. இப்பொழுதோ பசியினால் வருந்துகிறோம் என்று குறை சொன்னதினால் மோசே பராபரனைப் பார்த்து மன்றாட அவரும் கொத்தமல்லி அளவு பருமையும் வெண்மை நிறமும் அதிக தித்திப்பும் பொருந்திய மன்னாவென்கிற ஆகாரம் வா

அப்பொழுது என்னகுணங் கொண்டார்கள்?
பின்பு தண்ணீர் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது?
ஏலிமிலே என்னத்துக்குக் குறைவு பட்டார்கள்?
அதற்குப் பின்பு அவர்கள் எங்கே சேர்ந்தார்கள்?
பராபரன் அவர்களுக்கு என்னவிதமான ஆகாரத்தைக் கொடுத்தார்?

Digitized by Google

னத்தில் இருந்து வருவிக்கவும் இறைச்சிக்காகக் காடைகள் வந்து விழுந்திருக்கவும் பண்ணினார். அவர்கள் காலமே எழுந்து அன்றன்று தாங்கள் புசிக்கத் தக்க மட்டுக்குச் சேர்ந்து வைத்துப் போசனம் பண்ணுவார்கள்.

௮. வாரத்தின் ஆறும் நாளிலே மாத்திரம் மறுநாளாகிய ஓய்வுநாளிலுஞ் சாப்பிடத் தக்கதாக இரட்டிப்பாக அந்த ஆகாரம் வர அவர்கள் சேர்த்து வைத்துக்கொண்டு ஏழாம்நாளிலேயோ ஓய்ந்திருப்பார்கள். மறுநாளைக்குவைத்தால் பழுதுபட்டுப்போகிற இந்த ஆகாரம் ஓய்வுநாளிலேமாத்திரம் பழுதுபடாமலிருக்கும். அவர்கள் கானான்தேசத்திற்குப் போய்ச் சேரும் வரையும் அவர்களுக்கு இப்படியே நடந்தது.

௯. பின்பு அவ்விடத்தைவிட்டு ரவிதீமிலே வந்து தங்கினார்கள். அங்கேயுந் தண்ணீரில்லாமற் குறைந்துபோனபொழுது பராபரனுடைய

இதை அவர்கள் ஒவ்வொருநாளில் எவ்வளவு சேர்த்தார்கள்? ஓய்வுநாளிலுஞ் சேர்த்துக்கொண்டார்களா?
அன்றைக்குப் போசனத்துக்கு வழி என்ன?
ஆறும்நாளிலே சேர்த்துக்கொண்டவைகள் ஏன் பழுதுபடவில்லை?
மறுநாட்களிலும் அப்படிச் சேர்த்துக்கொண்டால் எப்[படிப்போம்?

Digitized by Google

கட்டளைப்படி மோசே தன்கையில் இருந்தகோ
லினால் ஒரு கன்மலையை அடிக்க அதிலிருந்து
இஸ்ரவேற்சனங்கள் குடிக்கிறதற்குத் தண்ணீர்
புறப்பட அதை அவர்கள் குடித்திருந்தார்கள்.

ய. அங்கே இருக்கையில் ஆமலேக்கியர் வந்
து இஸ்ரவேலருடனே யுத்தம்பண்ணினார்கள்.
மோசே பராபரனைப் பார்த்து வேண்டுதல்செ
ய்யும்பொழுது இஸ்ரவேலர் வெற்றியடைந்து
ம் அதைச் செய்யாமல் விடும் பொழுது ஆம
லேக்கியர்வெற்றியடைந்தும் இருந்ததைக்கண்டு
மோசே அந்தநாள் முற்றும் பராபரனை நோக்
கி வேண்டுதல்செய்துகொண்டிருந்தான்.

யக. அதினாலே இஸ்ரவேலர் ஆமலேக்கிய
ரை வெற்றிகொண்டு பின்பு அவ்விடத்தை விட்
டுப் புறப்பட்டுச் சீனாவனாந்தரத்தில் வருகையி
ற் பராபரன் சீனாமலையிலே வெளிப்பட்டுப்

வனாந்தரத்திலே தண்ணீர் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது?
அவர்களுடனே யுத்தத்துக்குவந்ததார்?
மோசே அவர்கள் வெல்லும்படி என்னசெய்தான்?
எவ்வளவு நேரமாக மோசே வேண்டுதல் பண்ணினான்?
பின்பு பராபரன் எவ்விடத்திலே அவர்களுக்கு வெளிப்பட்டார்?

Digitized by Google

பத்துக் கற்பனைகளைப் பெற்றுக்கொள்ளும்படி மோசேயைத் தம்மிடமாக வரவுஞ்சனங்கள் தங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு மலைப் பக்கத்தில் நிற்கவுஞ் சொன்னார்.

யஉ. அந்தப் பிரகாரம் மோசே சனங்களுக்குச் சொல்லி அவர்களையும் மலைச்சாரலிலே வரப் பண்ணித் தானும் மலையின் மேல் ஏறினான். அப்பொழுது பராபரன் மின்னலுடனேயும் முழக்கத்துடனேயும் மோசேக்குத் தரிசனையானார். அந்த முழக்கத்துக்குப் பயந்து சனங்கள் தூர நின்றார்கள்.

யங. மலையின் மேலே போன மோசே நாற்பது நாள் வரைக்குந் தங்கள் இடத்துக்குத் திரும்ப வராததினால் அவனுக்கு என்ன காரியஞ் சம்பவித்ததோ வென்று சொல்லிச் சனங்கள் ஆரோன் இடத்திற் போய்த் தங்களை நடத்துகி

ஏன் தரிசனையானார்?
பராபரன் மோசேக்கு என்ன கொடுக்கும்படி தம்மிடத்தில் வரச்சொன்னார்?
சனங்களை என்ன செய்யச்சொன்னார்?
மோசே என்னசெய்தான்?
மோசே மலையின்மேல் ஏறினபொழுது பராபரன் அவனுக்குஎப்படித் தரிசனையானார்?
சனங்கள் ஏன் தூரநின்றார்கள்?
மோசே மலையின்மேல் எவ்வளவுகாலம் நின்றுவிட்டான்?
ஆரிடத்திலே முறையிட்டார்கள்?

இது என்னத்தைக் காண்பிக்கின்றது?
இந்த மலையடியிலே நிற்கிறவர்கள் ஆர்?
எதுக்காக நிற்கிறார்கள்?

று தேவனைக் காண்பிக்க வேண்டுமென்று கேட்டு அவனுடைய சொற்படியே தங்கள் இடத்திலுள்ள பொற்பணிகளை அவன் கையிற் கொடுத்து அவைகளைக் கொண்டு இடபத்தின் சாயலாக ஒரு விக்கிரகத்தை உண்டாக்குவித்து அதுதான் தங்கள் தெய்வமென்று சொல்லி வணங்கினார்கள்.

௰௪. மோசே பராபரன் கற்பனைகளை எழுதிக் கொடுத்த இரண்டு கற்பலகைகளையுங் கொண்டு கீழே வந்து சனங்களுக்குள்ளே நடந்த இத்தன்மையான காரியத்தைக் கண்டு துக்கமுங் கோபமுங் கொண்டு அந்தப் பலகைகளை உடைத்துப்போட்டான். அவர்கள் செய்த குற்றத்தின் நிமித்தம் பராபரன் அவர்களில் மூவாயிரம்பேரை அழித்துப் பின்னும் மோசேயுடைய வேண்டுதலின் நிமித்தம் மற்றவர்களை அழியாமல் விட்டு அந்தக் கற்பனைகளை மறுபடியும் இ

ஆரோன் என்னசெய்தான்?
மோசே மலையின்மேல் நின்றபொழுது சனங்கள் என்ன செய்தார்கள்?
பராபரன் கற்பனைகளை என்னத்தின்மேல எழுதினார்?
மோசே மலையிலிருந்திறங்கி வந்தபொழுது என்னத்தைக் கண்டான்?
என்ன செய்தான்?

Digitized by Google

ரண்டு கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார்.

௰௫. பின்பு மோசே பராபரன் கொடுத்த பத்துக் கற்பனையைக் கொண்டுவந்து சனங்களுக்கு வாசித்துக் காட்டி அதின்படியே எல்லாரும் நடக்க வேண்டுமென்றும் இன்னின்ன பாவஞ் செய்தவர்கள் சுத்தம்பண்ணிக்கொண்டு வந்து இன்னவின்ன பலியிட வேண்டுமென்றும் பராபரன் மலையின்மேலே தனக்குக் கட்டளை பண்ணி இருப்பதை அவர்களுக்கு அறிவித்தான்.

௰௬. அவர்கள அதற்குச் சம்மதித்து எப்பொழுதும் அந்தப் பிரகாரஞ் செய்வோமென்று வாக்குத்தத்தம் பண்ணினதினாலே மோசே கத்தர் சொன்ன எல்லாவற்றையும் ஒரு புத்தகத்தில் எழுதி அந்தப் புத்தகத்தையும் பத்துக் கற்பனைகள் எழுதப்பட்ட இரண்டுகற்பலகைக

பராபரன் அவர்கள் எல்லாரையும் ஏன் அழித்துப்போடவில்லை?

மறுபடியும் அந்தக் கற்பனைகளை எப்படிப் பெற்றுக்கொண்டான்?

வேறென்னத்தைச் சொன்னான்?

மோசே சொன்னவைகளுக்குச் சனங்கள் என்ன சொன்னார்கள்?

வேறென்ன பிரமாணங்களைக் கொடுத்தார்?

Digitized by Google

ளையும் ஒரு பெட்டியிலே வைத்து அதைக் கொண்டு போகும் படிக்கு ஆசாரியர் கையிலே கொடுத்தான்.

டு௪. பராபரன் கற்பித்த அந்தப் பத்துக் கற்பனைகளும் மற்றும் பிரமாணங்களும் என்னவென்றால்,

க. வது. பராபரனாயிருக்கிற நாம் உன்னுடையதேவனாய் இருக்கிறோம். நம்மைத் தவிர உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

உ வது. உயர்ந்தவானத்திலுந் தாழ்ந்த பூமியிலும் பூமியின் கீழ்ச்சலத்திலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான சித்திர சொரூபத்தையாகிலும் மற்றொரு விக்கிரகத்தையாகிலும் நீ உண்டாக்கிச் சேவியாமலும் நமஸ்கரியாமலும் இருப்பாயாக.

ஙு. வது. உன் தேவனாகிய பராபரனுடைய திருநாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

ச. வது. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலைசெய்

கற்பனையையும் நியாயப்பிரமாணப்புத்தகத்தையும் மோசே எங்கேவைத்தான்?
ஆருடைய வசத்திலே வைத்தான்?
அந்தக் கற்பனைகள் என்ன?

து உன்கிரியைகளை எல்லாம் நடத்துவாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய பராபரனுடைய ஓய்வுநாள். அதிலே நீயானாலும் உன் மகனானாலும் உன் மகளானாலும் உன் வேலைகாரனானாலும் உன் வேலைகாரியானாலும் உன் மிருகசீவனானாலும் உன் வாசலில் இருக்கிற பரதேசியானாலும்யாதொரு வேலையுஞ்செய்யப்படாது.

௰அ. ௫. வது. உன் தேவனாகிய நாம் உனக்குக்கொடுக்கிற தேசத்திலே உன் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையுந் தாயையுங் கனம்பண்ணுவாயாக.

௬. வது. கொலைசெய்யாயாக. | ஓதி. 1490.
௭. வது. விபசாரம் பண்ணாயாக.
௮. வது. களவுசெய்யாயாக.
௯. வது. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாயாக.

௰. வது. பிறனுடைய வீட்டையும் அவனுடைய மனைவியையும் அவனுடைய வேலைகாரனையும் வேலைகாரியையும் அவனுடைய எருதையும் அவனுடைய கழுதையையும் மற்றும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாயாக. மேற்சொல்லிய பத்துக்கற்பனைகளில் கர்த்தருக்கு நாஞ்செய்யும் கடமைகளைக் காட்டும் முத

Digitized by Google

ல் காலு கற்பனைகளும் ஒரு கற்பலகையிலும் மனிதருக்கு நாஞ் செய்யுங் கடமைகளைக் காட்டும் மற்ற ஆறுகற்பனைகளும் மற்றக்கற்பலகையிலும் எழுதப்பட்டிருக்கும்.

௰௯. பின்னும் ஒருவனை அடித்துக் கொன்றவனும், ஒருவனைக் கொன்றுபோடும் படி சற்பனை செய்கிறவனும், பிதாமாதாவை அடிக்கிறவனும், மனிதரைக் களவாகப் பிடித்துச் சிறையாக விற்கிறவனும், பிதாமாதாவைத் திட்டுகிறவனும், பகற்காலத்திலே திருடனைக் கொன்றவனும் சூனியக்காரனும், மிருகத்தைப் புணர்ந்தவனும், அன்னிய தேவர்களை ஆசரித்தவனுங் கொலை செய்யப்படுவானாக.

௨௰. பிறனுடைய அவயவங்களில் யாதொன்றை யாதொரு விதத்தினாலே வயிராக்கியங்கொண்டு கெடுத்துப்போட்டால் அந்தக்குற்றத்துக்கேடாகத் தானும் அந்த அவயவத்தையே இழக்கக் கடவன்.

௨௧. ஒருத்தனுடைய பொருளையாவது மிருகங்களையாவது களவெடுத்தவன் நாலத்தனை இறுக்கக்கடவன். மிருகத்தைவிட்டுப் பயிரை அழித்தவன் அழிந்துபோன அளவு இறுக்கக் கட

நியாயப் பிரமாணங்கள் என்ன?

Digitized by Google

வன். பயிரையென்கிலுந் தானியத்தையென்கிலும் நெருப்பிட்டெரித்தவன் எரிந்துபோன அளவு இறுக்கக் கடவன்.

உஉ. கன்னியை அழித்தவன் முறைப்படி அவளை விவாகம்பண்ணக்கடவன். விதவையை யாவது அநாத பிள்ளைகளை யாவது சிறுமைப்படுத்துகிறவன் சபிக்கப்படுவான். அவனுடைய மனைவி விதவையாகவும் அவனுடைய பிள்ளைகள் அநாதபிள்ளைகளாகவும் போவார்கள்.

உஈ. அநியாய வட்டியைச் சுமத்தி ஒருவனைக் கடனாளியாக்க வகை தேடாயாக. பொய்ச் சாட்சிக்கு ஆலோசனை சொல்லவும், பொல்லாங்கு செய்கிறவர்களுடைய கூட்டத்திற் சேரவும், நியாயத்தைப் புரட்டுகிறவர்களுடைய கருத்துக் கிசையும்படி வழக்குத் தீர்க்கவும், உன்னிடத்திற் சேர்ந்த தரித்திரனுக்காகவாகிலும் உனக்கதிமுகமாக இருக்கிறவனுக்காகவென்கிலும் வழக்கிலே ஓரவாரஞ் சொல்லவும் வேண்டாம்.

உச. கள்ளஞ் செய்கிறதற்குடன்படவும் குற்றமில்லாத நீதிமானைக் குற்றப்படுத்தவும்வேண்டாம். கைக்கூலியானது அறிவுள்ளவர்களை அறிவீனராகவும் நீதிமான்களை அநீதராகவுஞ்

செய்கிறபடியால் பரிதானம் வாங்காயாக. வறியவர்களை ஒடுக்காயாக என்பவைகளும் இன்னும் இப்படியான சில நியாயப் பிரமாணங்களுமேயாம்.

உரு. பின்னும் மோசே அவர்களை அழைத்துக் கொண்டுபோகிற வழியிலே. அவர்கள் தங்களுக்கென்னென்ன குறை வந்தாலும் அவைகளை எல்லாம் பராபரன் மேலே வைத்துப். பேசினதினாலே மென்மேலுங் குறைச்சலும் வருத்தங்களும் அவர் வரப் பண்ணியும் அந்த வருத்தத்தினாலே மெலிந்து தம்மை நோக்கி வேண்டுதல் பண்ணும் பொழுது இரங்கி அவர்களுடைய குறையை நீக்கிவிட்டார்.

உகா. இன்னுந் தமக்குப் பணிந்து நடந்து வந்த காலத்தில் அவர்களுடனே எதிர்த்து யுத்தம்பண்ணின சத்துருக்களை வெற்றிகொள்ளவும். பொல்லாங்கு செய்த காலத்திலே தோற்கவும் பண்ணினார்.

உஎ. பராபரனுடைய கட்டளைப்படி. மோ

அவர்களுக்கு இடையிடையே தாழ்ச்சிவந்த முகாந்திரம் என்ன?

அவர்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணுங் காலத்திற் சிலகாலம் தோற்றுப்போகவந்த காரணம் என்ன?

Digitized by Google

சே ஒவ்வொரு கோத்திரத்தில் ஒவ்வொருவரை வேவுகாரராகத் தெரிந்து எடுத்துக் கானான்தேசத்திற் போய்ச் சோதனைபார்த்து வரச் சொல்லி அனுப்ப அவர்கள் நாற்பது நாளாக அத்தேசமெங்குஞ் சுற்றிப் பார்த்துத் திரும்பி வருகையில் அத்தேசத்தின் முந்திரிகைக் குலைகளையும் மற்ற பழங்களையுங் கொண்டுவந்து மாதிரி காண்பித்து அது பாலுந் தேனும் நிறைந்த தேசமாய் இருந்தும் அத்தேசத்தார் பலவான்களும் உன்னதமானவர்களுமாய் இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு முன்னே பூச்சிகளைப் போல் இருப்போம், ஆதலால் நாம் அங்கே போகவும் அவர்களை வெல்லவுங் கூடாதென்றார்கள்.

உஅ. அவர்களில் யோசுவாவுங் காலேப்பும் அப்படியல்ல, நாம் அவர்களைப்பராபரனுடைய கிருபையினாலே வென்று அத்தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வோம் வாருங்களென்று மோசேயோடும்மற்றுஞ்சனங்களோடுஞ்சொன்னார்கள்.

கானானை வேவுபார்க்கும்படி மோசே எத்தனைபேரை அனுப்பினான்?
எத்தனை நாளாகச் சோதித்தார்கள்?
அவர்கள் வரும்பொழுது என்னத்தைக் கொண்டுவந்தார்கள்?
அவர்கள் வந்து என்னசொன்னார்கள்?
காலேப்பும் யோசுவாவுஞ் சொன்னதென்ன?

Digitized by Google

இவர்கள் ஆர்?
என்ன காவிக்கொண்டுபோறார்கள்?

உக. ஆகிலும் மற்றும் வேவுகாரருஞ் சனங்களுங் கருத்தர் அருளின கட்டளைக்கு விரோதமாய்ப் பேசி மென்மேலும் பொல்லாங்கு செய்ததினால் அவர்கள் கானான் தேசத்துக்குக்கொஞ்சக்காலத்திலே போகக் கூடியதாயிருந்தும் அவர்களை நாற்பது வருஷக்காலம் வனாந்தரத்திலே சுற்றித்திரியப்பண்ணினார். தாங்கள் முன் பெற்றிருந்த நியாயப்பிரமாணப் பெட்டியைப் பராபரனுடைய கட்டளைப்படி லேவியராகிய ஆசாரியர் எந்த இடத்துக்குக் கொண்டுபோனாலும் அந்த இடங்கள் எல்லாந் தாங்களும் போவார்கள். எந்த இடத்திற்றங்குவார்களோ அந்த இடத்திலே தாங்களும் நின்றுவிடுவார்கள்.

கம. இப்படியே இவர்கள் வழிகொண்டு வருகையிற் காலேப்பும் யோசுவாவுமொழிய எகிப்த்துத் தேசத்தில் இருந்து புறப்படுகையில்

மற்றவர்கள் என்னத்தைச் சொன்னாகள்?
அவர்கள் வனாந்தரத்தில் எத்தனை வருஷமாகத் திரிந்தார்கள்?
கானான்தேசத்துக்குக் கிட்டவந்தும் அங்கேசேர நாற்பதுவருஷஞ் சென்றதென்ன?
கற்பனை பெற்றபின்பு அவர்களுக்கு வழிகாட்டினதார்?
எகிப்த்தில்இருந்து புறப்பட்ட எல்லாருங் கானான்தேசத்திலே சேர்ந்தார்களோ?

Digitized by Google



இது என்னத்தைக் காட்டுகிறது?
என்னத்தைக்காவுகிறார்கள்?
இவர்கள் ஆர்?

Digitized by Google

இருபது வயதுக்கு மேற்பட்டவர்களாய் இருந்தவர்கள் எல்லாரும் வனாந்தரத்திலே இறந்துபோனார்கள். மோசேயும் இறந்துபோனதினால் யோசுவா என்பவனைப் பராபரன் மோசேயின் இடத்துக்கு நியமித்து அவனைக் கொண்டு அந்தச் சனங்களை நடத்துவித்தார்.

௩௧. அவர்கள் யோர்தான் ஆற்றங்கரையில் வந்தபொழுது உடன்படிக்கையின் பெட்டியைச் சுமந்து வந்த ஆசாரியர் அந்த நதியிலே தங்களுடைய கால்களை வைக்கவும் பராபரனுடைய கிருபையினாலே நதியின் சலம் இரண்டு பக்கத்திலும் ஒதுங்கி வழிகொடுக்க அந்த வழியாய் இஸ்ரவேற் சனங்கள் எல்லாரும் நதியைக் கடந்து கானான் தேசத்திலே சேர்ந்து யெரிகோவென்னும் நகரிக்கெதிரே வந்தார்கள்.

௩௨. அப்பொழுது பராபரனுடைய கட்டளைப்படி ஆறுநாளும் ஒவ்வொரு முறை அந்தப் பட்டணத்தைச் சூழ்ந்து வந்து ஏழாம் நாளி

அதின் நிமித்தம் எத்தனைபேர் அழிக்கப்பட்டார்கள்?
மோசேயுஞ் சேரவில்லையா?
மோசேயிலிடத்துக்கு வந்ததார்?
அவர்கள் எந்த ஆற்றங்கரை அண்டையிலே வந்தார்கள்?
சனங்கள் அந்த ஆற்றை எப்படிக் கடந்துபோனார்கள்?
எந்தப் பட்டணத்தைக் கிட்டிச்சேர்ந்தார்கள்?

Digitized by Google

லே ஏழுமுறை சுற்றி வந்து ஆசாரியர் எக்காள ம் ஊதவும் அந்தப் பட்டணத்தின் மதில் இடிந்து விழுந்து போக அவர்கள் அந்தப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார்கள். கிமு. 1451

௩௩. பின்பு பராபரன் அந்தக் கானான் தேசத்தில் இருந்த சனங்களைத் துரத்திவிட்டு இஸ்ரவேல் சனங்களை அதிலே குடியேறப்பண்ணி அந்தத் தேசத்தை எல்லாம் முன் சொன்ன பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பங்கிட்டுக் கொடுத்து அதின் பின் வனாந்தரத்திலே இருக்கையில் அந்த இஸ்ரவேலர் விருத்த சேதனம் பண்ணுவதை விட்டுவிட்டபடியால் மறுபடி விருத்த சேதனம்பண்ணி வரவும் அவர்கள் தம்மை வணங்கும் படி சீலோவென்னும் நகரியிலே ஆசரிப்புக் கூடாரத்தை நிறுத்தவுங் கட்டளை இட்டு அவர்களுக்குத் தாம் அருளிச் செய்த மன்னாவையும் நிறுத்தி விட்டார்.

௩௪. மோசேக்குப் பின்பு, ௰௭. வருஷம்

அந்தப்பட்டணத்துக்கு என்ன செய்தார்கள்?
கானானியருக்கு என்ன சம்பவித்தது?
வனாந்தரத்தில் இருக்கையிலுஞ் சுன்னத்துப் பண்ணினார்களா? [தா?
பின்பு மன்னாவென்னும் ஆகாரம் வானத்திலிருந்து வந்த பராபரன் அவர்களுக்கு என்ன கட்டளையிட்டார்?
ஆசரிப்புக் கூடாரத்தை எங்கேவைக்கும்படிகற்பித்தார்?

Digitized by Google

யோசுவா அவர்களை நடத்திவந்தான். அவன் மரணம் அடைந்தபின் இஸ்ரவேலர் பராபரன் தங்களுக்கிட்ட கட்டளைகளை எண்ணாமற் புறச்சாதியாரோடுங்கலந்து அவர்களுடைய விக்கிரகங்களையும் வணங்கி வந்ததினாற் பராபரன் அவர்களை மோசொப்பொத்தாமியாவின் இராசாவாகிய கூசான்ரித்தாயிங் கையிலே அகப்படப் பண்ணினார்.

௬௫. மறுபடி அவர்கள் பராபரனண்டை திருப்பினதினாலே காலேப்பின் தம்பியாகிய ஒதனியேல் அந்த இராசனைச் சயங்கொண்டு அவர்களை மீட்டெடுத்து, ௪௰. வருஷம் ஆண்டு நடத்திவரப்பண்ணினார். அவன் மரணமடைந்த பின்பு இவர்கள் திரும்பவும் பொல்லாங்கு செய்யத் தலைப்பட்டதினாலே மோவாபின் இராசாவாகிய எக்லோனின் ஆ

ஒதனியேல் கிறி. 1443.

கத்தர் கொடுத்த கட்டளையின்படி செய்தார்களா?
அவர்களை ஆருடைய கையிலே ஒப்புக்கொடுத்தார்?
இயோசுவா இஸரவேற் சனங்களை எத்தனைவருஷமாக நடத்தினான்?
இயோசுவாவினிடத்துக்கு ஆரை நியமித்து வைத்தார்?
கத்தர்கொடுத்த கட்டளையின்படி செய்தார்களா?
அவர்களை ஆருடையகையிலே ஒப்புக்கொடுத்தார்?
ஒதனியேல் அவர்களை எத்தனை வருஷமாக நடத்தினான்?
மோவாபின் கையிலே அவர்கள் அகப்படவந்தகாரணம் என்ன?

Digitized by Google

ளுகைக்குள்ளே, ௰௮. வருஷமாக அகப்பட்டி
ருந்து மிகுந்த வருத்தமடைந்தார்கள்.

௫௬. மறுபடியும் அவர்கள்பராபரனிடத்திற்
சேர்ந்து அவரை வேண்டுதல் செய்ததினாலே அ
வர் ஏகூத்தென்றவன் போய் | ஏகூத்து
அவர்களை மீட்டு நடத்தி வரும்படி
செய்தார். இதினாலே அவர்கள் எண்பதுவருஷ
மாக ஆரோக்கியமடைந்தார்கள்.

௫௭. அவனுக்குப் பிற்பாடு பெலிஸ்தர் வந்து எ
திர்க்க அவர்களுக்குள் அதிபதியாயிருந்த | சம்கார்
சம்காரென்பவன் ஒரு முட்கோலினால் அறு
நூறுபெயரைச் சங்கரித்து படுஞ்சையெல்லாம்
வென்று இஸ்ரவேலுக்கு ஆறுதல் செய்தான்.

௫௮. அவன் மரணம் அடைந்தபின் அவர்கள்
ஆசாரின் இராசாவாகிய யாபீனென்பவனாலே நெ
ருக்கப்பட்டார்கள். அப்பொழுது பாராக்கென்
பவன் தீர்க்கதரிசியாயும் நியாய விசாரிப்புக்கா
ரியாயுமிருந்த தேபோராளுடைய | தேபோராள்,
சொற்படி யாபீனுடனே யுத்தஞ் | பாராக்கு

எவ்வளவுகாலம் நெருக்கிடைப்பட்டார்கள்?
அவர்களை மீண்டுகொண்டது ஆர்? ஏகூத்து.[செய்தான்?
ஏகூத்து எத்தனை வருஷமாக அவர்களுக்குச் சகாயஞ்
ஏகூத்துக்குப்பின் ஆர் அவர்களை ஆண்டது?
சம்காருக்குப்பின் ஆர்?

Digitized by Google

செய்து பராபரனுடைய வல்லமையினாலே அவனையும் அவனுடைய சேனைகளையுஞ் சயங்கொண்டான்.

௫௯. இஸ்ரவேலர் மறுபடியும் பாவங்களைச் செய்து பராபரனை விட்டுவிலகி மீதியானியரின் கையிலே அகப்பட்டார்கள். அவர்கள் அதற்காகத்திரும்பவும் பராபரனை நோக்கி வேண்டுதல்பண்ணினபடியால் அவர் தம்முடைய தூதனை அனுப்பிக் கிதேயோனை முயற்சிப்படுத்தி அவனைக்கொண்டு அவர்களை இரட்சித்தார்.

கிதேயோன்

௬௰. அதின்பின் அபிமேலேக்கு இஸ்ரவேலை மூன்றுவருஷமாக ஆண்டுகொண்டு கத்தருக்கு விரோதமாய் எழும்பி யுத்தம்பண்ணித் தோற்றோட அவர்களைச் சங்கரிக்கும்படி இவன் தொடர்ந்து போகையில் ஒரு கோபுரத்தின்மேல் நின்ற

அபிமேலேக்கு.

யாயீன் என்பவனாலே நெருக்கிடைப்பட்டபொழுது அவர்களை ஆரைக்கொண்டுமீட்டுக்கொண்டார்?
பின்பு எப்படிப்பட்டவர்களானார்கள்?
அவர்களைச் சிறைப்படுத்தினதார்?
மீதியானியரின் கையிலிருந்து விடுதலைபண்ணினது ஆர்?
கிதேயோன்.

கிதேயோனுக்குப் பின் ஆர்வந்தது?
அபிமேலேக்கு எப்படி நடந்தான்?

Digitized by Google

பெண்ணொருத்தி ஒரு கல்லினால் இவனைக் கொன்று போட்டாள். இப்படியே அவன் செய்த அக்கிரமத்துக்குத் தக்க பலனைப் பராபரன் அவனுக்குக் கட்டளையிட்டார்.

௪௧. அபிமேலேக்குக்குப் பிறகு தோலா என்பவன் இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பி அவர்களை இருபத்துமூன்று வருஷம் நியா|தோலாயம் விசாரித்துப் பிற்பாடு மரித்துச் சாமீரிலே அடக்கப்பண்ணப்பட்டான்.

அவனுக்குப் பிறகு கீலேயாதியனான யாவீர் எழும்பி இஸ்ரவேலை இருபத்திரண்டு |யாவீர் வருஷம் நியாயம் விசாரித்தான்.

௪௨. பின்னும் இவர்கள் தங்கள் தேவனைவிட்டுப் பொல்லாங்கு செய்ததினாலே பெலிஸ்தராலும் அம்மோனியராலும் நெருக்கப்பட்|இப்தா டுப் பராபரனை மன்றாடினபொழுது இப்தாவென்றவனைக்கொண்டு அவர்களைத் தற்காத்தார். அவனுக்குப் பிறகு எப்சோன் என்பவன்

இப்தா அவர்களை மீட்டுக்கொண்டபொழுது இஸ்ரவேலர் ஆர்கையில் அகப்பட்டிருந்தார்கள்?
எத்தனைகாலமாகத் தோலா ஆண்டுகொண்டான்?
தோலாவுக்குப் பிறகு ஆர் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்தது?
பின்பு ஆராலே நெருக்கப்பட்டார்கள்?

Digitized by Google

எப்சோன். ஏலோன். அப்தோன். ஏழுவருஷமாகவும் ஏலோனென்பவன் பத்து வருஷமாகவும் அப்தோனென்பவன் எட்டு வருஷமாகவும் இஸ்ரவேற் சனங்களை ஆண்டுகொண்டார்கள். அதின்பின்னும் ௪௰.வருஷம் பெலிஸ்தராலே நெருக்கப்பட்டபொழுது சிமிசோனென்பவன் கருத்தருடைய அருளினாலே அந்தப் பெலிஸ்தரைச் சயங்கொண்டு இவர்களை விடுதலையாக்கினான்.

௪௫. இந்தச் சிமிசோனென்பவன் தன் தலையின் மயிரை வெட்டாமலும் மதுபானம்பண்ணாமலும் பராபரனுடைய கட்டளைப்படி நடந்ததினாலே மகா பலசாலியாய் இருந்தான். ஒரு நாள் அவன் ஒரு சிங்கந் தன்னைச் சேதப்படுத்த வருகிறதைக் கண்டு அதைப் பிடித்துக் கிழித்துப்போட்டான். வேறொரு நாளிலே இஸ்ரவேற் சனங்களோடு யுத்தம் பண்ண வந்த பெலிஸ்தரில் ஒராயிரம் பேரைக் கொன்றான்.

சிமிசோன். கிமு. 1155.

எப்சோன் எத்தனை வருஷமாக நியாயம் விசாரித்தான்?
ஏலோன் எத்தனைவருஷமாக நியாயம்விசாரித்தான்?
அப்தோன் எத்தனை காலமாக நியாயம் விசாரித்தான்?
சிமிசோன் எப்படிப்பட்டவன்?

Digitized by Google

௨௪ இவன் இப்படியே பலசாலியாகவும் எல்லாரிலும் மதிக்கப்படத் தக்கவனாகவும் இருக்கையில் ஒரு பெலிஸ்தியப் பெண்ணைக் கண்டு இச்சித்துத் தனது பிதாமாதாவிடத்திலேபோய் அவளைத் தான் விவாகம்பண்ணவேண்டுமென்று சொன்னபொழுது புறச்சாதியாளாய் இருக்கிற ஒரு பெண்ணைப் பராபரனுடைய சனமாயிருக்கிறவர்களில் ஒருவனாகிய நீ விவாகம்பண்ணத் தகாதென்று அவர்கள் சொல்லியும் அவன் கேளாமல் அந்தப் பெண்ணை விவாகம்பண்ணிக்கொண்டான். சில காலத்துக்குப் பின்பு அவள் பெலிஸ்தருக்குச் சகாயம்பண்ண நினைத்து அவன் நித்திரையாய் இருக்கும் பொழுது அவன் தலையின் மயிரை வெட்டுவித்ததினாற் பலவீனனானான்.

௨௫. அப்பொழுது பெலிஸ்தர் வந்து பிடித்து அவனுடைய கண்ணைத் தோண்டிப்போட்டுச் சிறைசாலையில் வைத்தார்கள். அதின்மேல் அவன்

தன பெலனை எப்படிக் காண்பித்தான்?
சிமிசோன் எத்தனைபெலிஸ்தரை ஒருநாளிலேகொன்றான்
ஆரை விவாகம்பண்ணினான்?
பிதாமாதா அதற்குச் சம்மதித்தார்களா?
பெலிஸ்தருக்குச் சகாயம்பண்ணும்படி சிமிசோனுடைய பனைவி என்னசெய்தாள்?
அதினால் என்ன சம்பவித்தது?
பெலிஸ்தர் அவனை ன்னசெய்தார்கள்?

Digitized by Google

பராபரனைப்பார்த்து மன்றாடிக்கொண்டதினா லும் மயிர் திரும்பமுளைத்து வளர்ந்ததினாலுஞ் சற்றே பலசாலியாயிருக்கையில் அவனுடைய வேடிக்கை பார்க்கும்படி தங்கள் கோவிலின் தூண்களோரமே அவனைக் கட்டிவைத்தார்கள்.

சகூ. அப்பொழுது அவன் தான் கட்டப்பட்டிருந்த தூண்களில் இரண்டையும் பிடுங்கி அந்தக்கோவிலையும் விழுத்தி அதிலிருந்த பிரபுக்களையும் வேறனேக சனங்களையுங் கொன்றுபோட்டுத் தானும் இறந்துபோனான்.

சஎ. பின்பு எலி என்பவன் அவர்களுக்கு ஆசாரியனும் நியாயாதிபதியுமாய் இருந்தான். அவனுடைய புத்திரர் மிகுந்த துராசாரராய்த் தேவாலயத்துக்கு எவரேனுங் கொண்டுவருகிற உடமைகளைக் கவருகிறவர்களாயும் அங்கேவருகிற பெண்களோடே விபசாரஞ் செய்கிறவர்க

மறுபடியும் அவனுக்கு எப்படிப் பெலன் உண்டானது?
பெலிஸ்தர் அவனை என்னத்தோடே கட்டிவைத்தார்கள்?
சிம்சோன் என்னசெய்தான்?
அவனுக்கு என்ன சம்பவித்தது?
பின்பு இஸ்ரவேலருக்கு நீதியதிபதியாய் இருந்ததார்?
அவனுக்கு வேறென்ன வேலை இருந்தது?
அவர்களுடைய ஒழுக்கமென்ன?

Digitized by Google

ளாயுமிருந்ததினால் ஏலி என்பவன் மரணமடை ந்த பின் அந்தச் சனங்களை நடத்தும்படி சிறுவயதுதொடுத்துப் பத்தியுள்ளவனாயிருந்த சாமுவேலென்கிற தீர்க்கதரிசியைப் பராபரன் நியமித்து வைத்தார். அக்காலத்தில் இஸ்ரவேற் சனங்கள் தம்முடைய கட்டளைப்படி நடவாததினாலே பெலிஸ்தர் வந்து யுத்தம்பண்ணி அவர்களைத் தோற்கடிக்க அவர் அவர்களைக் கைவிட்டார்.

௬௮. அந்தப் பெலிஸ்தர் ஆசாரியர் கொண்டுபோன நியாயப்பிரமாணப் பெட்டியைப் பறித்துத் தங்கள் ஊருக்குக் கொண்டுபோய்த் தாங்கள் வணங்குகிற தாகோன் என்னும் விக்கிரகத்தண்டையிலே வைத்துப்போய் மறுநாட் காலமே வந்து பார்க்கும்பொழுது அந்த விக்கிரகம் நியாயப்பிரமாணப்பெட்டிக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து கிடந்தது.

௬௯. அப்பொழுது அவர்கள் அதை எடுத்

ஏலிக்குப் பின்பு தீர்க்கதரிசியாக நியமிக்கப்பட்டதார்?
சாமுவேலின் நாட்களிற் பராபரன் இஸ்ரவேலருக்குஎன்னசெய்தார்?
அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலரிடத்தில் இருந்து என்னத்தைப் பறிக்கொண்டார்கள்?
அதை எங்கே வைத்தார்கள்?
தாகோனுக்கு என்ன சம்பவித்தது?

Digitized by Google

துத் திரும்பவும் அதின் தானத்தில் நிறுத்தி வைத்துப் போனார்கள். மறுநாட் காலமேயும் வந்து பார்த்தபொழுது அந்த விக்கிரகம் பெட்டிக்கு முன்பாக மறுபடியும் விழுந்துகிடந்தது. அதின் தலையும் கைகளும் வாசற்படியின் மேல் வெவ்வேறாய்க் கிடந்தன. அதைக் கண்டு பயந்து அவர்கள் அந்தப் பெட்டியைப் புதிதான ஒரு வண்டியில் ஏற்றி இரண்டு கறவைப் பசுக்களைக் கட்டி இஸ்ரவேற் சனங்களண்டைக்கு மறுபடியும் அனுப்பிவிட்டார்கள்.

௫௰. சாமுவேல் முதிர் வயதானபொழுது அவனுடைய குமாரர் அவர்களுடைய நியாயம் விசாரித்துத் தப்பாய் நடந்ததினாலே இஸ்ரவேற் சனங்கள் பொறுதியற்றவர்களாய்ப் புறணி பேசி மறு சாதியாரைப்போலத் தங்களுக்கும் ஒரு இராசாவைத் தெரிந்து நியமிக்க வேண்டு
சவுல் கி.மு.1095 மென்று கேட்டதின் நிமித்தம் சாமுவேல் பராபரனை நோக்கி வேண்டுதல்செய்து அவருடைய உத்தரவின்படி சவுலென்கிறவ

அப்பொழுது பெலிஸ்தர் பெட்டியை என்ன செய்தார்கள்?
சனங்கள் சாமுவேலிடத்தில் என்னகேட்டார்கள்?
ஆரை இராசாவாக நியமித்தார்கள்?

Digitized by Google

யை அவர்களுக்கு இராசாவாக அபிஷேகம்பண்ணினான். அந்தச் சவுலென்பவன் பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணப்போன ஒரு நாளிலே ஆறரை முழம் உயர்ந்தவனான கோலியாத்தென்பவன் தன் சேனைத்தளத்தை விட்டு இஸ்ரவேற் சனங்களுடைய படைச்சனங்களுக்கு எதிராக வந்து நின்று அவர்களை நிந்தித்துப் பரிகாசம் பண்ணினான்.

ருக. இஸ்ரவேற் சனங்கள் அவனுக்கு மிகவும் பயந்திருக்கையில் ஆடு மேய்க்கிறவனாகிய தாவீதென்கிற ஒரு வாலிபன் அந்தப் போர்க்களத்திலே நின்ற தமையன்மார்மூன்றுபேருக்குப்போசனங் கொண்டுவந்தான். அவன் பராபரன் மேலே நம்பிக்கையுள்ளவனாய் இருந்தபடியினாலே தன்னண்டையிலே நின்றவர்களைப் பார்த்துப் பராபரனை வழிபடுகிறவர்களை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எட்மாத்திரம்! இவனை மடங்கடித்து இஸ்ரவேலரை அவன் பண்ணின இந்த நிந்தையை

கோலியாத்து ஆர்?
கோலியாத்து என்ன சொன்னான்?
கோலியாத்தைக் கொன்றதார்?
தாவீது ஆர்?
அவன் போர்க்களத்துக்கு ஏன்போனான்?
தாவீது இஸ்ரவேலரிடத்தில் என்ன சொன்னான்?

Digitized by Google

விலக்குகிறவனுக்கு என்ன பிரத்தி உபகாரஞ் செய்யப்படுமென்க இராசா அவனை மிகவும் ஐசுவரிய முள்ளவனாக்கித் தம்முடைய குமாரத்தியையும் அவனுக்குக் கொடுப்பாரென்றார்கள்.

ருஉ. அப்பொழுது அவன் இராசாவாகிய சவுலுடனே கோலியாத்தின் நிமித்தம் ஒருவனுந் திடனற்றுப்போகவேண்டாம், அடியேன்போய் இந்தப்பெலிஸ்தனுடனே யுத்தம்பண்ணுகிறேனென்று சொல்லி ஒருதடியைக் கையிலே பிடித்து ஆற்றில் இருந்த ஐந்து கல்லுக்களையுந் தெரிந்தெடுத்துப் பையிலே போட்டுக் கவணையும் எடுத்துக்கொண்டு அந்தப் பெலிஸ்தனுக்கு எதிராகப்போனான்

ருங. அப்பொழுது அவனும் பரிசையைப் பிடித்துக்கொண்டு சவுந்தரியமுள்ள இளைஞனாகிய தாவீதைப்பார்த்து நீ ஒரு தடியை எடுத்துக்கொண்டு என்முன்னேவர நான் ஒரு நாயோ? உன்னை இப்பொழுது கொன்று நாய் நரி காகங் கழுகு முதலானவைகளுக்கு இரை

கோலியாத்தைக் கொன்றவனுக்கு இராசா என்ன வெகுமதி பண்ணுவோம் என்று சொன்னான்?
தாவீது கொண்டுபோன ஆயுதங்கள் என்ன?
பெலிஸ்தன் என்ன சொன்னான்?

Digitized by Google

பாகக் கொடுப்பேனென்று ஆஞையிட்டுச் சப தங்கூறினன்.

௫௪. அப்பொழுது தாவீது பெலிஸ்தனை நோக்கி நீ பரிசையும் வாளும் ஈட்டியும் பிடித்து எனக்கு நேரே வருகிறாய், நானோ நீ நிந்தனைபண்ணின இஸ்ரவேலருடைய இராணுவங்களின் பராபரனாகிய கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு உனக்கு நேரே வருகிறேன், பராபரன் எங்களுக்குப் பங்காயிருக்கிறாரென்றும் அவர் இரட்சிப்பதற்கு வாளேனும் ஈட்டியேனும் வேண்டுவதில்லை என்றும் இந்தச்சேனைகள் முழுதும் அறிந்து தமக்குத் துதிசெலுத்தும்படி அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார், இன்றையதினங் கர்த்தருடைய தயவினாலே நான் உன் தலையைவெட்டி உன்னைச் சயங்கொள்வேனென்று சொல்லிப் பையில் இருந்த ஒரு கல்லை எடுத்துக் கவணிலே வைத்துச் சுழற்றிப் பெலிஸ்தனுடைய நெற்றிக்கிலக்காக எறிந்தான்.

௫௫. அந்தக் கல்லு அவன் நெற்றிக்குள் உட்பு

தாவீது அதற்கு என்ன சொன்னான்?
தாவீது என்னசெய்தான்?
பெலிஸ்தனுக்கு என்ன சம்பவித்தது?

Digitized by Google

ருவிப்போனதினால் அவன் முகங் குப்புற விழ தாவீது அவனுடைய வாளையுருவி அவன் தலையை வெட்டினான். அப்படியே தங்கள் பராக்கிரமசாலி செத்துப்போனதைக் கண்டு பெலிஸ்தர் பின்னிட்டோடிவிட்டார்கள்.

௫௬. இப்படியே அந்தப் பெலிஸ்தரை வெற்றிகொண்ட தாவீதை இஸ்ரவேற் சனங்கள் அதிகமாய்ப் புகழ்ந்ததை இராசாவாகிய சவுல் கண்டு கோபங்கொண்டு அவனைக் கொல்ல வகை பார்த்தினாலும் அமலேக்கியரோடு யுத்தம்பண்ணும் பொழுது பராபரன் தனக்குக் கற்பித்தபடி செய்யாமற் றள்ளிவிட்டப்படி பொருளாசைக்காரனாய் நடந்தினாலும் பராபரன் அவனைத்தள்ளிப் பத்தியுள்ளவனாய் இருந்த தாவீதைச் சாமுவேலைக்கொண்டு அவர்களுக்கு இராசாவாக அபிஷேகம் பண்ணுவித்தார்.

௫௭. இந்தத் தாவீது மிகுந்த தேவபத்தியும் தேவநேசமுமுடையவனாய் இயாதொரு பாவத்

கோலியாத்து மரணம் அடைந்தபின் என்ன செய்தார்கள்?
சவுல் தாவீதை எப்படி நடத்தினான்?
சவுல் ஏன் கோபித்துக்கொண்டான்?
பராபரன் சாமுவேலையுந் தாவீதையும் எப்படி நடத்தினார்?
தாவீது எப்படிப்பட்டவன்?

Digitized by Google



இவர்சன் ஆர்?

ஆரை இராசாவாக அபிஷேகம்பண்ணுகிறான்?

தைத் தான்செய்தால் உடனே அதற்காக மிக வும் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பிப் பராபரனண்டை சேர்ந்து பொறுதிபெற்றுத் தானாவது தன் சினேகிதராவது தன்னைக் காக்கக் கூடுமென்றெண்ணாமற் றன்னைக் காக்கவுங் கைவிடவும் பராபரன் வல்லவரென்கிற உறுதியான நம்பிக்கையுடனே இருந்தான்.

தாவீது. சக. வருஷம். 1055

௫௮. இதுவுமன்றிப் பராபரன் தெரிந்துகொண்ட சனங்களை மிகவும் நேசித்து அவர்களை அவர் நியமித்த வழியிலே நடத்தி அவர்கள் எல்லாரும் ஒரு இடமாகச் சேர்ந்து பராபரனுக்கு ஆராதனைசெய்யும்படி ஒரு தேவாலயங் கட்டவேண்டுமென்கிற விருப்புடையவனாய் அதற்குத் தேவையான எத்தனங்களிலும் அநேகஞ் சேர்த்திருந்ததுமன்றித் தேவாவியுடையவனாய் இருந்து வேதத்திலுள்ள சங்

தாவீது பாவத்திலே விழுந்தவேளைகளில் என்னசெய்து வருவான்?

பராபரனுடைய சனங்களை எப்படிநடத்தினான்?

அவன் பராபரனுடைய பார்வைக்கு எப்படிப்பட்டவனாய் இருந்தான்?

தாவீது என்னத்தைக் கட்ட விரும்பினான்?

வேதத்தில் எந்தப்பகுதியை எழுதினான்?

Digitized by Google

கீதங்களையும் எழுதினான்.

௩௧. தாவீது இறந்தபின்பு பராபரன் அவனுடைய மகனாகிய சாலோமோனை இராசாவாக்கினார். இந்தச் சாலோமோனுக்குப் பராபரன் தரிசனையாகி உனக்கு வேண்டுவதென்னவென்று கேட்டபொழுது அவன் தனக்குப் பலத்தையாவது, இராச்சியத்தையாவது, சத்துரு சயத்தையாவது, நீண்ட ஆயுவையாவது கேளாமல் உம்முடைய சனத்தை நடத்தத்தக்க ஞானத்தை அடியேனுக்குக் கட்டளையிட வேண்டுமென்று கேட்கப் பராபரன் அவன்மேற் பிரியங்கொண்டு முன் சென்ற காலத்திலும் இனி வருகிற காலத்திலும் உள்ள இராசாக்கள் எல்லாரிலும் உனக்கு அதிக மகிமையையும், அறிவையும், ஞானத்தையும், ஐசுவரியத்தையுங் கொடுத்தோமென்று சொன்னார்.

சாலோமோன ௩௧ கிறி. 1014.

௩௨. அப்படியே அவன் நல்ல வரத்தை அடைந்து சகல காரியத்திலும் மேன்மையுடைய

அவனுடைய மகனுக்குப் பேர் என்ன?
தாவீதிடத்துக்கு வந்ததார?
பராபரன் சாலோமோனுக்குத் தரிசனையாகி என்ன சொன்னார்?
சாலோமோன் என்ன கேட்டான்?

Digitized by Google

வனாகவும நல்ல அனுபோகியாகவும் இருந்து பின்பு அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துக் கர்த்தாவின் ஆவியினாலே நீதிமொழி என்றும், பிரசங்கமென்றும், ஞானப்பாட்டென்றுஞ் சொல்லப்படுகிற மூன்று வேதப்பகுதிகளை எழுதி எருசலேம் பட்டணத்தில் மகத்துவமான ஒரு ஆலயத்தையுங் கட்டுவித்தான். அதிலே பலஊர்களிலும் இருந்த யூதர்கள் எல்லாரும் வந்து பலி செலுத்தவுந் தேவஆராதனை நடப்பிக்கவுங் கட்டளையிட்டு அந்த ஆலயப்பிரதிட்டைக்கு வந்து சேர்ந்த சனங்களை நோக்கி மகிழ்ச்சியடைந்து அவர்கள் எல்லாருந் தேவபத்தியாய் நன்னெறியிலே ஒழுகும்படி பலபல காரியங்களையும் நினைப்பூட்டி அவர்களை ஆசீர்வதித்தான்.

௱க கானான்தேசத்தில் யூதர்கள் சேர்ந்தநாள் முதற்கொண்டு சாலோமோன் தேவாலயங் கட்டின நாள்வரைக்குஞ் சென்றவருஷம். ௬ாசஅ.

அவனுக்கு உலகசெலவம எலலாம எப்படிக் காணப்பட்டது?
தேவாலயத்திலே பலிசெலுத்த வந்ததார்?
வேதத்தில் எந்தப் பகுதிகளை எழுதினான்?
தெய்வாலயத்தைக் கட்டினதார்?
தெய்வாலயப்பிரதிஷ்டையிலே அவன்செய்ததென்ன?
யூதர் எகிப்த்தைவிட்டுப் புறப்பட்டது தொடுத்துச் சாலோமோன் தேவாலயங்கட்டின நாள்வரைக்குஞ் சென்றவருஷம் எத்தனை?

௰. அதிகாரம்.

சாலொமோன் என்ற இராசா தேவாலயங் கட்டின நாள்தொடுத்து யூதசனஞ் சிறைபாகப் பாபிலோன் தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டநாள் வரைக்குஞ் சென்ற வருஷம், சாயரு.

ஆதி. 3001 கிறி. 1003

க. சாலொமோன் இறந்தபின்பு அவனுடைய குமாரன் ரெகொபெயாம் ஆளுகைசெய்துவருங் காலத்தில் அவன் அவர்களைக் கொடுமையாய் நடத்தினதினாலே யூதா, பென்யாமின் என்னும் இரண்டு கோத்திரத்தாருமேயன்றி மற்றப் பத்துக் கோத்திரத்தாரும் அவனை விட்டுப் பிரிந்து அகியாவென்னும் ஒரு தீர்க்கதரிசி குறித்துச் சொன்ன நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் என்பவனைத் தங்களுக்கு இராசாவாக வைத்தார்கள்.

ரெகொபெயாம்
யெரொபெயாம்

உ. இந்தப் பத்துக்கோத்திரத்தாருஞ் சேர்

சாலொமோனுக்குப் பின்பு அவர்களை ஆண்டதார்?
ரெகொபெயாஞ் சனங்களை எப்படிநடத்தினான்?
ரெகொபெயாமுடைய கொடுமையின் நிமித்தம் எத்தனை கோத்திரம் அவனைவிட்டுப்பிரிந்தது?
ஆரைத்தங்களுக்கு இராசாவாக்கிக்கொண்டார்கள்?
அவனை இராசாவாக வைத்துக்கொள்ளச் சொன்னதார்?

Digitized by Google

ந்த பகுதிக்கு இஸ்ரவேலிராச்சியம் என்றும் மற்ற இரண்டு கோத்திரத்தாருஞ் சேர்ந்தபகுதிக்கு யூதராச்சியம் என்றும் பேருண்டாயிருந்தது.

௩. இஸ்ரவேல் இராச்சியத்தார் வருஷந்தோறும் எருசலேம் பட்டணத்தில் இருந்ததேவாலயத்துக்குப்போறுத் சாலொமோனுடைய குமாரனிடத்திற் சார்ந்து விடுவார்களென்று நினைத்து எரோபெயாம் என்பவன் பொன்னினாலே இரண்டு இடபத்தை உண்டுபண்ணி அவைகளைத் தெய்வமாக வணங்கும்படி கட்டளையிட்டதுமன்றி லேவிபுத்திரரல்லாத ஜனர்களை ஆசாரியராக்கிப் பலிசெலுத்தும் பீடத்தையுங் கட்டுவித்து அந்தப் பத்துக் கோத்திரத்தாரையுங் கொண்டு பலியுஞ்செலுத்துவித்தான்.

எரோபெயாம்.
௨௨. வரு.
கி.மு. 975.

௪. அப்பொழுது பராபரன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பித் தாவீதின் வீட்டிலே யோசியாவென்னும் நாமமுள்ள ஒரு குமாரன்பிறந்து இ

பிரிந்துபோன அந்த இரண்டு பகுதியாருக்கும் பேர் என்ன?
எரோபெயாந் தேவாராதனையை எப்படிமாற்றினான்?
ஏன் கன்றுக்குட்டிகளை உண்டாக்கினான்?
ஆசாரியராக ஆரைத்தெரிந்துகொண்டான்?

Digitized by Google

திலே நின்று தூபங்காட்டுகிற ஆசாரியர்களைப் பலியிடுவானென்றும் மனிதருடைய எலும்புகளும் இதிலே சுட்டெரிக்கப்படுமென்றும் அறிவித்துப் பின்னும் இன்றையிற்றினம் இந்தப் பலிபீடம் வெடித்து அதிலுள்ள சாம்பல் கொட்டுண்பதே அதற்கு அடையாளமென்றுஞ் சொல்லுவித்தார்.

ரு. அதை எரோபேயாங் கேட்டு அவனைப் பிடியுங்கள் என்று தன் கையை நீட்ட அந்தக்கை மறுபடி முடக்கக்கூடாமற் போய்விட்டது. உடனே அந்தப் பலிபீடமும் வெடித்து அதிலுள்ள சாம்பலுங் கொட்டுண்டது. அப்பொழுது அந்த எரோபேயாம் என்பவன் தனது கை சீருக்குவரத் தக்கதாகப் பராபரனை நோக்கி மன்றுடும்படி அந்தத் தீர்க்கதரிசியிடத்திற் சொல்ல அவனும் அப்படியே மன்றாடினபின் அவனுடைய கை சீர்ப்பட்டது. இந்த அற்புதத்தைக்

பராபரன் அவனுடைய பாவங்களையும் அதின் நிமித்தம் வரும் ஆக்கினையையுங் குறித்து ஆரைக்கொண்டு அறிவித்தார்?
தீர்க்கதரிசி அப்படிச் சொல்ல இராசா என்னசெய்தான்?
அவனுடைய கைக்கு என்ன சம்பவித்தது?
அவன் கட்டுவைத்த பலிபீடத்துக்கு என்ன சம்பவித்தது?
அப்பொழுது இராசா தீர்க்கதரிசியிடத்தில் என்னசெய்யக் கேட்டுக்கொண்டான்?

Digitized by Google

கண்டும் அவன் தன்னுடைய பொல்லாங்கை விட்டுத் திரும்பாமல் மரணமடைந்தான்.

௬. அதன்பின்பு அவனுடைய குமாரன் நாதாப் இராசாவாகி அவனும் பராபரனுக்கு விரோதமாகப் பொல்லாங்குசெய்து இஸ்ரவேலரைப் பாவஞ்செய்யப் பண்ணினதினால் அகியாவின் குமாரனான பாசாவென்பவன் அவனையும் அவன் குடும்பத்தாரையுங் கொன்றுபோட்டுக் கத்தர் தீர்க்கதரிசியைக்கொண்டு சொல்லுவித்தபடி எரோபெயாமுடைய குடும்பத்தார் யாவரையுந் நிருமூலமாக்கினான். பின்பு பாசா இராசாவாகி எரோபெயாஞ்செய்தபடி தானும் பலபலபாவங்களைச் செய்து தேவசாபத்தை வரப்பண்ணினதினாலே அவனும் அவன் குடும்பத்தாரும் அழிக்கப்பட்டார்கள்.

நாதாப். உ. வரு. கிறி. 950.

பாசா உ௪ வரு. கிறி. 930

தீர்க்கதரிசி அப்படிச் செய்து சுகம்வந்த பின்பு எப்படி நடந்தான்?

எரோபெயாமினிடத்துக்கு ஆர் இராசாவானது?

அவனுடைய குணம் என்ன?

அவனைக்கொன்றுபோட்டு அவனுடைய இடத்துக்கு இராசாவானதார்?

பாசாவுக்கு என்ன சம்பவித்தது?

Digitized by Google

ஏலா ௨. வரு. கிறி 929.

அவனுக்குப் பின் அவனுடைய குமாரன் ஏலா பொல்லாங்குசெய்து குடித்து வெறியாய் இருக்கையில் அவனுடைய பணிவிடைகாரனாகிய சிம்ரி அவனை வெட்டிக் கொன்றுபோட்டுத் தான் அரசனானான்.

சிம்ரி. ௭ நாள்.

௭. அவன் இராசபட்டந்தரித்து ஏழுநாளாகிறபொழுது இஸ்ரவேலர் அதை அறிந்து ஏலாவின் படைத்தலைவனாகிய உம்ரியை இராசாவாக நியமித்துக்கொண்டு பட்டணத்தை வந்து வளைந்துகொள்ளுகையில் அந்தச் சிம்ரி என்பவன் தான் இருந்த அரண்மனையிலே நெருப்புவைத்துத் தானுங்கூட இறந்துபோனான்.

உம்ரி ௰௪. வரு. கிறி. 918

௮. அக்காலத்திலே இஸ்ரவேற்சனம இரண்டாகப் பிரிந்து ஒருபகுதி உம்ரியையும் ஒருபகுதி திப்னியையும் பின்பற்றினார்கள். அந்த உம்ரி என்பவனும் பராபரனுக்கு அடாதபொல்லாங்குகளைச் செய்துவந்து மரணமடைந்த பின் அவனுடைய குமாரனாகிய

பாஷாவைப்பட்டவனுக்குப் [illegible] யூதா [illegible] யார்?
ஏலாவின் இடத்துக்கு இராசாவானது யார்?
சிம்ரி எத்தனைநாள் அரசாண்டான்?
அவன் எவ்விதமாய் மரணமடைந்தான்?
பின்பு அவனிடத்துக்கு இராச்சியபண்ணினது யார்? [தது?
அதின் பின் அந்த இராச்சியபாரம் எத்தனையாய்ப்

Digitized by Google

ஆகாப்பென்பவன் இராசாவானான்.

௩. அவன் பாகால் என்கிற விக்கிரகத்தை உண்டாக்கிக் கத்தருடைய தீர்க்கதரிசிகளையும் ஆசாரியர்களையும் நெருக்கிடைபண்ணினதினாலே எலியாவென்கிற தீர்க்கதரிசி இந்த ஆகாப்பும் இவனுடைய சனங்களுஞ் செய்த பாவத்தின் நிமித்தம் பூமியிலே பனியும் மழையும் நம்முடைய வாக்குப்பிறக்குமளவும் பெய்யாதென்று சொல்ல அப்படியே மூன்று வருஷமும் ஆறுமாதமும் மழையும் பனியும் பெய்யாமற் தேசம் எல்லாம் பஞ்சப்பட்டுக் குடிகள் வருந்துகையில் இராசா அந்தத் தீர்க்கதரிசியைக் கொன்றுபோட வகைதேடினான்.

ஆகாப் ௨௨. வரு. கிறி. 897

௰. அந்தத் தீர்க்கதரிசி பராபரனுடைய கட்டளைப்படி யோர்தானுக்கு அருகான கேரீத்தாற்றண்டையிலே இருந்து அதிலுள்ள தண்ணீரையுங் குடித்துக் காகங்கள் கொண்டுவந்துகொ

அதின்பின் இராசாவானவன் ஆகாப் ஆருடையமகன்?
அவனைக்கடிந்துகொண்ட தீர்க்கதரிசியார்?
அந்தத் தீர்க்கதரிசியை என்னசெய்ய நினைத்தான்?
ஆகாப்பின் நிமித்தந் தேசத்துக்கு என்ன சம்பவித்தது?
எத்தனை வருஷம் பனியும் மழையும் இல்லாமல் இருந்தது?
அந்த வறப்புக்காலத்திலே தீர்க்கதரிசி எப்படிச் சீவனம்பண்ணினான்?

Digitized by Google

இவன் ஆர்!
இவ்விடத்தில் ஏன் இருக்கிறான்?
காகங்கள் இவனுக்கு என்ன கொடுக்கின்றன?

Digitized by Google

டுத்த சிலபதார்த்தங்களையும் புசித்துக்கொண்டு இருந்தான்.

யக. பின்பு அவன் கத்தருடைய சொற்படி சற்பாத்தென்கிற ஊரிலே போய் ஒரு கைம்பெண்வீட்டிலே தங்கியிருக்க அவளிடத்திலே இருந்த ஒருபிடி பிசைந்த மாவுங் கொஞ்ச எண்ணெய்யும்பராபரனுடைய கிருபையினாலே அவளும் அவளுடைய மகனும் இவனும் அந்தப் பஞ்சம் நீங்குமளவும் குறைவுபடாமல் நாள்தோறும் எடுத்துப் புசித்துக்கொண்டிருக்கத் தக்கதாக இருந்தது. பின்னும் அவளுடைய மகன் செத்துப் போக அந்தத்தீர்க்கதரிசி அவனை எழுப்பிக்கொடுத்தான். அப்படியிருக்கச் சனங்கள் மிகவும்வருத்தப்பட்டதினாலே பராபரனுடைய கட்டளைப்படி அவன் ஆகாப்பின் அரண்மனை விசாரிப்புக்காரனான உபதியாவிடத்திற் போய் நான் வந்த செய்தியை இராசாவுக்கு அறிவியென்று சொல்ல அவன்போய் அறிவித்தான்.

எப்பொழுதும் யோர்தான் ஆற்றங்கரையிலே எலியா இருந்தானோ?
கைம்பெண் வீட்டில் இருக்கையில் அவனுக்குச் சீவனம் என்ன?
அங்கே என்ன அற்புதஞ் செய்தான்?
பின்பு எலியா எங்கே போனான்?
இராசாவுக்கு இவனுடைய செய்தியை அறிவித்தார்?

Digitized by Google

௰௨. அப்பொழுது இராசா அவனை அழைத்து இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணினது நீயோவென்று கேட்க அதைச் செய்தது நானல்ல நீரும் உம்முடைய சனமும் உம்முடைய பாகாவின் ஆசாரியர்களுந்தான். அவர்கள் எல்லாரும் இப்பொழுது உம்முடைய முகதாவில் வந்து ஒரு எருதைத் துண்டித்து விறகுகளை அடுக்கி அதின்மேல் வைப்பார்களாக. நானும் ஒரு எருதைத் துண்டித்து அப்படியே வைக்கிறேன். அவர்களுந் தங்கள் தேவர்களுடைய நாமங்களைச் சொல்லி வேண்டுதல்செய்ய நானுங் கர்த்தாவை நோக்கி வேண்டுதல்செய்கிறேன். அக்கினியினுற்றக்ஷணமாகக் கட்டளையிடுந் தெய்வமே மெய்த்தெய்வம். அப்பொழுது நீங்கள் வணங்கி வருகிற பாகாலோ நான் வணங்குகிற பராபரனோ தெய்வம் என்பதை அறிந்து கொள்ளலாமென்றுசொன்னான்.

௰௩. அப்படியே இராசாவுங் கட்டளையிட

இராசா எலியாவிடத்திலே என்னகேட்டான்?
அவன் அதற்கென்ன மறுமொழி சொன்னான்?
விக்கிரக வணக்கத்தினால் இந்தக்கெடுதல் வந்ததென்று
விளங்கும்படி என்னசெய்யச் சொன்னான்?
பின்பு இராசா ஆரை அழைப்பித்தான்?

அந்த ஆசாரியர்கள் ஒரு எருதைவெட்டி விறகி ன்மேல் அடுக்கித் தங்கள் பாகாலை நோக்கிக் கால மேதொடுத்து அந்திநேரமட்டுங் கூப்பிட்டார் கள். அதற்கு யாதொரு மறுவுத்தரமுங் கிடை க்கவில்லை. இந்த எலியா விறகுகட்டைகளின்மே ல் அந்த எருதைத் துண்டித்து வைத்துத் தண் ணீரையும் அதின்மேற் குடங்குடமாக வூற்றிக் கத்தாவை நோக்கித் தேவரீர் பராபரனாயிரு க்கிறீர் என்பதை எல்லாரும் அறியும்படி அடி யேனுடைய வேண்டுதலைக் கேட்டருளுமென் று வேண்டிக்கொண்டான்.

யச. அப்பொழுது விறகுகட்டைகளின்மே ற் பலியாகத் துண்டித்து வைத்த எருதையும் அதிலேவிட்ட தண்ணீரையுங் கல்லுக்களையும் விறகுகளையும் பராபரனால் வந்த அக்கினியா னது ஒன்றாகப் பட்சித்துப்போட்டது. அதை க்கண்ட சனம் எல்லாம் முகங்குப்புற விழுந்து

பாகாலின் பூசாசாரிமார் என்னசெய்தார்கள்?
எவ்வளவு நேரமாகப் பாகாலை அழைத்தார்கள்?
அதற்குப் பாகால் ஏன் யாதொரு மறுமொழிகொடுக்க வி ல்லை?
பின்பு எலியா என்னசெய்தான்?
எலியாபண்ணின வேண்டுதல் என்ன?
அந்த வேண்டுதலுக்குப் பிரத்தியுத்தரங் கிடைத்ததோ?

Digitized by Google

கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வமென்றார்கள்.

௰௫. அப்பொழுது எலியா அந்தப் பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவருந் தப்பிப்போகாதபடிக்கு எல்லாரையும் பிடிப்பித்துக் கீசோன் ஆற்றங்கரைக்குக் கொண்டுபோய் அன்றையிற்றினமே நானூற்றைம்பதுபேரைச் சொல்லுவித்தான். அதன் பின்பு எலியா இராசாவை நோக்கி நீர் போய்ப் புசித்துக் குடியும், இப்பொழுது மழைபெய்யுமென்றான்.

௰௬. அப்படியே அவன் போனபின் இந்த எலியா பராபரனை நோக்கி மழைபெய்ய வேண்டுமென்று வேண்டுதல்செய்ய மழைபெய்தது. பின்பு அந்த இராசாவின் மனைவியாகிய எசபேல் அவனைக் கொன்றுபோடத் தொடர்ந்திருந்தும் அந்த இராசாவும் அநேக கொடுமைகள் செய்திருந்தும் அவர்கள் இருவருங் குரூரமான மரணமடைந்தார்கள். அதின்மேல்

அதைக் கண்ட சனங்கள் என்னசொன்னார்கள்?
எலியா அந்தத்தீர்க்கதரிசிகளை என்ன செய்தான்?
எலியா இராசாவுக்கென்னசொன்னான்?
அந்தப்படி சம்பவித்ததோ?
அந்த இராசாவுக்கும் மனைவிக்கும் எவ்விதமான மரணம் வந்தது?

Digitized by Google

அவன் குமாரனாகிய அகசியா இராசாவானான்.

ய௭. அவனும் பராபரனுக்கு அடாததைச் செய்து பொல்லாதவனாய் நடந்து வருகையிற் றன்னுடைய மேல்வீட்டில் இருந்து விழுந்து அதேகிடையாய்க் கிடக்கையில் இந்த வருத்தம் நீங்கிப் பிழைப்பேனோ என்று பாகால் சேபூவைக் கேட்க ஆளனுப்பினதினாலே எலியாவுக்குக் கத்தாவுடைய உத்தரவுண்டாய் அவன் பிறதேவனிடத்தில் ஆலோசிக்க உங்களை அனுப்பினபடியால் அவன் கிடக்கிற கட்டிலிட்டிறங்காமற் கிடந்து சாவான் என்று கத்தர் அறிவிக்கிறாரென்று சொல்லுங்களென்றான். அவர்கள் அப்படியே போய்ச் சொன்னார்கள். அதை அகசியாக் கேட்டு எலியாவைப் பிடித்துவரக் கட்டளையிட்டு ஒரு சேர்வைக்காரனையும் ஐம்பது படைச்சேவகரையும் அனுப்ப எலியா கண்டு நான் பராபரனுடைய தொண்டனானால் இவர்களை அக்கினி பட்சிக்கக்

அகசியா உ. ஞ கிறி. 896

அவனுக்குப் பின்வந்த இராசாவார்?
அகசியா என்ன குணமுள்ளவன்?
அவனுக்கென்ன சம்பவித்தது?
அவன் ஆரண்டைக் கனுப்பினான்?
என்ன மறுமொழி கிடைத்தது?
எலியாவைப் பிடிக்க ஆரை அனுப்பினான்?

Digitized by Google

கடவதென்றான். உடனே அவன் வேண்டுதலின் படிவானத்தில் இருந்து அக்கினிவிழுந்து அவர்களைப் பட்சித்தது. இரண்டாம்முறை இராசா அவ்வளவு பேரை அனுப்ப அவர்களையும் அக்கினி பட்சித்தது. மூன்றாம்முறையும் இராசா அவ்வளவு பேரை அனுப்ப அவர்கள் எலியாவண்டைக்குப் போய் இராசாவுடைய கட்டளையை மன்றாட்டத்தோடே அறிவிக்க அவனுங்கூடிப்போய் இராசாவுடைய ஆட்களுக்குச் சொன்ன பிரகாரமாகச் சொல்ல அவனும் அந்தப்பிரகாரம் இறந்துபோனான்.

௰௮. அவனுக்குப் புத்திரன் இல்லாததினாலே ஆகாப்பின் குமாரன் யோராம் இராசாவாகித் தன் தகப்பன் உண்டாக்கிய பாகாலின் சொரூபத்தை நீக்கிப் போட்டாலும் எரோபெயாஞ் செய்த பொல்லாங்குகளை விட்டுவிடாமற் பராபரனுக்கு அடாதவிதமாய்நடந்து வந்ததினாலே சூரியரோடு

யோராம் ௱௨. ஞூ ஹி. 884

அவர்களுக்கு என்ன சம்பவித்தது?
இரண்டாம் மூன்றும்முறை அனுப்பினவர்களுக்கு என்ன? சம்பவித்தது?
அவனுக்கு எவ்விதமான மரணம் வந்தது?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
ஆகாப்பின் மகனை யோராம் எப்படிப்பட்டவன்?

Digitized by Google

யுத்தம்பண்ணினபொழுது காயப்பட்டு மரண மடைந்தான்.

௰௩. அதின்மேலே ஏகூ என்பவன் எலியாத் தீர்க்கதரிசியினால் இராசாவாக அபிஷேகம்பண்ணப்பட்டு ஆகாப்பின் வீட்டாரையும் அவன் உண்டுபண்ணின பாகாலையும் அதின் ஆசாரியரையும் அழித்துப்போட்டுக் கர்த்தரைச் சேவிக்கிறதிலே திடாரிக்கமுள்ளவனாய் இருந்தும் பின் எரோபேயாம் வைத்த விக்கிரகங்களை வணங்கிப் பற்பல பாவங்களையுஞ் செய்து இருபத்தெட்டு வருஷம் அரசாண்டு பின்பு மரணமடைந்தான். அதின்மேல் அவன்குமாரனாகிய யோவாகாஸ் இராசாவானான். அவன் இஸ்ரவேலிலே ௰௪. வருஷமாக அரசனாக இருந்து பொல்லாங்கைச் செய்ததினாற் சூரியரின்கையிலே அவனையும் அவன்சனங்களையும் அகப்படுத்தினார். அவன்

ஏகூ
௨௮. ஞு
கிறி. 856

யோவாகாஸ்
௰௪. ஞு
கிறி. 841

அவன் ஆருடைய யுத்தத்தில் இறந்துபோனான்?
அவனுக்குப்பின் இராசாவானதார்?
ஏகூவை இராசாவாக்கினதார்?
அவன் என்ன விசேஷஞ் செய்தான்?
எத்தனை வருஷம் அரசாண்டான்? [அரசாண்டான்? ௰௭
அவனிடத்துக்குவந்த யோவாகாஸ் எத்தனை வருஷம்
அவன் எப்படிப்பட்டவன்? [செய்தார்?
அவனுடைய பொல்லாங்கின் நிமித்தம் பராபரன்என்ன

Digitized by Google

அங்கே இருந்து பராபரனை நோக்கி வேண்டிக்கொண்டதினாலே விடுதலையடைந்து சிலகாலஞ் சூரியதேசத்தின் இராசாவுக்குக் கீழாக இராச்சியபாரம்பண்ணி மரணமடைந்தான்.

௨௰ அதின்பின் அவனுடைய குமாரன் யோவாஸ் ௧௬. வருஷமாக இராச்சியபாரம் பண்ணி விக்கிரக ஆராதனைக்கு இடங்கொடுத்துப் பொல்லாதங்குள்ளவனாய் மரணமடைந்தான். அதின்மேல் அவனுடைய குமாரன் எரோபேயாம் ௪௧. வருஷமாக இஸ்ரவேலை அரசாண்டு கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாங்கான பாவங்களைச் செய்தவனாக மரணமடைந்தான்.

யோவாஸ் ௧௬ வ. கிறி. 825

எரோபேயாம் ௪௧ வ. கிறி. 782

௨௧. அதின்மேல் அவன் குமாரனாகிய சகரியா சமாரியாவிலே ஆறுமாதமாய் அரசாண்டு அவனும் பாவமான காரியங்களைச் செய்துவந்தான். அவனையாபேசி

சகரியா ௬. மா. கிறி. 772

யோவாகாஸ் மரணமடைந்தபின் இஸ்ரவேலரை யோவாஸ் எத்தனை வருஷம் அரசாண்டான்?

அவனிடத்துக்குவந்த எரோபேயாம் எத்தனை வருஷம் அரசாண்டான்?

அவன் எப்படிப்பட்டவன்?

அவனுடையகுமாரன் சகரியா எவ்வளவுகாலம் அரசாண்டான்?

Digitized by Google

சல்லூம்
௧. மா
மேனகாம்
ய. வரு
கிறி. 761

ன் குமாரன். சல்லூம் என்பவன் கொ
ன்றுபோட்டு அவனுடைய இடத்துக்கு
ஒரு மாதமளவும் அரசாட்சி பண்ணின
பின்பு காதியின் குமாரனுன் மேனகாம் அவனைக்
கொன்று சமாரியாவிலே ய. வருஷமாய் அரசா
ண்டு கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாங்கா
னதைச்செய்து மரணமடைந்தான்.

பெக்காகியா
உ. வரு
கிறி. 759
பெக்கா.
உய. வரு.
கிறி. 739

உஉ. பின்பு அவன் குமாரனுகிய பெக்காகி
யா, உ. வருஷமாய் அரசாண்டு அவ
னும் பொல்லாங்குகளைச் செய்து
வருகையில் ரேமலியாவின் குமார
ன் பெக்கா அவனைக் கொன்றுபோ
ட்டு உய. வருஷம் அரசாண்டு அ
வனும் பொல்லாங்குதானே செய்துவந்தான்.
அக்காலத்தில் அசூரின் இராசாவாகிய திகிலாத்
பிலேசர் சிலதேசங்களைக் கட்டுப் பண்ணிக்கொ

அவனைக்கொன்றதார்?
சல்லூம் எத்தனைமாதம் ஆண்டான்?
அவனைக்கொன்றதார்?
மேனகாம் எவ்வளவுகாலம் எங்கே அரசாண்டான்?
பெக்காகியா எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் எப்படிப்பட்டவன்?
அவனுடைய இடத்துக்கு வந்ததார்?
பெக்கா எத்தனைவருஷம் ஆண்டான்?

Digitized by Google

ண்டு அங்குள்ள குடிகளையும் அசூரியாவுக்குக் கொண்டுபோனான்.

௨௩. பின்பு ஏலாவின் குமாரன் ஓசேயா அவனைக் கொன்றுபோட்டு இஸ்ரவேலை அரசாண்டான். அவனும் ௯. வருஷமாக அரசாண்டு கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாங்கு செய்கிறவனாய் இருக்கையில் அசூரின் இராசாவாகிய சல்மானீசர்வந்து இஸ்ரவேலரைச் சிறையாகப் பிடித்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான். இது சாலோமோன் தேவாலயங்கட்டி ௨௱௯௧. வருஷத்திற்குப் பின் சம்பவித்தது.

ஓசேயா
க. ஹு.
கிறி 719

௨௪ இவ்வண்ணமாய் இஸ்ரவேலர் பராபரன்செய்த சிட்சையினாலாவது இரட்சையினாலாவது சீர்ப்படாமலும் அவர் நியமித்த வழியிலே நடவாமலும் இருந்ததினாலே பலபல ஊர்க

அக்காலத்திலே இவர்களைப்பிடித்து அசூரியாவுக்குக்கொண்டுபோனதார்?
திகிலாற்பிலேசர் ஆர்?
பின்பு அவனைக்கொன்று அரசாண்டதார்?
ஓசேயா எவ்வளவுகாலமாக அரசாண்டான்?
அக்காலத்திலே இஸ்ரவேலரைச் சிறையாகப்பிடித்ததார்?
பாபிலோனுக்குக் கொண்டுபோனதார்?
இதுசாலோமோன் தேவாலயங்கட்டி எத்தனை வருஷத்துக்குப் பின்பு சம்பவித்தது?

Digitized by Google

ளிலுஞ் சிதறுண்டிருந்தார்கள். இக்காலத்திலோ பூமியிலே அவர்கள் நாமமுமில்லாமல் அழிக்கப்பட்டுப் போனதென்றெண்ண வேண்டியதாய் இருக்கின்றது. பத்துக் கோத்திரத்தாருடைய காரியமும் இப்படியே முடிந்தது.

உரு. யூதவென்றுபேர் கொண்ட மற்ற இரண்டு கோத்திரங்களையுஞ் சாலொமோனுடைய குமாரன் ரேகாபேயாம் பதினேழு வருஷம் அரசாண்டு அவனும் அவனோடிருந்த சனமும் கருத்தருடைய நியாயப்பிரமாணத்தை விலகி விக்கிரகங்களை வணங்கினதினாலே ரேகாபேயாமுக்கும் யரோபேயாமுக்கும் அவர்களுக்குள்ள நாள் எல்லாம் எதிரிடையும் பகையுமாய் இருந்தது.

ரேகாபேயாம் யஎ. ஷூ. கிறி. 958.

உசா. அதின் மேல் ரேகாபேயாமின் குமாரனாகிய அபீயாம் கர்த்தரில் நம்பிக்கையுள்ளவனாய் மூன்றுவருஷமாக அரசா

அபீயாம். ரூ. ஷூ. கிறி. 955.

ஒப்பொழுது இந்தப் பத்துக்கோத்திரத்தாரும் எங்கே இருக்கிறார்கள்? [மகல்?
யூதராச்சியத்தாரை ஆண்ட ரேகாபேயாம் ஆருடைய அவன் எவ்வளவு வருஷம் அரசாண்டான்?
யூத இராசாவாகிய ரேகாபேயாமும் இஸ்ரவேல் இராசாவாகிய யரோபேயாமும் எத்தனை காலம் பகையாய் இருந்தார்கள்?
?யாம் எத்தனை வருஷம் அரசாண்டான்?

Digitized by Google

ன்றி தன்னோடே யுத்தம்பண்ண வந்த இஸ்ரவேல் சனங்களை வெற்றிகொண்டு யூதச் சனங்களுக்குச் சகாயம் பண்ணினபின்பு மரணமடைந்தான்.

௨௭. அதின்மேல் அவன் குமாரனாகிய ஆசேர் நாற்பத்தொரு வருஷமாக அரசாண்டு தன் தகப்பனாகிய தாவீதைப் போலக் கத்தருக்குப் பிரியமானபடி தன் பிதாக்கள் உண்டுபண்ணின விக்கிரகங்களை எல்லாம் விலக்கித் தன் தாயும் உண்டுபண்ணின விக்கிரகத்தைக் கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துத் தாயும் இராசாத்தியாய் இராதபடிக்கு விலக்கித் தேவபத்தியுள்ளவனாய் வெகுவெகு வருஷமாக நடந்தும் பிறகு தன் இருதயத்தைக் கடினப்படுத்தினபடியினாலே அவனுடைய பராக்கிரமமுந் தேவபத்தியும் வரவரக் குன்றினவனாய் மரணமடைந்தான்.

ஆசேர். ௪௧. வரு. கிறி. 914

௨௮. பின்பு அவனுடைய குமாரன் யோச

அவன் எப்படிக்கொத்தவன்?
அவனுடைய குமாரன் ஆசேர் எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் எப்படிப்பட்டவன்?
விக்கிரகங்களை யென்னசெய்தான்?
அவன் எப்படி நடந்தான்?

Digitized by Google

யோசபாத்து
உ௫. வரு.
கிறி. 889.

யாத்து எருசலேமிலே இருந்து தன் தகப்பனாகிய தாவீது நடந்த வழிகளில் நடந்து பாகால்களை விட்டுப் பராபரனை வழிபட்டு அவருடைய கற்பனைகளின்படி நடந்ததினாலே கர்த்தர் அவனுக்கு இராச்சியபாரத்தைத் திடப்படுத்தினார். யூதகோத்திரத்தார் எல்லாம் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவனுக்கு ஐசுவரியமுங் கனமும் மிகுதியும் உண்டாயிற்று. இவர்கள் கர்த்தாவின் வேதப்புத்தகத்தை வைத்திருந்த யூதாவின் பட்டணங்களிலே திரிந்து உபதேசித்தார்கள். ஆனாலும் யோசபாத்து தேவகட்டளையை முழுதும் மறுதலித்து விக்கிரகாராதனையைச் செய்துவந்த ஆகாப்புடனே சம்பந்தங் கலந்ததினாலுங் கர்த்தரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் சொன்னதைக் கேளாமல் விட்டதினாலும் இருபத்தைந்து வருஷம் மாத்திரம் அரசாண்டு வரவரப் பொல்லாதவனாகித் தேவபத்தி முதலிய சருவத்திலுங் குன்றினவனாகி மரித்துவிட்டான்.

அவனுக்குப் பின்வந்த யோசபாத்து எத்தனை வருஷம் அரசாண்டான்?
அவன் எப்படி நடந்தான்?

Digitized by Google

௨௯. அதின்மேல் அவன் குமாரனாகிய யோராம் எருசலேமிலே அ. வருஷமாக இராச்சியபாரம் பண்ணினான். அவன் மனைவி ஆகாப்பின் மகளாய் இருந்தபடியால் அவனும் ஆகாப்பின் வீட்டாரைப்போலக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாங்கானதைச் செய்துவந்ததினாலும் தன்னோடே கூடப் பிறந்த சகோதரரைக் கொன்று போட்டபடியினாலும் இவன் நாட்களில் ஏதோமியர் இவனை விட்டு விலகித் தங்களுக்கு ஒரு இராசாவை நியமித்து வைத்ததுமன்றி அவன் புறப்பட்டு அவர்களை முறிய அடித்து வந்து பின்னாலே எலியாத் தீர்க்கதரிசி சொன்னபிரகாரமாக வியாதியாய் விழுந்து கொடுமையான மரணம் அடைந்தான்.

யோராம் அ வஷ கிறி. 886

௯௰. அதற்குப் பின் அவன் குமாரனாகிய

அவனுடைய குமாரன் யோராம் எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவனுடைய மனைவி ஆருடையமகள்?
அவள்எப்டிப்பட்டவள்?
இவள் நிமித்தம் அவனுக்கென்ன நட்டம் வந்தது?
அவன் இப்படிமரணம்அடைவானென்று சொல்லியிருந்ததார்?
அவனுடையமரணம்எப்படிப்பட்டதாயிருந்தது

அகசியா
க. வரு
கிறி 884

அகசியா சஉ. வயதாயிருந்து எருசலேமில் ஒரு வருஷம் அரசாட்சிபண்ணி ஆகாப்பின் குடும்பத்தாரைப் போலக் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் நடந்து பின்பு அவன் மரணம் அடைந்தான்.

அத்தாலியாள்
யோவாஸ்.
சய. வரு.
கிறி. 839.

ஙக. அதின்மேல் அவன் குமாரனாகிய யோவாஸ் என்றவனை அவனுடைய மாமியாகிய யோசபாத்து அகசியாவின் தாயாகிய அத்தாலியாளுக்குப் பயந்து ஆறு வருஷமாக ஒளித்துவைத்துக் காப்பாற்றினாள். பின்பு ஏழாம் வருஷத்திலே அவன் இராச பட்டத்துக்கு வந்து யூதாவில், சய வருஷக்காலம் அரசாண்டான். பிரதான ஆசாரியனாகிய யோய்தா இருந்த நாட்களில் எல்லாம் யோவாஸ் கர்த்தருக்குப் பயந்து உண்மையாய்நடந்துவந்து பின்பு அவருக்கு அடாத வழியைப் போனதினாலே அவர் தீர்க்கதரிசிகளைக் கொண்டும் யோய்தாவின் மகன் சகரியாவைக்

அகசியா எத்தனைவருஷம் அரசாண்டான்?
எப்படி நடந்தான்?
அவன் மரித்தபின்பு இராசாவானதார்?
யோவாஸ் எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் ஆருடைய நாட்களிலே நல்லவழியாய்நடந்தான்?

Digitized by Google

கொண்டும் அவனுக்குப் புத்திசொல்லுவிக்க அதையுங் கேளாமல் யோயிதாச் செய்த நன்மைகளையும் மறந்து அவனுடைய மகன் சகரியாவைக் கல்லெறிந்து கொன்றுபோட்ட அந்த இரத்தப் பழியின் நிமித்தம் அவனுடைய வேலைகாரர் அவனையும் படுக்கையிலே கிடக்கிறபொழுது கொன்றுபோட்டு இராசகல்லறையிலும் அடக்கம் பண்ணாமற் தாவீதின் பட்டணத்திலே அடக்கம் பண்ணினார்கள்.

அமச்சியா. ௨௯. வருஷ. 810

௩௨. அந்த இடத்துக்கு அவன் மகனாகிய அமச்சியா ௨௫. வயதிலே இராசாவாகி ௨௯. வருஷமாக அரசாண்டான். அவன் இராசபட்டத்துக்கு வந்து சிலகாலம் பராபரனுக்குப் பிரியமுள்ளவனாய் நடந்தும் பின்பு அவன் பராபரனை விட்டு விலகி நல்நடக்கையற்றவனாய் இருந்ததினாலே எருசலேமின் குடிகள் எல்லாரும் அவனைக்கொன்றுபோட வகைபார்த்தார்கள். அதை அவன் அறிந்

பின்பு அவன் ஆரைக்கொன்றுபோட்டான்?
பின்பு அவனைக்கொன்றுபோட்டதார்?
அவனுடைய இடத்துக்குவந்த அமச்சியா எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் எப்படி நடந்தான்?

Digitized by Google

து இலாகீசுக்கு ஓடிப்போக அவர்களும் அங்கே தொடர்ந்துபோய் அவனைக்கொன்றுபோட்டார்கள்.

௩௩. பின்பு அவன் குமாரனாகிய உசியா பதினாறு வயதிலே இராசபட்டத்தில் வந்து, ௫௨. வருஷமாக அரசாண்டு கர்த்தரின் பார்வைக்குச் சரியாய் நடந்து வந்ததினாலே இராச்சியபாரம் மிகவும் பலப்பட்டு அவனுடைய மகிமை எங்கும் பிரபலியப்பட்டது. அதினாலே அவன் மேட்டிமையான எண்ணங்கொண்டு பீடத்தின்மேலே தூபங் காட்டும்படி கர்த்தருடைய வீட்டுக்குட் போனதினால் மரண நாள்மட்டுங் குட்டரோகியாய் இருந்தான்.

உசியா. ௫௨. வரு கிறி. 758

௩௪. பின்பு அவன் குமாரனாகிய யோத்தாம் ௰௬. வருஷம் அரசாண்டான். அக்காலத்தில் ஓசேயா, ஏசாயா, ஆமோஸ், மீகா என்கிற தீர்க்கதரிசிகள்

யோத்தாம். ௰௬. வரு. கிறி. 742.

அவன் இலாகீசுக்கோடிப்போன முகாந்தரம் என்ன?
அவனைக்கொன்றதார்? அதின் பின் அரசாண்டதார்?
உசியா எத்தனைவருஷம் அரசாண்டான்?
எப்படி நடந்தான்?
அவன் குட்டரோகியாய்ப் போன முகாந்தரம் என்ன?
அதின்பின் அவனுடைய இடத்துக்கு வந்ததார்?
அக்காலத்திலே தீர்க்கதரிசிகளாயிருந்ததார்?

Digitized by Google

மேசியாவானவர் கன்னிகையினிடத்திற் பெத்லேகேம் ஊரிலே பிறப்பாரென்று முன் அறிந்து சொன்னார்கள். அவன் கத்தரின் பார்வைக்குச் செம்மையாய் நடந்து பட்டணங்களையுங் கோபுரங்களையுங் கட்டுவித்துப் பின்பு மரணமடைந்தான்.

௯௫. அந்த இராச்சியத்துக்கு அவன் குமாரனாகிய ஆகாஸ் ௰௬. வருஷமாய் எருசலேமிலே அரசாண்டு கத்தரைவிட்டு இஸ்ரவேலின் இராசாக்களின் வழிகளில் நடந்து விக்கிரகங்களையும் வணங்கிவந்ததினாலே கத்தர் அவனைச் சூரியருடைய இராசாவாகிய தில்காத்பில்னேசர் கைக்கு ஒப்புக்கொடுக்க இவன் அவனையும் அந்த இஸ்ரவேற் சனங்களையும் அதிகமாய்ச் சயங்கொண்டான். ஆகிலுந் தான் நெருக்கப்படுகிற நாட்களிலுங் கத்தருக்கு விரோதமாய் அதிக துரோகம் பண்ணிவந்தவனாய் மரணம் அடைந்தான்.

ஆகாஸ். ௰௬. வருஷம். கி.மு. 726

அவர்கள் ஆர்பிறப்பாரென்று தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்?
யோத்தாம் எப்படிப்பட்டவனாய் நடந்தான்?
விசேஷமாக என்னசெய்தான்?
அவனுடைய இடத்துக்குவந்த ஆகாஸ் என்னசெய்தான்?
எத்தனை வருஷம் அரசாண்டான்?

Digitized by Google

எசேக்கியா. ௨௯. வரு. கி.மு. 698.

௬௭ அதின்மேல் அவனுடைய மகன் எசேக்கியா எருசலேமிலே ௨௯. வருஷமாக அரசாண்டு தாவீதைப்போலக் கர்த்தருக்குச் செம்மையானவனாய் நடந்து வந்தான். அசூரிய தேசத்திராசாக் கர்த்தருடைய நாமத்தைத் தூஷணித்து எசேக்கியாவுக்கு விரோதமாக வந்து பட்டணத்தை வளைந்தான். அப்பொழுது எசேக்கியா பராபரனை வேண்டிக்கொண்டதினாலே அவர் தம்முடைய தூதனைக்கொண்டு அவர்களுடைய பாளயத்தில் ௱அ௲. பேரைச் சங்கரிப்பித்தார். அதினாலே அவன் திரும்பிப் போய்விட எசேக்கியாவுஞ்சனங்களும் ஆறுதல் அடைந்திருந்தார்கள். பின்பு எசேக்கியா வியாதியினாலே சாகிறதற்கேதுவாய் இருந்தபொழுது கர்த்தரைப்பார்த்து மன்றாடினான். அவரும் உனது நாட்களோடே ௰ரு, வருஷம் கூட்டப்படும் என்று

எசேக்கியா எத்தனை வருஷம் அரசாண்டான்?
அவன் ஆரைப்போல நடந்தான்?
அவனுடனே யுத்தத்துக்கு வந்ததார்?
வென்றதார்?
எதினால் எசேக்கியா வென்றான்?
அவர்களைச் சங்கரித்ததார்?
அசூரியரில் எத்தனைபேர் இறந்தார்கள்?

Digitized by Google

வசாயாத் தீர்க்கதரிசியைக் கொண்டு அறிவித்தார். அப்படியே ௰௫. வருஷம் உயிரோடிருந்து மரணமடைந்தான்.

மனாசே. ௫௫. வரு. கி.மு. 643.

௩௭. அதின் பின்பு அவனுடைய குமாரன் மனாசே ௰௨. வயதிலே இராச பட்டத்தைப் பெற்று எருசலேமில் ௫௫. வருஷம் அரசாண்டான். அவன் அஞ்ஞியசாதியாருடைய பாகாலை வணங்குதற்குப் பலிபீடங்களையுங் கட்டி அதைப் பணிந்துகொண்டபடியினாலுங் கர்த்தரின் தீர்க்கதரிசிகளுடைய கடிந்துகொள்ளுதலுக்குச் செவிகொடாதபடியினாலுங் குற்றமில்லாத அனேகரைக் கொன்றபடியினாலுங் கர்த்தர் அசூரியரின் இராசாவுடைய சேனைகளை அவன் மேல் வரப்பண்ணினார். இவர்கள் அவனைப் பிடித்து இரண்டு வெண்கல விலங்கிட்டுப் பாபேலுக்குக் கொண்டுபோனார்கள். இப்படி அவன் நெருக்

எசேக்கியா வியாதியினாலே மரணமடைய ஏதுவாயிருக்கையில் எப்படித் தப்பிக்கொண்டான்?
பின்பு எத்தனைவருஷம் இருந்தான்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
மனாசே எவ்வளவுகாலம் ஆண்டான்?
அவன் ஆரைப்போல நடந்தான்?
அவனைப் பிடித்ததார்?
மனாசேக்கு என்னசெய்தார்?

Digitized by Google

கப்படுகையில் தன் பராபரனுகிய கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டு அவருக்கு முன்பாக மிகவுந் தன்னைத் தாழ்த்தினபடியினுலே பராபரன் அவனைத் திரும்ப எருசலேமுக்கு வரவும் இராச்சியத்தைக் கைப்பற்றவும் பண்ணினுர். அது முதல் அவன் தேவ கட்டளைக்கு அமைந்து நடந்து மரணம் அடைந்தான்.

௩௮. அவன் குமாரனுகியஆமோன் அரசாட்சிக்கு வந்து தன் தகப்பனுகிய மனுசே நடந்ததுபோல நடவாமல் விக்கிரகங்களை வைத்து வணங்கித் தன் குற்றத்தைப் பெருகப் பண்ணினதினுலே அவன் உளழியக்காரர் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனை அவன் வீட்டிலே கொன்றுபோட்டு அவன் குமாரனுகிய யோசியாவை இராசாவாக்கினுர்கள். அவன் அ. வயதிலே தொடங்கி ௩௧. வருஷம் எருசலேமில் அரசாண்டு பக்தி

ஆமோன். ௨. வரு. கிமு. 641.

பின்பு ஒரு சகாயம் மனுசேக்குக் கிடைக்கவில்லையோ?
ஆமோன் எத்தனை வருஷம் ஆண்டான்?
அவனுக்கு என்ன சம்பவித்தது?
ஆமோனுக்குப் பின் அரசாண்டதார்?
யோசியா எத்தனை வயதில் இராசாவானுன்?

யோசியா. ௩௧. வரு. கி.மு. 610.

புள்ளவனாகிப் பாகாலின் பலிபீடத்தையும் இடித்து மற்றும் விக்கிரகங்களையுந் தகர்த்துத் தனக்குச் சேர்ந்த சகல இடங்களிலும் நடந்து வந்த விக்கிரக வணக்கத்தை முற்றாக நீக்கிப் போட்டான். சனங்கள் கொண்டுவந்த திரவியங்களையும் பராபரனுடைய ஆலயத்திலே இருந்த பழுதுகளைத் திருத்தும்படி கொடுத்துச் சகல சனங்களுஞ் சுத்த ஆராதனை செய்யும்படி நிறுத்திச் சிலகாலமாக விட்டிருந்த பஸ்காவென்கிற திருநாளையும் மறுபடி நடக்கப் பண்ணினான். இப்படியே இவன் பத்தியுள்ளவனாய் இருந்து மரணமடைந்த பொழுது எரேமியாத் தீர்க்கதரிசி இவன்மேலே புலம்பல் பாடக் குடிசனங்களுங் கூடிப் புலம்பினார்கள்.

யோவாகாஸ் ௩. மா.

௩௨. பின்பு இவனுடைய குமாரன் யோவாகாஸ் இராசாவாக நியமிக்கப்பட்டு மூன்று மாதமாக அரசாண்டான். அக்காலத்திலே அவன் பராபரனுக்கு அடா

அவன் என்னென்ன நன்மைகளைச்செய்தான்?
அவனுடைய மரணத்தைப்பற்றிப் பாடினதார்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
யோவாகாசுடைய நாட்களில் என்ன சம்பவித்தது?

Digitized by Google

த பொல்லாங்கு செய்தினுந் பாபிலோனின் இராசாவாகிய நேபுகாத்நேசர் வந்து அவனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு தேவாலயத்தின் உடைமைகளிலுஞ் சிலவற்றை எடுத்துக் கொண்டு போனான்.

௪௰. அதின்மேல் அவனுடைய குமாரன் யோயாக்கீம் இராசாவாகி ௰௧. வருஷம் எருசலேமிலே அரசாண்டு தன் பராபரனாகிய கர்த்தருடைய பார்வைக்கு அடாததைச் செய்தபடியாற் கர்த்தராலே கைவிடப்பட்டான். அப்பொழுது பாபிலோனின் இராசாவாகிய நேபுகாத்நேசர் வந்து அவனைப் பிடித்துக்கொண்டு தேவாலயத்தில் இருந்த தட்டுமுட்டுக்களையும் எடுத்துத் தன் தேசத்திற்குக் கொண்டுபோய் அவனுக்கு இரண்டு விலங்கு போட்டுக் காவற்சாலையிலே வைத்தான்.

யோயாக்கீம் ௰௧. வரு. கிறி. 600.

௪௧. அதன்மேல் அவன் குமாரனாகிய யோ

நேபுகாத்நேசர் ஆர்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
யோயாக்கீம் எத்தனைவருஷம் ஆண்டுகொண்டான்?
நேபுகாத்நேசர் அவனுக்கு என்ன செய்தான்?

Digitized by Google

யோயாக்கீன். ௩. மீ, ௰. நாள்

யாக்கீன் இராசாவாகி மூன்று மாதமும் பத்து நாளும் எருசலேமிலே அரசாண்டு தீங்குசெய்து தேவனாலே கை விடப்பட்டபடியால் நேபுகாத்நேசர் அவனையுங் கத்தருடைய வீட்டின் உச்சிதமான தட்டுமுட்டுக்களையும் பாபேலுக்குக் கொண்டுவரப்பண்ணி அவனுடைய சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை எருசலேமிலே இராசாவாக நியமித்தான்.

சிதேக்கியா ௧௧. வரு. கி.மு. 588.

அவனும் மற்றச் சனங்களும் பொல்லாங்குசெய்து தீர்க்கதரிசிகளை நிந்தைபண்ணிப் பராபரனுக்குப் பிரியமில்லாமல் நடந்து வந்ததினாலே பராபரன் அவர்கள் எல்லாரையும் கைவிட்டார்.

௪௨. அப்பொழுது நேபுகாத்நேசர் வந்து அவர்களோடே போராடி பட்டாவுக்குத் தப்பினவர்களைச் சிறைப்படுத்திப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்.

அவனுக்குப்பின் இராசாவானவர் ஆர்?
யோயாக்கீனுக்கு என்ன வந்தது?
சிதேக்கியா ஆர்?
அவனை இராசாவாக்கினவர் ஆர்?
அவனுஞ் சனமும் எப்படி நடந்தார்கள்?
பராபரன் என்ன செய்தார்?
அவர்களுக்கு என்ன வந்தது?

Digitized by Google

௪௯. அப்படியே அவர்கள் சிறைப்பட்டகாலஞ் சாலோமோன் தேவாலயங்கட்டி ௪௱௰௫. வருஷித்துக்குப் பின்னுங் கிறிஸ்துநாதர் பிறக்க, ௫௮௮. வருஷித்துக்கு முன்னுமாய் இருந்தது.

---

௬. அதிகாரம்.

யூதச் சனஞ் சிறையாகப் பாபிலோன்தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்ட நாட்டொடங்கி உலக இரட்சகராகிய கிறிஸ்துநாதர் பிறந்த நாள் வரைக்குஞ் சென்ற வருஷம். ௫௮௮.

ஆதி. 3416. **கிறி. 588.**

௧. அந்த இராசாத் தான் சிறைப்பிடித்துக் கொண்டுபோன சனங்களுக்குள்ளே இராசகுலத்துத் பிறந்தவர்களாகிய தானியேல் சாதுராக் மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குச் சகல வித்தைகளையும் படிப்பித்தான்.

யூதர் சிறைப்பட்ட காலஞ் சாலோமோன் தேவாலயங் கட்டி எத்தனை வருஷித்துக்குப் பின்னும் இரட்சகர் பிறக்க எத்தனை வருஷித்துக்கு முன்னுமாயிருந்தது?
சிறையாகப் பிடிபட்ட சனங்களுக்குள் இராசா எவரெவரைத் தெரிந்துகொண்டார்?
தெரிந்துகொண்டார்?

Digitized by Google

௨. அப்படி இருக்குங் காலத்தில் நேபுகாத்நேசர் ஒரு கனவு கண்டு தன்னுடைய தேசத்துச் சாத்திரிகள் எல்லாரையும் அழைத்துத் தான் கண்ட கனவையும் அதின் அருத்தத்தையுந் தனக்கு வெளிப்படுத்தச் சொல்லிக் கட்டளையிட அவர்கள் அந்தக்கனவு இன்னவிதம் என்று தங்களுக்கு அறிவித்தால் ஒழிய அதின் கருத்தை வெளிப்படுத்துவது தங்களாற் கூடாத காரியம் என்றார்கள்.

௩. அதினாலே அவர்கள் சொன்னது தந்திரம் என்று அறிந்து அவர்களைக் கொன்றுபோடக் கட்டளையிட்டான். அப்பொழுது தானியேல் பராபரனை நோக்கி வேண்டிக்கொண்டதினாலே இராசாக் கண்ட கனவு அவனுக்கு வெளிப்பட அவன் இராசாவிடத்திலே வந்து இராசாக் கண்ட கனவையும் அதினாலே சம்பவிக்கப் போகிற காரியங்களையுஞ் சரியாக அறிவித்தான்.

இராசா என்னத்தைக் கண்டான்?
சாத்திரிகளுக்கு என்ன சொன்னான்?
சாத்திரிகள் என்ன சொன்னார்கள்?
அவர்களை என்ன செய்யக் கட்டளையிட்டான்?
அதின் கருத்தைச் சொன்னதார்?
ஆருடைய உதவியினாற் சொன்னான்?

Digitized by Google

௪. அதினாலே இராசா அவனுக்கு அநேகம் வெகுமதிகளுஞ் செய்து பாபிலோன் என்கிற சீமைக்கு அவனைத் துரையும் ஞானிகளுக்குத் தலைவனுமாக்கினான். பின்பு தானியேலுடைய கேள்விப்படிக்கு அவனுடனே படித்த மற்ற மூன்று பேரையும் அந்தச் சீமைக்குத் தலைமைக்காரராக வைத்தான்.

௫. இதைக் கண்டு மற்றுந் தலைமைக்காரர் எல்லாருங் கூடி அவர்களைக் குற்றப்படுத்தும் மூகாந்தரமாக இராசாவிடத்திற் போய் இராசாவே, சகலருமே வணங்கவேண்டுமென்று நீர் நிறுத்தின பொன்னுருவத்தை இந்த மூன்று பேரும் வணங்காமலும் உம்முடைய கட்டளைக்கு அமையாமலும் இருக்கிறார்களென்று முறையிட்டார்கள்.

௬. இராசா அதைக் கேட்டு உக்கிரமான கோபத்துடனே அம்மூன்று பேரையும் அழைப்பித்து நான் நிறுத்தின பொன்னுருவைப் பணிந்து கொள்ளாமற்போக நீங்கள் எம்மாத்திரம்? இப்

தானியேலுக்கு இராசா என்ன அதிகாரத்தைக் கொடுத்தான்?
மற்ற மூன்று பேருக்கும் என்ன செய்தான்?
மற்றுந் தலைமைக்காரர் என்ன முறையிட்டார்கள்?
சா அவர்களை அழைத்து என்னசெய்யச் சொன்னான்

Digitized by Google

பொழுது நீங்கள் சகலவித கீதவாத்தியத்தின் சத்தத்தைக் கேட்கும் பொழுது தாழ விழுந்து நான் நிறுத்தின உருவைப் பணிந்துகொண்டால் தப்புவீர்கள். அல்லாதிருந்தால் இந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையிலே போடப்படுவீர்கள். அப்பொழுது உங்களை இரட்சிக்கப் போகிற தேவன் ஆர் என்றான்.

௭. அவர்கள் இராசாவுக்குப் பிரத்தியுத்தாரமாக நாங்கள் ஆராதனைசெய்கிற எங்கள் தேவனாகிய பராபரன் எங்களைத் தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார். எரிகிற அக்கினிச் சூளையிலும் நின்று எங்களைத் தப்புவிப்பார். அப்படிச் செய்யாதேபோனாலும் நாங்கள் இத்தேசத்தார் வணங்குகிற தேவர்களுக்கு ஆராதனைசெய்கிறதும் இல்லை, நீர் நிறுத்தின பொன்னுருவத்தைப் பணிந்துகொள்வதும் இல்லை என்றார்கள்.

௮. அப்பொழுது நேபுகாத்நேசருடைய முகங் கோபத்தினால் வேறுபட்டுச் சூளையை மிகுந்த சுவாலைகொண்டு எரியும்படி மூட்டுவித்துத் தன் இராணுவத்தின் பலத்த வீரவான்களை நோ

அம்மூன்று பேருஞ்சொன்னதென்ன?
பின்பு அவர்களை என்ன செய்யச் சொன்னான்?

Digitized by Google

க்கி இவர்களைக் கட்டி அதிலே போடுங்களென்று கட்டளையிட்டான்.

௯. அப்படியே அந்த வீரர்கள் அவர்களைக் கட்டிக் கொண்டுபோய்ப் போடுகையிற் சூளையின் சுவாலையினாலே அந்த வீரர்கள் இறந்துபோனார்கள். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களோ கட்டுண்டவர்களாய்ச் சூளையிலே கிடந்தும் அக்கினி அவர்கள்மேற் சுடாமலும் அவர்களுடைய தலைமயிர் கருகாமலும் புடைவைகள் எரியாமலும் இருந்ததுமன்றி ஒரு தேவதூதனும்வந்து அவர்களோடேகூட நின்றான்.

௰. அதை இராசாக் கண்டு பிரமித்து தான் மூன்று பேரை அல்லவோ சூளையிலே போடுவித்தேன். இப்பொழுது அதிலே நாலு பேர் நின்று உலாவுகிறார்கள். அந்த நாலாம் பேருடைய சாயல் தேவ ரூபுக்கொத்ததாக இருக்கிறதே என்று சொல்லி உன்னதமான பராபரனுடைய தாசரே, வெளியே வாருங்கள் என்று அழைத்தான். அவர்கள் அதைக் கேட்டுச் சூளையில் நின்று வெளியே புறப்பட்டு வந்தார்கள்.

சூளையிலே அவர்களைக் கொண்டுபோய்ப் போட்டவர்களுக்கு என்ன சம்பவித்தது? [௯?

அப்போது இராசா சூளையிலே எத்தனைபேரைக் கண்டா என்ன சொல்லிக் கூப்பிட்டான்?

Digitized by Google

அதிகாரிகளுஞ் சேனைத்தலைவருஞ் சேவகரும் அதைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

௰௧. அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற தம்முடைய தாசருக்குத் தமது தூதனை அனுப்பி விடுவித்த பராபரன் தோத்திரிக்கப்படத்தக்கவர். இப்படித் தப்புவிக்கத்தக்க தேவன் வேறில்லாதபடியால் அவருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தை சொல்லுகிற எவனுங் கொலைப்படுவானாக என்று சொல்லி நேபுகாத்நேசர் இம்மூன்று பேரையும் பாபிலோன் தேசத்திலே முன் இருந்ததிலும் உயர்ந்த உத்தியோகங்களில் வைத்தான்.

௰௨. வேறொரு சமயத்திலே அதிகாரிகள் முதலான தலைமைக்காரர் எல்லாருங் கூடித் தானியேல் கைக்கொள்ளும் வேதத்திற்கு விரோதமான கட்டளையை இராசா கற்பித்தால் அதை அவன் மீறுவான். அதிலே இவனைக் குற்றப்படுத்தலாம் என்றெண்ணி இராசாவிடத்திலே போய் இன்றுமுதலாக முப்பது நாளைக்குள்ளே எவனாகிலும் எந்தத் தேவனையானாலும் உம்மையன்றி எந்த மனிதனையானாலும் வழிபட்டால் அவனைச்

இராசா என்னென்ன சொன்னான்?
அதைக் கண்டதார்?
அவர்களுக்கு என்ன அதிகாரங் கொடுத்தான்?

Digitized by Google

கப்படுகையில் தன் பராபரனாகிய கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டு அவருக்கு முன்பாக மிகவுந் தன்னைத் தாழ்த்தினபடியினாலே பராபரன் அவனைத் திரும்ப எருசலேமுக்கு வரவும் இராச்சியத்தைக் கைப்பற்றவும் பண்ணினார். அது முதல் அவன் தேவ கட்டளைக்கு அமைந்து நடந்து மரணம் அடைந்தான்.

ஆமோன். ௨. வரு. கி.மு. 641.

௫௮. அவன் குமாரனாகிய ஆமோன் அரசாட்சிக்கு வந்து தன் தகப்பனாகிய மனாசே நடந்ததுபோல நடவாமல் விக்கிரகங்களை வைத்து வணங்கித் தன் குற்றத்தைப் பெருகப் பண்ணினதினாலே அவன் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனை அவன் வீட்டிலே கொன்றுபோட்டு அவன் குமாரனாகிய யோசியாவை இராசாவாக்கினார்கள். அவன் ௮. வயதிலே தொடங்கி ௩௧. வருஷம் எருசலேமில் அரசாண்டு பக்தி

பின்பு ஒரு சகாயம் மனாசேக்குக் கிடைக்கவில்லையோ?
ஆமோன் எத்தனை வருஷம் ஆண்டான்?
அவனுக்கு என்ன சம்பவித்தது?
ஆமோனுக்குப் பின் அரசாண்டதார்?
யோசியா எத்தனை வயதில் இராசாவானான்?

Digitized by Google

யோயா. ௩௧. வரு. கிறி. 610.

புள்ளவனாகிப் பாகாலின் பலிபீடத்தையும் இடித்து மற்றும் விக்கிரகங்களையுந் தகர்த்துத் தனக்குச் சேர்ந்த சகல இடங்களிலும் நடந்து வந்த விக்கிரக வணக்கத்தை முற்றாக நீக்கிப் போட்டான். சனங்கள் கொண்டுவந்த திரவியங்களையும் பராபரனுடைய ஆலயத்திலே இருந்த பழுதுகளைத் திருத்தும்படி கொடுத்துச் சகல சனங்களுஞ் சுத்த ஆராதனை செய்யும்படி நிறுத்திச் சிலகாலமாக விட்டிருந்த பஸ்காவென்கிற திருநாளையும் மறுபடி நடக்கப் பண்ணினான். இப்படியே இவன் பத்தியுள்ளவனாய் இருந்து மரணமடைந்த பொழுது எரேமியாத் தீர்க்கதரிசி இவன்மேலே புலம்பல் பாடக் குடிசனங்களுங் கூடிப் புலம்பினார்கள்.

யோவாகாஸ் ௩. மா.

௩௩. பின்பு இவனுடைய குமாரன் யோவாகாஸ் இராசாவாக நியமிக்கப்பட்டு மூன்று மாதமாக அரசாண்டான். அக்காலத்திலே அவன் பராபரனுக்கு அடா

அவன் என்னென்ன நன்மைகளைச் செய்தான்?
அவனுடைய மரணத்தைப்பற்றிப் பாடினதார்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
யோவாகாசுடைய நாட்களில் என்ன சம்பவித்த

Digitized by Google

ளிலுஞ் சிதறுண்டிருந்தார்கள். இக்காலத்திலோ பூமியிலே அவர்கள் நாமமுமில்லாமல் அழிக்கப்பட்டுப் போனதென்றெண்ண வேண்டியதாய் இருக்கின்றது. பத்துக் கோத்திரத்தாருடைய காரியமும் இப்படியே முடிந்தது.

உரு. யூதரென்றுபேர் கொண்டமற்ற இரண்டு கோத்திரங்களையுஞ் சாலோமோனுடைய குமாரன் ரேகாபேயாம் பதினேழு வருஷம் அரசாண்டு அவனும் அவனோடிருந்த சனமும் கருத்தருடைய நியாயப்பிரமாணத்தை விலகி விக்கிரகங்களை வணங்கினதினாலே ரேகாபேயாமுக்கும் எரோபேயாமுக்கும் அவர்களுக்குள்ள நாள் வல்லாம் எதிரிடையும் பகையுமாய் இருந்தது.

ரேகாபேயாம்
மள. ஞூ.
கிறி. 958.

உசா. அதின் மேல் ரேகாபேயாமின் குமாரனாகிய அபீயாம் கர்த்தரில் நம்பிக்கையுள்ளவனாய் மூன்றுவருஷமாக அரசா

அபீயாம்.
௩. ஞூ.
கிறி 955.

இப்பொழுது இந்தப் பத்துக்கோத்திரத்தாரும் எங்கே இருக்கிறார்கள்? [பக்கல்?

யூதராச்சியத்தாரை ஆண்ட ரேகாபேயாம் ஆருடைய அவன் எவ்வளவு வருஷம் அரசாண்டான்?

யூத இராசாவாகிய ரேகாபேயாமும் இஸ்ரவேல் இராசாவாகிய எரோபேயாமும் எத்தனை காலம் பகையாய் இருந்தார்கள்?

அபீயாம் எத்தனை வருஷம் அரசாண்டான்?

Digitized by Google

ண்டு தன்னோடே யுத்தம்பண்ண வந்த இஸ்ர
வேல் சனங்களை வெற்றிகொண்டு யூதச் சனங்
களுக்குச் சகாயம் பண்ணினபின்பு மரணமடை
ந்தான்.

௨௭. அதின்மேல் அவன் குமாரனாகிய ஆ
சேர் நாற்பத்தொரு வருஷமாக அர
சாண்டு தன் தகப்பனாகிய தாவீதைப்
போலக் கர்த்தருக்குப் பிரியமானபடி
தன் பிதாக்கள் உண்டுபண்ணின விக்கிரகங்களை
எல்லாம் விலக்கித் தன் தாயும் உண்டுபண்ணின
விக்கிரகத்தைக் கீதரோன் ஆற்றண்டையிலே
சுட்டெரித்துத் தாயும் இராசாத்தியாய் இராத
படிக்கு விலக்கித் தேவபத்தியுள்ளவனாய் வெ
குவெகு வருஷமாக நடந்தும் பிறகு தன் இரு
தயத்தைக் கடினப்படுத்தினபடியினாலே அவ
னுடைய பராக்கிரமமுந் தேவபத்தியும் வரவரக்
குன்றினவனாய் மரணமடைந்தான்.

ஆசேர். சக. வரு. கிறி. 914

௨௮. பின்பு அவனுடைய குமாரன் யோச

அவன் எப்படிக்கொத்தவன்?
அவனுடைய குமாரன் ஆசேர் எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் எப்படிப்பட்டவன்?
விக்கிரகங்களையென்னசெய்தான்?
அவன் எப்படி நடந்தான்?

Digitized by Google

யோசபாத்து
௨௫. வரு.
கிறி. 889.

யாத்து எருசலேமிலே இருந்து தந்தகப்பனாகிய தாவீது நடந்த வழிகளில் நடந்து பாகால்களை விட்டுப் பராபரனை வழிபட்டு அவருடைய கற்பனைகளின்படி நடந்ததினாலே கர்த்தர் அவனுக்கு இராச்சியபாரத்தைத் திடப்படுத்தினார். யூதகோத்திரத்தார் எல்லாம் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியும் உண்டாயிற்று. இவர்கள் கர்த்தாவின் வேதப்புஸ்தகத்தை வைத்திருந்த யூதாவின் பட்டணங்களிலே திரிந்து உபதேசித்தார்கள். ஆனாலும் யோசபாத்து தேவகட்டளையை முழுதும் மறுதலித்து விக்கிரகாராதனையைச் செய்துவந்த ஆகாப்புடனே சம்பந்தங் கலந்ததினாலுங் கர்த்தரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் சொன்னதைக் கேளாமல் விட்டதினாலும் இருபத்தைந்து வருஷம் மாத்திரம் அரசாண்டு வரவரப் பொல்லாதவனாகித் தேவபக்தி முதலிய சருவத்திலுங் குன்றினவனாகி மரித்துவிட்டான்.

அவனுக்குப் பின்வந்த யோசபாத்து எத்தனை வருஷம் அரசாண்டான்?

அவன் எப்படி நடந்தான்?

உ௯. அதின்மேல் அவன் குமாரனாகிய யோராம் எருசலேமிலே ௮. வருஷமாக இராச்சியபாரம் பண்ணினான். அவன் மனைவி ஆகாப்பின் மகளாய் இருந்தபடியால் அவனும் ஆகாப்பின் வீட்டாரைப்போலக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாங்கானதைச் செய்துவந்ததினாலும் தன்னோடே கூடப் பிறந்த சகோதரரைக் கொன்றுபோட்டபடியினாலும் இவன் நாட்களில் எதோமியர் இவனை விட்டு விலகித் தங்களுக்கு ஒரு இராசாவை நியமித்து வைத்ததுமன்றி அவன் புறப்பட்டு அவர்களை முறிய அடித்து வந்து பின்னாலே எலியாத் தீர்க்கதரிசி சொன்னபிரகாரமாக வியாதியாய் விழுந்து கொடுமையான மரணம் அடைந்தான்.

யோராம் ௮ ௵ கி.மு. 886

௩௰. அதற்குப் பின் அவன் குமாரனாகிய

அவனுடைய குமாரன் யோராம் எத்தனை வருஷம் அரசாண்டான்?
அவனுடைய மனைவி அருடையமகள்?
அவள் எப்படிப்பட்டவள்?
இவள் நிமித்தம் அவனுக்கென்ன நட்டம் வந்தது?
அவன் இப்படி மரணம் அடைவானென்று சொல்லியிருந்ததார்?
அவனுடைய மரணம் எப்படிப்பட்டதாயிருந்தது

அகசியா ௧. வரு. கிறி 884

அகசியா ௪௨. வயதாயிருந்து எருசலேமில் ஒரு வருஷம் அரசாட்சிபண்ணி ஆகாப்பின் குடும்பத்தாரைப் போலக் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் நடந்து பின்பு அவன் மரணம் அடைந்தான்.

அத்தாலியாள் யோவாஸ். ௪௰. வரு. கிறி. 839.

௫௧. அதின்மேல் அவன் குமாரனாகிய யோவாஸ் என்றவனை அவனுடைய மாமியாகிய யோசபாத்து அகசியாவின் தாயாகிய அத்தாலியாளுக்குப் பயந்து ஆறு வருஷமாக ஒளித்துவைத்துக் காப்பாற்றினாள். பின்பு ஏழாம் வருஷத்திலே அவன் இராச பட்டத்துக்கு வந்து யூதாவில், ௪௰ வருஷக்காலம் அரசாண்டான். பிரதான ஆசாரியனாகிய யோய்தா இருந்த நாட்களில் எல்லாம் யோவாஸ் கர்த்தருக்குப் பயந்து உண்மையாய்நடந்துவந்து பின்பு அவருக்கு ஆகாத வழியிற் போனதினாலே அவர் தீர்க்கதரிசிகளைக் கொண்டும் யோய்தாவின் மகன் சகரியாவைக்

அகசியா எத்தனைவருஷம் அரசாண்டான்?
எப்படி நடந்தான்?
அவன் மரித்தபின்பு இராசாவானதார்?
யோவாஸ் எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் ஆருடைய நாட்களிலே நல்லவழியாய்நடந்தான்?

Digitized by Google

கொண்டும் அவனுக்குப் புத்திசொல்லுவிக்க அதையுங் கேளாமல் போய்தாச் செய்த்தன்மைகளையும் மறந்து அவனுடைய மகன் சகரியாவைக் கல்லெறிந்து கொன்றுபோட்ட அந்த இரத்தப் பழியின் நிமித்தம் அவனுடைய வேலைகாரர் அவனையும் படுக்கையிலே கிடக்கிறபொழுது கொன்றுபோட்டு இராசகல்லறையிலும் அடக்கம் பண்ணுமற் தாவீதின் பட்டணத்திலே அடக்கம் பண்ணினார்கள்.

௱௨. அந்த இடத்துக்கு அவன் மகனாகிய அமச்சியா உ௫. வயதிலே இராசாவாகி உ௯. வருஷமாக அரசாண்டான். அவன் இராசபட்டத்துக்கு வந்து சிலகாலம் பராபரனுக்குப் பிரிய

அமச்சியா. உ௯. வருஷம். 810

முள்ளவனாய் நடந்தும் பின்பு அவன் பராபரனை விட்டு விலகி நல்நடக்கையற்றவனாய் இருந்ததினாலே எருசலேமின் குடிகள் எல்லாரும் அவனைக்கொன்றுபோட வகைபார்த்தார்கள். அதை அவன் அறிந்

பின்பு அவன் ஆரைக்கொன்றுபோட்டான்?
பின்பு அவனைக்கொன்றுபோட்டதார்?
அவனுடைய இடத்துக்குவந்த அமச்சியா எத்தனைவருஷம் அரசாண்டான்?
அவன் எப்படி நடந்தான்?

Digitized by Google

து இலாகீசுக்கு ஓடிப்போக அவர்களும் அங்கே தொடர்ந்துபோய் அவனைக்கொன்றுபோட்டார்கள்.

௰௩. பின்பு அவன் குமாரனாகிய உசியா பதினாறு வயதிலே இராசபட்டத்தில் வந்து, ௫௨. வருஷமாக அரசாண்டு கர்த்தரின் பார்வைக்குச் சரியாய் நடந்து வந்ததினாலே இராச்சியபாரம் மிகவும் பலப்பட்டு அவனுடைய மகிமை எங்கும் பிரபலியப்பட்டது. அதினாலே அவன் மேட்டிமையான எண்ணங்கொண்டு பீடத்தின்மேலே தூபங் காட்டும்படி கர்த்தருடைய வீட்டுக்குட் போனதினால் மரண நாள்மட்டுங் குஷ்டரோகியாய் இருந்தான்.

உசியா. ௫௨. வரு கிறி. 758

௰௪. பின்பு அவன் குமாரனாகிய யோத்தாம் ௰௬. வருஷம் அரசாண்டான். அக்காலத்தில் ஓசேயா, ஏசாயா, ஆமோஸ், மிகா என்கிற தீர்க்கதரிசிகள்

யோத்தாம். ௰௬. வரு. கிறி. 742.

அவன் இலாகீசுக்கோடிப்போன முகாந்தரம் என்ன?
அவனைக்கொன்றதார்? அதின் பின் அரசாண்டதார்?
உசியா எத்தனை வருஷம் அரசாண்டான்?
எப்படி நடந்தான்?
அவன் குஷ்டரோகியாய்ப் போன முகாந்தரம் என்ன?
அதின்பின் அவனுடைய இடத்துக்கு வந்ததார்?
அக்காலத்திலே தீர்க்கதரிசிகளாய் இருந்ததார்?

Digitized by Google

ரேமியாவானவர் கன்னிகையினிடத்திற் பெத்லெகேம் ஊரிலே பிறப்பாரென்று முன் அறிந்து சொன்னார்கள். அவன் கத்தரின் பார்வைக்குச் செம்மையாய் நடந்து பட்டணங்களையுங் கோபுரங்களையுங் கட்டுவித்துப் பின்பு மரணமடைந்தான்.

ஆகாஸ். ௰௬. வருஷம். 726

௬௫. அந்த இராச்சியத்துக்கு அவன் குமாரனாகிய ஆகாஸ் ௰௬. வருஷமாய் எருசலேமிலே அரசாண்டு கத்தரைவிட்டு இஸ்ரவேலின் இராசாக்களின் வழிகளில் நடந்து விக்கிரகங்களையும் வணங்கிவந்ததினாலே கத்தர் அவனைச் சூரியருடைய இராசாவாகிய தில்காத்பில்னேசர் கைக்கு ஒப்புக்கொடுக்க இவன் அவனையும் அந்த இஸ்ரவேற் சனங்களையும் அதிகமாய்ச் சயங்கொண்டான். ஆகிலுந் தான் நெருக்கப்படுகிற நாட்களிலுங் கத்தருக்கு விரோதமாய் அதிக துரோகம் பண்ணிவந்தவனாய் மரணம் அடைந்தான்.

அவர்கள் ஆர்பிறப்பாரென்று திர்க்கதரிசனஞ் சொன்னார்கள்?
யோத்தாம் எப்படிப்பட்டவனாய் நடந்தான்?
விசேஷமாக என்னசெய்தான்?
அவனுடைய இடத்துக்குவந்த ஆகாஸ் என்னசெய்தான்?
எத்தனை வருஷம் அரசாண்டான்?

Digitized by Google

ஏசேக்கியா. ௨௯ வரு. கி.மு. 698.	

௬௭ அதின்மேல் அவனுடைய மகன் ஏசேக்கியா எருசலேமிலே ௨௯. வருஷமாக அரசாண்டு தாவீதைப்போலக் கர்த்தருக்குச் செம்மையானவனாய் நடந்து வந்தான். அசூரிய தேசத்திராசா கர்த்தருடைய நாமத்தைத் தூஷணித்து எசேக்கியாவுக்கு விரோதமாக வந்து பட்டணத்தை வளைந்தான். அப்பொழுது எசேக்கியா பராபரனை வேண்டிக்கொண்டதினாலே அவர் தம்முடைய தூதனைக்கொண்டு அவர்களுடைய பாளயத்தில் ௱௮௲௫. பேரைச் சங்கரிப்பித்தார். அதினாலே அவன் திரும்பிப் போய்விட எசேக்கியாவுஞ் சனங்களும் ஆறுதல் அடைந்திருந்தார்கள். பின்பு எசேக்கியா வியாதியினாலே சாகிறதற்கேதுவாய் இருந்தபொழுது கர்த்தரைப்பார்த்து மன்றாடினான். அவரும் உன் நாட்களோடே ௰௫, வருஷம் கூட்டப்படும் என்று

ஏசேக்கியா எத்தனை வருஷம் அரசாண்டான்?
அவன் ஆரைப்போல நடந்தான்?
அவனுடனே யுத்தத்துக்கு வந்ததார்?
வென்றதார்?
எதினால் எசேக்கியா வென்றான்?
அவர்களைச் சங்கரித்ததார்?
அசூரியரில் எத்தனைபேர் இறந்தார்கள்?

Digitized by Google

ஏசாயாத் தீர்க்கதரிசியைக்கொண்டு அறிவித்தார். அப்படியே ௰௫. வருஷம் உயிரோடிருந்து மரணமடைந்தான்.

௩௭. அதின் பின்பு அவனுடைய குமாரன்

மனசே. ௫௫. வரு. கிறி. 643.

மனசே ௰௨. வயதிலே இராச பட்டத்தைப் பெற்று எருசலேமில் ௫௫. வருஷம் அரசாண்டான். அவன் அன்னியசாதியாருடைய பாகாலை வணங்குதற்குப் பலிபீடங்களையுங் கட்டி அதைப் பணிந்துகொண்டபடியினாலுங் கத்தரின் தீர்க்கதரிசிகளுடைய கடிந்துகொள்ளுதலுக்குச் செவிகொடாதபடியினாலுங் குற்றமில்லாத அனேகரைக் கொன்றபடியினாலுங் கத்தர் அசூரியரின் இராசாவுடைய சேனைகளை அவன் மேல் வரப்பண்ணினார். இவர்கள் அவனைப் பிடித்து இரண்டு வெண்கல விலங்கிட்டுப் பாபேலுக்குக் கொண்டுபோனார்கள். இப்படி அவன் நெருக்

ஏசேக்கியா வியாதியினாலே மரணமடைய ஏதுவாயிருக்கையில் எப்படித் தப்பிக்கொண்டான்?
பின்பு எத்தனைவருஷம் இருந்தான்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
மனசே எவ்வளவுகாலம் ஆண்டான்?
அவன் ஆரைப்போல நடந்தான்?
அவனைப் பிடித்ததார்?
மனசேக்கு என்னசெய்தார்?

Digitized by Google

கப்படுகையில் தன் பராபரனாகிய கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டு அவருக்கு முன்பாக மிகவுந் தன்னைத் தாழ்த்தினபடியினாலே பராபரன் அவனைத் திரும்ப எருசலேமுக்கு வரவும் இராச்சியத்தைக் கைப்பற்றவும் பண்ணினார். அதுமுதல் அவன் தேவ கட்டளைக்கு அமைந்து நடந்து மரணம் அடைந்தான்.

ரு௮. அவன் குமாரனாகிய ஆமோன் அரசாட்சிக்கு வந்து தன் தகப்பனாகிய மனாசே நடந்ததுபோல நடவாமல் விக்கிரகங்களை வைத்து வணங்கித் தன் குற்றத்தைப் பெருகப் பண்ணினபடியினாலே அவன் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனை அவன் வீட்டிலே கொன்றுபோட்டு அவன் குமாரனாகிய யோசியாவை இராசாவாக்கினார்கள். அவன் அ. வயதிலே தொடங்கி ௩௧. வருஷம் எருசலேமில் அரசாண்டு பக்தி

ஆமோன்.
உ. வரு.
கிமு. 641.

பின்பு ஒரு சகாயம் மனாசேக்குக் கிடைக்கவில்லையோ?
ஆமோன் எத்தனை வருஷம் ஆண்டான்?
அவனுக்கு என்ன சம்பவித்தது?
ஆமோனுக்குப் பின் அரசாண்டதார்?
யோசியா எத்தனை வயதில் இராசாவானான்?

Digitized by Google

போசியா. ௯௧. வரு. கிமு. 610.

புள்ளவனுகிப் பாகாலின் பலிபீடத்தை யும் இடித்து மற்றும் விக்கிரகங்களை யுந் தகர்த்துத் தனக்குச் சேர்ந்த சகல இடங்களிலும் நடந்து வந்த விக்கிரக வணக் கத்தை முற்றுக நீக்கிப் போட்டான். சனங்கள் கொண்டுவந்த திரவியங்களையும் பராபரனு டைய ஆலயத்திலே இருந்த பழுதுகளைத் திரு த்தும்படி கொடுத்துச் சகல சனங்களுஞ் சுத்த ஆராதனை செய்யும்படி நிறுத்திச் சிலகாலமாக விட்டிருந்த பஸ்காவென்கிற திருநாளையும் மறு படி நடக்கப் பண்ணினுன். இப்படியே இவன் பத்தியுள்ளவனுய் இருந்து மரணமடைந்த பொ ழுது எரேமியாத் தீர்க்கதரிசி இவன்மேலே பு லம்பல் பாடக் குடிசனங்களுங் கூடிப் புலம்பி ஞர்கள்.

௯௯. பின்பு இவனுடைய குமாரன் யோவா

யோவாகாஸ் ௩. மா.

காஸ் இராசாவாக நியமிக்கப்பட் டு மூன்று மாதமாக அரசாண்டா ன். அக்காலத்திலே அவன் பராபரனுக்கு அடா

அவன் என்னென்ன நன்மைகளைச்செய்தான்?
அவனுடைய மரணத்தைப்பற்றிப் பாடினதார்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
யோவாகாசுடைய நாட்களில் என்ன சம்பவித்தது?

Digitized by Google

த பொல்லாங்கு செய்தகினுற் பாபிலோனின் இராசாவாகிய நேபுகாத்நேசர் வந்து அவனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு தேவாலயத்தின் உடைமைகளிலுஞ் சிலவற்றை எடுத்துக் கொண்டு போனுன்.

சய. அதின்மேல் அவனுடைய குமாரன் யோயாக்கீம் இராசாவாகி யக. வருஷம் எருசலேமிலே அரசாண்டு தன் பராபரனுகிய கர்த்தருடைய பார்வைக்கு அடாததைச் செய்தபடியாற் கர்த்தாவாலே கைவிடப்பட்டான். அப்பொழுது பாபிலோனின் இராசாவாகிய நேபுகாத்நேசர் வந்து அவனைப் பிடித்துக்கொண்டு தேவாலயத்தில் இருந்த தட்டுமுட்டுக்களையும் எடுத்துத் தன் தேசத்திற்குக் கொண்டுபோய் அவனுக்கு இரண்டு விலங்கு போட்டுக் காவற்சாலையிலே வைத்தான்.

யோயாக்கீம் யக. வரு. கிறி. 600.

சக. அதன்மேல் அவன் குமாரனுகிய யோ

நேபுகாத்நேசர் ஆர்?
அவனுக்குப் பின் இராசாவானதார்?
யோயாக்கீம் எத்தனைவருஷம் ஆண்டுகொண்டான்?
[illegible]புகாத்நேசர் அவனுக்கு என்ன செய்தான்?

Digitized by Google

யோயாக்கீன். ௧. மீ., ௰. நாள்

யாக்கீன் இராசாவாகி மூன்று மாதமும் பத்து நாளும் எருசலேயில் அரசாண்டு தீங்குசெய்து தேவனாலே கைவிடப்பட்டபடியால் நேபுகாத்நேசர் அவனையுங் கத்தருடைய வீட்டின் உச்சிதமான தட்டுமுட்டுக்களையும் பாபேலுக்குக் கொண்டுவரப் பண்ணி அவனுடைய சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை எருசலேயிலே இராசாவாக நியமித்தான். அவனும் மற்றச் சனங்களும் பொல்லாங்குசெய்து தீர்க்கதரிசிகளை நிந்தைபண்ணிப் பராபரனுக்குப் பிரியமில்லாமல் நடந்து வந்ததினாலே பராபரன் அவர்கள் எல்லாரையும் கைவிட்டார்.

சிதேக்கியா ௧௧. வரு. கி.மு. 588.

௩௨. அப்பொழுது நேபுகாத்நேசர் வந்து அவர்களோடே போராடி பட்டாவுக்குத் தப்பினவர்களைச் சிறைப்படுத்திப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்.

அவனுக்குப் பின் இராசாவானதார்?
யோயாக்கீனுக்கு என்ன வந்தது?
சிதேக்கியா ஆர்?
அவனை இராசாவாக்கினதார்?
அவனுஞ் சனமும் எப்படி நடந்தார்கள்?
பராபரன் என்ன செய்தார்?
அவர்களுக்கு என்ன வந்தது?

Digitized by Google

௩௩. அப்படியே அவர்கள் சிறைப்பட்டகாலஞ் சாலோமோன் தேவாலயங்கட்டி ௪௱௰௫. வருஷத்துக்குப் பின்னுங் கிறிஸ்துநாதர் பிறக்க,௫௱அ௮. வருஷத்துக்கு முன்னுமாய் இருந்தது.

---

௩. அதிகாரம்.

யூதச் சனஞ் சிறையாகப் பாபிலோன்தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்ட நாட்டொடங்கி உலக இரட்சகராகிய கிறிஸ்துநாதர் பிறந்த நாள் வரைக்குஞ் செல்ற் வருஷம். ௫அஅ.

ஆதி. 3416. **கிறி. 588.**

௧. அந்த இராசாத் தான் சிறைப்பிடித்துக் கொண்டுபோன சனங்களுக்குள்ளே இராசகுலத்திற் பிறந்தவர்களாகிய தானியேல் சாதுராக் மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குச் சகல வித்தைகளையும் படிப்பித்தான்.

யூதர் சிறைப்பட்ட காலஞ் சாலோமோன் தேவாலயங் கட்டி எத்தனை வருஷத்துக்குப் பின்னும் இரட்சகர் பிறக்க எத்தனை வருஷத்துக்கு முன்னுமாய்இருந்தது?
சிறையாகப் பிடிபட்ட சனங்களுக்குள் இராசா எவரெவரைத் தெரிந்துகொண்டார்?
-ன் தெரிந்துகொண்டார்?

Digitized by Google

௨. அப்படி இருக்குங் காலத்தில் நேபுகாத்நேசர் ஒரு கனவு கண்டு தன்னுடைய தேசத்துச் சாத்திரிகள் எல்லாரையும் அழைத்துத் தான் கண்ட கனவையும் அதின் அருத்தத்தையுந் தனக்கு வெளிப்படுத்தச் சொல்லிக் கட்டளையிட அவர்கள் அந்தக்கனவு இன்னவிதம் என்று தங்களுக்கு அறிவித்தால் ஒழிய அதின் கருத்தை வெளிப்படுத்துவது தங்களாற் கூடாத காரியம் என்றார்கள்.

௩. அதினாலே அவர்கள் சொன்னது தந்திரம் என்று அறிந்து அவர்களைக் கொன்றுபோடக் கட்டளையிட்டான். அப்பொழுது தானியேல் பராபரனை நோக்கி வேண்டிக்கொண்டதினாலே இராசாக் கண்ட கனவு அவனுக்கு வெளிப்பட அவன் இராசாவிடத்திலே வந்து இராசாக் கண்ட கனவையும் அதினாலே சம்பவிக்கப்போகிற காரியங்களையுஞ் சரியாக அறிவித்தான்.

இராசா என்னத்தைக் கண்டான்?
சாத்திரிகளுக்கு என்ன சொன்னான்?
சாத்திரிகள் என்ன சொன்னார்கள்?
அவர்களை என்ன செய்யக் கட்டளையிட்டான்?
அதின் கருத்தைச் சொன்னதார்?
ஆருடைய உதவியினாற் சொன்னான்?

Digitized by Google

௪. அதினாலே இராசா அவனுக்கு அனேகம் வெகுமதிகளுஞ் செய்து பாபிலோன் என்கிற சீமைக்கு அவனைத் துரையும் ஞானிகளுக்குத் தலைவனுமாக்கினான். பின்பு தானியேலுடைய கேள்விப்படிக்கு அவனுடனே படித்த மற்ற மூன்று பேரையும் அந்தச் சீமைக்குத் தலைமைக்காரராக வைத்தான்.

௫. இதைக் கண்டு மற்றுந் தலைமைக்காரர் எல்லாருங் கூடி அவர்களைக் குற்றப்படுத்தும் சூதாந்தரமாக இராசாவிடத்திற் போய் இராசாவே, சகலரும் வணங்கவேண்டுமென்று நீர் நிறுத்தின பொன்னுருவத்தை இந்த மூன்று பேரும் வணங்காமலும் உம்முடைய கட்டளைக்கு அமையாமலும் இருக்கிறார்களென்று முறையிட்டார்கள்.

௬. இராசா அதைக் கேட்டு உக்கிரமான கோபத்துடனே அம்மூன்று பேரையும் அழைப்பித்து நான் நிறுத்தின பொன்னுருவைப் பணிந்து கொள்ளாமற்போக நீங்கள் எம்மாத்திரம்! இப்

தானியேலுக்கு இராசா என்ன அதிகாரத்தைக் கொடுத்தான்?
மற்ற மூன்று பேருக்கும் என்ன செய்தான்?
மற்றுந் தலைமைக்காரர் என்ன முறையிட்டார்கள்?
இராசா அவர்களை அழைத்து என்னசெய்யச் சொன்னான்

Digitized by Google

பொழுது நீங்கள் சகலவித தேவாத்தியத்தின் சத்தத்தைக் கேட்கும் பொழுது தாழ விழுந்து நான் நிறுத்தின உருவைப் பணிந்துகொண்டாற்றப்புவீர்கள். அல்லாதிருந்தால் இந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையிலே போடப்படுவீர்கள். அப்பொழுது உங்களை இரட்சிக்கப் போகிற தேவன் ஆர் என்றான்.

௭. அவர்கள் இராசாவுக்குப் பிரத்தியுத்தாரமாக நாங்கள் ஆராதனைசெய்கிற எங்கள் தேவனாகிய பராபரன் எங்களைத் தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார். எரிகிற அக்கினிச் சூளையிலும் நின்று எங்களைத் தப்புவிப்பார். அப்படிச் செய்யாதேபோனாலும் நாங்கள் இத்தேசத்தார் வணங்குகிற தேவர்களுக்கு ஆராதனைசெய்கிறதும் இல்லை, நீர் நிறுத்தின பொன்னுருவத்தைப் பணிந்துகொள்வதும் இல்லை என்றார்கள்.

௮. அப்பொழுது நேபுகாத்நேசருடைய முகங் கோபத்தினால் வேறுபட்டுச் சூளையை மிகுந்த சுவாலைகொண்டு எரியும்படி மூட்டுவித்துத் தன் இராணுவத்திற் பலத்த வீரவான்களை கோ

அம்மூன்று பேருஞ்சொன்னதென்ன?
பின்பு அவர்களை என்ன செய்யச்சொன்னான்?

Digitized by Google

க்கி இவர்களைக் கட்டி அதிலே போடுங்களென்று கட்டளையிட்டான்.

௯. அப்படியே அந்த வீரர்கள் அவர்களைக் கட்டிக் கொண்டுபோய்ப் போடுகையிற் சூளையின் சுவாலையினாலே அந்த வீரர்கள் இறந்துபோனார்கள். சாதுராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களோ கட்டுண்டவர்களாய்ச் சூளையிலே கிடந்தும் அக்கினி அவர்கள்மேற் சுடாமலும் அவர்களுடைய தலைமயிர் கருகாமலும் புடைவைகள் எரியாமலும் இருந்ததுமன்றி ஒரு தேவதூதனும்வந்து அவர்களோடேகூட நின்றான்.

௰. அதை இராசாக் கண்டு பிரமித்து நான் மூன்று பேரை அல்லவோ சூளையிலே போடுவித்தேன். இப்பொழுது அதிலே நாலு பேர் நின்று உலாவுகிறார்கள். அந்த நாலாம் பேருடைய சாயல் தேவ ரூபுக்கொத்ததாக இருக்கிறதே என்று சொல்லி உன்னதமான பராபரனுடைய தாசரே, வெளியே வாருங்கள் என்று அழைத்தான். அவர்கள் அதைக் கேட்டுச் சூளையில் நின்று வெளியேபுறப்பட்டு வந்தார்கள்.

சூளையிலே அவர்களைக் கொண்டுபோய்ப் போட்டவர்களுக்கு என்ன சம்பவித்தது? [௯?

அப்பொழுது இராசா சூளையிலே எத்தனைபேரைக் கண்டா என்ன சொல்லிக் கூப்பிட்டான்?

Digitized by Google

அதிகாரிகளுஞ் சேனைத்தலைவருஞ் சேவகரும் அதைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

௰௧. அப்பொழுது சாதுராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற தம்முடைய தாசருக்குத் தமது தூதனை அனுப்பி விடுவித்தபராபரன் தோத்திரிக்கப்படத்தக்கவர். இப்படித் தப்புவிக்கத்தக்க தேவன் வேறில்லாதபடியால் அவருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தை சொல்லுகிற எவனுங் கொலைப்படுவானாக என்று சொல்லி நேபுகாத்நேசர் இம்மூன்று பேரையும் பாபிலோன் தேசத்திலே முன் இருந்ததிலும் உயர்ந்த உத்தியோகங்களில் வைத்தான்.

௰௨. வேறொரு சமயத்திலே அதிகாரிகள் முதலான தலைமைக்காரர் எல்லாருங் கூடித்தானியேல் கைக்கொள்ளும் வேதத்திற்குவிரோதமான கட்டளையை இராசா கற்பித்தால் அதை அவன் மீறுவான். அதிலே இவனைக் குற்றப்படுத்தலாம் என்றெண்ணி இராசாவிடத்திலே போய் இன்றுமுதலாக முப்பது நாளைக்குள்ளே எவனாகிலும் எந்தத் தேவனையானாலும் உம்மையன்றி எந்தமனிதனையானாலும் வழிபட்டால் அவனைச்

இராசா என்னென்னசொன்னான்?
அதைக் கண்டதார்?
அவர்களுக்கு என்ன அதிகாரங் கொடுத்தான்?

Digitized by Google

சிங்கத்தின் கெபியிலே போடும்படி கட்டளையிடவேண்டுமென்று கேட்டார்கள். அவன் அவர்களுடைய சபடத்தை அறியாமல் அந்தக் கட்டளையை எழுதுவித்துக் கையெழுத்தும் வைத்தான்.

௰௫. தானியேலோ அந்தக் கட்டளையை அறிந்தும் தன் நியமத்தின்படியே ஒவ்வொரு நாளும் மூன்றுதரம் பராபரனை மன்றாடித் தோத்திரித்துவர்தான். அதை அறிந்து இராசாவிடத்திற் போய் இராசாவே, எவனாகிலும் முப்பது நாள்வரையிலே எந்தத் தேவனையாகிலும் இராசாவாகிய உம்மையன்றி எந்தமனிதனையாகிலும் வழிபட்டால் அவன் சிங்கத்தின் கெபியிலே போடப்பட வேண்டுமென்று கட்டளையிட்டீரே. உம்முடைய மந்திரியாகிய தானியேல்தானே உம்மையும் உமது கட்டளையையும் மதியாமற் றினந்தோறும் மும்மூன்றுமுறை தன் தேவனாகிய பராபரனை நோக்கி வேண்டுதல்செய்து வருகிறானென்றார்கள்.

தலைமைக்காரர் இராசாவிடத்தில் என்ன கட்டளையிடச் சொன்னார்கள்?
இராசா என்ன செய்தான்?
தானியேல் அந்தக் கட்டளைக்கு அமைந்தானோ?
லைமைக்காரர் இராசாவிடத்தில் என்ன கேட்டார்கள்?

Digitized by Google

௰௪. இராசா அதைக் கேட்டுத் துக்கித்து அவனுக்குச் சகாயம்பண்ண விரும்பியுந் தன் கட்டளையைத் தவற விடாமல் நிறைவேற்றும்படி தானியேலை அழைப்பித்து நீ ஆராதனைசெய்கிற பராபரன் உன்னைத் தப்புவிப்பாராக என்று சொல்லி அவனைச் சிங்கத்தின் கெபியிலே போடுவித்து அன்றிராத்திரி தன் அரண்மனைக்குப் போய் யாதொரு ஆடல் பாடல்களை என்கிலும் கீதவாத்தியங்களை என்கிலும் விரும்பாமல் உண்டி உறக்கமற்று வைகறைப் பொழுதாகும் அளவும் இருந்தான்.

௰௫. வைகறையானபொழுது சிங்கத்தின் கெபிக்குக் கிட்டப் போய்ப் பராபரனுடைய தொண்டனாகிய தானியேலே, நீ இடைவிடாமல் வழிபடுகிற தேவன் உன்னைச் சிங்கத்தின் வாய்க்குத் தப்ப வைத்தாரோவென்று கேட்க, தானியேல் இராசாவே, பராபரனுக்கும் உமக்கும் யாதொரு தீதுகேடுஞ் செய்யாததினால் அ

இராசா என்னசெய்வித்தான்?
சிங்கங்கள் அவனைக்கொன்றதா?
இராசா இரா முழுவதும் எப்படி இருந்தான்?
விடிந்தவுடனே எங்கே போனான்?
என்ன கேட்டான்

Digitized by Google

இந்தப் படங் காட்டுகிற தென்ன!

வர் தம்முடைய தூதனை அனுப்பிச் சிங்கங்களி
ன் வாயை அடைப்பித்து என்னை இரட்சித்தார்
என்றான்.

௰௩. அப்பொழுது இராசா மிகவுஞ் சந்தோ
ஷமாகி அவனை அவ்விடத்தில் இருந்து வெ
ளியே எடுத்துவிடச் சொல்லி அவன்மேற் பழி
சாற்றின அவனுடைய எதிராளிகளை அந்தச்
சிங்கத்தின் கெபியிலே போடுவித்தான். உட
னே சிங்கங்கள் அவர்கள் எலும்புகள் எல்லாம்
நொருங்கப் பிடித்துக் கொன்றுபோட்டன. பி
ன்பு இராசாத் தனது குடிகள் சகலருந் தானி
யேல் வணங்குகிற பராபரனுக்குப் பயப்பட்
டுத் துதிசெலுத்த வேண்டியதென்று கட்டளை
யிட்டான்.

௰௪. இப்படியே தானியேலும் அவனைச் சே
ர்ந்த யூதச் சனங்களும் பராபரனுக்குப் பிரிய
மான உத்தமர்களாக நடந்துவந்ததையும் அ

தானியேல் என்ன மறுமொழி சொன்னான்?
தானியேலைக் குற்றஞ்சாற்றினவர்களுக்கு என்னசெய்வி
த்தான்?
சிங்கம் என்ன செய்தது?
இராசா சனங்களுக்கு என்ன கட்டளையிட்டான்?
அக்காலத்திலே தானியேலும் யூதச் சனங்களும் எப்ப
டி நடந்தார்கள்?

Digitized by Google

வர்கள் வெகு வருஷமாகச் சிறையிலே இருந்து வருந்துவதையும் நேபுகாத்நேசருக்குப் பின்னே இராசாவாக வந்த சீருசென்பவன் கண்டு அவர்களை விடுதலையாக்கி நேபுகாத்நேசர் எடுத்து வந்த தேவாலயத்தின் தட்டுமுட்டுக்களையுங் கொடுத்து எருசலேமுக்குப் போகப் பிரியமுள்ள யூதரையும் அழைத்துக்கொண்டு போகச்சொல்லி அவர்களுக்குத் தலைவனாய் இருந்த சேருபாபேலுக்கு உத்தரவு கொடுக்கத் தீர்க்கதரிசிகள் சொன்னபடி எழுபது வருஷமாகச் சிறையிருந்த யூதரில் ௪௨௲ ௩௱க்கு மேற்பட்ட சனங்களும் அவனுமாக எருசலேமுக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

சேருபாபேல். கிமு. 547.

இது உலகம் உண்டாகி ௩௲௪௱௬௰௮ வருஷத்துக்குப் பின்னுங் கிறிஸ்துநாதர் பிறக்க ௫௱௩௰

அதைக் கண்ட சீருசென்பவன் அவர்களுக்கு என்ன உத்தரவு கொடுத்தான்?
அவர்களுக்கு என்ன தட்டுமுட்டுக்களைக் கொடுத்தான்?
அவர்களுக்குத் தலைவன் ஆர்?
எத்தனை வருஷமாய்ப் பாபிலோன் தேசத்திலே சிறையாய் இருந்தார்கள்?
எத்தனை பேர் திரும்பி எருசலேமுக்குப் போனார்கள்?
இது எப்பொழுது சம்பவித்தது?
அதினால் என்ன நிறைவேறிற்று?

Digitized by Google

வருஷத்துக்கு முன்னுஞ் சம்பவித்தது.

௰௮. இவர்கள்போய் அறுபது வருஷத்துக்குப் பின் எசுரா என்பவன் அர்த்தசேக்கிஸ் என்னும் இராசாவிடத்தில் உத்தரவு பெற்றுச் சனங்களிடத்திலே பணங்களையுஞ் சேர்த்து அந்தச் சனங்களிற் றலைமையானவர்களையும் ஆசாரிய வம்மிசத்திற் சிலரையும் அழைத்துக்கொண்டு கர்த்தாவையே தங்களுக்குத் துணையாக்கிக்கொண்டு எருசலேமுக்குப் போய் அந்தத் தேவாலயத்தில் இருந்த குறைவேலைகளை எல்லாம் முடிக்க முயன்றதுமன்றிப் பிரதான ஆசாரியனுமாய் வேதபாரகனுமாய் இருந்தபடியால் முன் போயிருந்த சனங்களை ஒழுங்காக்கித் தேவாராதனைக்குவழிப்படுத்திக் கர்த்தாவினுடைய நியாயப் பிரமாணத்தையும் பிரசித்தப்படுத்திவந்தார்.

௰௯. அப்பொழுது நேகேமியா என்பவன் பார்சருடைய இராசனாகிய அர்த்தசேக்கிஸ்

வேறொருவரும் போகவில்லையா?
போனவர்களுக்குத் தலைவனார்?
இவர்களை எங்கே கொண்டுபோனார்கள்?
எசுரா என்பவன் ஆர்?
ஆரைக் கூட்டிக்கொண்டு போனான்?
இந்தச் சங்கதிகளைப் பற்றி எந்த ஆகமத்திற் சொல்லியிருக்கின்றது? எசுரா, நேகேமியா.

Digitized by Google

என்பவனிடத்திலே பெரிய உத்தியோகமாயிரு க்கையில் எருசலேம் நகரம் பாழாய்க் கிடக்கிற தென்று கேள்விப்பட்டு மிகுந்த துக்கமடைந் து இராசாவிடத்திலே உத்தரவு பெற்றுக்கொ ண்டு தன்னுடைய உலகமகிமைகளை எல்லாம் விட்டு யூதேயா நாட்டுக்குப் போய் எசுராவோ டேகூடி எருசலேமைச் சூழ மதில்கட்டிச் சன ங்களுடைய தகாத நடக்கைகளைத் திருத்தி வே தப்பிரமாணத்தை அவர்களுக்குள் ஏற்படுத்தி மிகுந்த புத்தியோடுந் தேவபத்தியோடுந் தயி ரியத்தோடும் துரைத்தனஞ் செய்துகொண்டு வந்தான். வேதப்பிரமாணங்களை வாசிக்கையில் யூதர்களும் மிகுந்த ஆசையோடும் பயத்தோ டுங் கேட்டு அவைகளைப் பற்றிக்கொள்ளும்படி க்கு யாவரும் பராபரனுக்கு முன்பாக உடன் படிக்கை பண்ணினார்கள். இவ்விதமாய் நேகே மியா இருந்த காலத்திலே பழைய ஏற்பாட்டி

அக்காலத்திலே பாரசருடைய இராசாவார்?
எருசலேம் பாழாய்க் கிடந்ததை ஆர் அறிந்தது?
தேவாலயம் எப்படிப்போயிற்று?
நேகேமியா ஆர்?
அங்கே போய் என்ன செய்தான்?
வேதப்பிரமாணங்களை வாசிக்கையில் யூதர் என்ன பண் ணிக்கொண்டார்கள்?

Digitized by Google

ன் சரித்திரம் எல்லாம் எழுதப்பட்டு முடிந்தது. அவனுங் கிறிஸ்துநாதர் பிறக்க (௪௱௨௰) வருஷத்துக்கு முன் மரணமடைந்தான்.

௨௰. அக்காலத்திலே அத்தசேக்கிஸ் என்றும் அகாஸ்வேருஸ் என்றும் பேருள்ள இராசாவுக்கு யூதஸ்திரியாகிய எஸ்தர் என்பவள் மனைவியாகஇருந்தாள். இவள் மொற்தேகாய் என்பவனுக்கு ஒன்றை விட்ட சகோதரியாய் இருந்தாள்.

அகாஸ்வேருஸ் எஸ்தர்

இராசாவுடைய மந்திரிகாமான் பெருமைகொண்டு மொற்தேகாய் தன்னைக் கும்பிட மனம் இல்லாதபடியினாலே அவனையும் மற்ற யூதர் எல்லாரையுங் கொல்லும் படிக்குக் கபடமாக ஒரு யோசனைபண்ணி இராசாவிடத்திற் சேர்ந்து சீமைகளிலுள்ள சனசதளங்களுக்குள்ளே ஒரே சாதி மிகவும் பரம்பினதும் பெரிதுமாய் இருக்கிறது. அது இராசாவுடைய நியாயப்பிரமாணங்களின்படி செய்கிறதில்லை. ஆதலால் இராசா

பழைய ஏற்பாட்டின் சரித்திரம் எப்பொழுதுமுடிந்தது?
அக்காலத்திலே இருந்த இராசாவுக்குப் பேர் என்ன?
அத்தசேக்கிசுடைய மனைவி ஆர்?
எஸ்தர் எந்தக் கோத்திரத்தாள்?
காமான் என்பவன் ஆர்?
மொற்தேகாய் ஆர்?

Digitized by Google

அவர்கள் எல்லாரையும் அழிக்கும்படி ஒருகட்டளையிடும் என்று சொல்ல இராசா அவனுடைய சொல்லை நம்பித் தன் கையின் மோதிரத்தைக்கழற்றிக் காமானுடையகையிலே கொடுக்க அவன் தயிரியப்பட்டு ஐம்பது முழ உயரமான ஒரு தூக்குமரஞ் செய்வித்துத் தான் பகைத்த மொற்தேகாயை அதிலே தூக்குவிக்கும்படி இராசாவோடே பேச நினைத்திருந்தான். இவைகளை மொற்தேகாய் அறிந்து இராசாத்தியாகிய எஸ்தருக்கு அறிவிக்க எஸ்தரும் இராசாவுக்கு அறிவித்தாள்.

௨௧. அப்பொழுது இராசாவுக்கு முன்பாக நின்ற பிரதானிகளில் ஒருவன் இதோ இராசாவின் நன்மைக்காகப் பேசின மொற்தேகாயைத் தூக்கும்படி காமான் தன் வீட்டண்டையிலே ஒரு தூக்குமரத்தை நிறுத்தியிருக்கிறான் என்றான். அதைக் கேட்டவுடனே இராசா உக்கிரங்கொ

காமான் மொற்தேகாய்க்கும் யூதச் சனங்களுக்கும் விரோதமாய் என்ன யோசனை செய்தான்?
இராசா என்ன செய்தான்?
காமானை எப்படிக் கொலைசெய்ய வேண்டுமென்று நினைத்தால்?
அந்த யோசனை ஆராலே வெளிவந்தது?

ண்டு அதில் அவனையே தூக்கிப்போடுங்கள் என்றான். அப்படியே மொர்தேகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்திலே காமானைத் தானே தூக்கிப்போட்டார்கள்.

௨௨. இதற்குப் பின் எருசலேம் பட்டணத்துக்குத் திரும்பிப்போகாமற் பாபிலோன் தேசத்திற் குடியிருந்த யூதர் பார்சிய தேசத்தின் இராசாக்களுக்குக் கீழாக இருந்து பலபல சாதிக்காரருடனேயுங் காலத்துக்குக் காலங் கலந்து சிதறுண்டுபோனார்கள். சிறையிருப்பை விட்டு எருசலேமுக்குத் திரும்பிப்போன யூதரோ பாபிலோன் இராசாவுக்குக் கீழாக இருந்தும் பிரதான ஆசாரியருடைய விசாரணைக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். கிறிஸ்துநாதர் பிறக்க முன்னே ௩௱௨௮. வருஷம் அளவில் மக்சேதோனியாவின் இராசாவாகிய அலெக்சந்தர் வந்து பாபிலோன் தேசத்தையும்

அலெக்சந்தர் கி.மு. 328.

காமானுக்கும் மற்றுள்ள அவன் கிளைஞருக்கும் என்ன சம்பவித்தது?

இதற்குப் பின் யூதச் சனத்துக்கு என்ன சம்பவித்தது?

எருசலேமுக்குத் திரும்பிப்போகாத யூதர் என்னசெய்தார்கள்?

எருசலேமுக்குப் போனவர்கள் ஆருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்?

அலெக்சந்தர் ஆர்?

Digitized by Google

யூதாத் தேசத்தையும் அடிப்படுத்தியிருந்தும் யூதருடைய ஒழுங்குகளை மாற்றவும் இல்லை. அவர்களைக் கலக்கப்படுத்தவும் இல்லை.

௨௩ இப்படி இருந்து அவன் இறந்துபோகக் கிறிஸ்துநாதர் பிறக்க ௱௬௩. வருஷத்துக்குமுன்னே யூதேயாத் தேசத்தை ஆண்டுகொண்ட இராசாக்கள் யூதச் சனங்களை விக்கிரகாராதனைக்குட்படுத்தும்படி பலபந்தம் பண்ணியும் அ

கிறி. 163. வர்கள் அதை நடப்பியாமல் விட்டுவிட்டதுமன்றி அவர்களுக்குள்ளே தேவபத்தியுள்ளவனும் உத்தம புருஷனுமாயிருந்த யூதாமக்கிபீசு என்பவனும் அவனுடைய சகோதரரும் சீரியதேசத்தில் இராசாக்களோடு யுத்தம் பண்ணி அவர்களைச் சயங்கொண்டு சுய அரசாட்சிக்காரரானார்கள்.

௨௪. பிறகு கிறிஸ்து பிறக்க ௬௰. வருஷத்துக்

கிறி. 60 கு முன்னே உரோமர்வந்து யூதேயாத் தேசத்தையும் எருசலேம் நகரியையும் பி

என்னத்தைச் செய்தார்?
யூதர்களை வருத்தப்படுத்தினரோ?
என்னத்துக்காக யூதர்மக்கிபீசு அதிகாரிகளோடே போராடினன்? [தேசத்தைப் பிடித்தார்கள்?
கிறிஸ்து பிறக்க ௬௰. வருஷத்துக்குமுன்னே ஆர் யூதாத்

Digitized by Google

டித்துக்கொண்டு ஆசாரியர்தானே முன்போல அத்தேசத்தை ஆளவும் தங்களுக்குத் திறைகொடுக்கவுங் கட்டளையிட்டு அரசாட்சிபண்ணிவந்தார்கள்.

கிமு. 26 பின்பு கிறிஸ்து பிறக்க உ௬. வருஷத்துக்கு முன் இராயனுடைய கட்டளையினால் ஏரோதென்பவனும் இராசாவாகி அவர்களை அக்காலத்திற் பராபரன் முன்னமே தமது தாசரைக்கொண்டு சொல்லுவித்த தீர்க்கதரிசனங்களின்படி உலக இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து மனிதஅவதாரம்பண்ணினார்.

எ. அதிகாரம்.

கிறிஸ்துநாதர் பிறந்த நாள்முதற்கொண்டு அவர் பரமண்டலத்துக்கு எழுந்த நாள் வரைக்குஞ் சென்ற வருஷம், ௩௩.

கிபி. 1. கிபி. 33.

க. உலகம் உண்டாய் நாலாயிரத்து நாலுவ

அக்காலத்தில் இருந்த இராசா ஆர்? [சாவானுன்?
கிறிஸ்துநாதர் பிறக்க எத்தனை வருஷத்துக்கு முன் இரா
அந்தக் காலத்திலே பிறந்தார்?
அவர் பிறப்பாரென்று முன் சொல்லியிருந்தார்?
கிறிஸ்துநாதர் என்னத்துக்காகப் பிறந்தார்?
உலகம் உண்டாகி எத்தனை வருஷத்துக்குப் பின் கிறிஸ்துநாதர் பிறந்தார்?

Digitized by Google

ருஷீம் சென்ற பின் ஆபிரகாமின் சந்ததியாகிய தாவீது இராசனுடைய வமிசத்தாளும் மிகுந்த தேவபத்தியுள்ளவளும் யோசேப்பு என்பவனுக்கு நியமிக்கப்பட்டவளுமாய் இருந்த மரியாள் என்னுங் கன்னிகை கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரில் வாசமாயிருக்கிற பொழுது பராபரனாலே அனுப்பப்பட்ட காபிரியேல் என்னுந் தூதன் அவளுக்குக் காட்சியாகி அவளுடனே பராபரனால் மிகுந்த அனுக்கிரகம் அடைந்தவளே வாழ்ந்திருப்பாயாக, சகல இஸ்திரிகளிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், பராபரனிடத்திலே கிருபை பெற்றாய்! நீ கருப்பவதியாகி ஒரு புத்திரனைப் பெறுவாய், அந்தப் புத்திரனுக்கு இயேசுவென்று பேரிடுவாயாக, அ

எந்த வமிசத்திலே கிறிஸ்துநாதர் பிறந்தார்?
ஆரிடத்திலே பிறந்தார்?
மரியாள் எப்படிப்பட்டவள்?
ஆருக்கு நியமிக்கப்பட்டிருந்தாள்?
யோசேப்பும் மரியாளும் எந்த ஊரிலே இருந்தார்கள்?
மரியாளுக்கு ஆர் தரிசனையானது?
காபிரியேல் என்னுந் தூதன் மரியாளுக்கு என்ன அறிவித்தான்?
பிறக்கப் போகிற பிள்ளைக்கு என்ன பேரிடச் சொன்னான்?

Digitized by Google

வர் மேன்மையுடையவராகி எல்லாவற்றினும் மேலான பராபரனுடைய குமாரனென்னப் படுவார் என்று சொன்ன மாத்திரத்திலே மரியாள் நான் புருஷனை இன்னும் அறியேனே நீர் சொன்னது எப்படி ஆகுமென்று அவருடனே சொன்னாள். அதற்குத் தூதன் உன்னிடத்தில் உற்பவித்துப் பிறக்கும் பிள்ளை பரிசுத்த ஆவியினால் உண்டாம்; ஆதலால் அந்தப் பிள்ளை பராபரனுடைய குமாரன் என்னப்படும் என்றான். அப்பொழுது மரியாள் தூதனுடைய வார்த்தையை நம்பி நான் பராபரனுடைய அடிமையாய் இருக்கிறேன் நீர் சொன்னபடியே ஆகக் கடவதென்று சொன்னாள்.

௨. அந்தப்படியே அவள் புருஷனுடனே கூடி வாழ்கிறதற்கு முன்னமே பரிசுத்த ஆவியினாலே கருப்பவதியானாள். இதை யோசேப்பு அறிந்து ஐயப்படுகையிற் பராபரனுடைய தூதன் அவனுக்குக் கனவிலே தரிசனையாகித் தா

அந்தப் பிள்ளை ஆருடைய குமாரன் என்னப்படும்?
அந்தப் பிள்ளை ஏன் பராபரனுடைய குமாரன் என்னப் படும்?
தூதனுக்கு மரியாள் என்ன சொன்னாள்?
மரியாள் கருப்பவதியானது யோசேப்புடனே கூடிவாழுகிறதற்கு முன்னோ பின்னோ?
தேவ தூதன் யோசேப்புக்கு ஏன் தரிசனையானான்?

Digitized by Google

வீதின் சந்ததியாகிய யோசேப்பே, மரியாளிடத்தில் உற்பத்தியாய் இருக்கிற கருப்பம் பரிசுத்தஆவியினாலே உண்டாயிருக்கிறபடியால் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ள ஐயப்பட வேண்டாம். அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவர் தமது சனங்களுடைய பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். ஆகையால் நீ அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக என்று சொல்லிப் போனான். இயேசு என்பதற்கு இரட்சகரென்ற அருத்தமாம்.

௩. அக்காலத்திலே இராயன் வரிவாங்கும் நிமித்தந் தன்னுடைய குடிகள் எல்லாந் தாங்கள் தாங்கள் பிறந்த ஊருக்குப் போய் அங்கங்கே எழுதப்பட வேண்டும் என்று கட்டளையிட்டான். ஆகையால் யோசேப்பும் மரியாளும் நாசரேத்தூரை விட்டுத் தாங்கள் பிறந்த ஊரா

தூதன் தரிசனையாகி என்ன சொன்னான்?
அவள் பெறப்போகிற பிள்ளை என்ன செய்யும் என்றான்?
யோசேப்பிடத்திலே அவருக்கு என்ன பேரிடச் சொன்னான்?
இயேசு என்பதற்குக் கருத்தென்ன?
இராயன் என்ன கட்டளையிட்டான்?
அக்காலத்திலே யோசேப்பும் மரியாளும்எங்கே இருந்தார்கள்?

Digitized by Google

கிய பெத்துலேகேமூக்குப் போய் ஒரு சத்திரத்திலே தங்கியிருக்கையில் அவள் ஒரு புத்திரனைப் பெற்றுப் புடவையினாலே மூடி அங்கே வேறே சவுக்கியமான இடம் இல்லாததினாலே பசுத்தொட்டியிலே வைத்தாள்.

௪. அப்பொழுது வயல்வெளியில் ஆட்டுமந்தைகளுக்குக் காவலாக இருந்த சில இடையருக்கு ஆகாசத்தில் மிகுந்த ஒரு ஒளி தோன்றக் கத்தருடைய தூதன் அவர்களுக்குத் தரிசனையாகி நீங்கள் பயப்படாதிருங்கள். எல்லாச் சனங்களுக்கும் உண்டாகும் மிகுந்தசந்தோஷமான செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்; அது என்னவென்றால் கத்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் இன்றைக்குப் பிறந்திருக்கிறார். அதற்கு அடையாளம் அந்தப் பிள்ளையைப் புடை

யோசேப்பும் மரியாளும் பெத்லேகேம் ஊருக்கு ஏன் போனார்கள்?
அன்றிரா அவர்கள் எங்கே தங்கினார்கள்?
கிறிஸ்து எப்படிப்பட்ட இடத்திலே பிறந்தார்?
அந்தப் பிள்ளையை எங்கே வைத்தார்கள்?
வயல்வெளியிலே நின்ற இடையர் ஆரைக் கண்டார்கள்?
தூதன் அவர்களுக்கு என்ன சொன்னான்?
அவர்களுக்கு என்னத்தை அறிவிக்கிறேன் என்று சொன்னான்?

Digitized by Google

வைகளினால் மூடிப் பசுத்தொட்டியிற் கிடத்தி யிருப்பதே என்று சொன்னான்.

௯. அப்பொழுது வேறநேக தூதர்களும் அந்தத் தூதனுடனே கூடி நின்று உன்னதங்களிலே இருக்கிற பராபரனுக்குப் புகழ்ச்சியும் பூமியிலே சமாதானமும் மனிதருக்கு நற்பிரியமும் உண்டாவதாக என்று பாடி ஆகாசமார்க்கமாய்ப் போனார்கள். உடனே அந்த இடையர் தங்கள் மந்தைகளையும் விட்டு அதிசீக்கிரமாய்ப் பெத்துலேகேம் என்றபட்டணத்துக்குப் போய் மரியாளையும் யோசேப்பையும் பசுத்தொட்டியிற் கிடத்தி இருந்த அந்தப் பிள்ளையையுங் கண்டு அதை வணங்கிக்கொண்டார்கள்.

௰. அன்றியுங் கிறிஸ்து பிறந்தாரென்பதற்கு அடையாளமாகக்கிழக்குத் திசையில் இருந்த சில சாத்திரிகளுக்கு ஒரு நட்சத்திரந் தோன்றி அந்த நட்சத்திரம் வழிகாட்டப் பிள்ளை பிறந்த இ

என்ன குறிப்புச் சொன்னான்?
தேவ தூதர் என்ன சொல்லிப் பராபரனைப் புகழ்ந்தார்கள்?
தேவ தூதர் எந்த வழியாய்ப் போனார்கள்?
இடையர் என்ன செய்தார்கள்?
பிள்ளையை வணங்கும்படிக்கு வந்ததார்?
வோ பிறந்திருக்கிறாரென்று எப்படி அறிந்தார்கள்?
த்திரிகளுக்கு வழி காட்டினதென்ன?

Digitized by Google

டத்துக்கு வந்து பொன்னையுந் தூபவருக்கத்தையும் வெள்ளைப் போளத்தையும். அதற்குக் காணிக்கையாக வைத்து வணங்கினார்கள்.

௭. பின்பு மோசேயின் நியாயப்பிரமாணப்படி தங்களைச் சுத்திகரிக்கவேண்டிய நாட்களிலே பலி செலுத்த ஒரு சோடு காட்டுப்புறாக்களையும் பராபரனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி அந்தப் பிள்ளையையுங் கொண்டு எருசலேம் பட்டணத்துக்குப் போனபொழுது சீமேயோனென்று பேர்கொண்ட தேவபத்தியும் பரிசுத்த ஆவியுமுள்ள ஒருவன் அந்த ஆவியினால் ஏவப்பட்டுத் தேவாலயத்திற்கு வந்திருந்து இந்தப் பிள்ளையைத் தேவாலயத்திலே கண்டமாத்திரத்திலே பிள்ளையைத் தனது கைகளிலே ஏந்திக்கொண்டு பராபரனைத் துதித்து ஆண்டவரே, புறத்தேசத்தார்களுக்கு அறிவைக் கொடுப்பதற்கும் உம்முடைய சனங்களாகிய இஸ்ர

அவர்கள் கொடுத்த காணிக்கை என்ன?

பிதாவும் மாதாவுஞ் சுத்திகரிக்கும்படி எங்கே போனார்கள்?

ஆரைக்கொண்டு போனார்கள்?

வேறென்னத்தைக் கொண்டுபோனார்கள்?

தேவாலயத்திலே இவர்களை ஆர் கண்டது?

அவன் தேவாலயத்துக்கு ஆருடைய ஏவுதலால் வந்தான்?

பிள்ளையைத் தன் கையில் ஏந்திக்கொண்டு என்ன சொன்னான்?

Digitized by Google

வேலருக்கு மகிமை உண்டாக்குவதற்குமான ஒளியாய் உம்மாலே எல்லாச் சனங்களுக்கு முன்பாகவும் எத்தனமாக்கப்பட்ட இரட்சகரை நான் என் கண்களாலே கண்டபடியினாலே தேவரீர் உம்முடைய வார்த்தையின்படி இப்பொழுது அடியேனைச் சமாதானத்தோடே அனுப்பிவிடுகிறீர் என்றான். அன்றியும் அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி இதோ அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு இஸ்ரவேலரில் அநேகர் விழுவதற்கும் எழுந்திருக்குதற்கும் விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாய் இருப்பதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உனது ஆத்துமாவையே ஒரு கத்தி உருவிப்போமென்றான்.

அ. ஏரோதே இராசாவோ இந்தப்பிள்ளை பிறந்த செய்தியை அறிந்து அது தனக்குச் சத்துருவாய் வருமென்று பயந்து அதைக்கொன்று

சமாதானத்தோடே அனுப்பிவிடுகிறீர் என்றதற்குக் கருத்தென்ன?
அவர் என்னத்துக்கு அடையாளமாய் இருப்பார் என்றான்?
தாய்க்கு என்ன சம்பவிக்குமென்றான்?
கத்தி உருவிப்போமென்றதின் கருத்தென்ன?
ஏரோதே இராசா இந்தப் பிள்ளையைப் பற்றி என்ன நினைத்தான்?

Digitized by Google

யோசேப்பும் மரியாளும் புத்திரனும் எகிப்த்துக்
குப் போன பாவனே.

Digitized by Google

போடும் பொருட்டாகப் பட்டணத்திலுள்ள இரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சகல பிள்ளைகளையுங் கொல்லக் கட்டளையிட்டபடியால் ஒரு தேவதூதன் மரியாளின் புருஷனாகிய யோசேப்புக்குத் தரிசனையாகி ஏரோதே பிள்ளையைக் கொல்லத் தேடுகிறான். ஆகையாற் பிள்ளையையுந்தாயையுங் கூட்டிக்கொண்டு எசிப்த்துத் தேசத்துக்கு ஓடிப்போய் நான் வந்து உனக்கு அறிவிக்கும் அளவும் அவ்விடத்திலே இரு என்று சொல்ல அவன் இராத்திரியிலே அவர்களைக் கூட்டிக்கொண்டு எசிப்த்துத் தேசத்துக்குப் போய் ஏரோதே மரணமடையும் அளவும் அங்கே இருந்து பின்பு கர்த்தருடைய தூதன் வந்து சொன்னபடி நாசரேத்தென்ற பட்டணத்துக்குத் திரும்பி வந்து அங்கே குடியிருந்தார்கள்.

௯. இயேசுநாதரவர் பூரண ஞானம் பெற்ற

ஏரோதே என்ன கட்டளை கொடுத்தான்?
கிறிஸ்துவையுங் கொன்றார்களோ?
அவர் தப்பிக்கொண்ட வகை என்ன?
தேவதூதன் அங்கே எவ்வளவு காலம் இருக்கச் சொன்னான்?
மறுபடி அவர்கள் எங்கே போனார்கள்?
ஆருடைய உத்தரவின் படி போனார்கள்?

Digitized by Google

வராயும் பரிசுத்த ஆவியினாற் பெலன்கொ
ண்டவராயும் வளர்ந்து பன்னிரண்டு வயதா
னபொழுது ஒரு நாள் யோசேப்போடும் ம
ரியாளோடும் எருசலேம் நகரிக்குப் போய் ப
ஸ்கா என்னும் பண்டிகையை ஆசரித்துத் திரு
ம்பிவருகிறபொழுது இயேசு அவ்விடத்திலே
நிற்க அவர்கள் அவர் நாசரேத்துக்குப் போகி
றவர்களுடனே கூடிப் போய்விட்டாரென்று
எண்ணி ஒரு நாட்பிரயாணம் வந்த பின்பு இன
த்தாருக்குள்ளும் அறிமுகமானவர்களுக்குள்ளு
ம் விசாரித்துத் தேடியுங் காணாமையாய் எருச
லேமுக்குத் திரும்பிவந்து மூன்று நாளைக்குப்
பின்பு தேவாலயத்திலே போதகர்களோடே
டேசிக்கொண்டு இருக்கக் கண்டார்கள். அப்
பொழுது அவருடைய தாய் அவருடனே மக
னே ஏன் இப்படிச் செய்தாய்? மூன்று நாளாக

கிறிஸ்துவுக்குப் பன்னிரண்டு வயதான பொழுது எங்கே போனார்கள்?

எருசலேமுக்கு ஏன் போனார்கள்?

கிறிஸ்துநாதர் ஆருடனே போனார்?

அவர்களுடனே திரும்பிவந்தாரோ?

அவரை ஏன் விட்டுவிட்டு வந்தார்கள்?

எத்தனை நாளாக அவரைத் தேடினார்கள்?

அவர்கள் கிறிஸ்துவைத் தேடிவரும்பொழுது தேவாலயத்திலே என்ன செய்துகொண்டிருந்தார்?

Digitized by Google

உன்னைத் தேடித் திரிகிறோமே என்றாள். அதற்கவர் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதா எனக்குக் கற்பித்தவைகளை நடப்பிக்க வேண்டும் என்று அறியீர்களோ என்று சொல்லிப் பின்பு அவர்களோடே கூட நாசரேத்தூருக்கு வந்து அவர்களுக்குக் கீழமைந்து ஞானத்திலும் தேவபத்தியிலும் வளர்ந்து பராபரனுக்கும் மனிதருக்கும் பிரியமானவராக நடந்தார்.

௰. அவர் முப்பது வயதான பொழுது சகரியா என்பவனுடைய மகனாகிய யோவானிஸ்நானன் பரிசுத்த ஆவி நிறைந்தவனாய் யோர்தான் ஆற்றங்கரைக்குச் சேர்ந்த ஊர்களில் இருக்கிறவர்களுக்குக் குணப்படுங்களென்று பிரசங்கம் பண்ணி ஞானஸ்நானமுங் கொடுத்து அவர்களுடனே நான் தண்ணீரினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப் பின்வருகிறவரோ பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களு

மரியாள் இயேசுவைக் கண்டபொழுது என்ன சொன்னாள்?
கிறிஸ்துநாதர் அவளுக்கு என்ன சொன்னார்?
யோசேப்புடனேயும் மரியாளுடனேயுங் கூடி வந்து எப்படிப்பட்டவராய் இருந்தார்?
முப்பது வயதானபொழுது அவர் ஆரிடத்திற் போனார்?
யோவான் எங்கே இருந்தான்?

Digitized by Google

க்கு ஞானஸ்நானங் கொடுப்பார் என்று இயேசு வைக் குறித்துப் பிரசித்தம்பண்ணினான்.

௰௧. அந்நாட்களிற் கிறிஸ்துநாதரும் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு வந்தார். யோவானோ அவரைப் பார்த்து உம்மிடத்தில் நான் ஞானஸ்நானம் பெறவேண்டுவதேயன்றி நீர் என்னிடத்திலே ஞானஸ்நானம் பெறவேண்டுவதில்லையே என்று சொல்ல இயேசு அவனுடனே அவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கு ஏற்றதாய் இருக்கின்றது; ஆகையால் இப்பொழுது என்னுடைய எண்ணத்துக்கு இடங்கொடு என்றார். அப்பொழுது அவன் அவருக்கு அந்த நதியிலே ஞானஸ்நானங் கொடுத்தான். இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று நதியை விட்டு ஏறினவுடனே வானந்திறக்கப்பட்டுப் பரிசுத்த ஆவி புறாவைப் போல் அவர்மேல் இறங்கினதுமன்றி இவர் நமக்கு அன்பாய் இருக்கிற நம்முடைய

ஏன் யோவானிடத்திற் போனார்?
யோவான் கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
கிறிஸ்து அதற்கு என்ன சொன்னார்?
எவ்விடத்திலே அவருக்கு ஞானஸ்நானங்கொடுத்தது?
ஞானஸ்நானங் கொடுத்து முடிந்தபொழுது சம்பவித்தது என்ன?

Digitized by Google

குமாரன், இவரிற் பிரியமாய் இருக்கிறேம் எ
ன்று வானத்தில் இருந்து சத்தம் உண்டாயி
ற்று.

௰௨. பின்பு இயேசுவானவர் பரிசுத்த ஆவி
யினாலே வனாந்தரத்திலே கொண்டு போகப்ப
ட்டு அங்கே நாற்பது நாளாய்ப் பசாசினாலே
சோதனை அடைந்து அந்நாட்களிலே ஒன்றும்
புசியாமல் இருந்ததினாலே அவருக்குப் பசியு
ண்டாயிற்று. அப்பொழுது பசாசு அவரை
நோக்கி நீ தேவகுமாரனானால் இந்தக் கல்லை
அப்பமாகச் சொல்லென்றது. அதற்கு இயேசு
வானவர் மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல
ப் பராபரனுடைய திருவாயில்இருந்து பிறக்கு
ம் எந்த வார்த்தையினாலும்பிழைப்பானென்று
எழுதியிருக்கிறதென்றார். பின்பு பசாசு அவரை
உயர்ந்த மலையின்மேற் கொண்டுபோய் ஒரு

அப்பொழுது அசரீரி என்னத்தை அறிவித்தது?
ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபின் கிறிஸ்துநாதர் வ
னாந்தரத்துக்கு ஏன் போனார்?
வனாந்தரத்தில் எவ்வளவு காலமாக நின்றார்?
அவரைச் சோதித்ததார்?
பசாசு எத்தனைவிதமாக அவரைச் சோதித்தது?
முதன் முதற் பசாசு என்ன சொன்னது?
அதற்கு அவர் மறுமொழியாக என்ன சொன்னார்?
பசாசு அவரை எங்கே கொண்டுபோயிற்று?

Digitized by Google

கணப்பொழுதிலே உலகத்தின் இராச்சியங்களை எல்லாம் அவருக்குக் காண்பித்து நீ பணிந்து என்னை வணங்கினால் இவை எல்லாவற்றையும் உனக்குக் கொடுப்பேனென்றது. அதற்கு இயேசுவானவர் உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு அவர் ஒருவரையே வணங்குவாயாகவென்று எழுதியிருக்கின்றதே, ஆகையால் நீ அகன்றுபோ என்றார். மறுபடி அவரைக்கொண்டுபோய் எருசலேமின் தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி உன்னைக்காப்பாற்றும்படி பராபரன் தம்முடைய தூதருக்குக் கட்டளையிடுவாரென்றும் உன் பாதங்கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்களென்றும் எழுதியிருக்கின்றது. ஆகையால் நீ தேவகுமாரனானால் இங்கே இருந்து தாழக் குதி என்றதற்கு அவர் பராபரனைப் பரிட்சை பாராதிருப்பாயாகவென்றுஞ் சொல்லியிருக்கின்றதென்றார். இவ்

பசாசு என்ன சொன்னது?
அதற்கு அவர் என்ன சொன்னார்?
மறுபடி எங்கே கொண்டுபோயிற்று?
என்னத்தைக் காண்பித்தது?
அங்கே என்ன சொல்லிற்று?
அவர் என்ன சொன்னார்?

Digitized by Google

விதமாய்ப் பசாசு அவரைச் சோதித்தும் அகப்படவில்லை. அப்பொழுது தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடைசெய்தார்கள்.

௰௩. பின்பு இயேசுவானவர் ஆவியினுடைய பலத்தினாலே கலிலேயா நாட்டுக்குத் திரும்பினார். அந்தத் திக்கெல்லாம் அவருடைய கீர்த்தி பரம்பிற்று. அல்லாமலும் அவர்களுடைய தேவாலயங்களில் அவர் உபதேசம்பண்ணினார். எல்லாரும் அவரைப் புகழ்ந்தார்கள்.

௰௪. அந்நாட்களிலே கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணச் சடங்கு நடந்தது. இயேசுவுந் தாயும் அவருடைய சீஷரும் அழைக்கப்பட்டு அங்கே இருந்தார்கள். அப்பொழுது முந்திரிகைப்பழரசஞ் செலவழிந்து போனதினால் இயேசுவின்தாய் அவரை நோக்கி இரசமில்லை என்றதற்கு இயேசுவானவர் அங்கே வைத்திருந்த ஆறு கற்சாடிகளிலே தண்ணீரை நிரப்புங்கள் என்று வேலைக்காரருக்குக் கற்பிக்க

பசாசு அவரை அகப்படுத்திக் கொண்டதா?
அப்பொழுது கிறிஸ்துநாதருக்குத் தொண்டுசெய்ய வந்ததார்?
...பு எங்கே போனார்?
...டைய பலத்தினாலே போனார்?
...திக்கிலே என்ன பரம்பிற்று?

Digitized by Google

இயேசுவுந் தாயாகிய மரியாளுங் கானாவூரிற் கலியாண வீட்டிற் பேசிக்கொண்டு நின்ற பாவனை.

Digitized by Google

அவர்கள் நிரப்பினார்கள். அப்பொழுது நீங்கள் இதைப் பந்திவிசாரிப்புக்காரனிடத்திற்கொண்டுபோங்களென்று அனுப்பினார். அதைப் பந்திவிசாரிப்புக்காரன் ருசிபார்த்து நல்ல ரசமென்று கண்டு மணவாளனுடனே எவனும் நல்லரசத்தை முன்பு கொடுப்பான். நீர் அதை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். இப்படியே இயேசுவானவர் கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே அற்புதங்களைச் செய்யத் தொடங்கித் தம்முடைய தேவ தத்துவத்தை வெளிப்படுத்தினார்.

௰௫. எருசலேம் பட்டணத்தில் இருந்த தேவாலயத்துக்கு போய் அவ்விடத்தில்இருந்த வியாபாரிகளையுங்காசுமாற்றுகிறவர்களையுங் கண்டு நம்முடைய பிதாவின் ஆலயத்தை வியாபாரவீடாக்காதிருங்கள் என்று சொல்லி ஒரு சவுக்கை எடுத்து அவர்களைத் துரத்திவிட்டார்.

கலிலேயாவிலே யாதொரு அற்புதஞ் செய்தாரா?
கிறிஸ்து நாதர் செய்த அற்புதங்களில் இது எத்தனையாம் அற்புதம்?
மறுபடி கலிலேயாவில் இருந்து எங்கே போனார்?
தேவாலயத்திலே ஆரைக்கண்டார்?
என்ன சொன்னார்?
எருசலேமின் தேவாலயத்திலே என்ன செய்தார்?

Digitized by Google

௰௬. நீக்கோதேமுஎன்னும் ஒரு யூதத் தலைவன் இராத்திரியில் அவரிடத்துக்குப் போய்ப் பராபரன் கூட இராதிருந்தால் ஒருவனும் நீர் செய்கிற அற்புதங்களைச் செய்யக்கூடாது ஆகையால் நீர் பராபரனிடத்தில் இருந்து வந்த போதகர் என்று அறிவோம் என்றான்.

௰௭. இயேசுவானவர் அவனை நோக்கி, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டாற் பராபரனுடைய இராச்சியத்தைப் பார்க்க மாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நீக்கோதேமு மூதுமையுள்ள ஒரு மனிதன்மறுபடியும் எப்படிப் பிறப்பான்? அவன் இரண்டாந்தரம் தன்னுடைய தாயின் வயிற்றிற் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசுவானவர் சொன்னது, ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டாற் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன். மாமிசத்தினாற் பிறப்பது மாமிச

இராத்திரியில் கிறிஸ்துவண்டை வந்ததார்?
நீக்கோதேமு கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
இயேசு அதற்கு என்ன சொன்னார்?
மறுபடியும் பிறக்கிறதாவதென்ன?

Digitized by Google

மாய் இருக்கும் ஆவியினாற் பிறப்பது ஆவியா
ய் இருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்
டும் என்று நான் உமக்குச் சொன்னதைக் குறி
த்து நீர் அதிசயப்பட வேண்டுவதில்லை. நாங்
கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி நாங்கள் கண்
டதைக் குறித்துச் சாட்சி கொடுத்துவந்தும்
நீங்கள் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிற
தில்லை. அல்லாமலும் பாம்பானது வனாந்தரத்
திலே மோசேயினாலே உயர்த்தப்பட்டதுபோ
ல் மனிதனுடைய குமாரனும் உயர்த்தப்படவே
ண்டும். அவனை விசுவாசித்துக்கொள்ளுகிறவன்
எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய
சீவனை அடையும்படிக்கு அப்படியே ஆகவே
ண்டும். என்னத்தினாலெனில், பராபரன் தம்மு
டைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவ
ன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்
திய சீவனை அடையும்படிக்கு அவரையே கொ

மாமிசத்தினாற் பிறக்கிறதின் கருத்தென்ன?
ஆவியினாற் பிறக்கிறதின் கருத்தென்ன?
மோசே வனாந்தரத்திலே என்னத்தை உயர்த்தினான்?
வெண்கலச் சருப்பத்தை என்னத்திற்காக உயர்த்தினான்?
மனிதனுடைய குமாரன் எப்படி உயர்த்தப்படுவார்?
அவரை விசுவாசிக்கிறவனுக்கு என்ன கிடைக்கும்?
நித்திய சீவனாவதென்ன?

Digitized by Google

டுத்து இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பா
ய் இருந்தார். பராபரன் உலகத்தாரை ஆக்கி
னைக்குட்படுத்தும் படிக்காக அல்ல உலகத்தா
ரை இரட்சிக்கும்படிக்காகவே தம்முடைய கு
மாரனை உலகத்தில் அனுப்பினார். அவரை விசுவா
சித்துக் கொள்ளுகிறவன் ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கப்படான். அவரை விசுவாசியாதவனே
பராபரனுடைய ஒரேபேறான குமாரனுடைய
நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவனாய் இராதப
டியால் அப்பொழுதே அவனுக்கு ஆக்கினைத்தீர்
ப்புச் செய்தாயிற்று. ஒளியானது, உலகத்தில்
வந்திருந்தும் மனிதர் தங்கள் கிரியைகள் பொ
ல்லாதவைகளாயி இருக்கிறபடியால் அந்த ஒளி
யிலும் இருளை விரும்பிக்கொண்டுவருகிறதே
ஆக்கினைத்தீர்த்தலுக்கு ஏதுவாய் இருக்கின்றது.
பொல்லாங்கைச் செய்கிற யாவனும் ஒளியை
ப் பகைக்கிறதால் தன் கிரியைகள் அதட்டப்ப
டாதபடிக்கு ஒளியிற் சேரமாட்டான். சத்தியத்

பிதாவானவர் எவ்வளவாய் உலகத்தாரில் அன்பாய் இ
ருந்தார்?
பிதாவானவர் என்னத்திற்காகக் குமாரனை உலகத்தில் அ
னுப்பினார்?
உலகத்தில வந்த ஒளி என்ன?
மனிதர்கள் இந்த ஒளியில் ஏன் வர மாட்டார்கள்?

Digitized by Google

உன்னைத் தேடித் திரிகிறோமே என்றாள். அதற்கவர் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்! என் பிதா எனக்குக் கற்பித்தவைகளை நடப்பிக்க வேண்டும் என்று அறியீர்களோ என்று சொல்லிப் பின்பு அவர்களோடே கூட நாசரேத்தூருக்கு வந்து அவர்களுக்குக் கீழமைந்து ஞானத்திலுந் தேவபத்தியிலும் வளர்ந்து பராபரனுக்கும் மனிதருக்கும் பிரியமானவராக நடந்தார்.

௰. அவர் முப்பது வயதான பொழுது சகரியா என்பவனுடைய மகனாகிய யோவானிஸ்நானன் பரிசுத்த ஆவி நிறைந்தவனாய் யோர்தான் ஆற்றங்கரைக்குச் சேர்ந்த ஊர்களில் இருக்கிறவர்களுக்குக் குணப்படுங்களென்று பிரசங்கம் பண்ணி ஞானஸ்நானமுங் கொடுத்து அவர்களுடனே நான் தண்ணீரினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப் பின்வருகிறவரோ பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களு

மரியாள் இயேசுவைக் கண்டபொழுது என்ன சொன்னாள்?
கிறிஸ்துநாதர் அவளுக்கு என்ன சொன்னார்?
யோசேப்புடனேயும் மரியாளுடனேயுங் கூடி வந்து எப்படிப்பட்டவராய் இருந்தார்?
முப்பது வயதானபொழுது அவர் ஆரிடத்திற் போனார்?
யோவான் எங்கே இருந்தான்?

க்கு ஞானஸ்நானங் கொடுப்பார் என்று இயேசுவைக் குறித்துப் பிரசித்தம்பண்ணினான்.

௰௩. அந்நாட்களிற் கிறிஸ்துநாதரும் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு வந்தார். யோவானோ அவரைப் பார்த்து உம்மிடத்தில் நான் ஞானஸ்நானம் பெற வேண்டுவதேயன்றி நீர் என்னிடத்திலே ஞானஸ்நானம் பெற வேண்டுவதில்லையே என்று சொல்ல இயேசு அவனுடனே அவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கு ஏற்றதாய் இருக்கிறது; ஆகையால் இப்பொழுது என்னுடைய எண்ணத்துக்கு இடங்கொடு என்றார். அப்பொழுது அவன் அவருக்கு அந்த நதியிலே ஞானஸ்நானங் கொடுத்தான். இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று நதியை விட்டு ஏறினவுடனே வானந்திறக்கப்பட்டுப் பரிசுத்த ஆவி புறாவைப் போல் அவர்மேல் இறங்கினதுமன்றி இவர் நமக்கு அன்பாய் இருக்கிற நம்முடைய

என் யோவானிடத்திற் போனார்?
யோவான் கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
கிறிஸ்து அதற்கு என்ன சொன்னார்?
எவ்விடத்திலே அவருக்கு ஞானஸ்நானங்கொடுத்தது?
ஞானஸ்நானங் கொடுத்து முடிந்தபொழுது சம்பவித்தது என்ன?

Digitized by Google

குமாரன், இவரிற் பிரியமாய் இருக்கிறேம் எ
ன்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயி
ற்று.

௰௨. பின்பு இயேசுவானவர் பரிசுத்த ஆவி
யினாலே வனாந்தரத்திலேகொண்டு போகப்ப
ட்டு அங்கே நாற்பது நாளாய்ப் பசாசினாலே
சோதனை அடைந்து அந்நாட்களிலே ஒன்றும்
புசியாமல் இருந்ததினாலே அவருக்குப் பசியு
ண்டாயிற்று. அப்பொழுது பசாசு அவரை
நோக்கி நீ தேவகுமாரனானால் இந்தக் கல்லை
அப்பமாகச் சொல்லென்றது. அதற்கு இயேசு
வானவர் மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல
ப் பராபரனுடைய திருவாயில்இருந்து பிறக்கு
ம் எந்த வார்த்தையினாலும்பிழைப்பானென்று
எழுதியிருக்கிறதென்றார். பின்பு பசாசு அவரை
உயர்ந்த மலையின்மேற் கொண்டுபோய் ஒரு

அப்பொழுது அசரீரி என்னத்தை அறிவித்தது?
ஞானஸ்நானம்பெற்றுக்கொண்டபின் கிறிஸ்துநாதர் வ
னாந்தரத்துக்கு ஏன் போனார்?
வனாந்தரத்தில் எவ்வளவு காலமாக நின்றார்?
அவரைச் சோதித்தார்?
பசாசு எத்தனைவிதமாக அவரைச் சோதித்தது?
முதன் முதற் பசாசு என்ன சொன்னது?
அதற்கு அவர் மறுமொழியாக என்ன சொன்னார்?
பின்புபசாசு அவரை எங்கே கொண்டுபோயிற்று?

Digitized by Google

கணப்பொழுதிலே உலகத்தின் இராச்சியங்களை எல்லாம் அவருக்குக் காண்பித்து நீ பணிந்து என்னை வணங்கினால் இவை எல்லாவற்றையும் உனக்குக் கொடுப்பேனென்றது. அதற்கு இயேசுவானவர் உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு அவர் ஒருவரையே வணங்குவாயாகவென்று எழுதியிருக்கின்றதே, ஆகையால் நீ அகன்றுபோ என்றார். மறுபடி அவரைக்கொண்டுபோய் எருசலேமின் தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி உன்னைக்காப்பாற்றும்படி பராபரன் தம்முடைய தூதருக்குக் கட்டளையிடுவாரென்றும் உன் பாதங்கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்களென்றும் எழுதியிருக்கின்றது. ஆகையால் நீ தேவகுமாரனானால் இங்கே இருந்து தாழக் குதி என்றதற்கு அவர் பராபரனைப் பரிட்சை பாராதிருப்பாயாகவென்றுஞ் சொல்லியிருக்கின்றதென்றார். இவ்

பசாசு என்ன சொன்னது?
அதற்கு அவர் என்ன சொன்னார்?
மறுபடி எங்கே கொண்டுபோயிற்று?
என்னத்தைக் காண்பித்தது?
அங்கே என்ன சொல்லிற்று?
அவர் என்ன சொன்னார்?

Digitized by Google

விதமாய்ப் பசாசு அவரைச் சோதித்தும் அகப்படவில்லை. அப்பொழுது தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடைசெய்தார்கள்.

௰௩. பின்பு இயேசுவானவர் ஆவியினுடைய பலத்தினாலே கலிலேயா நாட்டுக்குத் திரும்பினார். அந்தத் திக்கெல்லாம் அவருடைய கீர்த்தி பரம்பிற்று. அல்லாமலும் அவர்களுடைய தேவாலயங்களில் அவர் உபதேசம்பண்ணினார். எல்லாரும் அவரைப் புகழ்ந்தார்கள்.

௰௪. அந்நாட்களிலே கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணச் சடங்கு நடந்தது. இயேசுவுந் தாயும் அவருடைய சீஷரும் அழைக்கப்பட்டு அங்கே இருந்தார்கள். அப்பொழுது முந்திரிகைப்பழரசஞ் செலவழிந்து போனதினால் இயேசுவின்தாய் அவரை நோக்கி இரசமில்லை என்றதற்கு இயேசுவானவர் அங்கே வைத்திருந்த ஆறு கற்சாடிகளிலே தண்ணீரை நிரப்புங்கள் என்று வேலைக்காரருக்குக் கற்பிக்க

பசாசு அவரை அகப்படுத்திக் கொண்டதா?
அப்பொழுது கிறிஸ்துநாதருக்குத் தொண்டுசெய்ய வந்ததார்?
பின்பு எங்கே போனார்?
…னுடைய பலத்தினாலே போனார்?
…த்திக்கிலே என்ன பரம்பிற்று?

Digitized by Google

இயேசுவுந் தாயாகிய மரியாளுங் கானாவூரிற் கலியாண வீட்டிற்
பேசிக்கொண்டு நின்ற பாவனை.

அவர்கள் நிரப்பினார்கள். அப்பொழுது நீங்கள் இதைப் பந்திவிசாரிப்புக்காரனிடத்திற்கொண்டுபோங்களென்று அனுப்பினார். அதைப் பந்திவிசாரிப்புக்காரன் உருசிபார்த்து நல்ல ரசமென்று கண்டு மணவாளனுடனே எவனும் நல்லரசத்தை முன்பு கொடுப்பான். நீர் அதை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். இப்படியே இயேசுவானவர் கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே அற்புதங்களைச் செய்யத் தொடங்கித் தம்முடைய தேவ தத்துவத்தை வெளிப்படுத்தினார்.

௰௫. எருசலேம் பட்டணத்தில் இருந்த தேவாலயத்துக்கு போய் அவ்விடத்திலிருந்த வியாபாரிகளையுங்காசுமாற்றுகிறவர்களையுங் கண்டு நம்முடைய பிதாவின் ஆலயத்தை வியாபாரவீடாக்காதிருங்கள் என்று சொல்லி ஒரு சவுக்கை எடுத்து அவர்களைத் துரத்திவிட்டார்.

கலிலேயாவிலே யாதொரு அற்புதஞ் செய்தாரா?
கிறிஸ்து நாதர் செய்த அற்புதங்களில் இது எத்தனையாம் அற்புதம்?
மறுபடி கலிலேயாவில் இருந்து எங்கே போனார்?
தேவாலயத்திலே ஆரைக்கண்டார்?
என்ன சொன்னார்?
எருசலேமின் தேவாலயத்திலே என்ன செய்தார்?

யண. நிக்கோதேமு என்னும் ஒரு யூதத் தலைவன் இராத்திரியில் அவரிடத்துக்குப் போய்ப் பராபரன் கூட இராதிருந்தால் ஒருவனும் நீர் செய்கிற அற்புதங்களைச் செய்யக்கூடாது ஆகையால் நீர் பராபரனிடத்தில் இருந்து வந்த போதகர் என்று அறிவோம் என்றான்.

யள. இயேசுவானவர் அவனை நோக்கி, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்தைப் பார்க்க மாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கோதேமு முதுமையுள்ள ஒரு மனிதன் மறுபடியும் எப்படிப் பிறப்பான்? அவன் இரண்டாந்தரம் தன்னுடைய தாயின் வயிற்றிற் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசுவானவர் சொன்னது, ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன். மாமிசத்தினாற் பிறப்பது மாமிச

இராத்திரியில் கிறிஸ்துவண்டை வந்ததார்?
நிக்கோதேமு கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
இயேசு அதற்கு என்ன சொன்னார்?
மறுபடியும் பிறக்கிறதாவதென்ன?

Digitized by Google

மாய் இருக்கும் ஆவியினாற் பிறப்பது ஆவியாய் இருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உமக்குச் சொன்னதைக் குறித்து நீர் அதிசயப்பட வேண்டுவதில்லை. நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுத்துவந்தும் நீங்கள் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அல்லாமலும் பாம்பானது வனாந்தரத்திலே மோசேயினாலே உயர்த்தப்பட்டதுபோல மனிதனுடைய குமாரனும் உயர்த்தப்படவேண்டும். அவனை விசுவாசித்துக்கொள்ளுகிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அப்படியே ஆகவேண்டும். என்னத்தினாலெனில், பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவரையே கொ

மாமிசத்தினாற் பிறக்கிறதின் கருத்தென்ன?
ஆவியினாற் பிறக்கிறதின் கருத்தென்ன?
மோசே வனாந்தரத்திலே என்னத்தை உயர்த்தினான்?
வெண்கலச் சருப்பத்தை என்னத்திற்காக உயர்த்தினான்?
மனிதனுடைய குமாரன் எப்படி உயர்த்தப்படுவார்?
அவரை விசுவாசிக்கிறவனுக்கு என்ன கிடைக்கும்?
நித்திய சீவனாவதென்ன?

Digitized by Google

டுத்து இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாய் இருந்தார். பராபரன் உலகத்தாரை ஆக்கினைக்குட்படுத்தும் படிக்காக அல்ல உலகத்தாரை இரட்சிக்கும்படிக்காகவே தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பினார். அவரை விசுவாசித்துக் கொள்ளுகிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். அவரை விசுவாசியாதவனே பராபரனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவனாய் இராதபடியால் அப்பொழுதே அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்புச் செய்தாயிற்று. ஒளியானது, உலகத்தில் வந்திருந்தும் மனிதர் தங்கள் கிரியைகள் பொல்லாதவைகளாய், இருக்கிறபடியால் அந்த ஒளியிலும் இருளை விரும்பிக்கொண்டுவருகிறதே ஆக்கினைத்தீர்த்தலுக்கு ஏதுவாய் இருக்கின்றது: பொல்லாங்கைச் செய்கிற யாவனும் ஒளியைப் பகைக்கிறதால் தன் கிரியைகள் அதட்டப்படாதபடிக்கு ஒளியிற் சேரமாட்டான். சத்தியத்

பிதாவானவர் எவ்வளவாய் உலகத்தாரில் அன்பாய் இருந்தார்?

பிதாவானவர் என்னத்திற்காகக் குமாரனை உலகத்தில் அனுப்பினார்?

உலகத்தில வந்த ஒளி என்ன?

மனிதர்கள் இந்த ஒளியில் ஏன் வர மாட்டார்கள்?

Digitized by Google

உன்னைத் தேடித் திரிகிறோமே என்றாள். அதற்கவர் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதா எனக்குக் கற்பித்தவைகளை நடப்பிக்க வேண்டும் என்று அறியீர்களோ என்று சொல்லிப் பின்பு அவர்களோடே கூட நாசரேத்தூருக்கு வந்து அவர்களுக்குக் கீழமைந்து ஞானத்திலுந் தேவபத்தியிலும் வளர்ந்து பராபரனுக்கும் மனிதருக்கும் பிரியமானவராக நடந்தார்.

௰. அவர் முப்பது வயதான பொழுது சகரியா என்பவனுடைய மகனாகிய யோவானிஸ்நானன் பரிசுத்த ஆவி நிறைந்தவனாய் யோர்தான் ஆற்றங்கரைக்குச் சேர்ந்த ஊர்களில் இருக்கிறவர்களுக்குக் குணப்படுங்களென்று பிரசங்கம் பண்ணி ஞானஸ்நானமுங் கொடுத்து அவர்களுடனே நான் தண்ணீரினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப் பின்வருகிறவரோ பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களு

மரியாள் இயேசுவைக் கண்டபொழுது என்ன சொன்னாள்?
கிறிஸ்துநாதர் அவளுக்கு என்ன சொன்னார்?
யோசேப்புடனேயும் மரியாளுடனேயுங் கூடி வந்து எப்படிப்பட்டவராய் இருந்தார்?
முப்பது வயதானபொழுது அவர் ஆரிடத்திற் போனார்?
யோவான் எங்கே இருந்தான்?

Digitized by Google

க்கு ஞானஸ்நானங் கொடுப்பார் என்று இயேசு வைக் குறித்துப் பிரசித்தம்பண்ணினான்.

௰௩. அந்நாட்களிற் கிறிஸ்துநாதரும் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு வந்தார். யோவானோ அவரைப் பார்த்து உம்மிடத்தில் நான் ஞானஸ்நானம் பெறவேண்டுவதேயன்றி நீர் என்னிடத்திலே ஞானஸ்நானம் பெறவேண்டுவதில்லையே என்று சொல்ல இயேசு அவனுடனே அவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கு ஏற்றதாய் இருக்கிறது; ஆகையால் இப்பொழுது என்னுடைய எண்ணத்துக்கு இடங்கொடு என்றார். அப்பொழுது அவன் அவருக்கு அந்த நதியிலே ஞானஸ்நானங் கொடுத்தான். இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று நதியைவிட்டு ஏறினவுடனே வானந்திறக்கப்பட்டுப் பரிசுத்த ஆவி புறாவைப் போல் அவர்மேல் இறங்கினதுமன்றி இவர் நமக்கு அன்பாய் இருக்கிற நம்முடைய

என் யோவானிடத்திற் போனார்?
யோவான் கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
கிறிஸ்து அதற்கு என்ன சொன்னார்?
எவ்விடத்திலே அவருக்கு ஞானஸ்நானங்கொடுத்தது?
ஞானஸ்நானங் கொடுத்து முடிந்தபொழுது சம்பவித்தது என்ன?

Digitized by Google

குமாரன், இவரிற் பிரியமாய் இருக்கிறேன் எ
ன்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயி
ற்று.

௰௨. பின்பு இயேசுவானவர் பரிசுத்த ஆவி
யினாலே வனாந்தரத்திலே கொண்டு போகப்ப
ட்டு அங்கே நாற்பது நாளாய்ப் பசாசினாலே
சோதனை அடைந்து அந்நாட்களிலே ஒன்றும்
புசியாமல் இருந்ததினாலே அவருக்குப் பசியு
ண்டாயிற்று. அப்பொழுது பசாசு அவரை
நோக்கி நீ தேவகுமாரனானால் இந்தக் கல்லை
அப்பமாகச் சொல்லென்றது. அதற்கு இயேசு
வானவர் மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல
ப் பராபரனுடைய திருவாயில்இருந்து பிறக்கு
ம் எந்த வார்த்தையினாலும்பிழைப்பானென்று
எழுதியிருக்கிறதென்றார். பின்பு பசாசு அவரை
உயர்ந்த மலையின்மேற் கொண்டுபோய் ஒரு

அப்பொழுது அசரீரி என்னத்தை அறிவித்தது?
ஞானஸ்நானம்பெற்றுக்கொண்டபின் கிறிஸ்துநாதர் வ
னாந்தரத்துக்கு ஏன் போனார்?
வனாந்தரத்தில் எவ்வளவு காலமாக நின்றார்?
அவரைச் சோதித்ததார்?
பசாசு எத்தனைவிதமாக அவரைச் சோதித்தது?
முதன் முதற் பசாசு என்ன சொன்னது?
அதற்கு அவர் மறுமொழியாக என்ன சொன்னார்?
பின்புபசாசு அவரை எங்கே கொண்டுபோயிற்று?

Digitized by Google

கணப்பொழுதிலே உலகத்தின் இராச்சியங்களை எல்லாம் அவருக்குக் காண்பித்து நீ பணிந்து என்னை வணங்கினால் இவை எல்லாவற்றையும் உனக்குக் கொடுப்பேனென்றது. அதற்கு இயேசுவானவர் உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு அவர் ஒருவரையே வணங்குவாயாகவென்று எழுதியிருக்கின்றதே, ஆகையால் நீ அகன்றுபோ என்றார். மறுபடி அவரைக்கொண்டுபோய் எருசலேமின் தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி உன்னைக்காப்பாற்றும்படி பராபரன் தம்முடைய தூதருக்குக் கட்டளையிடுவாரென்றும் உன் பாதங்கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்களென்றும் எழுதியிருக்கின்றது. ஆகையால் நீ தேவகுமாரனானால் இங்கே இருந்து தாழக் குதி என்றதற்கு அவர் பராபரனைப் பரிட்சை பாராதிருப்பாயாகவென்றுஞ் சொல்லியிருக்கின்றதென்றார். இவ்

பசாசு என்ன சொன்னது?
அதற்கு அவர் என்ன சொன்னார்?
மறுபடி எங்கே கொண்டுபோயிற்று?
என்னத்தைக் காண்பித்தது?
அங்கே என்ன சொல்லிற்று?
அவர் என்ன சொன்னார்?

Digitized by Google

விதமாய்ப் பசாசு அவரைச் சோதித்தும் அகப்படவில்லை. அப்பொழுது தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடைசெய்தார்கள்.

௰௩. பின்பு இயேசுவானவர் ஆவியினுடைய பலத்தினாலே கலிலேயா நாட்டுக்குத் திரும்பினார். அந்தத் திக்கெல்லாம் அவருடைய கீர்த்தி பரம்பிற்று. அல்லாமலும் அவர்களுடைய தேவாலயங்களில் அவர் உபதேசம்பண்ணினார். எல்லாரும் அவரைப் புகழ்ந்தார்கள்.

௰௪. அந்நாட்களிலே கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணச் சடங்கு நடந்தது. இயேசுவுந் தாயும் அவருடைய சீஷரும் அழைக்கப்பட்டு அங்கே இருந்தார்கள். அப்பொழுது முந்திரிகைப்பழரசஞ் செலவழிந்து போனதினால் இயேசுவின்தாய் அவரை நோக்கி இரசமில்லை என்றதற்கு இயேசுவானவர் அங்கே வைத்திருந்த ஆறு கற்சாடிகளிலே தண்ணீரை நிரப்புங்கள் என்று வேலைக்காரருக்குக் கற்பிக்க

பசாசு அவரை அகப்படுத்திக் கொண்டதா?
அப்பொழுது கிறிஸ்துநாதருக்குத் தொண்டுசெய்ய வந்ததார்?
பின்பு எங்கே போனார்?
ஆருடைய பலத்தினாலே போர்?
அந்தத்திக்கிலே என்ன பரம்பிற்று?

Digitized by Google

இயேசுவுந் தாயாகிய மரியாளுங் கானாவூரிற் கலியாண வீட்டிற்
பேசிக்கொண்டு நின்ற பாவனை.

Digitized by Google

அவர்கள் நிரப்பினார்கள். அப்பொழுது நீங்கள் இதைப் பந்திவிசாரிப்புக்காரனிடத்திற்கொண்டுபோங்களென்று அனுப்பினார். அதைப் பந்திவிசாரிப்புக்காரன் உருசிபார்த்து நல்ல ரசமென்று கண்டு மணவாளனுடனே எவனும் நல்லரசத்தை முன்பு கொடுப்பான். நீர் அதை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். இப்படியே இயேசுவானவர் கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே அற்புதங்களைச் செய்யத் தொடங்கித் தம்முடைய தேவ தத்துவத்தை வெளிப்படுத்தினார்.

௰௫. எருசலேம் பட்டணத்தில் இருந்த தேவாலயத்துக்கு போய் அவ்விடத்தில்இருந்த வியாபாரிகளையுங்காசுமாற்றுகிறவர்களையுங் கண்டு நம்முடைய பிதாவின் ஆலயத்தை வியாபாரவீடாக்காதிருங்கள் என்று சொல்லி ஒரு சவுக்கை எடுத்து அவர்களைத் துரத்திவிட்டார்.

கலிலேயாவிலே யாதொரு அற்புதஞ் செய்தாரா?
கிறிஸ்து நாதர் செய்த அற்புதங்களில் இது எத்தனையாம் அற்புதம்?
மறுபடி கலிலேயாவில் இருந்து எங்கே போனார்?
தேவாலயத்திலே ஆரைக்கண்டார்?
என்ன சொன்னார்?
எருசலேமின் தேவாலயத்திலே என்ன செய்தார்?

Digitized by Google

௰௨. நிக்கோதேமு என்னும் ஒரு யூதத் தலைவன் இராத்திரியில் அவரிடத்துக்குப் போய்ப் பராபரன் கூட இராதிருந்தால் ஒருவனும் நீர் செய்கிற அற்புதங்களைச் செய்யக்கூடாது ஆகையால் நீர் பராபரனிடத்தில் இருந்து வந்த போதகர் என்று அறிவோம் என்றான்.

௰௩. இயேசுவானவர் அவனை நோக்கி, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்தைப் பார்க்க மாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கோதேமு முதுமையுள்ள ஒரு மனிதன் மறுபடியும் எப்படிப் பிறப்பான்? அவன் இரண்டாந்தரம் தன்னுடைய தாயின் வயிற்றில் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசுவானவர் சொன்னது, ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன். மாமிசத்தினால் பிறப்பது மாமிச

இராத்திரியில் கிறிஸ்துவண்டை வந்ததார்?
நிக்கோதேமு கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
இயேசு அதற்கு என்ன சொன்னார்?
மறுபடியும் பிறக்கிறதாவதென்ன?

Digitized by Google

மாய் இருக்கும் ஆவியினாற் பிறப்பது ஆவியா
ய் இருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்
டும் என்று நான் உமக்குச் சொன்னதைக் குறி
த்து நீர் அதிசயப்பட வேண்டுவதில்லை. நாங்
கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி நாங்கள் கண்
டதைக் குறித்துச் சாட்சி கொடுத்துவந்தும்
நீங்கள் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிற
தில்லை. அல்லாமலும் பாம்பானது வனாந்தரத்
திலே மோசேயினாலே உயர்த்தப்பட்டதுபோ
ல மனிதனுடைய குமாரனும் உயர்த்தப்படவே
ண்டும். அவனை விசுவாசித்துக்கொள்ளுகிறவன்
எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய
சீவனை அடையும்படிக்கு அப்படியே ஆகவே
ண்டும். என்னத்தினாலெனில், பராபரன் தம்மு
டைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவ
ன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்
திய சீவனை அடையும்படிக்கு அவரையே கொ

மாமிசத்தினாற் பிறக்கிறதின் கருத்தென்ன?
ஆவியினாற் பிறக்கிறதின் கருத்தென்ன?
மோசே வனாந்தரத்திலே என்னத்தை உயர்த்தினான்?
வெண்கலச் சருப்பத்தை என்னத்திற்காக உயர்த்தினான்?
மனிதனுடைய குமாரன் எப்படி உயர்த்தப்படுவார்?
அவரை விசுவாசிக்கிறவனுக்கு என்ன கிடைக்கும்?
நித்திய சீவனாவதென்ன?

Digitized by Google

டுத்து இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பா
ய் இருந்தார். பராபரன் உலகத்தாரை ஆக்கி
னைக்குட்படுத்தும் படிக்காக அல்ல உலகத்தா
ரை இரட்சிக்கும்படிக்காகவே தம்முடைய கு
மாரனை உலகத்தில் அனுப்பினார். அவரை விசுவா
சித்துக் கொள்ளுகிறவன் ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கப்படான். அவரை விசுவாசியாதவனோ
பராபரனுடைய ஒரேபேறான குமாரனுடைய
நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவனாய் இராதப
டியால் அப்பொழுதே அவனுக்கு ஆக்கினைத்தீர்
ப்புச் செய்தாயிற்று. ஒளியானது, உலகத்தில்
வந்திருந்தும் மனிதர் தங்கள் கிரியைகள் பொ
ல்லாதவைகளாய் இருக்கிறபடியால் அந்த ஒளி
யிலும் இருளை விரும்பிக்கொண்டுவருகிறதே
ஆக்கினைத்தீர்த்தலுக்கு ஏதுவாய் இருக்கின்றது.
பொல்லாங்கைச் செய்கிற யாவனும் ஒளியை
ப் பகைக்கிறதால் தன் கிரியைகள் அதட்டப்ப
டாதபடிக்கு ஒளியிற் சேரமாட்டான். சத்தியத்

பிதாவானவர் எவ்வளவாய் உலகத்தாரில் அன்பாய் இருந்தார்?

பிதாவானவர் என்னத்திற்காகக் குமாரனை உலகத்தில் அனுப்பினார்?

உலகத்தில் வந்த ஒளி என்ன?

மனிதர்கள் இந்த ஒளியில் ஏன் வரமாட்டார்கள்?

Digitized by Google

தைச் செய்கிறவனே தன் கிரியைகளைப் பரா பரனுடைய சித்தத்தின்படி செய்கிறபடியினு லே அவைகள் வெளியாகும்படிக்கு ஒளியிலே சேருகிறுன் என்றார்.

யஅ. இயேசுவானவர் கலிலேயா நாட்டின் க டலருகே போகையில் வலைவீசிக்கொண்டிரு ந்த பேதுரு என்னப்பட்ட சீமோனையும் அவ ன் சகோதரன் அந்திரேயாவையுங் கண்டு அவ ர்களுடனே என் பின்னே வாருங்கள். உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளைப் போட்டுவிட்டு அவரைப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுப் போகையில் யாக்கோபும் யோவானு ந் தங்கள் தகப்பன் செபேதேயுவினுடனே ப டகில் இருந்து தங்கள் வலைகளைப் புரைந்துகொ

பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எப்படி நடப்பான்?

கலிலேயாக் கடற்கரையிலே போகையிற் கிறிஸ்துநாதர் ஆரைக் கண்டார்?

அவர்களுக்கு என்ன சொன்னார்?

மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவோம் என்பதின் கருத் தென்ன?

அவர்கள் என்ன செய்தார்கள்?

அவ்விடம் விட்டுப்போகையிற் கிறிஸ்துநாதர் வேறு ரைக் கண்டார்?

ண்டிருக்கிறதைக் கண்டு அவர்களையும் அழைத்தார். உடனே அவர்களுந் தங்கள் தகப்பனையும் படகையும் விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

௰௯. இயேசுவானவர் கலிலேயா நாடெங்குஞ் சுற்றிப் பரலோக இராச்சியஞ் சமீபித்ததென்று பிரசங்கித்துவரும் நாட்களில் ஒருநாள் ஒரு தேவாலயத்துக்குப் போனார். பசாசு பிடித்தவன் ஒருவன் அவரைக் கண்டு நாசரேத்தூராகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன எங்களைக்கெடுக்க வந்தீரோ? நீர் பராபரனுடைய பரிசுத்தர் என்று அறிவேனென்று குரலையிட்டான். இயேசுவானவர் நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று அவனுக்குள்ளே இருந்த ஆவியை அதட்டினார். அப்பொழுது அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து மிகுந்த சத்தமிட்டுக்கொ

ஆர் என்னத்தை விட்டு அவரைப் பின்சென்றார்கள்?
கிறிஸ்து எங்கே சுற்றித் திரிந்தார்?
என்னென்ன பிரசங்கித்தார்?
ஒருநாள் தேவாலயத்திலே ஆரைக் கண்டார்?
பசாசுபிடித்தவன் கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
அவர் என்ன செய்தார்?

Digitized by Google

ண்டு புறப்பட்டது.

௨௰. ஒரு திமிர்வாதக்காரனைப்படுக்கையோ டே எடுத்துவந்து சன நெருக்கத்தினாலே அவனை உள்ளே கொண்டுபோக வகை காணாமல் வீட்டின்மேல் ஏறித் தட்டோடுகளைக்கழற்றி அவ்வழியாய் இயேசுவுக்கு முன்பாக இறங்கினார்கள். அவர்களுடைய விசுவாசத்தை இயேசு கண்டு மனிதனே, உன் பாவங்கள் உனக்குமன்னிக்கப் பட்டன என்றார். அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணித் தேவதூஷணங்களைச் சொல்லுகிற இவன் யாவன்? பராபரன் ஒருவரே தவிரப் பாவங்களை மன்னிக்கத் திராணியுள்ளவர் ஆர் என்றார்கள். இயேசு அவர்களுடைய ஆலோசனையை அறிந்து நீங்கள் சிந்திக்கிறதென்ன? பூமி

அவனில் இருந்த அசுத்த ஆவி என்ன செய்தது?
திமிர்வாதக்காரனைச் சனங்கள் கிறிஸ்துவிடத்தில் எந்த வழியாய்க் கொண்டுபோனார்கள்?
ஏன் வாசல்வழியாய்க் கொண்டு போகவில்லை?
கிறிஸ்துநாதர் அவர்களிடத்தில் என்னத்தைக் கண்டார்?
கிறிஸ்துநாதர் அவனுக்கு என்ன செய்தார்?
வேதபாரகரும் பரிசேயருந் தங்களுக்குள் என்ன சிந்தித்தார்கள்?
மனிதருடைய சிந்தனை கிறிஸ்துநாதருக்கு எப்படி விளங்கும்?

Digitized by Google

யிலே பாவங்களை மன்னிக்கிறதற்குப் பராபர
னுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்று
சொல்லித் திமிர்வாதக்காரனை நோக்கி நீ எழு
ந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன்
வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் அ
வர்களுக்கு முன்பாக எழுந்திருந்து தன்படுக்
கையையும் எடுத்துக்கொண்டு பராபரனைப் பு
கழ்ந்து தன் வீட்டுக்குப் போனான்.

௨௧. அதின் பின்பு ஆயத்துறையில் இருந்த
மத்தேயு என்று பேர்கொண்ட ஒரு ஆயக்கார
னைக் கண்டு நீ என்னைப் பின்சென்று வாவென்
று சொல்ல அவன் பின்சென்று அவரை அழை
த்துக்கொண்டுபோய்த் தன் வீட்டிலே ஒரு
பெரிய விருந்துபண்ணினான். அவர் அங்கே அ
நேக ஆயக்காரரோடும் பாவிகளோடும் பந்தி
யிருக்கையில் அவ்விடத்து வேதபாரகரும் பரி

கிறிஸ்துநாதர் திமிர்வாதக்காரனுக்கு என்ன சொன்னார்?
திமிர்வாதக்காரன் போம்போது ஆரைப் புகழ்ந்து வீட்டுக்குப் போனான்?
பின்பு கிறிஸ்துநாதர் ஆரைக் கண்டார்?
மத்தேயுவின் தொழில் என்ன? [னானே?
அவன் கிறிஸ்துவை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போ
தன் வீட்டிலே என்ன செய்தான்?
கிறிஸ்துநாதர் ஆருடனே பந்தியிருந்தார்?

Digitized by Google

ண்டு புறப்பட்டது.

உ௰. ஒரு திமிர்வாதக்காரனைப்படுக்கையோடே எடுத்துவந்து சன நெருக்கத்தினாலே அவனை உள்ளே கொண்டுபோக வகை காணாமல் வீட்டின்மேல் ஏறித் தட்டோடுகளைக்கழற்றி அவ்வழியாய் இயேசுவுக்கு முன்பாக இறங்கினார்கள். அவர்களுடைய விசுவாசத்தை இயேசு கண்டு மனிதனே, உன் பாவங்கள் உனக்குமன்னிக்கப் பட்டன என்றார். அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணித் தேவதூஷணங்களைச் சொல்லுகிற இவன் யாவன்? பராபரன் ஒருவரே தவிரப் பாவங்களை மன்னிக்கத் திராணியுள்ளவர் ஆர் என்றார்கள். இயேசு அவர்களுடைய ஆலோசனையை அறிந்து நீங்கள் சிந்திக்கிறதென்ன? பூமி

அவனில் இருந்த அசுத்த ஆவி என்ன செய்தது?
திமிர்வாதக்காரனைச் சனங்கள் கிறிஸ்துவிடத்தில் எந்த வழியாய்க் கொண்டுபோனார்கள்?
ஏன் வாசல்வழியாய்க் கொண்டு போகவில்லை?
கிறிஸ்துநாதர் அவர்களிடத்தில் என்னத்தைக் கண்டார்?
கிறிஸ்துநாதர் அவனுக்கு என்ன செய்தார்?
வேதபாரகரும் பரிசேயருந் தங்களுக்குள் என்ன சிந்தித்தார்கள்?
மனிதருடைய சிந்தனை கிறிஸ்துநாதருக்கு எப்படி விளங்கும்?

Digitized by Google

யிலே பாவங்களை மன்னிக்கிறதற்குப் பராபர
னுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்று
சொல்லித் திமிர்வாதக்காரனை நோக்கி நீ எழு
ந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன்
வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் அ
வர்களுக்கு முன்பாக எழுந்திருந்து தன்படுக்
கையையும் எடுத்துக்கொண்டு பராபரனைப் பு
கழ்ந்து தன் வீட்டுக்குப் போனான்.

௨௧. அதின் பின்பு ஆயத்துறையில் இருந்த
மத்தேயு என்று பேர்கொண்ட ஒரு ஆயக்கார
னைக் கண்டு நீ என்னைப் பின்சென்று வாவென்
று சொல்ல அவன் பின்சென்று அவரை அழை
த்துக்கொண்டுபோய்த் தன் வீட்டிலே ஒரு
பெரிய விருந்துபண்ணினான். அவர் அங்கே அ
நேக ஆயக்காரரோடும் பாவிகளோடும் பந்தி
யிருக்கையில் அவ்விடத்து வேதபாரகரும் பரி

கிறிஸ்துநாதர் திமிர்வாதக்காரனுக்கு என்ன சொன்னார்?
திமிர்வாதக்காரன் போம்போது ஆரைப் புகழ்ந்து வீட்டுக்குப் போனான்?
பின்பு கிறிஸ்துநாதர் ஆரைக் கண்டார்?
மத்தேயுவின் தொழில் என்ன? [னானோ?
அவன் கிறிஸ்துவை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போ
தன் வீட்டிலே என்ன செய்தான்?
கிறிஸ்துநாதர் ஆருடனே பந்தியிருந்தார்?

Digitized by Google

சேயரும் நீங்கள் என் ஆயக்காரரோடும் பாவி
களோடும் போசனம்பண்ணுகிறீர்கள் என்று
மொறுமொறுத்தார்கள்? அதற்கு இயேசுவான
வர் வியாதியுள்ளவர்களுக்கு வயித்தியன் வேண்
டுவதல்லாமற் சொஸ்தமுள்ளவர்களுக்கு வேண்
டுவதில்லை. நீதிமான்களையல்லப் பாவிகளைக்கு
ணப்படுதலுக்கு அழைக்க வந்தேன் என்றார்.

௨௨. அதின் பின்பு இயேசுவானவர் எருசலே
முக்குப் போனார். அங்கே ஒரு குளம் இருந்த
து. சிலவேளைகளில் ஒரு தேவதூதன் அதில் இற
ங்கித் தண்ணீரைக் கலக்குவான். அப்பொழுது
அதிலே முதல் இறங்கினவனுக்கு எவ்வித நோயு
ந்தீரும். ஆதலாற் குருடர் சப்பாணிகள் சூம்பி
ன உறுப்புடையவர்கள் இப்படிப்பட்ட அநேக
வியாதிக்காரர் அதின் அருகே கிடந்து தண்ணீர்
எப்பொழுது அசையும் என்று காத்திருப்பார்
கள். அவர்களில் முப்பத்தெட்டு வருஷமாய்

அதைக் கண்ட பரிசேயர் என்ன சொல்லி மொறுமொ
றுத்தார்கள்?
கிறிஸ்துநாதர் சொன்ன மறுமொழி என்ன?
பின்பு எங்கே போனார்?
பலவித நோயாளிகளும் எருசலேமின் குளக்கரையிலே வ
ந்து கூடுகிறது என்னத்துக்கு?

வியாதிகொண்ட ஒருவன் அங்கே கிடக்கிறதை இயேசுவானவர் கண்டு அவனை நோக்கி நீ சுகமாக விரும்புகிறாயோ என்றார். அவன் ஆண்டவரே, குளங் கலக்கப்படுகிற பொழுது என்னை அதிற் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவரும் இல்லை. நான் அதிற் பிரவேசிக்குமுதல் மறுபேர் பிரவேசித்துச் சுகமடைகிறார்கள் என்று சொல்ல, இயேசுவானவர் எழுந்திரு, உன் படுக்கையையும் எடுத்துக்கொண்டு நடவென்றார். உடனே அந்த மனிதன் குணமாகித் தன் படுக்கையையும் எடுத்துக்கொண்டு நடந்துபோனான்

உ௬. அந்நாட்களில் அவர் செபம்பண்ணும்படிக்கு மலைக்குப் போய் இரா முழுவதும் பிதாவை நோக்கிச் செபம்பண்ணிக்கொண்டு பின்பு உதயமாகிற பொழுது தம்மைப் பின்சென்ற யாவரையும் அழைத்து அவர்களிற் பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பரத்தோலோமேயு, மத்தேயு,

---

அவர்களில் ஆரை இயேசு குணமாக்கினார்?
பின்பு இயேசுநாதர் எங்கே போனார்?
ஏன் மலைக்குப்போனார்?
எவ்வளவு நேரம் வேண்டுதல்பண்ணினார்?

Digitized by Google

தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, சீமோன், யாக்கோபின் சகோதரன் யூதா, தம்மைக் காட்டிக் கொடுப்பவனாகிய யூதாஸ்காரியோத்து என்னும் பன்னிரண்டு பேரையுந் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்ற நாமமுந் தரித்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் வியாதிகளை நீக்கிப் பசாசுக்களைத் துரத்தவும் அதிகாரங் கொடுத்தார்.

௨௪. அப்பொழுது வெகுசனங்கள் தம்மைப் பின்சென்று நெருக்கினதினால் மலையின்மேல் ஏறி உட்கார்ந்து,

ஆவிக்குரிய எளிமையுள்ளவர்கள் பரலோக இராச்சியத்தை அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியர்.

துயரப்படுகிறவர்கள் ஆறுதல் அடைவார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர்.

சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரி

மறுநாட் காலமே கிறிஸ்து தம்மைப் பின்சென்றவர்களை அழைத்து எத்தனை பேரைச் சீஷராகத் தெரிந்துகொண்டார்?
அவர்களுடைய பேர் என்ன?
அவர்கள் என்னசெய்யும்படி அதிகாரங் கொடுத்தார்?
அவர் மலையிலிருந்து பண்ணின பிரசங்கம் என்ன?
ஆறுதல் அடைபவர்கள் ஆர்?

Digitized by Google

த்துக்கொள்ளுவார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர்.

நீதியின் மேற் பசித்தாகமுள்ளவர்கள் திருத்தி அடைவார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர்.

இரக்கமுள்ளவர்கள் இரக்கத்தை அடைவார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர்.

சுத்தமான இருதயமுள்ளவர்கள் பராபரனைத் தரிசிப்பார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர்.

சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் பராபரனுடைய புத்திரராயிருப்பார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர்.

நீதியின் நிமித்தந் துன்பப் படுகிறவர்கள் பரலோக இராச்சியத்தை அடைவார்கள், ஆகையால் அவர்களும் பாக்கியர். என் நிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவித தீமையான மொழிகளை உங்கள் மேற் சொன்னார்களா.

ஆர் பூமியைச் சுதந்தரிப்பதாம்?
ஆருக்குத் திருத்தி உண்டாகும் என்கிறார்?
இரக்கம் பெறத் தக்கவர்கள் ஆர்?
ஆர் பராபரனைத் தரிசிக்கக் கூடும் என்கிறார்?
ஆர் தேவபுத்திரராய் இருப்பார்கள்?
நீதியை நிறைவேற்றுவதின் நிமித்தம் துன்பப்பட்டாலும் நட்டமோ?

Digitized by Google

ளால் நீங்கள் பாக்கியராய் இருப்பீர்கள்.

பரலோகத்திலே உங்களுக்கு மிகுந்த பலன் கிடைப்பதினாலே நீங்கள் சந்தோஷப்பட்டு மிகவுங் களிகூருங்கள். உங்களுக்கு முன் இருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்கள் என்று இவ்விதமாய்ப் பிரசங்கித்தார்.

௨௫. பின்பு கப்பர்நாகூம் பட்டணத்துக்குப் போனார். அங்கே நூற்றுக்குச் சேர்வைக்காரன் ஒருவன் அவரிடத்திலே வந்து ஆண்டவரே என் வேலைக்காரன் திமிர் வாதமுள்ளவனாய் வீட்டிலே கிடந்து மிகவும் உபத்திரவப்படுகிறான். அவனுக்குக் கிருபைசெய்ய வேண்டும் என்று மன்றாடினான். இயேசுவானவர் நான் வந்து அவனைச் சுகப்படுத்துவேன் என்றார். அந்தச் சேர்வைக்காரனோ ஆண்டவரே, நீர் அடி

கிறிஸ்துவின் நிமித்தந் துன்பப்படுகிறவர்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன?

எங்கே பலன் கிடைக்கும்?

நீதி செய்ததின் நிமித்தம் முன்னேயும் ஆரையாகிலுந் துன்பப்படுத்தினார்களோ?

பிரசங்கம் முடிந்த பின்பு எங்கே போனார்?

நூற்றுக்குச் சேர்வைக்காரன் அவரிடத்தில் என்ன சொன்னான்?

அதற்கு அவர் என்ன சொன்னார்?

Digitized by Google

யேனுடைய வீட்டுக்கு வரவேண்டுவதென்ன? நான் நானும் என் சேவகரில் ஒருவனைப் போ என்கப் போகிறான் மற்றொருவனை வா என்க வருகிறான் என் அடிமைக்காரனை இப்படிச் செய் என்கச் செய்கிறான் என்றான். இயேசுவானவர் அதைக் கேட்டுப் பிரமித்துத் தனக்குப் பின்றாக வருகிறவர்களை நோக்கி இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவனைக் கண்டதில்லை என்று சொல்லிச் சேர்வைகாரனை நோக்கி நீ உன் வீட்டுக்குப் போ உன் விசுவாசத்தின்படி உனக்காகக்கடவதென்றார். அந்நாழிகையிலேதானே அவனுடைய வேலை காரன் சுகமடைந்தான்.

உசா. மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போன பொழுது அங்கே ஒரு வாலிபன் செத்துப் பிரேதம் எடுத்துக்கொண்டு வருகிறதைக் கண்டு அவனுடைய தாய் ஒரு கைம்பெண்ணும் வேறே பிள்ளை இல்லாதவளுமாய்

திரும்பச் சேர்வைக் காரன் என்ன சொன்னான்?
அவர் விசுவாசத்தைப் பற்றிக் கிறிஸ்து என்ன சொன்னார்?
அவனுடைய வேலைக்காரனை எப்படி எழுப்பினார்?
நாயீன்ஊருக்குப் போகிற வழியிலே கிறிஸ்துநாதர் என்னத்தைக் கண்டார்?

Digitized by Google

இருந்ததினாலே அவள் மேலே உருக்கமாய் இரங்கி நீ அழவேண்டாமென்று சொல்லிப் பாடையைத் தொட்டுவாலிபனே எழுந்திரு என்று சொல்ல, மரித்தவன் எழுந்து உளுக்கார்ந்து பேசினான். அதைக் கண்டு எல்லாரும் பிரமித்துப் பாருங்கள்! மகா பெரிய தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறார். இது பராபரன் தம்முடைய சனங்கள் மேற் கொண்ட கிருபைதான் என்று சொல்லிப் பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௨௭. இவை எல்லாவற்றையும் யோவானிஸ்நானனுடைய சீஷர் தங்கள் குருவாகிய யோவானுக்கு அறிவித்தபொழுது அவர்களில் இரண்டு பேரை நோக்கி நீங்கள் இயேசுவினிடத்திற் போய் வருகிறவர் நீர் தாமோ அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமோ என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினான். அந்

நாயீனிலே அவர் செய்த அற்புதம் என்ன?
மரித்தவன் எழும்பினதைக் கண்ட சனங்கள் என்ன சொன்னார்கள்?
ஆரைப் புகழ்ந்தார்கள்?
யோவானிஸ்நானனுக்கு இவைகளைச் சொன்னதார்?
தனது சீஷரிடத்தில் என்ன சொல்லி அனுப்பினான்?

Digitized by Google

தப்படியே அவர்கள் இயேசுவிடத்தில் வந்து கேட்டதற்கு அவர் இதோ குருடர் பார்வை அடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகின்றது. இப்படி நீங்கள் காண்கிறவைகளையுங் கேட்கிறவைகளையும் யோவானுக்குப் போய் அறிவியுங்கள். அல்லாமலும் எனக்காக இலச்சை அடையாமலிருக்கிறவன் பாக்கியவான் என்றார்.

உஅ. பின்பு சீமோன் என்னும் ஒரு பரிசேயனுடைய வீட்டிலே இயேசுநாதர் பந்தியிருக்கையில் ஒரு இஸ்திரி பரிமள தயிலங் கொண்டு வந்து அழுது அவருடைய பாதங்களைக் கண்ணீரினலே நனைத்துத் தன் தலைமயிரினலே துடைத்து முத்தமிட்டு அந்தத் தயிலத்தையும் பூசினள். அவரை விருந்துக்கு அழைத்த பரிசேயன் அதைக் கண்டபொழுது இவர் தீர்க்கதரிசியானல் தம்மைத் தொடுகிற இஸ்திரி மிகு

யோவான் அனுப்பின ஆட்களுக்குக் கிறிஸ்துநாதர் என்ன சொன்னர்?
ஆர் பாக்கியன் என்றார்?
கிறிஸ்துநாதர் சீமோன் வீட்டில் இருந்த பொழுது ஒரு ஸ்திரி வந்து என்ன செய்தாள்?

Digitized by Google

ந்த பாவி என்று அறிந்திருப்பாரே என்று த
னக்குள்ளே எண்ணிக்கொண்டதை இயேசுவா
னவர் அறிந்து சீமோனே, ஒரு மனிதனுக்கு ஒ
ருவன் அஞ்ஞூறு வெள்ளிக்காசும் மற்றொரு
வன் ஐம்பது வெள்ளிக்காசுங் கொடுக்கவேண்
டியிருந்தது. அந்த இருவருஞ் செலுத்தத் திரா
ணியில்லாத பொழுது அவர்களுடைய கடனை
வாங்காமல் அவர்களுக்குத் தானே விட்டுவிட்
டான். இவர்களில் எவன் அவனை அதிகமாய் நே
சிப்பான் என்று கேட்க எவனுடைய கடன் பெ
ரிதோ அவனே என்றான். அப்பொழுது அவர் நி
தானமாய்ச் சொன்னாய் என்று சொன்னதுமன்
றிப் பின்னும் நான் உனது வீட்டிலே வந்த பொ
ழுது நீ என் காலுக்குத் தண்ணீர் தரவும் இல்லை,
என்னை முத்தஞ்செய்யவும் இல்லை, என் தலைக்கு
எண்ணெய்ப்பூசவும் இல்லை, இவளோ கண்ணீரினா
லே என் கால்களை நனைத்து ஓயாமல் முத்தஞ்
செய்து பரிமள தயிலத்தையும் பூசி மிகவும் அன்

அவரை விருந்துக்கு அழைத்த சீமோன் அதைப்பற்றி எ
ன்ன நினைத்தான்?

கிறிஸ்துநாதர் சீமோனை என்ன கேட்டார்?

சீமோன் சொன்ன உத்தரவென்ன?

அப்பொழுது கிறிஸ்துநாதர் சீமோனுக்கு என்ன சொ
ன்னார்?

Digitized by Google



சீமோன் வைத்த விருந்தையும், மரியாள் இயேசுவின் பாதத்தைக் கழுவியதையுங் காட்டியது.

பாய் இருக்கிறாளே, ஆதலால் அவள் செய்த
பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றுசொல்லிப்
பின்பு இஸ்திரியை நோக்கி உன்விசுவாசம் உன்னை
இரட்சித்தது, சமாதானத்தோடேபோ என்றார்.

௨௩. அப்பொழுது இயேசுவானவர் பசா
சு பிடித்துக் குருடும் ஊமையுமாய் இருந்த ஒ
ருவனைக் காணவும் பேசவும்பண்ணினார் அதை
க் கண்ட சனங்கள் எல்லாரும் பிரமித்து அவர்
தாவீதின் கோத்திரத்தான் அல்லவோ என்றார்
கள். பரிசேயரோ இவன் பராபரனாலே அல்
லப் பசாசின் தலைவனாகிய பேயெல்சேபூலினா
லே பசாசுக்களைத் துரத்துகிறான் என்றார்கள்.
இயேசுவானவர் அவர்களுடைய சிந்தனைகளை
அறிந்து அவர்களுடனே ஒரு இராச்சியந் தன
க்குள்ளே தானே பிரிந்துகொண்டால் அழிந்
துபோமே. ஒரு பட்டணத்தாரானாலுங் குடு
ம்பத்தாரானாலுந் தங்களுக்குள்ளே பிரிவினை

இஸ்திரியை நோக்கி என்ன சொன்னார்?
கிறிஸ்துநாதர் பசாசுபிடித்த குருடும் ஊமையுமாய் இரு
ந்தவனுக்கு என்ன சொன்னார்?
அதைக் கண்ட சனங்கள் என்ன சொன்னார்கள்?
என்னத்தினாலே பசாசுகளைத் துரத்துகிறாரென்றார்கள்?
ரிஸ்து என்ன சொன்னார்?
னகிலே நிற்கமாட்டாதென்றார்?

பண்ணினால் நிலைநிற்கமாட்டார்களே. அப்படிப் போலச் சாத்தான் மற்றொரு சாத்தானைத் துரத்தினால் அவர்களுக்குள்ளே தானே பிரிவினை உண்டாயிருக்க அவர்களுடைய இராச்சியம் எப்படி நிலைநிற்கும்? நானோ பராபரனுடைய ஆவியினாலே பசாசுக்களைத் துரத்துகிறபடியாற் பராபரனுடைய ஆளுகையே உங்களிடத்தில் வந்திருக்கின்றது. அன்றியும் என்னோடே இராதவன் எனக்கு விரோதமாய் இருக்கிறான். ஆதலால் எந்தப் பாவமுந் தூஷணமும் மன்னிக்கப்படும், தேவ ஆவியை நிந்திக்குந் தூஷணமோ மன்னிக்கப்படுவதில்லை என்றார்.

௩௰. பின்பு அவர் இப்படிச் சனங்களுடனே பேசுகையில் அவருடைய தாயுஞ் சகோதரரும் அவரைக் காண வேண்டும் என்று வெளியே நின்றதை ஒருவன் கண்டு அவரிடத்திலே போய் உம்முடைய தாயுஞ் சகோதரரும் உம்

வேறென்னத்தினாலே பசாசுகளைத் துரத்தினார்?
என்ன உங்களிடத்தில் வந்திருக்கின்றதென்றார்?
தனக்கு விரோதமாய் இருக்கிறவன் ஆராம?
எப்படிப்பட்ட பாவம பொறுக்கப்படும?
வேறெப்படிப்பட்ட பாவம் பொறுக்கப்படாது?
அவரைக் காண விரும்பி வந்ததார்?

மைக் காண வந்து நிற்கிறார்கள் என்றான். அதற்கு அவர் என்னுடைய தாய் ஆர் சகோதரர் ஆர் என்று சொல்லித் தம்முடைய கையாலே சீஷரைக் காட்டி இவர்களே என் சகோதரரும் என் தாயுமாய் இருக்கிறார்கள், எவனானாலும் பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்தால் அவனே என் சகோதரனுஞ் சகோதரியுந் தாயுமாய் இருக்கிறான் என்றார். இவைகளை அவர் சொல்லுகையிற் சனக்கூட்டத்தில் நின்ற ஒரு ஸ்திரீயானவள் அவரை நோக்கி உம்மைச் சுமந்த கருப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்றாள். அவரோ அதற்கு உத்தரமாகப் பராபரனுடைய வசனத்தைக் கேட்டு அதை நிறைவேற்றுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.

௯௩. அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி என் சகோதரன் எனக்குந் தனக்குமுள்ள ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொள்ளும்படி கட்டளை

வந்தவனுக்குக் கிறிஸ்துநாதர் என்ன சொன்னார்?
ஆரைத் தமக்குத் தாயுஞ் சகோதரரும் என்றார்?
ஒரு ஸ்திரி வாழ்த்துதலாக என்ன சொன்னாள்?
கிறிஸ்து அவளுக்கு என்ன சொன்னார்?

Digitized by Google

பிட வேண்டுமென்றான். அதற்கு அவர் எல்லாரையும் பார்த்து ஒருவனுக்கு மிகுந்த ஆஸ்தி உண்டாயிருப்பதினாலே அவனுடைய ஜீவன் நிற்பதல்ல, ஆகையால் நீங்கள் பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்பதற்கு அவர் சொன்ன உவமை. ஐசுவரியமுள்ள ஒருவனுடைய காணிபூமி நன்றாய் விளைந்தபொழுது அவன் என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே, என் களஞ்சியங்களைப்பெரிதாக்கி எனக்குண்டான தானியங்களை அவைகள்மேலே சேர்த்துவைத்து ஆத்துமாவே, அநேக வருஷங்களுக்கு உனக்கு வேண்டியது இருக்கின்றதே, புசித்துக் குடித்து இளைப்பாறி மகிழ்ச்சியாயிரு என்பேன் என்று தனைக்குள்ளே சிந்தித்துக்கொண்டிருந்தான். பராபரனோ அவனுடனே புத்தியீனனே, நீ இந்த இரவிலே சாவாய். அப்பொழுது நீ சேகரித்து வைப்பவைகள் ஆருக்கு? உலகப் பொருளில் முழுவதும் நம்பி இருக்கிறவன் அப்படியே

ஒரு வாலிபன் கிறிஸ்துவிடத்தில் என்ன கேட்டான்?
அதற்கு அவர் என்ன சொன்னார்?
காணிபூமி நன்றாய் விளைந்த ஐசுவரியவானுடைய உவமை என்ன?

Digitized by Google

கெட்டுப்போவான், ஆதலால் உங்கள் எசமான் எப்பொழுது வருவார் என்று ஆயத்தமாய்க் காத்திருங்கள். எசமான் வரும்பொழுது அவருடைய சித்தத்தின்படி செய்கிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அல்லாமலும் எவனுக்கு அதிகங் கொடுக்கப்பட்டதோ அவனே அதிகக் கடனாளி, ஆதலாற் தன் எசமானுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி செய்யாமலிருக்கிற ஊழியக்காரனே அனேக அடிகளைப் படுவான் என்றார்.

௬௭. ஒருவன் தானியத்தை விதைக்கையிற் சில விதை வழியருகே விழுந்தன. அவற்றைப் பறவைகள் வந்து பொறுக்கின. வேறு சில விதை மிகுந்த மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்து முளைத்தும் வேர்பற்ற மண் ஆழமில்லாததினால் வெயிலுக்குத் தீய்ந்துபோயின. வேறு சில விதை முள்ளுகளுக்குள்ளே

இந்த உவமையினால் என்னத்தைக் கற்றுக்கொள்வோம்?
விதைக்கிறவனின் உவமை என்ன?
விதைக்கையில் எந்தெந்த இடங்களிலே விழுந்தது?
வழியருகே விழுந்த விதைகளுக்கு என்ன சம்பவித்தது?
கற்பாறையிலே விழுந்த விதைகளுக்கு என்ன சம்பவித்தது?
முள்ளுகளுக்குள்ளே விழுந்த விதைகளுக்கு என்ன சம்பவித்தது?

Digitized by Google

விழுந்து முளைத்தன. அவற்றை முள்ளுக்கள் வளர்ந்து நெருக்கின. வேறு சில விதை நல்ல நிலத்திலே விழுந்து முளைத்து சில நூறாகவும் சில அறுபதாகவும் சில முப்பதாகவும் பலன் கொடுத்தன என்றார். இந்த உவமையின் கருத் தென்ன என்று சீஷர் கேட்டதற்கு அவர் சிலர் தேவ வசனத்தைக் கேட்கும் பொழுது அவ்வ சனம் அவர்களுடைய மனதிலே பதியாதப டிக்குப் பசாசு அதை அழித்துப் போடுகின் றது. வேறு சிலர் அவ்வசனத்தைக் கேட்டுச் சில காலமாகப் பற்றிக்கொண்டும் அவைகளின் நிமித்தம் உபத்திரங்கள் உண்டாகிற பொழு து நிலைகொள்ளாமற் போகிறார்கள். வேறு சிலர் அந்த வசனத்தை உற்றுக் கேட்டாலும் நாள் வரையிலே உலகக் கவலைகளினாலும் ஐசுவரி யத்தின் மயக்கத்தினாலும் இடைஞ்சற்பட்டுப் பலன் பெறாமற் போகிறார்கள். வேறு சிலரோ அவ் வசனத்தைக் கேட்டுச் சிந்தித்து அதின்படி

நல்ல நிலத்தில் விழுந்த விதை எப்படிப் பலன் கொடுத்த தென்றார்?

அதின் கருத்தைச் சொல்ல வேண்டுமென்று ஆர் கேட் டது?

கிறிஸ்துநாதர் அதற்கு என்ன கருத்துச் சொன்னார்?

செய்து பலனுள்ளவர்களாக நடந்துகொள்ளு
கிறார்கள் என்றார்.

௨௪ பரலோக இராச்சியம் ஒரு வயல் நிலத்
துக்கு ஒப்பாயிருக்கின்றது. அந்த வயற்காரன்
நல்ல விதையை விதைத்திருக்க அவனுடைய ப
கைஞன் வந்து அதற்குள்ளே களை விதையை
யும் விதைத்துப் போனான். பயிரான்து வளர்ந்
து கதிர் வருகையிற் களைகளுங் காணப்பட்டன.
வேலைகாரர் அதைக் கண்டு எசமானிடத்தில் வ
ந்து ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதையை
விதைத்தீர் அல்லவோ! களைகள் அதிலே எப்
படி உண்டாயின என்றார்கள். அதற்கு எசமான்
பகைஞன் அப்படிச் செய்தான் என்று சொ
ன்னான். அப்பொழுது அவர்கள் நாங்கள் போ
ய் அவைகளைக் களைந்துபோடச் சித்தமாய் இ
ருக்கிறீரோ என்றார்கள். அதற்கு அவன் களைக
ளைப் பிடுங்குகிறபொழுது கோதும்பையுஞ் சே
தம்போகும். அப்படிப் போகாதபடிக்கு இர

இந்த நிலங்கள் எப்படிப்பட்டவர்களுக்குச் சரியாய் இ
ருக்கின்றன?
வான இராச்சியம் என்னத்துக்கு ஒப்பு?
அதிலே பகைஞன் என்னத்தை விதைத்துப் போனான்?
வேலைகாரர் எசமானுக்குச் சொன்னதென்ன?

Digitized by Google

ண்டும் அறுக்கிற நாள் மட்டும் வளரட்டும். அப்பொழுது நானே அறுக்கிறவர்கள் களைகளை முதற் பிடுங்கிச் சுட்டுப்போடும்படிக்குங் கோதும்பையை என் களஞ்சியத்திற் சேர்க்கும்படிக்குங் கட்டளையிடுவேன் என்றுஞ் சொன்னானென்றார்.

௩௪ அல்லாமலும் பரலோக இராச்சியம் நிலத்திற் புதைத்திருக்கும் திரவியத்துக்கு ஒப்பாய் இருக்கின்றது. அதை ஒரு மனிதன் கண்டு போய்த் தனக்குள்ள யாவையும் விற்று அந்த நிலத்தையே கொள்ளுகிறான். அல்லாமலும் ஒரு வலையிலே சகல சாதியான மீன்கள் அகப்பட்டாலும் நல்லவைகளை எடுத்துக்கொண்டு ஆகாதவைகளைத் தள்ளிப்போடுகிறது போல இவ்வுலகத்தின் முடிவிலேயுந் தேவ தூதர் புறப்பட்டுச் சன்மார்க்கரையுந் துன்மார்க்கரையும் பிரித்துத் துன்மார்க்கரை அழுதலும் பற்

அதற்கு எசமான் என்ன சொன்னான்?
உலகத்தின் முடிவிலே சன்மார்க்கரையுந் துன்மார்க்கரையும் பிரிக்கிறது என்னத்துக்குச் சரியாய் இருக்கிறது?
சீஷர் அவரிடத்தில் என்ன கேட்டார்கள்?
களைகளுள்ள வயலின் உவமையைப் பற்றிக் கிறிஸ்து எப்படி அருத்தம்பண்ணினார்?

Digitized by Google

கடிப்பும் உண்டாயிருக்கிற அக்கினிச் சூளையி
லே போடுவார்கள் என்று சொன்னார்.

௩௫. பின்பு இயேசுவானவர் சனங்களை அனு
ப்பி வீட்டுக்குப் போன பொழுது சீஷர் அவரி
டத்திலே நீர் சொல்லிய உவமையை எங்களுக்
கு விபரிக்கவேண்டுமென்று கேட்டார்கள். அ
வர்களுடனே அவர் நல்லவிதையை விதைக்கிற
வன் மனிதனுடைய குமாரனே, வயல் நிலம் உ
லகமே, நல்லவிதை மோட்சத்துக்கு உரியவர்க
ளே, களைகள் நரகத்துக்கு உரியவர்களே, களைக
ளை விதைத்தவன் பசாசே, அறுப்புநாள் உலக
த்தின் முடிவே, அறுக்கிறவர்கள் தேவதூதர்க
ளே, ஆதலாற் களைகள் சேர்க்கப்பட்டு அக்கினி
யினாற் சுட்டெரிக்கப்படுவதுபோல இவ்வுலக
த்தின் முடிவிலே நடக்கும். மனிதனுடைய கு
மாரன் தன்னுடைய தூதரை அனுப்புவான். அ
வர்கள் அவனுடைய இராச்சியத்தில் இருக்கிற ச
கல வஞ்சனைக்காரரையும் அக்கிரமஞ்செய்கிற
வர்களையுஞ் சேர்த்து அழுதலும் பற்கடிப்பும்

களைகளைப் பிடுங்கிச் சுட்டெரிக்கிறது போல உலக்முடி
விலே என்ன நடக்கும்?
மனிதனுடைய குமாரன் ஆரை அனுப்புவார்?
ஆரை மனிதனுடைய குமாரன் என்பது?

Digitized by Google

உண்டாயிருக்கிற அக்கினிச் சூளையிலே போடு
வார்கள். அப்பொழுது நீதிமான்கள் தங்கள்
பரம பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்
போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக்
காதுள்ளவன் கேட்கக்கடவான் என்றார்.

௩௪. பின்பு இயேசுவானவர் வேறொரு கிரா
மத்துக்குப் போகையில் வேதபாரகரில் ஒரு
வன் அவரை நோக்கி ஆண்டவரே நீர் எங்கே
போனாலும் உம்மைப் பின்பற்றுவேன்என்றான்.
அவர் அவனுடனே நரிகளுக்குக் குழிகளும் ஆ
காசத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு.
மனிதனுடைய குமாரனுக்கோ தலைசாய்க்க இ
டம்இல்லை என்றார். வேறொருவனை அவர் நோக்
கி எனக்குப் பின் வா என்றார். அவனோ ஆண்டவ
ரே முன்பு நான் போய் என் தகப்பனை அடக்
கம்பண்ணும்படி எனக்கு உத்தரவு தரவேண்டு
ம்என்றான். அதற்கு இயேசுவானவர் மறித்தோர்

அந்தத் தூதர்கள் என்னசெய்வார்கள்?
அப்பொழுது ஆர் சூரியனைப் போலப் பிரகாசிப்பார்
கள்? [ண்டார்?
பின்னொரு கிராமத்துக்குப் போம்பொழுது ஆரைக்க
அந்த வேதபாரகன் என்ன சொன்னான்?
அதற்கு இறிஸ்து என்ன சொன்னார்?
வேறொருவனை நோக்கி அவர் என்ன சொன்னார்?

Digitized by Google

தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும், நீயோ புறப்பட்டுப் பராபரனுடைய ஆஞ்ஞையைப் பிரசித்தம்பண்ணென்றார். வேறொருவன் வந்து உமக்குப் பின்செல்லுவேன். அதற்கு முன்பு நான் போய் என் வீட்டில் இருக்கிறவர்களுக்கு அறிவித்துக்கொண்டுவர உத்தரவுகொடுமென்றான். இயேசுவானவர் அவனுடனே கலப்பையைப் பிடித்துக்கொண்டு பின்னாகப் பார்க்கிற எவனும் பராபரனுடைய இராச்சியத்திற் சேர அபாத்திரனாய் இருக்கிறான் என்றார்.

௬௭. வேறொரு நாளிலே தம்முடைய சீஷருடனே படகிலே இருக்கையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது பலத்தகாற்றுண்டாய் அலைகளும் பலத்து மோதினதினாலே அவர்கள் இருந்த படகு உடைந்து தாழ்வதுவாய் இருந்தது. அவர்கள் அவரை எழுப்பி ஆண்டவரே! ஆண்டவரே! நாங்கள் எல்லாரும் அமி

என்னத்துக்கு உத்தரவு கேட்டான்?
பராபரனுடைய இராச்சியத்துக்கு ஆர் பாத்திரன் அல்லவென்றார்?
கிறிஸ்துநாதர் படகிலே நித்திரைபண்ணுகையில் என்ன சம்பவித்தது?

Digitized by Google

இயேசுநாதர் சமுத்திரத்தின் கொந்தளிப்பையும், காற்றி
னுரத்தையும் அமையப்பண்ணிய பாவனை.

ழுந்துகிறோமே. எங்களுக்கு இரக்கம் புரியும் என்று சொல்ல அவர் எழுந்திருந்து சமுத்திரமே, அமர்ந்திரு என்று சொல்ல உடனே அமர்ந்தது.

௰௮. பின்பு சனங்களோடே பேசுகையிற் தலைமைக்காரன் ஒருவன் வந்து அவரை வணங்கி என் குமாரத்தி மரண அவத்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு என் வீட்டுக்கு வாருமென்றான். இயேசு தமது சீஷரோடுங் கூட அவனுடனே போகையிற் பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்ட மாத்திரத்திலே சொஸ்தம் அடையலாம் என்றெண்ணி அவருக்குப் பின்னாலே போய் அதின் தொங்கலைத் தொட்டாள். அப்பொழுது இயேசுவானவர் திரும்பி அவளை நோக்கி இஸ்திரியே, உன் விசுவாசத்தினால் உனக்குச் சுகம் உண்டாயிற்றென்றார் இப்படியிருக்கத் தலைவன் வீட்டிலிருந்து ஒருவன் வந்து அவனை நோக்கி உம்முடைய கு

காற்றையுங் கடலையும் என்ன செய்தார்?
பின்பு அவரைக் கண்டு பேசும்படி ஆர் வந்தது?
வந்து என்ன சொன்னான்?
கிறிஸ்துநாதர் போகையில் அவருடைய வஸ்திரத்தை ஆர் தொட்டது?
[illegible]து இஸ்திரிக்கு என்ன சொன்னார்?

Digitized by Google

மாரத்தி இறந்துபோனாள், இனிப் போதகரை வருத்தப்படுத்தாதிருமென்றான். இயேசுவோ அந்தத் தலைவன் வீட்டிற் சேர்ந்து வாத்தியங்களை ஆர்ப்பரிக்கிறதையுஞ் சனங்கள் இரைகிறதையுங் கண்டு பிள்ளையின் தகப்பனையும் அதின் தாயையுந் தம்மோடே வந்தவர்களையுந் தவிர மற்றெல்லாரையும் வெளியே போகப்பண்ணி அதின் கையைப் பிடித்துச் சிறுபெண்ணே, எழுந்திரு என்று சொன்னவுடனே அவள் எழுந்து நடந்தாள். அதைக்கண்டவர்கள் மிகவும்பிரமித்தார்கள்.

௬௬. அப்பொழுது இடையன் இல்லாத ஆடுகளைப் போல இஸ்ரவேற்சனங்கள் சிதறுண்டு போனதைக் கண்டு மனதுருகித் தமது பன்னிரண்டு சீஷரையும் அழைத்து அவர்களுடனே அறுப்பு மிகுதியாய் இருக்கின்றது, வேலையாட்களோ குறைவாய் இருக்கிறார்கள். ஆதலால் அறுப்புக்கு எசமான் தமது வேலைக்கு

அவள் என்னத்தை அடைந்தாள்?
தலைமைக்காரனின் வீட்டுக்கு வந்தபொழுது என்னத்தைக் கண்டார்? — கண்டு என்ன செய்தார்?
அவளை எப்படி எழுப்பினார்?
சனங்கள் சிதறுண்டு போனதை அவர் கண்டபொழுது சீஷருக்கு என்ன புத்தி சொன்னார்?

Digitized by Google

அதிக ஆட்களை அனுப்பும் படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். நீங்கள் புறத்தேசத்தாரிடத்துக்குப் போகவேண்டாம். காணமற் போன ஆடுகளைப் போல் இருக்கிற இஸ்ரவேற் கோத்திரத்தாரிடத்துக்கே போய்ப் பரலோக இராச்சியத்தின் ஆளுகை சமீபமாய் வந்ததென்று சொல்லி வியாதிக்காரரைக் குணமாக்கிக் குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணிப் பசாசுக்களைத் துரத்தி மரித்தோரையும் எழுப்புங்கள், கைம்மாறில்லாமற் பெற்றுக்கொண்டீர்கள், கைம்மாறில்லாமற் கொடுங்கள். வேலை செய்கிறவன் தனக்கு வேண்டிய அன்னவஸ்திரம் பெறுகிறதற்குப் பாத்திரவானானபடியினாலே பொன்னையாகிலும் வெள்ளியையாகிலுந் தடியையாகிலும் நீங்கள் கொண்டுபோக வேண்டாம். ஆடுகளைக் கோணாய்கள் கெடுக்கும் வண்ணமாகப் பொல்லாத மனிதர் உங்களைக் கெடுக்கப் பார்ப்பார்கள், ஆகையால் நீங்கள் பாம்புகளைப் போல் விவேகமுள்ளவர்களும் புறாக்களைப் போலக்

இவர்களுக்கு என்ன அதிகாரங் கொடுத்தார்?
வழிக்கு ஏதாகுதல் கொண்டுபோகச் சொன்னாரா?
அவர்களுக்குப் போசனத்துக்கு வழி என்ன என்றார்?
பொல்லாத மனிதர் என்ன செய்வார்களாம்?

Digitized by Google

கபடமில்லாதவர்களுஞ் சாவதான முள்ளவர்களுமாய் இருங்கள். என் நிமித்தம் உங்களை ஆலயங்களில் இருந்து தள்ளி இராசாக்களண்டைக்குக் கொண்டுபோவார்கள். நீங்களோ பேச வேண்டுவது உங்களுக்கு அப்பொழுதே அருளிச்செய்யப்படும். ஆகையால் எப்படிப் பேசுவோம் என்னத்தைப் பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள். பேசுகிறது நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவி உங்களில் இருந்து பேசுகிறவர். அல்லாமலும் என்னுடைய நாமத்தின் நிமித்தம் எல்லாரும் உங்களைப் பகைப்பார்கள். ஒருவனுடைய இனத்தவர்களே அவனுக்குச் சத்துருக்களாய் இருப்பார்கள். என்னைப் பார்க்கிலுந் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல. என்னைப் பார்க்கிலும் மகனையாவது மகளையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவ

அதற்கு இவர்கள் எப்படிப்பட்ட குணமாய் இருக்க வேண்டும் என்றார்?
இவர்களைப் பிடித்து எங்கே கொண்டுபோவார்கள் என்றார்?
என்னத்துக்குக் கவலைப்பட வேண்டாம்?
தமது நாமத்துக்காக ஆரைப் பகைப்பார்களாம்?
ஆர் தமக்குப் பாத்திரனல்லவென்றார்?

Digitized by Google

ணும் எனக்குப் பாத்திரனல்ல. என் நிமித்தம் வரும் உபத்திரங்களைச் சகித்துக்கொண்டு முடிவு பரியந்தம் நிலைநிற்கிறவனே பாக்கியவான். தன் சீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான். என் நிமித்தந் தன் சீவனை இழந்துபோகிறவனோ அதைக் காப்பான். உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். எனக்குச் சீஷனாய் இருக்கிறதின் நிமித்தம் இந்தச் சிறியவர்களில் ஒருவனுக்கு ஒரு கலயுந் தண்ணீர் மாத்திரந் தாகத்துக்குக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகமாட்டான் என்று போதித்து அவர்களை அனுப்பினார். அவர்கள் புறப்பட்டுப் போய்க் குணப்படுங்களென்று பிரசங்கித்து அநேகம் பசாசுக்களைத் துரத்தி அநேகம் நோயாளிகளைக் குணமாக்கிச் சில நாட்சென்ற பின்பு திரும்பி வந்து தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விபரித்துச் சொன்னார்கள்.

௪௰. அக்காலத்திலே யோவான் ஏரோது இராசாவை நோக்கி நீர் உமது சகோதரனுடைய

ஒருவன் கிறிஸ்துவின் நிமித்தந் தன் சீவனையிழந்துபோகிறான்! அதின் கருத்தென்ன?
சீஷரை ஏற்றுக்கொள்ளுகிறவன் ஆரை ஏற்றுக்கொள்ளுகிறான்? சீஷர் என்ன செய்தார்கள்?

மனைவி ஏரோதியாளை வைத்திருக்கிறது நியாய மல்ல என்று சொன்னபடியினாலே ஏரோது அவனைப்பிடிப்பித்து சிறைசாலையில் வைத்தான். அந்த ஏரோதியாளும் அவனைக் கொலை செய்ய விரும்பியிருந்தாள். அப்படி இருக்க ஏரோது தன் ஜென்ம நாளிலே தன்னுடைய மந்திரிமார்களையுஞ் சேனாதிபதிகளையுங் கலிலேயா நாட்டி ற் பிரபுக்களையும் அழைத்து விருந்துபண்ணி னான் அப்பொழுது ஏரோதியாளுடைய கு மாரத்தி வந்து ஏரோதுவுக்கும் மற்றவர்களுக்கு ம் முன்பாக நின்று அவர்களுக்குப் பிரியம் உண் டாகத் தக்கதாக நடனம்பண்ணினதினாலே இரா சா அவளை நோக்கி நீ என் இராச்சியத்திற் பாதி கேட்டாலுந் தருவேனென்று ஆணைசெய்தான். அப்பொழுது அவள் வெளியேபோய்த் தாயி டத்திற் சொல்லித் தாயுடைய சொற்படியே இராசாவிடத்திற் றிரும்பவும் வந்து நீர் இப் பொழுது தானே யோவான்ஸ்நானனுடைய தலையை வெட்டுவித்து ஒரு தட்டத்தில் வைத்

யோவான் ஏரோதுவுக்கு என்ன சொன்னான்?
ஏரோது யோவானை என்ன செய்தான்?
நாட்டியம்பண்ணின சிறுபெண்ணுக்கு ஏரோது என்ன தருவேன் என்றான்?

Digitized by Google

து எனக்குத் தரவேண்டுமென்று கேட்டாள். அப்பொழுது இராசா மிகவுந் துக்கம் அடைந்தும் ஆணையின் நிமித்தம் மறுக்கக் கூடாமல் உடனே சேர்ச்சேவகரைக் காவற்கூடத்துக்கு அனுப்பி யோவானுடைய தலையை வெட்டுவித்து அதை ஒரு தட்டத்தில் வைத்து அவளுக்குக் கொடுத்தான். அவள் அதைத் தன் தாயிடத்திற் கொண்டுபோய்க் கொடுத்தாள். யோவானுடைய சீஷர் இதைக் கேள்விப்பட்டுவந்து உடலை எடுத்துக் கல்லறையிலேவைத்து இயேசுவினிடத்தில் வந்து நடந்த வருத்தமானங்களை அறிவித்தார்கள்.

௪௧. இயேசுவானவர் அதைக் கேட்டு அவ்விடம் விட்டு வனாந்தரத்திலே போய்த் தமது சீஷர்களுடனே இருக்கையில் அவரிடத்தில் வந்த சனம் பசியாய் இருக்கிறதைச் சீஷர் கண்டு அவருடனே இது வனாந்தரமான இடம்,

---

அவள் என்னத்தைக் கேட்டாள்?
இப்படிக் கேளென்று ஆர் ஏவிவிட்டது?
இராசா என்ன செய்தான்?
யோவானுடைய சீஷர் என்ன செய்தார்கள்?
அதை ஆருக்கு அறிவித்தார்கள்?
சனங்கள் வனாந்தரத்திலே பசியாய் இருக்கும் பொழுது
சீஷர் கிறிஸ்துவிடத்தில் என்ன சொன்னார்கள்?

Digitized by Google

பொழுதும் போயிற்று ஆதலால் இவர்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போசனபதார்த்தங்களைக் கொள்ளும்படிக்கு அனுப்பிவிடுமேனென்றார்கள். அதற்கு இயேசு நீங்கள் இவர்களுக்குப் போசனங் கொடுங்களென்று சொல்லித் தரையிலே அவர்களைப் பந்தியிருக்கக் கட்டளையிட்டுச் சீஷரிடத்திலே இருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு சிறு மீன்களையும் வாங்கி வானத்தை அண்ணாந்து பார்த்துத் தோத்திரஞ்செய்து சீஷரிடத்திற் கொடுத்தார். சீஷர் அவைகளைச் சனங்களுக்குக் கொடுத்தார்கள். ஐயாயிரம் புருடரும் வேறு பெண்களும் பிள்ளைகளுஞ் சாப்பிட்டுத் திருத்தியடைந்து சேடமானவைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.

௪௨. சாப்பிட்டு முடிந்தபின் இயேசுவானவர் சனங்களை அனுப்பிவிட்டுத் தம்முடைய சீ

கிறிஸ்துநாதர் என்ன செய்யச் சொன்னார்?
சனம் பந்தியில் இருந்தபின் என்ன செய்தார்?
சாப்பிட்டவர்களின் தொகை என்ன?
மிச்சம் எவ்வளவு?
ஐந்து அப்பமும் இரண்டு சிறு மீனும் ஐயாயிரத்துச்சொச்சச் சனங்களுக்குக் காணுகிறதெப்படி, மிஞ்சுகிறதெப்படி?

Digitized by Google

சீஷர்களைப் படகிலேறித் தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படிக்குத் துரிதப்படுத்திவிட்டுத் தாம் தனியே ஒரு மலையின் மேலேறிச் செபத்தியானம்பண்ணி இரவில் நாலாஞ்சாமத்திலே படகு நடுக்கடலிலே சேர்ந்து எதிர்காற்றினாலும் அலைகளாலும் அக்கப்பாடு படுகையில இயேசு அவர்களிடத்துக்குக் கடலின் மேலே நடந்துபோனார். சீஷர் அதைக் கண்டு தத்தளித்து ஐயோ, ஆவேஷம் என்று சொல்லிப் பயந்து கூக்குரலிட்டார்கள். உடனே இயேசுவானவர் பயப்படாதிருங்கள், நான்தான் என்றார். பேதுரு அதைக் கேட்டு ஆண்டவரே, நீரேயானால் சலத்தின் மேலே உம்மிடத்தில் வர எனக்குக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர் வா என்றார். அப்பொழுது படகை வி

பின்பு கிறிஸ்துநாதர் சீஷரை எங்கே அனுப்பினார்?
தாம் எங்கே போனார்?
மலையின் மேல் என்ன செய்துகொண்டிருந்தார்?
கிறிஸ்து படகுக்குத் திரும்பி வந்தது எந்நேரம், எப்படி வந்தார்?
அதில் இருந்தவர்களுடைய மோசத்தைக் கண்ட பொழுது என்ன செய்தார்?
அவர்கள் என்ன சொன்னார்கள்?
அவர் அதற்கு என்ன சொன்னார்?
பேதுரு என்ன கேட்டுக்கொண்டான்?

Digitized by Google

சமுத்திரத்திலே நடந்தவர் ஆர்?
வேறார் அப்படி நடக்கவிரும்பினது?

Digitized by Google

ட்டிறங்கிச் சலத்தின் மேலே நடக்கையில் அவன் காற்றுப் பலத்திருக்கிறதைக் கண்டு பயமடைந்து அமிழ்ந்துகிற சமயத்தில் ஆண்டவரே, என்னை இரட்சிக்க வேண்டும் என்று கூப்பிட்டான். உடனே இயேசுவானவர் கையை நீட்டி அவனைப் பிடித்துக்கொண்டு படகில் ஏறினார். காற்றும் அமர்ந்தது, படகில் இருந்தவர்கள் அவரை வணங்கினார்கள்.

௪௫. வேறொருநாள் எருசலேம் பட்டணத்தில் இருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து உம்முடைய சீஷர் கைகழுவாமற் போசனம்பண்ணுகிறது பெரியோர்களுடைய பாரம்பரைநியாயத்துக்கு விரோதமே என்றார்கள். அதற்கு இயேசு வாய்க்குட் போகிற பொருள் ஒருவரையுந் தீட்டுப்படுத்தாது. இருதயத்தில் உண்டாகிற கொலை, விபசாரம், வேசித்தனம், களவு, பொய்ச்சாட்சி, தூஷணம் இவைகளுக்கேதுவான யொல்லாத

தண்ணீரில் நடந்த பொழுது என்ன கேட்டுக்கொண்டான்?

பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய சீஷரைப் பற்றி என்ன சொன்னார்கள்?

ரம்பரைநியாயமாவதென்ன?

து மறுமொழியாக என்ன சொன்னார்?

Digitized by Google

சிந்தனைகள் முதலானவைகளே மனிதனைத் தீட்டு
ப்படுத்தும் என்றார். இதைக் கேட்ட பரிசேய
ர் இலச்சையடைந்ததை இயேசு அறிந்து என்
பரமபிதா நடாத நாற்றுக்கள் யாவும் பிடுங்கப்
படும். குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால்
இருவருங் குழியிலே விழுவார்கள் என்று சீஷரு
க்குச் சொன்னார்.

௪௪. பின்பு சனம் போசனம் இல்லாமல் மூ
ன்று நாளாய்த் தம்மிடத்திலே தங்கியிருப்பதை
க் கண்டு வழியிலே தொய்ந்துபோகாதபடிக்கு
இவர்களைப் பசியாற்றி அனுப்ப வேண்டும் எ
ன்று இயேசுநாதர் சொன்னதற்குச் சீஷர்கள்
இவ்வளவு சனங்களும் பசியாறும்படிக்கு வே
ண்டிய ஆகாரம் இந்த வனாந்தரத்திலே நமக்கு
எப்படி அகப்படும் என்றார்கள். இயேசுவான
வர் உங்களிடத்திலே எவ்வளவு அப்பங்கள் உண்
டென்று கேட்க ஏழு அப்பங்களும் சில சிறு
மீன்களும் உண்டு என்றார்கள். அப்பொழுது

ஒருமனிதன் என்னத்தினாலே தீட்டுப்படுவான்?
குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் என்ன வரும்?
மூன்று நாட் பசியாய் இருந்த சனங்களுக்குச் சீஷரை எ
ன்ன செய்யச் சொன்னார்?
அவர்கள் என்ன சொன்னார்கள்?

Digitized by Google

அவர் சனங்களைத் தரையிலே பந்தியிருக்கச் சொல்லி அந்த அப்பங்களையும் மீன்களையும் எடுத்துத் தோத்திரஞ்சொல்லி அவைகளைப் பிட்டுத் தம்முடைய சீஷர் கையிற் கொடுத்தார். சீஷர் அவைகளைச் சனங்களுக்குக் கொடுத்தார்கள். நாலாயிரம் புருடரும் வேறு பெண்களும் பிள்ளைகளும் போசனம்பண்ணித் திருத்தியடைந்துஞ் சேடமானவைகள் ஏழு கூடை நிறையக்கண்டது. அப்பொழுது பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்க வந்து வானத்தில் இருந்து உண்டாகும் ஒரு அடையாளத்தை எங்களுக்குக் காண்பியும் என்றதற்கு அவர் அத்தமனமானபோது செவ்வானந் தோன்றியபடியால் மழை வெளிக்கும் என்றும், உதயமாகிற போது செவ்வானமும் மந்தாரமும் இருக்கிறபடியாற் பெருங்காற்றும் மழையும் உண்டாகும் என்றும் வானத்தின் தோற்றத்தைக் குறித்து வகையறுக்கிறீர்கள் வஞ்சகரே, காலத்தி

அப்பத்தையும் மீனையும் எடுத்துக் கிறிஸ்து என்ன செய்தார்?
சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?
மிஞ்சினது எவ்வளவு?
பரிசேயருஞ் சதுசேயரும் வந்து அவரை என்ன கேட்டார்கள்?
என்ன அடையாளங் கொடுக்கப்படும் என்றார்?

Digitized by Google

ன் அடையாளங்களைக் குறித்து வகையறுக்க மாட்டீர்களா? பொல்லாத சந்ததியான இவர்கள் அடையாளங் கேட்கிறார்கள். இவர்களுக்கு யோனாவின் அடையாளமேயன்றி வேறொரு அடையாளங் கொடுக்கப்படுவதில்லை என்றார்.

௬௫. அது முதல் இயேசுவானவர் தாம் எருசலேம் பட்டணத்துக்குப் போய்ப் பரிசேயராலும் வேதபாரகராலும் பாடுபட்டு மரணமடையவும் மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவும் வேண்டிய காலம் வருகிறதென்று தம்முடைய சீஷருக்கு அறிவிக்க, பேதுரு ஆண்டவரே, அப்படி உமக்கு வராதிருப்பதாக என்று அவருடனே கண்டிப்பாய்ச் சொன்னான். இயேசுவானவர் என் பின்னே போ சாத்தானே, நீ பராபரனுக்குப் பிரியமானவைகளை விட்டு மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே எனக்கு இடறாய் இருக்கிறாயென்று சொல்லிப் பின்பு சீஷரை நோக்கித் தன் சீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோ

யோனாவின் அடையாளம் என்றதற்குஎன்ன கருத்து?
எருசலேமிலே தனக்கு என்ன சம்பவிக்கும் என்றார்?
அதற்குப் பேதுரு என்ன சொன்னான்?
கிறிஸ்து பேதுருவுக்கு என்ன சொன்னார்?

Digitized by Google

வான். என்னிமித்தந் தன் சீவனை இழந்துபோகிறவன் அதை அடைந்துகொள்ளுவான். அல்லாமலும் மனிதனானவன் உலகமுழுவதையுஞ் சம்பாதித்துக்கொண்டாலுந் தன் ஆத்துமாவை நட்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன என்றார்.

௪௯. ஆறு நாளைக்குப் பின்பு இயேசுவானவர் பேதுருவையும், இயாக்கோபையும், அவனுடைய தம்பியாகிய யோவானையுங் கூட்டிக்கொண்டு உயர்ந்த மலையின்மேற் போய் அங்கே அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவருடையமுகஞ் சூரியனைப்போலே பிரகாசித்தது. அவருடைய வஸ்திரங்கள் ஒளியைப் போல வெண்மையாயின. மோசே எலியா என்பவர்கள் அவருடனே பேசிக்கொள்ளுகிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி ஆண்டவரே,

---

சீஷர் எல்லாருக்கும் பொதுப்பட அவர் என்ன சொன்னார்?
[போனார்?
அதற்கு ஆறு நாளைக்குப் பின் கிறிஸ்துநாதர் எங்கே
அவர் மறுரூபமானதை ஆர் கண்டது?
அவருடைய ரூபு என்னவிதமாய் இருந்தது?
மோசே எலியா என்பவர்கள் ஆர்?

Digitized by Google

நாம் இங்கே இருக்கிறது நல்லது. உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கும் மோசேயுக்கும் எலியாவுக்குமாக மூன்று குடில்களைக் கட்டுவோம் என்றான். அப்படி அவன் பேசுகையில் ஒளியுள்ள மேகங்காணப்பட அதில் இருந்து இவர் நமக்கு அன்பாய் இருக்கிற நம்முடைய குமாரன் இவரிற் பிரியமாய் இருக்கிறோம். இவர் சொற் கேளுங்களென்று ஒரு வார்த்தையும் உண்டாயிற்று. சீஷர் அதைக் கேட்டு மிகவும் பயந்து விழுந்தார்கள். அப்பொழுது இயேசுவானவர் வந்து அவர்களைத் தொட்டுப் பயந்தெளிந்து எழுந்திருங்களென்றார். அவர்கள் எழும்பின பொழுது இயேசுவையேயன்றி மற்றொருவரையுங் காணவில்லை.

௧௭. பின்பு அவர்கள் கலிலேயாநாட்டிலே போய்ச் சஞ்சரித்த காலத்திலே இயேசுவானவர் சீஷரை நோக்கி மனிதனுடைய குமாரன் பொல்லாத மனிதர்களாற் கொலைசெய்யப்பட்

பேதுரு கிறிஸ்துவிடத்தில் என்ன சொன்னான்?
பேதுரு அப்படிப் பேசுகையில் என்ன சத்தத்தைக் கேட்டான்?
பின்பு அவர் எங்கே போனார்?

Digitized by Google

டு மூன்றாம் நாளிலே எழுந்திருப்பான் என்றார். அவர்கள் அதைக் கேட்டு மிகுந்த துக்கமடைந்தார்கள். பின்பு அவர்கள் கப்பர்நாகூம்ஊரிலே வந்த பொழுது வரிப்பணந் தண்டுகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து உங்கள் போதகர் வரிப்பணங் கொடுக்கிறதில்லையோ என்று விசாரித்ததை இயேசு அறிந்து இராசாக்கள் ஆர்கையிலே வரிவாங்குகிறார்கள்! தங்கள் பிள்ளைகள் கையிலோ அந்நியர்கையிலோ என்றார். அந்நியர் கையிலேதான் என்று பேதுரு சொன்னான். இயேசுவானவர் அவனுக்கு அப்படியானால் பிள்ளைகள் செலுத்த வேண்டுவதில்லையே, ஆனாலும் நம்மால் அவர்கள் விசனப்படாத படிக்கு நீ கடலுக்குப் போய்த் தூண்டிலைப் போட்டு முதற்படும் மீனை எடுத்து அதின்வாயைத் திறந்து பார், அதில் ஒருவெள்ளிக்காசைக் காண்பாய், அதை எடுத்துவந்து எனக்காகவும் உனக்காகவுங் கொடுவென்றார்.

கிறிஸ்துநாதர் மனிதனுடைய குமாரனுக்கு என்ன சம்
பவிக்கும் என்றார்? [ன்னார்?
வரிப்பணங் கேட்டவர்களுக்குக் கிறிஸ்து என்ன சொ
பணம் எப்படிக்கிடைத்தது? [வுக்கு எப்படித்தெரியும்?
மீனின் வயிற்றில் வெள்ளிப்பணம் உண்டென்று கிறிஸ்து

Digitized by Google

௬அ. அக்காலத்திலே சீஷர்கள் இயேசுவினிடத்திற் சேர்ந்து பரலோக இராச்சியத்தில் எவன் பெரியவனுய் இருப்பான் என்றதற்கு இயேசுவானவர் ஒரு பிள்ளையை அழைத்து அதை அவர்களுக்கு முன்பாக நிறுத்தி நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் பரலோக இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டீர்கள். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவனே பரலோக இராச்சியத்திற் பெரியவனுய் இருப்பான். அல்லாமலும் இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினுல் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிருன், என் மேல் விசுவாசமாயிருக்கிற இந்தச சிறியரில் ஒருவன் குற்றஞ் செய்வதற்கு எவன் காரணமாய் இருப்பானே அவன் தன்னுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டிச் சமுத்திரத்திலே விழுகிறது அவனுக்கு நன்மையாய் இருக்கும் என்ருர்.

பரலோக இராச்சியமாவதென்ன?
அதிற் பெரியவன் இன்னுன் என்று கிறிஸ்துநாதர் எப்படி விளங்கப்பண்ணினுர்?
அவர் எப்படிப் பட்டவர்களை ஏற்றுக் கொள்வார்?
குற்றஞ் செய்வதற்குக் காரணமாய் இருப்பவர்களைப் பற்றிக் கிறிஸ்துநாதர் என்ன சொன்னுர்?

Digitized by Google

௪௧. பின்பு கத்தராகிய இயேசு வேறும் எழுபது பேரை அப்போஸ்தலராக நியமித்து அவர்களுடனே உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னையும் அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணுகிறவனே என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறானென்று சொல்லி அனுப்பினார். அவர்கள் அவர் தங்களுக்குக் கற்பித்தபடி சனங்களுக்குப் போதகம்பண்ணிச் சந்தோஷித்துடனே திரும்பி வந்து ஆண்டவரே, பசாசுகளும் உம்முடைய நாமத்தினாலே எங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றனவென்றார்கள். அவரோ பசாசுகள் உங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறதினாலே நீங்கள் சந்தோஷிப்படாமல் உங்கள் நாமஞ் சீவபுத்தகத்திலே எழுதப்பட்டிருக்கின்றதென்று சந்தோஷிப்படுங்கவென்றார்.

இரண்டாந் தரம் எத்தனை பேரைச் சீஷராக அனுப்பினார்?
அவர்களுக்கு என்ன சொன்னார்?
அவர்கள் திரும்பி வந்து என்ன சொன்னார்கள்?
அவர் அதற்குச் சொன்ன மறுமொழி என்ன?
நாம் எதிலே சந்தோஷப்பட வேண்டும்?

Digitized by Google

[illegible]. பின்பு அவர் அப்புறம் போகையிலே பிறவிக்குருடனைக் கண்டு இவன் குருடனாய்ப் பிறந்தது இவன் செய்த பாவமோ இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்றார்கள். இயேசுவானவர் அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, பராபரனுடைய மகிமை இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டாக இப்படிப்பிறந்தானென்று சொல்லிச் சேற்றை உண்டாக்கி அவனுடைய கண்களிலே பூசி நீ போய்ச் சீலோவாக் குளத்திலே கழுவு என்றார். அந்தப்படி அவன் கழுவிப் பார்வை அடைந்தான்.

[illegible]. பின்பு ஒருவன் அவரை ஆண்டவரே இரட்சிக்கப்படுகிறவர்கள் கொஞ்சப் பேரோ என்றான். அதற்கு அவர் இடுக்க வாசலால் உட்பிரவேசிக்க பின்னும் பிரயாசப்படுங்கள். அநேகர். உட்பிரவேசிக்கத் தேடினாலும் பிரவேசிக்க

பிறவிக்குருடனைப் பற்றி அவரிடத்திலே சீஷர் என்ன கேட்டார்கள்?
கிறிஸ்து என்ன சொன்னார்?
அவனுக்கு என்ன செய்தார்?
அவனை எங்கே போய்க் கழுவச் சொன்னார்?
இரட்சிக்கப்படுகிறவர்கள் கொஞ்சப்பேரோ என்ற கேள்விக்குக் கிறிஸ்து என்ன உத்தரஞ் சொன்னார்?

Digitized by Google

மாட்டார்கள். வீட்டெசமான் கதவைப் பூட்டி
ன பின்பு நீங்கள் வெளியே நின்று கதவிலே தட்
டி ஆண்டவரே, ஆண்டவரே, திறக்க வேண்டு
மென்று கூப்பிடுவீர்கள். அவரோ நான் உங்களை
அறியேன் என்றுசொல்லுவார். அப்பொழுது
நீங்கள் உமக்கு முன்பாகப் போசனபானம் ப
ண்ணினோமே நீர் எங்கள் வீதிகளிலே போதகம்
பண்ணினீரே என்று சொல்லுவீர்கள். அவரோ
உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்கள்
எல்லாரும் என்னை விட்டகன்றுபோங்கள் என்
று சொல்லுவார். அப்பொழுது உங்களுக்கு அ
ழுகையும் பற்கடிப்பும் உண்டாகுமென்றார்.

௫௨. இயேசுவானவர் அவர்களுடனே, நான்
ஆடுகளின் வாசல், ஒருவன் என் வழியாய் உட்
பட்டாற் காக்கப்பட்டு உள்ளும் புறம்பும் மே
ய்ச்சலைக் கண்டுபிடிப்பான். அன்றியும் நானே
நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பனானவன் ஆ

கதவு பூட்டப்பட்ட பின்பு தட்டுகிறவர்களுக்கு என்ன சொல்வார்?
அவர்கள் என்ன சொல்வார்கள்?
அவர்களையுஞ் சேர்த்துக்கொள்வாரா?
ஆடுகளின் வாசல் ஆர்?
நல்ல இடையன் என்ன செய்வான்?

Digitized by Google

டுகளுக்காகத் தன் ஜீவனையுங் கொடுக்கிறான். மேய்ப்பனல்லாதவனும் ஆடுகளுக்குரித்தற்றவனுமான கூலியாள் கோனாய் வரக்கண்டு ஆடுகளை விட்டோடிப்போகிறான். என் பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும் நான் என் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்தும் அவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்.

௫. அன்றியும் ஒருவன் தனது தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நாட்டிச் சிலகாலம் அவவுங் கனி கொடுக்குமோ என்று காத்திருந்து அது கனி கொடாததைக் கண்டு தோட்டக்காரனை நோக்கி மூன்று வருஷக்காலமாக நான் இந்த மரத்திலே கனியைத் தேடிவந்துங் காணவில்லை. நீ இந்த மரத்தை வெட்டிச் சுட்டுப் போடென்றான். அதற்கவன் இந்த மரத்தைச் சுற்றிக் கொத்தி எருப் போட்டு இன்னம் ஒரு வருஷம்மட்டும்பார்ப்போம் அப்பொழுதுங் கனிகொடாதிருந்தால் மற்ற வருஷந் தறித்துச் சுட்டுப்போடலாமென்றான் என்றார்.

கூலியாள் என்ன செய்வான்?
கனி கொடாத அத்திமரத்தின் உவமை என்ன?
அதின் கருத்தென்ன?

Digitized by Google

௩௬. அன்றியும் ஒரு ஐசுவரியவானும் இலாசரு என்னப்பட்ட ஒரு தரித்திரனும் இருந்தார்கள். அந்தத் தரித்திரனானவன் மரித்து மோட்சத்திற் சேர்ந்தான். ஐசுவரியவானோ மரித்து நரகத்திலே விழுந்தான். அப்பொழுது அவன் ஆபிரகாமையும் இலாசருவையுந் தூரத்திலே கண்டு பிதாவாகிய ஆபிரகாமே, இந்தச் சுவாலையிலே மிகுந்த வேதனைப்படுகிறேன், ஆகையால் நீர் என்மேல் இரங்கி இலாசரு தன் விரல் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து என்னுடைய நாவைக் குளிரப்பண்ணும்படிக்கு அவனை அனுப்பவேண்டுமென்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம் இவ்விடத்தில் இருந்து உங்களிடத்திற் கடந்து போகவும் அல்லது அவ்விடத்தில் இருந்து எங்களிடத்துக்குக் கடந்து வரவுங் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாயிருக்கிறதே என்றான். அப்பொழுது அவன் பிதாவே, அப்படியானால் பூமியில் எனக்கு ஐந்து சகோதரர் இருக்கிறார்கள், அவர்களும் இந்த வேதனையுள்ள

இலாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமை என்ன?

Digitized by Google

இடத்துக்கு வாராதபடிக்கு இனசருக்குப் போய் அவர்களுக்குச் சாட்சிகொடுக்கும் பொருட்டாய் இவனை அவ்விடத்துக்கு அனுப்ப உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். அதற்கு ஆபிரகாம் அவர்களுக்கு வேதாகமங்கள் உண்டு, அவைகள் கொடுக்கிற சாட்சியைக் கேளாவிட்டால் மரித்தவன் எழும்பி அறிவித்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.

௰௭. பின்னும் அவர் சொன்னது, ஒருமனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கித் தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கைத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் பங்கிட்டுக் கொடுத்தான். சில நாளுக்குப் பின்பு இளைய மகன் எல்லாவற்றையுஞ் சேர்த்துக்கொண்டு தூரதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போய் அங்கே துன்மார்க்கமாய் நடந்து தன் ஆஸ்தியை அழித்துப்போட்டப் பின்பு அத்தேசத்திலே மிகுந்த பஞ்சம் உண்டானதினால் வருந்தி அத்தேசத்தில் குடிகளில் ஒருவனை அண்டி அ

இந்த உவமை என்னத்தைக் காட்டுகின்றது?

Digitized by Google

வனுடைய பன்றிகளை மேய்த்து வருகையிற் சிலவேளை அவைகள் தின்கிற தவிடு தானும் அவன் பசிக்குக் கிடைக்கிறது அரிதாயிருந்தது. இப்படியே அவன் தாழ்ச்சியடைந்ததினால் அவன் தன்னை உணர்ந்து நற்புத்தியடைந்து ஐயோ! என் தகப்பனை அண்டி எத்தனை பெயர் பிழைக்கிறார்கள், அவருடைய பிள்ளையாகிய நானோ என் கெடுமதியினாற் போசனம்இல்லாமற் சாகிறேன் என்று துக்கித்து என்ன செய்வேன்? என் தகப்பனிடத்துக்கே மறுபடியும் போவேன் என்றெண்ணிப் போக, தகப்பன் அவனைக் கண்டு இரங்கி ஓடி வந்து உருக்கமாய் அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தஞ்செய்தான். மகனோ தகப்பனே, தேவனுக்கும் உமக்கும் அடாதபாவஞ் செய்தேன், இது முதல் உம்முடைய மகன் என்னப்படுவதற்கு நான் அபாத்திரன் என்று சொன்ன பொழுது தகப்பன் வேலைக்காரரை நோக்கி என் மகனாகிய இவன் மரித்தவர்களில் ஒருவனாயிருந்தும் உயிர்த்தவனானான், காணமற் போனவனாயிருந்தும் இப்பொழுது காணப்பட்டான், ஆகையால் நீங்க

*கெட்ட குமாரனின் உவமை என்ன?

Digitized by Google

இதிலே நிற்பவர்கள் ஆர், தகப்பன் ஆர்? மகன் ஆர்?

Digitized by Google

ள் போய் மேலான உடுப்பைக் கொண்டுவந்து
இவனுக்கு உடுத்திக் கைக்கு மோதிரத்தையுங் கா
லுக்குப் பாதரட்சைகளையும் போட்டு விருந்து
உண்டுபண்ணுங்கள். நாம் புசித்து மகிழ்ச்சி
யாயிருக்கக் கடவோமென்றான். அந்தப்படி அ
வர்கள் செய்து சந்தோஷங்கொண்டாடினார்
கள்.

ருசு. அன்றியுந் தங்களைவிட நீதிமான்கள் இ
ல்லை என்று மற்றவர்களை அற்பமாக எண்ணுகி
ற சிலரோடே சொன்ன உவமையாவது; ஒரு
பரிசேயனும் ஒரு ஆயக்காரனுஞ் செபம்பண்
ணும்படிக்குத் தேவாலயத்துக்குப் போனார்க
ள். பரிசேயனானவன் தனித்து நின்று நான்ப
றிகாரர், அநீதர், விபசாரர் இப்படிப்பட்ட மற்
ற மனிதரைப் போலவுமல்ல, இந்த ஆயக்கார
னைப் போலவுமல்ல, ஆனபடியினாலே உமக்கு
த் தோத்திரஞ்செலுத்துகிறேன். வாரத்தில் இர
ண்டுதரம் உபவாசிக்கிறேன், என்வருமானங்கள்
எல்லாவற்றிலும் பத்தில் ஒன்றைத் தருமத்தில்
விடுகிறேன் என்றான். ஆயக்காரனோதூர நின்று
தன் கண்களையும் வானத்துக்கு உயர்த்தத் துணி

---

¹கெட்டகுமாரனைப்பற்றிய உவமையின் கருத்தென்ன?

Digitized by Google

யாமற் றன் மார்பில் அடித்துக்கொண்டு பராப
ரனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்
என்று வேண்டிக்கொண்டான். ஆகையாற் ப
ரிசேயன் அல்ல ஆயக்காரனே ஏற்றுக்கொள்
ளப்பட்டவனாய் வீட்டுக்குத் திரும்பினான். இப்
படியே தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படு
வான். தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்
படுவான் என்றார்.

௫௭. பின்பு அவரிடத்தில் ஆசீர்வாதம் பெ
றும்படி குழந்தைகளைக் கொண்டுவந்தவர்க
ளைச் சீஷர் கண்டு அதட்டினார்கள். இயேசுவா
னவரோ பிள்ளைகள் என்னிடத்துக்கு வருகிறத
ற்கு இடங்கொடுங்கள். பராபரனுடைய இரா
ச்சியம் அப்படிப்பட்டவர்களுடையதே. எவ
னாகிலும் பிள்ளையைப் போலப் பராபரனுடை
ய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால்
அதிற் பிரவேசிக்க மாட்டான் என்றார்.

பரிசேயன் ஆயக்காரன் என்றவர்களின் உவமை என்ன?
இதினால் என்ன படிப்பினை?
சனங்கள் ஆரைக் கிறிஸ்துவண்டைக்குக் கொண்டுவந்தார்கள்?
ஆர் தடைபண்ணினது?
கிறிஸ்து பிள்ளைகளைப் பற்றி என்ன சொன்னார்?

Digitized by Google

பிள்ளைகளை ஏன் கிறிஸ்துநாதரிடத்திற் கொண்டுவந்தார்கள்?
அவரைச் சூழ நிற்கிறவர்கள் ஆர்?

Digitized by Google

௫௮. அப்பொழுது தலைவனொருவன் அவரை நோக்கி நல்ல போதகரே, நான் நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். அதற்கு இயேசுவானவர் கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். அவனே அந்தக் கற்பனைகளை எல்லாம் என் சிறு வயசு முதற் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அதைக் கேட்டு அவனுடனே பின்னும் ஒன்றை நீ செய்ய வேண்டியதாய் இருக்கின்றது. உனக்கு உண்டானவைகளை எல்லாம் நீ விற்றுத் தரித்திரருக்குப் பங்கிட்டுக் கொடுத்துப் பின்பு வந்து எனக்குப் பின்செல்லென்றார். அவன் ஐசுவரியவானானபடியினாலே அந்த வசனத்தைக் கேட்டபொழுது மிகுந்த துக்கமடைந்து போனான்.

௫௯. பெத்தானியா ஊரிலிருந்த மரியாள் மார்த்தாள் என்பவர்களுடைய சகோதரனுந் தம்முடைய சிநேகிதனுமாகிய இலாசரு என்பவன் இறந்து போனதை இயேசு கேள்விப்பட்டு அங்

தலைவனொருவன் அவரை என்ன கேட்டான்?
கிறிஸ்து அவனை என்ன செய்யச் சொன்னார்?
அவன் என்ன செய்தான்?
கிறிஸ்து எந்தச் சாவீட்டுக்குப் போனார்?

Digitized by Google

தேபோனார். அப்பொழுது மார்த்தாள் இயேசு
விடத்தில் வந்து ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீ
ரானால் என் சகோதரன் மரிப்பதில்லை. ஆனாலும்
நீர் பராபரனிடத்தில் எதைக் கேட்பீரோ
அவைகளை எல்லாம் அவர் உமக்கு அருளுவார்
என்று அறிந்திருக்கிறேன் என்றாள் அதற்கு இ
யேசுவானவர். உன் சகோதரன் உயிரோடெழு
ந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள் மரண
மடைந்த சகலரும் உயிர்த்தெழும்புங் கடைசி
நாளிலே அவனும் எழுந்திருப்பானென்று அறி
வோமென்று சொல்ல இயேசுவானவர் நானே
உயிரோடெழுந்திருக்குதலுமாய்ச் சீவனுமாய்
இருக்கிறேன், என்னில் விசுவாசமாயிருக்கிறவன்
மரித்தும் பிழைப்பான், இதை விசுவாசிக்கிறாயா
என்றார். அதற்கு அவள் ஆம், ஆண்டவரே,
நீர் கிறிஸ்து, நீர் பராபரனுடைய குமாரன், நீர்
உலகத்தின் இரட்சகர் என்று நான் விசுவசிக்கி
றேன் என்றாள். பின்பு அவனை எங்கே வைத்தீர்
களென்று இயேசுவானவர் கேட்டு அவன் அட

மார்த்தாள் கிறிஸ்துவுக்கு என்ன சொன்னாள்?
உயிர்த்தெழும்புதலைப் பற்றிக் கிறிஸ்துவும் மார்த்தாளும் பேசின காரியம் என்ன?
கிறிஸ்துவைப் பற்றி என்னென்று விசுவாசித்தாள்?

Digitized by Google

க்கம்பண்ணப்பட்ட கல்லறைக்கு வந்து அதை மூடிவைத்த கல்லை எடுக்கச் சொன்னார். மாரித்தாள் அவரை நோக்கி ஆண்டவரே, இவனை அடக்கம்பண்ணி நாலுநாளானதினாலே நாறுமே என்றாள். அவளுடனே இயேசு நீ விசுவாசித்தால் பராபரனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையோ என்று சொல்லித் தமது கண்களை உயர்த்திப் பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுப்பதினாலே உம்மைத் தோத்திரஞ்செய்கிறேன். சூழ நிற்கிற சனங்கள் நீர் என்னை அனுப்பினதை விசுவாசிக்கும்படிக்கு அவர்கள் நிமித்தம் இப்படிச் சொன்னேனென்று சொல்லிப் பின்பு இலாசருவே, வெளியே வா என்று கூப்பிட மரித்தவன் பிரேதத்துக்குக் கட்டின் கட்டுக்களுடனே வெளியே வந்தான். அப்பொழுது இயேசுவானவர் இவனுடைய கட்டுக்களை அவிழ்த்துப் போகவிடுங்கள் என்றார்.

மரித்தும் பிழைக்கிறவன் ஆர்?
இலாசரு எத்தனைநாளாய் அடக்கம்பண்ணப்பட்டான்?
கிறிஸ்து எங்கே போனார்?
இலாசரு வைக்கப்பட்ட கல்லறையண்டையிலே என்ன செய்தார்?

Digitized by Google

௯௰. இயேசுவானவர் ஒருதரந் தருமப் பெட்டிக்கு எதிரே உளுக்கார்ந்த பொழுது அதிலே சனங்கள் பணத்தைப் போடுகையில் அனேகம் ஐசுவரியவான்கள் பணங்களை மிகவும் போட்டதையும் ஒரு ஏழைக் கைம்பெண் இரண்டு காசு கொண்டு வந்து போட்டதையுங் கண்டு தம்முடைய சீஷர்களுடனே இந்தத் தருமப் பெட்டியிற் பணம் போட்டவர்கள் எல்லாரிலும் இவளே அதிகமாய்ப் போட்டாள். ஏனெனில் எல்லாருந் தங்கள் ஐசுவரியத்தில் எடுத்துப்போட்டார்கள், இவ்வேழைக் கைம்பெண்ணோ தன் எளிமையினாற் தன் சீவனத்துக்கு உண்டான யாவையும் போட்டுவிட்டாள் என்றார்.

௯௧. பரலோக இராச்சியத்தார் தங்கள் தீவத்திகளைப் பிடித்து மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுகிற பத்துக் கன்னிகளுக்கு ஒப்பாயிருப்பார்கள். அவர்களிற் புத்தியுற்ற ஐந்துபேர் தங்கள் தீவத்திகளையும் எண்

இரண்டு காசு போட்ட ஸ்திரியைப் பற்றிக் கிறிஸ்து என்ன சொன்னார்?

பரலோக இராச்சியத்தார் ஆருக்கு ஒப்பாய் இருக்கிறார்கள்?

ணெய்யையுங் கொண்டுபோகப் புத்தியற்றோர் எண்ணெய் இல்லாமற் போனார்கள். மணவாளன் வரத் தாமதித்த பொழுது எல்லாரும் நித்திரையடைந்தார்கள். நடுச்சாமத்திலே இதோ மணவாளன் வருகிறாரென்ற ஆரவாரத்தைக் கேட்டு எல்லாரும் எழுந்த பொழுது புத்தியற்றோர் எங்கள் தீவர்த்திகளுக்கு எண்ணெய் இல்லையே, நீங்கள் தாருங்கள் என்று புத்தியுற்றோரைக் கேட்க அவர்கள் நீங்கள் கடைக்காரரிடத்திற் போய்க் கொள்ளுங்கள் என்றார்கள். அந்தப்படி அவர்கள் கொள்ளப்போயிருக்கிற பொழுது மணவாளன் வந்து எத்தனமாய் இருந்தவர்களுடனே கூட மணஅறைக்குட் பிரவேசித்தார். பின்பு மற்றக் கன்னிகளும் வந்து ஆண்டவரே, ஆண்டவரே, கதவைத திறக்க வேண்டுமென்றார்கள். அதற்கு அவர் உங்களை அறிய மாட்டேன் என்றார். இவ்வண்ணமாய் மனிதனுடைய குமாரன் வரும் நாளையாகிலும் நாழிகையையாகிலு

புத்தியுள்ள கன்னிகைகள் என்ன செய்தார்கள்?
புத்தியற்றவர்கள் என்ன செய்தார்கள்?
மணவாளன் எப்பொழுது வந்தான்?
புத்தியுற்றோருக்கு என்ன சம்பவித்தது?
புத்தியற்றோருக்கு என்ன சம்பவித்தது?

Digitized by Google

ம் நீங்கள் அறியாமல் இருக்கிறபடியினால் விழித்துக்கொண்டிருக்கக் கடவீர்கள் என்றார்.

௬௨. ஒரு பிரபு தன்னுடைய தோட்டத்தைச் செப்பனிட்டு அதிலே பலவகை மரங்களை நட்டுத் தோட்டக்காரர் வசத்திலே ஒப்புவித்துப்பிறதேசத்துக்குப் போய்க் கனிகொடுக்கிற காலத்திலே அவைகளின் கனிகளை வாங்கிவரும்படி தன் ஊழியக்காரரை அனுப்பினான். அவர்கள் வந்து கேட்டதற்கு அவர்களைப் பிடித்துப் பலவகையான ஆக்கினைகளைப் பண்ணிக்கொன்றுபோட்டார்கள். அதையும் எசமான் அறிந்து தன் மகனை அனுப்பினான். இவர்கள் அவனுடைய சுதந்திரத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றெண்ணி அவனையும் பிடித்துக் கொன்றுபோட்டார்கள். அப்பொழுது அவர்களை அந்தப் பிரபு என்னசெய்வான் என்று அவர்களிடத்திற் கேட்டார். அவர்கள் அந்தப் பொல்லாதவர்களை அழித்துத் தனக்குக் கனிகொடுக்கக் கூடிய மறுபேர் வசத்திலே அந்தத் தோட்டத்

இந்த உவமையின் கருத்தென்ன?
ஒரு பிரபு தோட்டத்தை மறுபேர் வசம் விட்டுப் போனதும் பின்பு நடந்த காரியங்களும் என்ன?

Digitized by Google

தை ஒப்புவிப்பான் என்றார்கள். அதுபோலப் பராபரனுடைய இராச்சியம் உங்களைவிட்டெடுக்கப்பட்டு மறுபேருக்குக் கொடுக்கப்படும். மேலும் இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொருக்கப்படுவான், இது எவன்மேல் விழுமோ அது அவனை நருங்க நக்கும் என்றார்.

கூரு. அன்றியும் மனிதனுடைய குமாரன் தம்முடைய சகல பரிசுத்த தூதர் சூழ வந்து தமது மகிமையான ஆசனத்தின் மேலே வீற்றிருந்து உலகத்தார் எல்லாரையுந் தமக்கு முன்பாகச் சேர்த்துத் தமது கட்டளைக்கு அமைந்து நடந்தவர்களை வலது பக்கத்திலேயும் மற்றவர்களையோ இடது பக்கத்திலேயும் நிற்கப் பண்ணி வலது பக்கத்தவர்களை நோக்கி என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்றும் இடது பக்கத்தவர்க

அந்தப் பிரபுவைப்பற்றிய உவமையின் படிப்பனை என்ன?
மனிதனுடைய குமாரன் தமது தேவதூதருடனே வரும்பொழுது என்ன செய்வார்?
இடது பக்கத்தில் நிற்பவர்கள் ஆர்?
வலது பக்கத்தில் நிற்பவர்கள் ஆர்?

Digitized by Google

ளை நோக்கிச் சபிக்கப்பட்டவர்களே, நீங்கள் என்னை விட்டுப் பசாசுக்கும் அதின் தூதருக்கும் எத்தனம்பண்ணப்பட்ட நித்திய நரகத்துக்குப் போங்கள் என்றுஞ் சொல்லுவாரென்றார்.

௬௪. அன்றியும் இயேசுவானவர் பெத்தானியா ஊரிலே குஷ்டரோகியாய் இருந்து சுகமடைந்த சீமோனுடைய வீட்டிற் பந்தியிருக்கிறபொழுது ஒரு இஸ்திரி விலையேறப்பெற்ற ஒரு கலசம் பரிமளதயிலத்தைக் கொண்டுவந்து அவர் சிரசின் மேல் ஊற்றினதைச் சீஷர் கண்டு விசனமடைந்து இந்த வீண் செலவு என்னத்துக்கு? இதை நல்ல விலைக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள். இயேசுவானவர் அதை அறிந்து நீங்கள் இந்த இஸ்திரியைத் தொந்தரவுபண்ணுவானேன்? தரித்திரர் உங்களுடனே எப்பொழுதும் இருக்கிறார்கள், நானோ அப்படி இருப்பதில்லை. இவள் இந்தத் தயிலத்தை என் சரீரத்தின் மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செ

அவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?
குஷ்டரோகியான சீமோன் வீட்டிலே கிறிஸ்துநாதர் இருந்த பொழுது ஒரு இஸ்திரி என்னசெய்தாள்?
சீஷர் என்ன சொன்னார்கள்?
கிறிஸ்து அதற்கு என்ன மறுமொழி சொன்னார்?

ய்கையாய் இருக்கின்றதென்று சொன்னார்.

௪௫. இயேசுநாதர் கடைசியாகத் தம்முடைய சீஷருடனே பஸ்காப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கு உளுக்கார்ந்த பொழுது சீஷர் தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்று வாதுபண்ணினதை அவர் கண்டு இராசாக்கள் சனங்களைப் பலபந்தமாய் ஆண்டுகொள்ளுகிறார்கள். உங்களுக்குள் அப்படி இருக்கவேண்டாம். உங்களிற் பெரியவன் சிறியவனைப்போலவுந் தலைவன் ஊழியகாரனைப் போலவும் இருக்கக்கடவன். பணிவிடைசெய்கிறவனைப் பார்க்கப் பந்தியிருக்கிறவன் பெரியவன். அப்படி இருந்தும் நான் உங்களுக்குள்ளே பணிவிடைசெய்கிறவனைப் போல இருக்கிறேனென்று சொல்லி ஒரு புடைவையைத் தமது அரையிலே கட்டிக்கொண்டு சீஷருடைய கால்களைக்கழுவி அந்தப்புடைவையாலே துடைக்கையிற் சீமோன் பேதுரு அவரை நோக்கி ஆண்டவரே, நீர் என்கால்களைக் கழுவலாமா என்றான். அதற்கு இயேசுவானவர்

பஸ்காவிருந்தைக் கடைசியிலே அனுபவிக்கையிற் சீஷருக்குள் என்ன வாது உண்டாயிற்று?
கிறிஸ்து அவர்களுக்கு என்ன சொன்னார்?
என்ன செய்தார்?

Digitized by Google

நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய் இனிமேலோ அறிவாய் என்றார். பேதுரு பின்னும் அவருடனே நீர் என்கால்களை ஒருக்காலுங் கழுவவேண்டாம் என்றான். அதற்கு இயேசுநாதர் நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னோடே உனக்குப் பங்கில்லை என்றார். அப்பொழுது சீமோன் பேதுரு ஆண்டவரே, அப்படியானால் என் கால்களைமாத்திரமல்ல என் கைகளையுந் தலையையுங் கூடக் கழுவுமென்றான். இயேசுவானவர் இஸ்நானம் பண்ணினவன் கால்களைமாத்திரங் கழுவவேண்டும் மற்றயாவும் அவனிற் சுத்தமாயிருக்கும். நீங்கள் அவ்விதமாய்ச் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆனாலும் எல்லாரும் அல்ல என்றார். பின்பு அவர் தமது மேலங்கியைத் தரித்துக்கொண்டு உட்கார்ந்து உங்கள் பரமஎசமானாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவினதினாலே நீங்களும் ஒருவருக்கொருவர் எப்படி நடக்கவேண்டும் என்று அறிந்துகொள்ளுங்கள். நீங்களும் இப்படிச்செய்வீர்களாகிற் பாக்கியவான்களாய் இருப்பீர்களென்று சொன்னார்.

இதினால் என்னத்தைக் காண்பித்தார்?
கிறிஸ்துவும் பேதுருவும் என்ன பேசிக்கொண்டார்கள்?

Digitized by Google

௯௪. மேலும் அந்த விருந்தை அநுபவிக்கையிற் தம்முடைய சீஷருடனே உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று சொன்னதால் அவர்கள் மிகவுந் துக்கப்பட்டு அவரை நோக்கி ஆண்டவரே, நானோ, நானோ என்று ஒவ்வொருவராய்க் கேட்டார்கள். அதற்கு அவர் என்னோடே கூட உண்கலத்திற் கை தோய்க்கிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பவன். மனிதனுடைய குமாரனுக்குத் தன்னைக் குறித்து எழுதியிருக்கிற விதமாய் நடக்கும். அப்படி இருந்தாலும் அவனை எவன் காட்டிக்கொடுப்பானோ அவனுக்கு வேதனை வரும் என்றார். பின்பு அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிற யூதாவும் அவரை நோக்கி இரபீ, நான் அப்படிச் செய்வேனோ என்றான். நீ சொன்னபடியே ஆகும் என்றார். உடனே அவன் புறப்பட்டு வெளியே போனான்.

௯௫. அப்பொழுது இயேசுவானவர் அவர்

உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று கிறிஸ்து சொன்னபொழுது சீஷர்கள் என்ன சொன்னார்கள்?

கிறிஸ்துநாதர் என்ன சொன்னார்?

தம்மை ஆர் காட்டிக்கொடுப்பான் என்றார்?

Digitized by Google



கிறிஸ்துநாதரும் அவருடைய சிஷரும் பண்டிகை ஆசரிக்கிற பாவனை.

Digitized by Google

களை நோக்கி இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னைக் குறித்து இடறலடைவீர்கள் என்று சொல்ல, பேதுரு ஆர் இடறலடைந்தாலும் நான் இடறலடையேன் என்றான். கிறிஸ்துநாதரோ இந்த இராத்திரியிலே சேவற்கூவுதற்கு முன்னே நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்றார். அதற்கு அவன் நான் உம்முடனே சாக வேண்டிவந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன் என்றான். மற்றவர்களும் அப்படியே சொன்னார்கள்.

௩௮. பஸ்காப் பண்டிகை முடிந்த பின்பு இயேசுவானவர் அப்பத்தை எடுத்து இஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து இதுவே உங்களுக்காகக் கொடுக்கிற என் சரீரம், நம்மை நினைக்கிறதற்காக இதைப் புசியுங்கள். உங்கள் இருதயங்கள் கலங்காதிருப்பதாக. பராபரனில் நம்பிக்கையாய் இருங்கள் என்னிலும் நம்பிக்கையாய் இருங்கள். நான் முன்

கிறிஸ்துநாதர் அன்றிராத்திரியிலே ஆர் இடறலடைவார்கள் என்றார்?
பேதுரு கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?
அவனுக்குக் கிறிஸ்துநாதர் சொன்ன மறுமொழி என்ன?
எல்லாரும் கூடி என்ன சொன்னார்கள்?
பஸ்காப்பண்டிகைமுடிந்த பின்பு என்ன சம்பவித்தது?

Digitized by Google

சொன்னபடி உங்களுக்கொரு இஸ்தலத்தை ஆ
யத்தனம்பண்ணப் போகிறேன். நான் போய் ஆ
யத்தனம்பணணின பின்பு நான் இருக்கிற இடத்தி
லே நீங்களும் இருக்கும்படிக்குத்திரும்பிவந்து
உங்களை என்னிடத்திற் சேர்த்துக்கொள்வேன்.
நானே வழியுமாய்ச் சத்தியமுமாய்ச் சீவனுமா
ய் இருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவ
னும் பராபரனிடத்திற் சேருவதில்லை. இது
வுமல்லாமல் நீங்கள் என் நாமத்தைக்கொண்
டு எதைக்கேட்பீர்களோ அது எல்லாம் உங்களு
க்குக் கொடுக்கப்படும். நீங்கள்என்னில்அன்பு
கூர்ந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்க
ள். என்றென்றைக்கும் உங்களுடனேகூட இரு
க்கும்படிக்கான சத்திய ஆவியான தேற்றுகிற
வரைப் பிதாவானவர் உங்களுக்குக் கொடுக்கும்
படிக்கு நான் அவரை வேண்டிக்கொள்வேன்
என்று சொல்லி அதின் மேற் பாத்திரத்தையும்
எடுத்து, இது உங்களுக்காகச் சிந்தப்படுகிற இ
ரத்தத்தின் புது உடன்படிக்கை, இதில் நீங்கள்
எல்லாரும் குடியுங்கள் என்று அவர்களுக்குக்

இராப்போசனத்தைப் பற்றிய சகலத்தையுஞ் சொ
ல்லு.

கொடுத்து, நான் கொடி நீங்களோ கிளைகள், கிளை கொடியில் நீங்கினால் கனிகொடுக்கக் கூடாதது போல் ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் அவன் கனிகொடுக்கக் கூடாது. நீங்கள் என்னிலேயும் என் வசனங்கள் உங்களிலேயும் நிலைத்திருந்தால் எதைக் கேட்பீர்களோ அது உங்களுக்குண்டாகும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுத்து எனக்குச் ஜீஷர்களாவதிலே என் பிதாப் புகழப்படுவார். பிதா என்னில் அன்புகூர்ந்திருக்கிறதுபோல நானும் உங்களில் அன்புகூருகிறேன், என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள், நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்து அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். நான் உங்களில் அன்புகூருகிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படி கட்டளையிடுகிறேன் என்று சொல்லி முடித்த பின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு உயர்த்திப் பிதாவே, நேரம் வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குக் கொடுத்த யாவருக்கும் அவன் நித்திய

தனையுஞ் ஜீஷரையும்பற்றி என்ன சொன்னார்?

அவர்கள் அவ்விடத்தைவிட்டுப் புறப்படுமுன் இயேசுநாதர் பண்ணின வேண்டுதல் என்ன?

Digitized by Google

சீவனைக் கொடுக்கும் பொருட்டாய் எல்லா மனிதர் மேலும் அவனுக்கு அதிகாரங் கொடுத்தபடியே உம்முடைய குமாரன் உம்முடைய மகிமை விளங்கப்பண்ணும்படிக்கு நீர் அவனை மகிமைப்படுத்துவீராக. ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பின இயேசுக் கிறிஸ்துவையும் அறிந்துகொள்ளுகிறதே நித்திய சீவன். நான் வேண்டிக்கொள்ளுகிறது உலகத்தாருக்காகவல்ல, நீர் எனக்குக் கொடுத்தவர்கள் உம்முடையவர்களானபடியால் அவர்களுக்காகவும் அவர்கள் போதிப்பினால் என்னில் விசுவாசமாகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார்.

௬௯. இவ்வண்ணமாய் வேண்டுதல்பண்ணித் தோத்திரப் பாட்டையும்பாடி இயேசுவானவர் சீஷருடனே கெத்சேமனே என்னும் இடத்துக்குப் போய்ச் சீஷரை நோக்கி நான் வேண்டுதல்பண்ணிவரும் அளவும் நீங்கள் இவ்விடத்தில் உளுக்கார்ந்திருங்கள் என்று சொல்லிப் பேதுருவையும் செபதேயுவின் குமாரர் இருவரையுங் கூட்டிக்கொண்டு சற்றப்பறம் போய்த் துக்

அவர் வேண்டுதல்பண்ணின பின் என்னசெய்தார்கள்?
ரனப்பாட்டுப் பாடினபின் எங்கேபோனார்கள்?

Digitized by Google

கமுங் கலக்கமுமடைந்து அவர்களை நோக்கி என் ஆத்துமா மரண அவஸ்தைப்பட்டிருக்கின்றது. நீங்கள் இங்கே தரித்து என்னோடே கூட விழித்திருங்கள் என்று சொல்லித் தனியே போய் முழங்காற்படியிட்டு என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும், என்னுடைய சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவதென்று சொல்லி வேண்டுதல்பண்ணுகையில் அவர் மரண அவஸ்தைப்பட்டதினாற் சரீரத்திலே இரத்த வேர்வை உண்டாயிற்று. அப்பொழுது வானத்தில் இருந்து ஒரு தேவ தூதன் வந்து அவரைப் பலப்படுத்தினான். பின்பு அவர் சீஷரிடத்தில் வந்து அவர்கள் நித்திரைபண்ணக் கண்டு பேதுருவை நோக்கி ஒரு மணித்தியாலமாகுதல் என்னோடே கூட விழித்திருக்கத் திராணியில்லையோ? நீங்கள் குற்றத்துக்கு ஏதுவாய்ப் போகாதபடிக்கு விழித்திருந்து வேண்டுதல்பண்ணுங்கள். ஆவி மனதுள்ளதுதான் சரீரமோ பலவீனமுள்ளதென்று சொல்லித் திரும்பிப் போய் முன்போல வேண்டுதல்பண்ணி வந்து

கெத்சேமனே என்னுந் தோட்டத்திற் சம்பவித்ததெ
அங்கே நடந்தயாவையுஞ் சொல்லு? [ன்ன?

Digitized by Google

பின்னும் அவர்கள் நித்திரைபண்ணியதைக் கண்டு அவர்களை எச்சரித்து இப்படியே மூன்றும் முறையும் போய் வேண்டுதல்பண்ணித் திரும்பிவந்து நீங்கள் இன்னம் நித்திரைபண்ணியிருப்பீர்களா! மனுஷனுடைய குமாரன் பாவிகளுடைய கையிலே அகப்படுகிற நேரஞ் சமீபித்தது, காட்டிக்கொடுக்கிறவனுஞ் சமீபமாய் வருகிறான், எழுந்திருங்கள் போவோம் என்றார்.

௭௨. இஸ்காரியோத்தென்பவன் யூதச் சனங்களின் ஆசாரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் போய் இயேசுவை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி முப்பது வெள்ளிக்காசு க் கைக்கூலிவாங்கிக்கொண்டு நான் ஆரை முத்தஞ்செய்வேனோ அவரே இயேசு என்று குறிப்புச் சொல்லி அவர்கள் அனுப்பின திரளான சனங்களோடும் அழைத்துக்கொண்டுவந்து ரபீ வாழ்க என்று அவரை முத்தஞ்செய்தான். உடனே கூடவந்தவர்கள் இயேசுவைப் பிடித்துக்

ஆர் அவரைப் பிடிக்க வந்தது?
யூதாஸ் இஸ்காரியோத்து இயேசுநாதரை எப்படிக் காட்டிக்கொடுத்தான்?
எவ்வளவு பணத்துக்குக் காட்டிக்கொடுத்தான்?

Digitized by Google

கட்டி அன்று என்பவனிடத்திலே கொண்டு போக அவன் பிரதான ஆசாரியனாகிய காய்பா விடத்தில் அனுப்பினான்.

௧௧. அந்தச் சமயத்திலே பிரதான ஆசாரியரும் மூப்பரும் மற்றப் பெரிய சங்கத்தாரும் இயேசுவைக் கொலைசெய்யும்படிக்கு அவருக்கு விரோதமாய் அநேகர் வந்து சாட்சி சொன்னார்கள். ஒன்றும் ஒவ்வவில்லை. பின்பு இரண்டு பேர் வந்து இவன் தேவாலயத்தை இடித்துப் போடவும் மூன்றுநாளைக்குள்ளே அதைத் திரும்பக்கட்டவும் வல்லமையுள்ளவனாய் இருக்கிறேனென்று சொன்னான் என்றபொழுது பிரதான ஆசாரியன் எழுந்திருந்து அவரை நோக்கி இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொன்ன சாட்சியை நீ கேட்டாயே, இதற்கு மாறுத்தரம் என்ன சொல்லுகிறாய்? பராபரனுடைய குமா

அவர்கள் இயேசுவை ஆரிடத்துக்குக் கொண்டுபோனார்கள்?
அன்று அவரை ஆரிடத்துக்கு அனுப்பினான்?
காய்பா என்பவன் ஆர்?
கிறிஸ்துநாதருக்கு விரோதமாக ஆர் பொய்ச்சாட்சி தேடினது?
சாட்சிகள் பொருந்தினதோ?
இரண்டுபேர் ஒருமித்துச் சொன்ன சாட்சி என்ன?
பிரதான ஆசாரியன் கிறிஸ்துவுக்கு என்ன சொன்னான்?

Digitized by Google

ரஞகிய கிறிஸ்து நீதானே என்றான். அதற்கு இயேசுவானவர் நீர் சொன்னபடியே இருக்கின்றது. நீங்கள் மனிதனுடைய குமாரனைச் சருவ வல்லமையுள்ளவருடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கவும் வானத்தின் மேகங்கள்மேல் வரவுங் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௭௨. பிரதான ஆசாரியன் அதைக் கேட்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டுவதென்ன! இப்பொழுதே இவன் சொன்ன தேவ தூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு எப்படித்தோன்றுகின்றதென்றான். அவர்களோ இவன் கொலையுண்கப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள். சிலர் அவருடைய முகத்திலே துப்பி அவரைக் கையினாற் குட்டி அவருடைய கன்னத்திலே அறைந்து கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யாவன்! அதை ஞானதிருஷ்டியினாலே எங்களுக்குச் சொல்லும் என்று இழிவாய்ச் சொன்னார்கள்.

கிறிஸ்து என்ன மறுமொழி சொன்னார்?
அதைக்கேட்டுப் பிரதான ஆசாரியன் என்னசொன்னான்?
ங்கள் அவரைப்பற்றிச் சொன்ன தீர்மானம் என்ன?
ல் அவை என்ன செய்தார்கள்?

எ௬. அத்தருணத்திலே சங்கதியின் முடிவைப் பார்க்கும்படிக்குப் பேதுரு அரண்மனையின் பிரகாரத்திலே உளுக்கார்ந்திருக்க வேலைகாரி ஒருத்தி அவனிடத்தில் வந்து நீயுங் கலிலேயனாகிய இயேசுவுடனே கூட இருந்தாயென்றாள். அதற்கவன் நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாதென்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்துப் பின்பு மண்டபத்துக்குப் போனான். அங்கே வேறொரு பெண் அவனைக் கண்டு இவனும் நாசரேத்தூரானாகிய இயேசுவுடனே கூட இருந்தான் என்றாள். அவனோ அம்மனிதனை அறியமாட்டேனென்று மறுபடியும் ஆணையிட்டு மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து மெய்யாய் நீயும் அவர்களில் ஒருவன் உன் பேச்சினாலுந் தெரியும் என்றார்கள். அப்பொழுது நான் அந்த மனிதனை அறியவே இல்லை என்று சொல்லித் திட்டி ஆணையுமிட்டான். உடனே

பேதுரு எங்கே நின்றான்?
ஒரு ஸ்திரி அவனுக்கு என்ன சொன்னாள்?
பேதுரு அதற்கு என்ன சொன்னான்?
இன்னமும் அப்படிப் பேசின மற்றும் பேருக்கு என்ன சொன்னான்?
பேதுரு இயேசுவை எத்தனைதரம் மறுதலித்தான்?

Digitized by Google

சேவற் கூவிற்று. பேதுரு அதைக் கேட்டுச்
சேவற் கூவுமுன்னே நீ என்னை மூன்று தரம் ம
றுதலிப்பாய் என்று இயேசுவானவர் சொன்ன
வசனத்தை நினைத்துக்கொண்டு வெளியே போ
ய் மிகவும் மனநொந்து அழுதான்.

௭௪. விடியற்காலமான பொழுது சகல பிர
தான ஆசாரியருஞ் சனங்களின் மூப்பரும் இ
யேசுவைக் கொண்டுபோய்ப் போந்தியுப்பிலா
த்தென்னுந் துரையிடத்தில் ஒப்புக்கொடுத்து
அவரைச் சிலுவைமரத்தில் அறைய வேண்டும்
என்று முறையிட்டார்கள். அதற்குத் துரை இவ
ன் என்ன பொல்லாங்கைச் செய்தான் என்றதற்
கு அவர்கள் அவனைச் சிலுவைமரத்தில் அறைய
ப்பண்ணவேண்டுமென்று அதிகம் அதிகமாய்ச்
சத்தமிட்டார்கள். இப்படியே கலகம் அதிகமா
கிறதைப் பிலாத்துக் கண்டு சனங்களுக்கு முன்

என்னத்தை நினைவுகூர்ந்தான்?
தெரியவந்தபின் என்ன செய்தான்?
மறுநாட் காலமே பிரதான ஆசாரியருஞ் சனங்களும் கிறிஸ்துநாதரை ஆரிடத்திற் கொண்டுபோனார்கள்?
போந்தியுப் பிலாத்துவுக்கு என்ன முறையிட்டார்கள்?
பிலாத்து என்ன செய்தான்?
சனங்கள் பிலாத்துவுக்குச் சொன்னதென்ன?

Digitized by Google

பாகத் தண்ணீர் அள்ளிக் கைகளைக்கழுவி இந்த நீதிமானுடைய இரத்தத்தைச் சிந்தப் போகிறகுற்றம் என்மேலே இல்லை. நீங்களே அதற்குப் பொறுப்பாளிகள் என்றான். அதற்குச் சனங்கள் எல்லாரும் இவனுடைய இரத்தம் எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாகவென்றார்கள்.

௭௫. அப்பொழுது இயேசுவைச் சவுக்கினால் அடிப்பித்துச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். பின்பு துரையினுடைய சேவகர் இயேசுவை அதிகாரச் சாலையிலே கொண்டுபோய் அவருடைய வஸ்திரங்களைக் களைந்து சிவப்பான மேலங்கியை உடுத்தி முள்ளைக் கொண்டு ஒரு முடியைப் பின்னிச் சிரசின் மேற் சூட்டி வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து முழங்காற்படியிட்டு யூதரின் இராசாவே வாழ்க என்று சொல்லிப் பரிகாசம்பண்ணி அவர்மேலே துப்பி அந்தக் கோலை எடுத்துச் சிரசில் அடித்தார்கள்.

பிலாத்து சாட்சியாக என்ன செய்தான்?
சேவகர் கிறிஸ்துவுக்கு என்னசெய்தார்கள்?
அவரை எங்கே கொண்டுபோனார்கள்?
என்ன செய்தார்கள்?
என்ன சொல்லிச் சிரசிலே அடித்தார்கள்?

Digitized by Google

எசு. இப்படிச் செய்த பின்பு அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி அவர் மேற் சிலுவைமரத்தைச் சுமத்தித் தலையோட்டிடமென்று அருத்தங்கொள்ளுங் கொல்கதாவுக்குக் கொண்டுபோய் அவரைச் சிலுவைமரத்தில் அறைந்து அவருக்கு இருபக்கமும் வேறிரண்டு பேரையும் அறைந்தார்கள். போர்ச்சேவகர் அவருடைய வஸ்திரங்களை எடுத்து நாலுபங்காகப் பகிர்ந்தார்கள். அங்கியானது தையலில்லாமல் மேலேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டிருந்தபடியால் அதைக் கிழியாமற் சீட்டுப்போட்டு எடுத்துக்கொண்டார்கள்.

எஎ. அவரைக்காட்டிக் கொடுத்த யூதா என்பவன் அவர் மரண ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபமடைந்து திரும்ப அந்த முப்பது வெள்ளிக்காசையும் எடுத்துக்கொண்டு பிரதான ஆசாரியரிடத்துக்கு

அவருடனே எத்தனைபேரைச் சிலுவையில் அறைந்தார்கள்?

கிறிஸ்துவின் வஸ்திரங்களைப் போர்ச்சேவகர் என்னசெய்தார்கள்?

என்னத்துக்காகச் சீட்டுப்போட்டார்கள்?

Digitized by Google

ம் மூப்பரிடத்துக்கும் போய்க் குற்றமில்லாத வரை நான் காட்டிக்கொடுத்ததினால் எனக்குப் பாவம் வந்ததென்றான். அவர்களோ அதினால் எங்களுக்கென்ன? நீயே பாரென்றார்கள். உடனே அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துபோட்டுப் புறப்பட்டுப்போய் நான்றுகொண்டு செத்துவிட்டான். பிரதான ஆசாரியன் அந்தப் பணத்தை எடுத்து இது இரத்தக் கிரயம் ஆகையாற் காணிக்கைப் பெட்டியிலே போடக் கூடாதென்று சொல்லி ஆலோசனைபண்ணி அன்னியரை அடக்கம்பண்ணும்படிக்கு ஒரு குயவனுடைய நிலத்தைக் கொண்டுவிட்டான்.

௭௮. மேலுஞ் சிலுவையில் அறையப்பட்ட இரண்டு குற்றவாளிகளில் ஒருவன் அவரைத் தூஷணித்து நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்றான். மற்றவனோ அவனுடனே நீயும் நானுந் தகாதவைகளை

யூதா இஸ்காரியோத்து என்ன சொன்னான்?
வாங்கின பணத்தை என்னசெய்தான்?
பிரதான ஆசாரியன் அந்தப்பணத்தை என்னசெய்தான்?
கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்ட இரண்டு பேரும் என்ன சொன்னார்கள்?

Digitized by Google

க் செய்து நியாயமாய் ஆக்கினைப்படுகிறோம். இவரோ அப்படியல்லவென்று அவனைக் கடிந்துகொண்டு இயேசுவை நோக்கி ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்திற் சேரும் பொழுது அடியேனையும் நினைத்தருளும் என்றான். அவனோடே இயேசுவானவர் இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலே இருப்பாய் என்றார்.

௭௧. அல்லாமலும் இயேசு அறையுண்ட சிலுவை மரத்தினருகே அவருடைய தாயும் அவருடைய சகோதரிகளாகிய கிலேயோப்பா மரியாளும் மகுதலாவூர் மரியாளும் நின்றார்கள். அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய தாயையும் தமக்கு அன்பாயிருந்த இயோவானென்கிற சீஷனையுங் கண்டு தம்முடைய தாயைநோக்கி இஸ்திரியே அவனே உன் மகனென்றும் பின்பு சீஷனைநோக்கி அவளே உன் தாயென்றுஞ் சொன்னார். அந்நேரம் முதற்கொண்டு அந்தச் சீஷ

கூடச் சிலுவையில் அறையுண்டவர்களில் மனஸ்தாபப்பட்டவனுக்குக் கிறிஸ்து என்ன சொன்னார்?
சிலுவையின் அருகே யாரிருந்தனர்?
தாய்க்கு என்ன சொன்னார்?
தாம் அன்பாயிருந்த இயோவானுக்கு என்ன சொன்னார்?
அவன் என்ன செய்தான்?

Digitized by Google

ன் அவனைத் தன்னிடமாக வந்து அநுசரித்து வந்தான்.

அவ் அன்றைப்பிற்றினம் ஆறும் மணி நேரந் தொடங்கி ஒன்பதாம் மணி நேரம் வரைக்குந் தேசமெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. பின்பு ஒன்பதாம் மணிநேரத்திலே இயேசுவானவர் ஏலீ, ஏலீ, லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமாகக் கூப்பிட்டார் அதற்கு என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அருத்தமாம். அவ்விடத்தில் நின்றவர்களிற் சிலர் அதைக் கேட்டு இவன் எலியாவை அழைக்கிறான் என்றார்கள். அவர்களில் ஒருவன் ஓடிக் கடற்காளானை எடுத்துக் காடியில் தோய்த்து அதை ஒரு கம்பின் மேற் கொழுவி அவருக்குக் கொடுத்தான். மற்றவர்கள் எலியா இவனை இரட்சிக்க வருவானோ பார்ப்போம் என்றார்கள். இயேசுவானவர் மறுபடியும் மி

மத்தியானந் தொடங்கி மூன்று மணி வேளை மட்டும் என்ன சம்பவித்தது?
கிறிஸ்துநாதர் ௯ம் மணி நேரத்தில் என்ன சொன்னார்?
அது என்ன பாஷையின் சொல்லு?
அதற்குப் பொருள் என்ன?
அதைக் கேட்டவர்கள் என்ன நினைத்தார்கள்?
அவருக்கு என்னத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள்?

Digitized by Google

குந்த சத்தமிட்டு ஆவியை விட்டார். அப்பொ
ழுது தேவாலயத்தின் திரைச் சீலை மேலே
தொடங்கிக் கீழே வருமட்டும் இரண்டாகக் கி
ழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும்
பிளந்தன, கல்லறைகளுந் திறந்தன. இறந்து
போன பரிசுத்தவான்களில் அநேகர் அவர் எ
ழுந்திருந்த பின்பு உயிர்த்தெழுந்தார்கள். போ
ர்சசேவகரின் தலைவனும் அவனோடே கூட இ
யேசுவைக் காத்திருந்தவர்களும் பூமி அதிர்த்த
லையும் மற்ற யாவையுங் கண்டு மிகுந்த பய
மடைந்து மெய்யாய் இவர் தேவகுமாரன்தா
ன் என்று சொல்லிக்கொண்டார்கள்.

௮௧. அந்த நாள் ஓய்வுநாளுக்காயத்த நாளா
னபடியால் உடல்கள் ஓய்வுநாளிலே சிலுவை
மரத்தில் இராதபடிக்கு யூதர்கள் பிலாத்துவிட
த்திற் போய் அதில் இருந்து அவைகளை எடுத்து
ப்போடும்படியாய் உத்தரவு பெற்றுக்கொண்
டார்கள். அந்தப்படி போர்ச்சேவகர் வந்து அ
வருடனே கூடச் சிலுவைகளில் அறையப்பட்ட

அப்பொழுது அங்கே என்ன அதிசயம் சம்பவித்தது?
அதைக் கண்ட சனங்கள் என்ன சொன்னார்கள்?
சனங்கள் பிலாத்துவிடத்தில் என்ன கேட்டார்கள்?
போர்ச்சேவகர் என்ன செய்தார்கள்?

Digitized by Google

இருவருடைய காலெலும்புகளையும் முறித்துப் போட்டு இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்துப்போனதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறியாமல் விட்டார்கள். போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவிற் குற்றினான். உடனே இரத்தமும் நீரும் பெருகின.

அஉ. அஸ்தமனமான பொழுது ஐசுவரியமுள்ளவனுமாய் இயேசுவுக்கு அந்தரங்கச் சீஷனுமாய் இருந்த அரிமத்தியா ஊராளுகிய இயோசேப்பென்பவன் இயேசுவினுடைய சரீரத்தை அடக்கம்பண்ணும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு போய் அவருடைய சரீரத்தை எடுத்துத் துய்யதான மெல்லிய புடைவையாலே சுற்றித் தான் கன்மலையில் வெட்டுவித்திருந்த புதிய கல்லறையிலே வைத்து ஒரு பெரிய கல்லையும் புரட்டி அதின் வாசலில் வைத்துப்போட்டுப் போனான். அத்தருணத்திலே மகுதலா ஊராளாகிய மரியாளும் மற்ற மரியாளுங் கல்லறைக்கு எதிராக உளுக்கார்ந்தி

கிறிஸ்துவின் சரீரத்தைக் கேட்டதார்?
இயோசேப்பு அதை என்ன செய்தான்?
கல்லறைக்கு எதிரே உளுக்கார்ந்திருந்ததார்?

Digitized by Google

ஆரைச் சிலுவையில் இருந்து இறக்குகிறார்கள்?
அவரை அதில் இருந்து இறக்குகிறவர்கள் ஆர் ஆர்?

ருந்தார்கள்.

௮௯. மறுநாட் பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்திற் கூடிவந்து அந்த எத்தன் உயிரோடிருந்த பொழுது தான் மூன்று நாளைக்குள்ளே எழுந்திருப்பேன் என்று சொல்லியிருக்கிறான், ஆகையால் அவனுடைய சீஷர் இராத்திரியிலே வந்து அவனைக் களவாய்க் கொண்டுபோய்ப் பின்பு உயிர்த்தெழுந்தான் என்று சனங்களுக்குச் சொல்லி முந்தின வஞ்சனையைப் பார்க்கிலும் பிந்தின வஞ்சனை கொடிதாய் வராதபடிக்கு மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரம் பண்ணக் கட்டளையிட வேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்துக் காவற்சேவகர் உங்களுக்கு உண்டே, அவர்களைக் கொண்டு நீங்கள் உங்கள் இட்டப்படி அதைப் பத்திரம் பண்ணுவியுங்கள் என்றான். அந்தப்படி அவர்கள் போய் அதின் வாசலில் வைத்த கல்லுக்கு முத்திரைபோட்டுக் காவலாகப் போர்ச்சேவகரை வைத்து அதைப் பத்திரப்படுத்தினார்கள்.

பரிசேயரும் பிரதான ஆசாரியரும் கிறிஸ்துநாதரைப் பற்றிப் பிலாத்துவுக்கு என்ன சொன்னார்கள்?
பிலாத்து அவர்களுக்கு என்ன சொன்னான்?
கல்லறையைக் காக்கும்படி என்ன செய்தார்கள்?

Digitized by Google

௮௪. ஓய்வுநாளான பின்பு பராபரனுடைய தூதன் வானத்தில் இருந்து இறங்கி வந்து கல்லறையின் வாசலில் இருந்த கல்லைப் புரட்டித் தள்ளி அதின் மேல் உளுக்கார்ந்தான். அவனுடைய முகம் மின்னைப் போலப் பிரகாசமாயும் அவனுடைய உடை உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவல்காத்திருந்த போர்ச்சேவகர் அவனைக் கண்டு நடுங்கிச் செத்தவர்கள் போலானார்கள். அப்பொழுது மகதலா ஊராளாகிய மரியாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும் சாலோமே என்பவளும் அவர்மேற் பூசும்படிக்குச் சுகந்த வருக்கங்களை வாங்கிக்கொண்டு வந்தார்கள். அவர்களுந் தூதனைக் கண்டு திடுக்கிட்டுப் பயப்பட அவன் அவர்களுடனே நீங்கள் பயப்படவேண்டாம். சிலுவை மரத்தில் அறையப்பட்ட இயேசுவைத் தேடி வந்தீர்களென்று அறிவேன். அவர் தாஞ்சொன்னபடியே எழுந்தார், அவர் இங்கே இல்லை.

ஓய்வுநாளான பின்பு என்ன சம்பவித்தது?
பராபரனுடைய தூதரின் சாயல் என்ன?
போர்ச் சேவகருக்கு என்ன சம்பவித்தது?,
கிறிஸ்துவின் சரீரத்தின் மேல் தயிலம் பூசவந்தார்?
தூதர் அவர்களுக்கென்ன சொன்னார்கள்?

Digitized by Google

நீங்கள் வந்து அவரை வைக்கப்பட்ட இடத்தைப் பாருங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவார். அங்கே அவரைக் காண்பீர்கள். இதை அவருடைய சீஷருக்கும் அறிவியுங்கள் என்றான்.

௮. உடனே அவர்கள் பயத்தோடும் மிகுந்த சந்தோஷத்தோடுங் கல்லறையை விட்டுத் திரும்பிப்போய் அந்தச் சங்கதியைப் பதினொருவருக்கும் மற்றெல்லாச் சீஷர்களுக்கும் அறிவித்தார்கள். அவர்களோ அதை நம்பவில்லை. ஆகிலும் பேதுரு யோவான் என்கிற இருவருங் கல்லறையிடத்துக்குப் போக ஒருமித்துப் புறப்பட்டு ஓடிப்போனார்கள். பேதுருவைப் பார்க்கிலும் யோவான்தானே அதிக துரிதமாக ஓடி முன்னே வந்து கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்துச் சீலைகளைமாத்திரங் கண்டான். அவன் உள்ளே போகவில்லை. பேதுருவோ பின் வந்து கல்லறைக்குள்ளே புகுந்து சீலைகள்

இஸ்திரிகள் அதை ஆருக்குச்சொன்னார்கள்?
சீஷர் என்ன எண்ணங்கொண்டார்கள்?
கல்லறை அண்டைக்கு ஆர் போனது?
அங்கே ஆர் முதற் சேர்ந்தது?
கல்லறைக்குள்ளே ஆர் முதற்போனது?

Digitized by Google

வைத்திருக்கிறதையும் அவருடைய தலையைச் சு
ற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே இராம
ல் தனியே ஓரிடத்திலே சுருட்டி வைத்திருக்
கிறதையுங் கண்டான். அப்பொழுது யோவா
னும் உள்ளே பிரவேசித்து அதைக் கண்டு நம்
பிக்கைகொண்டான். அவர் மரணத்தை விட்டு
எழுந்திருக்க வேண்டும் என்கிற வேத வாக்கிய
த்தை அவர்கள் அதுவரைக்கும் அறிந்துகொள்
ளாதிருந்தார்கள். பின்பு இருவரும் தங்கள் இடத்
துக்குத் திரும்பினார்கள்.

௧௧. மரியாளோ மறுபடியும் வந்து கல்ல
றையின் அருகே அழுதுகொண்டு நின்றாள்.
அப்படி அழுதுகொண்டு கல்லறைக்குள்ளே
குனிந்து பார்த்து இயேசுவின் சரீரம் வைக்கப்ப
ட்ட இடத்திலே இரண்டு தூதர்கள் தலைமாட்டி
லே ஒருவனுங் கால்மாட்டிலே ஒருவனும் உளு
க்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவ
ளை நோக்கி இஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்றா
ர்கள். அதற்கு அவள் என் ஆண்டவரை எடுத்
துப்போனார்கள். அவரை வைத்த இடமோ எ

கல்லறையண்டையிலே ஆர் அழுதுகொண்டு நின்றாள்?
அவள் ஆரைக் கண்டாள்?
தூதர் மரியாளுக்கு என்ன சொன்னார்கள்?

Digitized by Google

னக்குத் தெரியவில்லை. அதினாலே அழுகிறேனென்று சொல்லிப் பின்னாகத் திரும்பி இயேசுவை நிற்கக் கண்டும் அவரை இயேசுவென்று அறியாதிருந்தாள். அப்பொழுது இயேசுவானவர் அவளை நோக்கி ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்? ஆரைத் தேடுகிறாய் என்றார். அவள் அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி அவருடனே ஐயா, நீர் அவரை எடுத்துப் போனீரானால் அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்ல வேண்டும். நான் போய் அவரை எடுத்துக்கொள்வேன் என்றாள். அதைக் கேட்டு இயேசுவானவர் மரியாளே என்க, அவளும் போதகரே என்றாள். இப்பொழுது நீ என் சகோதரரிடத்துக்குப் போய் எனக்கும் உங்களுக்கும் பிதாவுமாய்த் தேவனுமாய் இருக்கிறவரிடத்துக்கு எழுந்து போகிறேன் என்று சொல்லென்றார்.

௮௭. மகதலா ஊராளாகிய மரியாள் தான் கர்த்தரைக் கண்டதையும் அவர் தன்னுடனே சொன்னவைகளையுஞ் சீஷருக்கு அறிவிக்கப்போ

மரியாள் என்ன சொன்னாள்?
அவள் திரும்பிப் பார்த்த பொழுது ஆரைக் கண்டாள்?
அவள் கிறிஸ்துவை அறிந்தாளோ?
கிறிஸ்து அவளுக்கு என்ன சொன்னார்?

Digitized by Google

கையில் இயேசுவானவர் அவளுக்கும் அவளுட
னே போன இஸ்திரிகளுக்கும் எதிர்ப்பட்டு வா
ழ்க என்றார். உடனே அவர்கள் சேர்ந்து அவ
ரை வணங்கி அவருடைய பாதங்களைக் கட்டிப்
பிடித்தார்கள். அப்பொழுது இயேசுவானவர்
அவர்களுடனே பயப்படாதிருங்கள். என் ச
கோதரர் கலிலேயா நாட்டிலே என்னைக் காண்
பார்கள், ஆகையால் அவர்கள் அவ்விடத்துக்கு
ப் போகும்படிக்கு நீங்கள் போய்ச் சொல்லுங்
கள் என்றார்.

அஅ. காவற் பண்ணின சேவகரிற் சிலர் பட்
டணத்திலே வந்து எல்லா வத்தமானங்களையும்
பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். அப்
பொழுது அவர்களும் மூப்பர்களுங் கூடி யோ
சனைபண்ணி அந்தப் போர்ச்சேவகருக்குக் கன
பணத்தைக் கொடுத்து நீங்கள் போய் தாங்கள்
நித்திரைபண்ணுகையில் அவனுடைய சீஷர்கள்
அவனைக் களவாய்க் கொண்டுபோனார்கள் என்று
சொல்லுங்கள். துரை உங்களைக் கண்டியாதப

மரியாள் சீஷருக்குச் சொல்லப்போனபொழுது என்ன சம்பவித்தது?
கிறிஸ்துவைக் கண்ட இஸ்திரிகள் என்ன செய்தார்கள்?
ஆசாரியரும் மூப்பரும் போர்ச்சேவகருக்கு என்னகொடுக்கார்கள்? கொடுத்து என்ன சொல்லச் சொன்னார்கள்

Digitized by Google

டிக்கு நாங்கள் அவரைச் சமாதானப்படுத்தி உ
ங்களுக்கு உதவிசெய்வோம் என்றார்கள். போ
ர்ச்சேவகர் அந்தப் பணத்தை வாங்கிக்கொண்
டு அவர்கள் சொன்னபடியே சொல்லிப் பிரசி
த்தம்பண்ணினார்கள்.

அக. பின்பு சீஷர்களில் இரண்டுபேர் எம்
மாவு என்னும் ஊருக்கு நடந்துபோகையில்
இயேசுவானவர் தாமுஞ் சமீபமாகி அவர்களோ
டே பேசித் தம்மை வெளிப்படுத்திப் பின்பு
மறைந்துவிட்டார். அவ்விரண்டுபேருந் திரும்பி
அதை மற்றவர்களுக்கு அறிவித்தும் அவர்கள்
நம்பவில்லை. அப்படி அவர்கள் பேசிக்கொண்
டிருக்கையில் இயேசுவானவர் தாமே அவர்க
ளுக்குள் நின்று உங்களுக்குச் சமாதானம் உண்
டாவதாக என்றார். அவர்களோ அவரை ஒரு ஆ
வி என்று எண்ணிக் கலக்கமும் பயமுமடை
ந்தார்கள். அப்பொழுது அவர் நீங்கள் என் கல

சேவகர் அந்தப்படி சொன்னார்களோ?
எம்மாவு ஊருக்கு இரண்டு சீஷர்கள் போன பொழுது
என்ன சம்பவித்தது?
அந்த இரண்டு சீஷரும் என்ன செய்தார்கள்?
அவர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது ஆர் வந்தது?
சீஷர் என்ன நினைத்தார்கள்?

Digitized by Google

கலங்கியிருக்கிறீர்கள்? உங்கள் இருதயங்களில் ஏன்
சந்தேகம் உண்டாயிருக்கின்றது? என் கைக
ளையுங் கால்களையும் பாருங்கள், என்னைத் தொ
ட்டும் பாருங்கள், நீங்கள் காணும்படி எனக்கு
மாமிசமும் எலும்புகளும் உண்டாயிருக்கின்
றதுபோல ஒரு ஆவிக்கு இல்லையே என்று
சொல்லிக் கைகளையுங் கால்களையும் அவர்களு
க்குக் காண்பித்தார். ஆனாலுஞ் சந்தோஷத்தி
னாலே அவர்கள் பின்னும் விசுவாசியாமற் பிர
மிப்பாயிருக்க அவர் போசனத்துக்கு ஏதா
கிலும் இங்கே உண்டோ என்றார் அப்பொழு
து அவர்கள் பொரித்த மீன் கண்டத்தையுந்
தேன்கூட்டுத் துணுக்கையையும் அவருக்குக்
கொடுத்தார்கள். அவைகளை அவர் எடுத்து அவ
ர்களுக்கு முன்பாகப் புசித்துப் பின்பு அவர்க
ளுடனே மோசேயின் நியாயப்பிரமாணத்திலே
யுந் தீர்க்கதரிசனங்களிலேயுஞ் சங்கீதங்களிலே
யும் என்னைக் குறித்து எழுதியிருக்கிற யாவும்
நிறைவேறவேண்டுமென்று நான் உங்களோடே
இருந்த காலத்திலே சொல்லிக்கொண்ட சங்க
திகள் இவைகளே என்று சொல்லிப் பின்னுங்

இயேசு அவர்களுக்கு என்ன சொன்னார்?
...ர்களிடத்திலே என்ன கேட்டார்?

கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளிலே மரணத்தைவிட்டு எழுந்திருக்கவும் வேண்டும் என்கிற வேத எழுத்துக்களை அவர்களுக்கு அறிவித்து நீங்கள் உன்னதத்தில் இருந்து வருகிற பெலனைப் பெற்றுக்கொள்ளுகிற வரைக்கும் எருசலேம் பட்டணத்தில் இருங்கள் என்று கட்டளையிட்டு உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக, பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன், நீங்கள் உலகத்தில் எங்கும் போய் எவர்களுக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக்கப்படுவான் என்று சொல்லி அவர்கள் மேல் ஊதிப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்பட்டிருக்கும், எவர்களுடைய பாவங்களை மன்னியாமல் வைப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படாமல் இருக்கும் என்றார்.

௧௰. இயேசுவானவர் வந்து இவ்விதமாகப்

சாப்பிட்டு முடிந்தபின் சீஷருக்கு என்னசொன்னார்?

Digitized by Google

பேசின பொழுது டன்னிருவரில் ஒருவனாகிய தீதிமு என்னப்பட்ட தோமா அவர்களுடனே கூட இருந்ததில்லை. ஆதலால் மற்றச் சீஷர்கள் அவனுடனே நாங்கள் கத்தரைக் கண்டோம் என்றதற்கு அவன் அவருடைய கைகளில் ஆணி அறையுண்ட தழும்பை நான் கண்டு அந்தத் தழும்பிலே என் விரலையும் அவருடைய விலாவிலே என் கையையும் வைத்துப் பார்த்தாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். எட்டு நாளுக்குப் பின்பு ஒரு நாள் அவருடைய சீஷர்கள் ஒரு அறைக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களுக்குள்ளே இருந்தான். கதவுகளும் பூட்டப்பட்டிருந்தன. அப்பொழுது இயேசுவானவர் வந்து நடுவிலே நின்று உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று சொல்லிப்பின்பு தோமாவை நோக்கி உன் கையினாலே என் கைகளையும் என் விலாவையுந் தொட்டு அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு என்றார். தோமா அவருடனே என் கத்தாவே, என் தேவனே,

---

கிறிஸ்து அவர்களுக்குத் தரிசனையான பொழுது எவன் அவர்கள் கூட இருந்ததில்லை?
தோமா மற்றவர்களுக்கு என்ன சொன்னான்?
எட்டு நாளுக்குப் பின்பு என்ன சம்பவித்தது?

என்றான். இயேசுவானவர் தோமாவே, நீ என்னைக் கண்டபடியினாலே விசுவாசித்தாய், காணாமலிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

௯௧. அதன் பின்பு ஒரு நாட் சீஷர் மீன்பிடித்துக்கொண்டிருக்கையில் இயேசு திபேரியாவின் கடற்கரையிலே நின்றார். அவர்களோ இயேசுவென்று அறியவில்லை. அப்பொழுது அவர்களுடனே பிள்ளைகளே, போசனம்பண்ணுகிறதற்கு ஏதாகிலும் உண்டோ என்றார்! அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். அவரோ நீங்கள் படகுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அகப்படுமென்றார் அந்தப்படி அவர்கள் போட்டுத் திரளான மீன்கள் அகப்பட்டதினாலே அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள். இயேசுவுக்கு அன்பாய் இருந்த யோவான் பேதுருவை நோக்கி இவர் கர்த்தர் என்றான். பேதுரு அதைக் கேட்டவுடனே தான் வஸ்திரம் இல்லாத

மற்றவர்களுக்குக் கிறிஸ்து எங்கே தரிசனையானார்?
அவர்களிடத்தில் என்ன சொன்னார்?
அப்பொழுது என்ன சம்பவித்தது?

Digitized by Google

படியினாலே சட்டையைக் கட்டிக்கொண்டு கட லிலே குதித்தான். மற்றச் சீஷரோ ஏறக்குறைய இருநூறு முழம் மாத்திரங் கரைக்குத் தூரமானபடியினாலே மீன்களுடனே வலையை இழுத்துக்கொண்டு படகோடே கரைக்கு வந்தார்கள்.

௯. அவர்கள் கரையிலே வந்து இறங்கினபொழுது கரி நெருப்பு உண்டுபண்ணியிருக்கிறதையும் அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும் அப்பம் இருக்கிறதையுங் கண்டார்கள். பின்பு இயேசுவானவர் நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களிற் சிலவற்றைக் கொண்டுவாருங்களென்றார். சீமோன் பேதுரு படகுக்குத் திரும்பி நூற்றைம்பத்து மூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையிலே இழுத்தான். இவ்வளவு இருந்தும் வலை கிழிந்ததில்லை. பின்பு இயேசுவானவர் அவர்களை அழைத்துப் போசனம்பண்ண வாருங்களென்றார். அப்பொழுது அவரைக் கர்த்தரென்று சீஷர் அறிந்தபடியினு

கிறிஸ்து என்று அறிந்த பொழுது பேதுரு என்ன செய்தான்?
மற்றச் சீஷர் என்ன செய்தார்கள்?
கரைக்கு வந்த பொழுது என்ன சம்பவித்தது?
வர்களுக்கு மீன் எப்படி அகப்பட்டது?

Digitized by Google

லே அவர்களில் ஒருவனும் நீர் ஆரென்று கேட்கத் துணிந்ததில்லை. அன்றியும் இயேசுவானவர் சேர்ந்து அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார்.

௧௫. அவர்கள் போசனம்பண்ணின பின்பு இயேசுவானவர் சீமோன் பேதுருவை நோக்கி இயோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் நீ என்னில் அதிகமாய் அன்புகூருகிறாயா என்றார். அதற்கு அவன் ஆண்டவரே, நான் உம்மில் அன்பாயிருக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அவரோ நீ என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாகவென்றார். பின்பு அவர் இரண்டாந்தரம் அவனை நோக்கி இயோனாவின் குமாரனாகிய சீமோனே, என்னில் அன்புகூருகிறாயா என்றார். அதற்கும் அவன் ஆண்டவரே, நான் உம்மில் அன்புகூருகிறதை நீரே அறிந்திருக்கிறீர் என்றான். அவர் மறுபடியும் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். பின்பு அவர் மூன்றாந்தரம் அவனை நோக்கி இயோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்

சாப்பிட்டபின் கிறிஸ்து பேதுருவுக்கு என்ன சொன்னார்? பேதுரு எப்படி உணர்ந்தான்?

Digitized by Google

னில் அன்புகூருகிறாயா என்றார். இப்படியே அவர் பலமுறையுந் தன்னைக் கேட்டபடியினாலே அவன் துக்கமடைந்து ஆண்டவரே, எல்லாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர் நான் உம்மில் அன்புகூருகிறதையும் நீர் அறிந்திருக்கிறீர் என்றான். திரும்பவும் இயேசுவானவர் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

கூச. வேறொரு நாட் பதினொரு சீஷரும் மலையின் மேற் போயிருக்கையில் அவரைக் கண்டு வணங்கினார்கள். சிலபேரோ சந்தேகப்பட்டார்கள். அப்பொழுது இயேசுவானவர் சேர்ந்து பரமண்டலத்துக்கும் பூமண்டலத்துக்குஞ் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது; ஆகையால நீங்கள் புறப்பட்டு உலகத்தார் எல்லாரையுஞ் சீஷராக்கிப் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள் உலக முடிவுவரைக்கும் நான் எப்பொ

அதின் பின்பு கிறிஸ்துநாதர் எவ்விடத்திலே அவர்களுக்குத் தரிசனையானார்?
அவர்களுக்கு என்னசொன்னார்?

ழுதும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்
றார்.

௩௫. இவ்விதமாக அவர் பாடுபட்ட நாள்முத
லாக நாற்பது நாள் அளவும் அவர்களுக்குத்த
ரிசனையாகிப் பராபரனுடைய இராச்சியத்தைக்
குறித்து அவர்களுடனே பேசி அவர்களுக்கு அ
நேகந் திருட்டாந்திரங்களினாலே தம்மை உயி
ரோடிருக்கிறவரென்று காண்பித்தார். அன்றியு
ம் அவர்களைக் கூடிவரச் செய்து அவர்களை நோ
க்கி யோவான் சலத்தினாலே ஞானஸ்நானங் கொ
டுத்தான், நீங்களோ சிலநாட்களுக்குப் பின்பு பரி
சுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்பெற்றுக்கொ
ள்வீர்கள், ஆகையால் நீங்கள் எருசலேம் பட்
டணத்தை விட்டுப்போகாமற் பிதாவின் வாக்கு
த்தத்தம் நிறைவேறக் காத்திருங்களென்று கட்
டளையிட்டார். அப்பொழுது கூடிவந்திருந்தவர்
கள் அவரை நோக்கி ஆண்டவரே, இராசசிய

அவர் பாடுபட்டது முதற்கொண்டு எவ்வளவுகாலமாகத்
தரிசனையானார்?

ஏன் இத்தனைகாலமாக உலகத்தில் இருந்தார்?

ஞானஸ்நானத்தைப் பற்றிக் கிறிஸ்துநாதர் சீஷருக்கு என்ன சொன்னார்?

என்ன கட்டளை கொடுத்தார்?

Digitized by Google

பரிபாலனத்தை இஸ்ரவேலருக்கு நீர் திரும்ப
க்கொடுப்பது இக்காலத்திலோ என்று கேட்டா
ர்கள். அதற்கு அவர் பிதாவானவர் தம்முடை
ய அதிகாரத்திலே வைத்திருக்கிற காலங்களையா
கிலும் வேளைகளையாகிலும் அறிகிறது உங்களு
க்குத் தகாது, பரிசுத்த ஆவி உங்களிடத்தில்
வரும்பொழுது நீங்கள் பெலனடைந்து எருச
லேமிலும் யூதேயா சமாரியாத் தேசங்களிலு
ம் பூமியின் எல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிக
ளாயிருப்பீர்கள் என்று சொன்னார்.

௯. இவைகளைச் சொன்னபின்பு அவர்க
ளுடைய கண்களுக்கு முன்பாக மேகத்தில் ம
றைந்தவராய் அவர் வானத்துக்கு எழுந்து போ
னார். அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்
து நிற்கையில் வெண்மையான வஸ்திரமுள்ள இ
ரண்டு பேர் அவர்களருகே வந்து நின்று கலி
லேயரே, நீங்கள் என்னத்துக்காக வானத்தை
அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களைவிட்

சீஷர் என்ன கேட்டார்கள்?
அதற்கு என்ன மறுமொழி சொன்னார்?
கிறிஸ்துவுக்கு என்ன சம்பவித்தது?
சீஷரண்டைக்கு ஆர் வந்தது?

Digitized by Google

நீ வானத்துக்கு உயர்த்தப்பட்ட இயேசுவானவர் உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்து போன விதமாய்த் திரும்ப வருவார் என்றார்கள்.

அ. அதிகாரம்.

கிறிஸ்துநாதர் எழுந்தருளின நாள் முதற் கொண்டு
அப்போஸ்தலருடைய நடபடிகள் முடிந்த
நாள் வரைக்குஞ் சென்ற வருஷம், ௩௰.

கிறி. 33. கிறி. 63.

க. இப்படியே கிறிஸ்துநாதர் உயிர்த்துப் பரமண்டலத்துக்கு எழுந்தருளின பின்பு அப்போஸ்தலரும் அவரை விசுவாசித்த மற்றவர்களும் அவர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி ஒலிவ மலையை விட்டு நீங்கி எருசலேமிலே வந்து எல்லாரும் ஒரு இடத்திலே கூடி வேண்டுதல் பண்ணிக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்துநாதர் மரணத்தை விட்டு எழுந்தருளி நாற்பதாம் நா

தேவதூதர் என்ன சொன்னார்கள்?
கிறிஸ்து பரமண்டலத்துக்கு எழுந்தருளின பின் அப்போஸ்தலர் எங்கே கூடினார்கள்?
என்னத்தைச் செய்துகொண்டிருந்தார்கள்?

Digitized by Google

ள் முதற்கொண்டு பெந்தேகோஸ்தென்னும் ஐ
ம்பதாம் நாள்வரைக்கும் அவர்கள் ஒருமேல் வீ
ட்டிலே கூடி வேண்டுதலுந் தியானமுமாய் இரு
க்கையில் அந்தச் சங்கதிகளை விசாரிக்கும்படி ப
லதிக்காரரும் பல பாஷைக்காரருமாகிய அனே
கர் வந்து கூடினார்கள். அப்பொழுது சடுதியா
ய்ப் பெலத்த காற்று அடிக்கிற முழக்கம் போ
ல வானத்தில் இருந்து முழக்கம் உண்டாய் அந்த
வீடு முழுவதையும் நிறைத்திருந்தது. அப்பொ
ழுது எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறையப்
பட்டு அங்கே வந்திருந்த ஒவ்வொரு பாஷைக்
காரருடைய பாஷையிலுங் கிறிஸ்துவின் மகி
மையை எடுத்துப் பேசினார்கள். அப்பொழுது
எல்லாரும் ஆச்சரியப்பட்டு அவரவரே இவர்
கள் நம்முடைய பாஷைக்காரரல்லவே, பின்னை
இவர்கள் அதை எப்படிப் பேசுகிறார்கள் என்
றார்கள் வேறு சிலர் இவர்கள் வெறித்திருக்கி

பெந்தேகோஸ்து நாளாவதென்ன?
அவர்களுடனே வேறார் வந்து கூடினார்கள்?
கிறிஸ்து உயிர்த்தெழும்பி எத்தனை நாளைக்குப் பின்பு இது சம்பவித்தது?
அங்கே அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?
அந்த வேளையிலே அங்கே ஆர் வந்தது?
ங்கே ஆருடைய மகிமையை எடுத்துப் பேசினார்கள்?

Digitized by Google

றார்கள் என்று பரிகாசமாய்ச் சொன்னார்கள்.
௨ அப்பொழுது பேதுரு மற்றப் பதினொருவரோடும் எழுந்து நின்று நாங்கள் ஒருவரும் வெறித்திருக்க வில்லை. யோவேல் தீர்க்கதரிசி சொன்னபடி இந்தக் காரியஞ் சம்பவித்திருக்கிறது இயேசுநாதர் இரட்சகராய் இருக்கிறார் என்று பராபரன் உங்கள் நடுவிலே அவரைக் கொண்டு அனேக அற்புதங்களைச் செய்வித்தார். அவரை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரர் கைகளில் ஒப்புக்கொடுத்துச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டீர்கள். பராபரன் அவரை மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து உயிர்த்தெழும்பப்பண்ணினார், இதற்கு நாங்கள் எல்லாருஞ் சாட்சிகளாய் இருக்கிறோம். அவரை நீங்கள் காண்கிறதுங் கேட்கிறதுமாகிய இந்த ஆவியை அனுப்பி இருக்கிறார். ஆகையினாலே நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே பராபரன் உங்கள் ஆண்டவராக அபிஷேக

ஒருவர் பாஷை மற்றொருவருக்கு எப்படித் தெரியவந்தது?
பரிகாசக்காரர் இதைக்கேட்டு என்ன சொன்னார்கள்?
பேதுரு அதற்கு என்ன சொன்னான்?
யோவேல் என்பவன் ஆர்?

Digitized by Google

ம் பண்ணினார் என்பதை அனைவரும் அறிவீர்க
ளாக என்றான். அதைக் கேட்டவர்கள் எல்லாரு
ம் பயமடைந்து சகோதரரே நாங்கள் இரட்சி
க்கப்பட என்ன செய்வோம் என்று கேட்கப்
பேதுரு நீங்கள் குணப்பட்டு இயேசுகிறிஸ்து
வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுங்கள்
என்றான். அப்பொழுது ஒரு மூவாயிரம் பேர்
அளவுக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௩. வேறொருமுறை பேதுருவும் யோவானு
ம் எருசலேமின் தேவாலயத்துக்குட் போகிற
பொழுது சப்பாணியாய்ப் பிறந்து நாற்பது
வயதளவுக்கிருந்த ஒருவன் இவர்களிடத்திற் பி
ச்சை கேட்க, பேதுரு வெள்ளியும் பொன்
னும் என்னிடத்தில் இல்லை, எனக்குண்டானதி
ல் உனக்குத் தருகிறேன் என்று சொல்லி இயே
சுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட

பேதுரு அப்படிச் சொன்னதைக் கேட்டவர்கள் என்ன சொன்னார்கள்?
பேதுரு என்ன செய்யச் சொன்னான்?
அப்பொழுது ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்?
பேதுருவும் யோவானும் எங்கே போனார்கள்?
அவர்களிடத்திலே ஆர் பிச்சை கேட்டது?
அதற்குப் பேதுரு என்ன மறுமொழி சொன்னான்?

Digitized by Google

வென்று பிடித்துத் தூக்கிவிட்டான். உடனே அவன் கால்கள் பெலன்கொண்டு எழுந்து நடந்தான். அதைக் கண்டவர்கள் எல்லாரும் பிரமிப்படைந்து பேதுரு அண்டையிலே வந்து கூடினார்கள். அப்பொழுது பேதுரு இஸ்ரவேலரே, நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? இதை நான் எனது சுய வல்லமையினாலே செய்ததல்ல, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமே இவனுக்கு இந்தச் சருவாங்க சுகத்தைக் கொடுத்தது, ஆகையால் உங்கள் பாவங்கள் எல்லாம் நிவிர்த்தியாகும் படி அவருடைய சொல்லைக் கேட்டுக் குணப்பட்டு மனந்திரும்புங்கள், அப்படிச் செய்கிறவர்கள் அவராலே ஆசீர்வதிக்கப்படுவார்கள், அப்படிச் செய்யாதவர்கள் நிருமூலமாக்கப்படுவார்களென்றான். அதைக் கேட்ட ஆசாரியர்களுந் தேவாலயத்திற் காவற்றலைவனுஞ் சதுசேயரும் விசனப்பட்டு அவர்களைப் பிடித்து மறுநாள்மட்டுங் காவலிலே வைத்தார்கள்.

சனங்கள் என்னத்துக்கு அதிசயப்பட்டார்கள்?
பேதுரு என்ன சொன்னான்?
விசுவாசிகளுக்கு என்ன நடக்கும்?
அவிசுவாசிகளுக்கு என்ன நடக்கும்?
பேதுருவையும் யோவானையும் ஆர் காவலிலே வைத்தது?

Digitized by Google

ஆகிலும் அவர்களுடைய வசனத்தைக் கேட்டவர்களில் ஐயாயிரம் பேர் மட்டுக்கு விசுவாசித்தார்கள்.

௪. மறுநாளிலே சனத்தின் தலைவரும் மூப்பரும் வேதபாரகரும் வேறே அனேகருங் கூடிப் பேதுருவையும் யோவானையும் நடுவே நிறுத்தி நீங்கள் ஆருடைய வல்லமையினாலே அல்லது ஆருடைய நாமத்தினாலே இதைச் செய்கிறீர்களென்று கேட்டார்கள். அப்பொழுது பேதுரு நீங்கள் கொலைசெய்த இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் சுகமடைந்தானென்கிறது உங்களுக்கும் இஸ்ரவேற் சனம் அனைத்துக்குந் தெரிந்திருக்கக்கடவது. வீடு கட்டுகிறதற்கு ஆகாதென்று நீங்கள் தள்ளின கல்லாகிய அவரே கோடிப் பொருத்துக்கான தலைக்கல்லானார். இவரிடத்திலே யல்லாமல் வேறொருவரிடத்திலும் இரட்சிப்பில்லை, வானத்தின் கீழே இன்னும் வேறொரு நாமம் நாம் இரட்சிக்கப்படும் படி கட்டளையிடப்பட்டதுமில்லை

அவர்களை ஏன் காவலிலே வைத்தது?
அதைக் கேட்டு எத்தனைபேர் விசுவாசித்தார்கள்?
மறுபடி அவர்களை அழைத்து என்ன விசாரித்தார்கள்?
ஆர் விசாரித்தது?
பேதுரு மறுமொழியாக என்ன சொன்னான்?

Digitized by Google

என்றான். அதை அவர்கள் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு சுகமடைந்த சப்பாணியும் அங்கே நின்றதினால் யாதொரு எதிருத்தாரஞ் சொல்லக்கூடாமல் இருந்தார்கள். ஆதலால் அவர்களைப் புறம்பாக விலக்கி வைத்துத் தங்களிலே ஆலோசனை பண்ணிக்கொண்டு எல்லாருக்கும் வெளியரங்கமாகத் தெரியப்பட்ட அடையாளம் அவர்களால் செய்யப்பட்டது, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது, ஆனாலும் அவர்கள் சனத்துக்குள்ளே அதிகமாய் இந்த நாமத்தைக் குறித்துப் பேசாதிருக்கும்படி பயமுறுத்துவோம் என்று தீர்மானம்பண்ணிக்கொண்டு அவர்களை அழைத்து நீங்கள் இன்று முதல் இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசாமலும் அதைப் போதியாமலும் இருங்களென்று கற்பித்தார்கள். அதற்குப் பேதுருவும் யோவானும் நாங்கள் பராபரனுக்குக் கீழ்ப்படிகிறதை விட்டு உங்களுக்குக் கீழ்ப்படிகிறது நியாயமோ! நாங்கள் கண்டவைகளை

அதற்கு மறுமொழி சொன்னார்களா?
அவர்கள் தங்களுக்குள்ளே பண்ணிக்கொண்ட ஆலோசனை என்ன?
பேதுருவுக்கும் யோவானுக்கும் என்ன கற்பித்தார்கள்?

Digitized by Google

யுங் கேட்டவைகளையுஞ் சொல்லாமல் இருக்கக்கூடுமோ என்றார்கள். அதினாலே அவர்களைத் தண்டிக்கும்படி யோசனைபண்ணியும் வகை ஒன்றுங் காணாமற் புறம்பே அவர்களை விட்டுவிட்டார்கள். அவர்கள் சபையாரோடே கூடி வேண்டுதல்பண்ணி மிகவும் உறுதிப்பட்டு எல்லாரும் ஒரு சமுசாரத்தின் பிள்ளைகளைப் போலிருந்து எல்லாருந் தங்கள் தங்களுக்குண்டான ஆஸ்திகளை விற்று ஒரு பொதுமுதலாக்கி அதிலே எல்லாருஞ் சரிவர எடுத்துச் செலவிட்டுவந்தார்கள்.

௫. இப்படி இருக்குங் காலத்தில் அனனியாவுஞ் சப்பீராளுமென்ற இரண்டுபேர் தங்கள் ஆஸ்திகளை விற்று அந்தப் பணத்திற் சிலவற்றைப் பொதுக்கிவைத்துக்கொண்டு மற்றப்பணத்தை அப்போஸ்தலரிடத்திற் கொண்டுவந்தார்கள். அதைப் பேதுரு அறிந்து அனனியாவே? நீ ம

அதற்குப் பேதுருவும் யோவானும் என்ன சொன்னார்கள்?

அதற்காக அவர்களைத் தண்டித்தார்களோ?

பின்பு அப்போஸ்தலர் என்ன செய்தார்கள்?

அனனியா சப்பீரான் என்பவர்கள் என்னத்தை விற்றார்கள்?

பணத்தை என்ன செய்தார்கள்?

Digitized by Google

னிதருக்கல்லப் பராபரனுக்கே பொய்சொன்னு ய் என்றான். உடனே அவன் விழுந்து இறந்தான். இதைக் கேட்ட அனைவரும் மிகவும் பயப்பட் டார்கள். மறுபடி அவன் மனைவி அவர்கள ண்டையிலே வரப் பேதுரு அவளை நோக்கி நீ ங்கள் உங்கள் ஆஸ்தியை விற்ற பணம் இம்மா த்திரந்தானோ என்றான். அதற்கவள் ஆம், இ ம்மாத்திரந்தான் என்றாள். பேதுரு உனது க ணவனுக்குச் சம்பவித்ததே உனக்குஞ் சம்ப விக்கும் என்றான். உடனே அவளும் விழுந்து சீவனை விட்டாள். இதுவுமல்லாமற் பலபல ஊ ர்களிலுமுள்ள சனங்கள் இவர்கள் செய்கிற அ ற்புதத்தைக் கேள்விப்பட்டு மாறாத வியாதிக்கா ரரையும் பசாசு பிடித்தவர்களையும் மற்றும் பல வருத்தமுள்ளவர்களையும் அவர்களிடத்திற் கொ ண்டுவர அவர்கள் எல்லாரையுங்கிறிஸ்துவின் நா மத்தைக் கொண்டு குணமாக்கிவந்தார்கள்.

இதினாலே பிரதான ஆசாரியருஞ் சதுசேய சமயத்தாரும் அவர்கள்மேல் வயிராக்கியங் கொண்டு அவர்களைப்பிடித்துப் பட்டணத்தின்

அவர்களுக்கு என்ன சம்பவித்தது?
சனங்கள் வியாதிக்காரரை இவர்களிடத்தில் ஏன் கொண் டுவந்தார்கள்?
அவர்களை ஆர் குணமாக்கினது?

Digitized by Google

பரிபாலனத்தை இஸ்ரவேலருக்கு நீர் திரும்பக்கொடுப்பது இக்காலத்திலோ என்று கேட்டார்கள். அதற்கு அவர் பிதாவானவர் தம்முடைய அதிகாரத்திலே வைத்திருக்கிற காலங்களையாகிலும் வேளைகளையாகிலும் அறிகிறது உங்களுக்குத் தகாது, பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்பொழுது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா சமாரியாத் தேசங்களிலும் பூமியின் எல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று சொன்னார்.

௯. அவைகளைச் சொன்னபின்பு அவர்களுடைய கண்களுக்கு முன்பாக மேகத்தில் மறைந்தவராய் அவர் வானத்துக்கு எழுந்து போனார். அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கையில் வெண்மையான வஸ்திரமுள்ள இரண்டு பேர் அவர்களருகே வந்து நின்று கலிலேயரே, நீங்கள் என்னத்துக்காக வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களைவிட்

சீஷர் என்ன கேட்டார்கள்?
அதற்கு என்ன மறுமொழி சொன்னார்?
கிறிஸ்துவுக்கு என்ன சம்பவித்தது?
சீஷரண்டைக்கு ஆர் வந்தது?

Digitized by Google

பி வானத்துக்கு உயர்த்தப்பட்ட இயேசுவானவர் உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்து போன விதமாய்த் திரும்ப வருவார் என்றார்கள்.

---

௮. அதிகாரம்.

கிறிஸ்துநாதர் எழுந்தருளின நாள் முதற் தொடங்கி அப்போஸ்தலருடைய நடபடிகள் முடிந்த நாள்வரைக்குஞ் சென்ற வருஷம், ௩௰.

கிறி. 33. கிறி. 63.

௧. இப்படியே கிறிஸ்துநாதர் உயிர்த்துப் பரமண்டலத்துக்கு எழுந்தருளின பின்பு அப்போஸ்தலரும் அவரை விசுவாசித்த மற்றவர்களும் அவர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி ஒலிவ மலையை விட்டு நீங்கி எருசலேமிலே வந்து எல்லாரும் ஒரு இடத்திலே கூடி வேண்டுதல் பண்ணிக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்துநாதர் மரணத்தை விட்டு எழுந்தருளி நாற்பதாம் நா

தேவதூதர் என்ன சொன்னார்கள்?
கிறிஸ்து பரமண்டலத்துக்கு எழுந்தருளின பின் அப்போஸ்தலர் எங்கே கூடினார்கள்?
என்னத்தைச் செய்துகொண்டிருந்தார்கள்?

Digitized by Google

ள் முதற்கொண்டு பெந்தேகோஸ்தென்னும் ஐ
ம்பதாம் நாள்வரைக்கும் அவர்கள் ஒரு மேல் வீ
ட்டிலே கூடி வேண்டுதலுந் தியானமுமாய் இரு
க்கையில் அந்தச் சங்கதிகளை விசாரிக்கும்படி ப
லதிக்காரரும் பல பாஷைக்காரருமாகிய அனே
கர் வந்து கூடினார்கள். அப்பொழுது சடுதியா
ய்ப் பெலத்த காற்று அடிக்கிற முழக்கம் போ
ல வானத்தில் இருந்து முழக்கம் உண்டாய் அந்த
வீடு முழுவதையும் நிறைந்திருந்தது. அப்பொ
ழுது எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறையப்
பட்டு அங்கே வந்திருந்த ஒவ்வொரு பாஷைக்
காரருடைய பாஷையிலுங் கிறிஸ்துவின் மகி
மையை எடுத்துப் பேசினார்கள். அப்பொழுது
எல்லாரும் ஆச்சரியப்பட்டு அவரவரே இவர்
கள் நம்முடைய பாஷைக்காரரல்லவே, பின்னை
இவர்கள் அதை எப்படிப் பேசுகிறார்கள் என்
றார்கள் வேறு சிலர் இவர்கள் வெறித்திருக்கி

பெந்தேகோஸ்து நாளாவதென்ன?
அவர்களுடனே வேறார் வந்து கூடினார்கள்?
கிறிஸ்து உயிர்த்தெழும்பி எத்தனை நாளைக்குப் பின்பு இது சம்பவித்தது?
அங்கே அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?
அந்த வேளையிலே அங்கே ஆர் வந்தது?
அங்கே ஆருடைய மகிமையை எடுத்துப் பேசினார்கள்?

Digitized by Google

றார்கள் என்று பரிகாசமாய்ச் சொன்னார்கள்.
௨ அப்பொழுது பேதுரு மற்றப் பதினொருவரோடும் எழுந்து நின்று நாங்கள் ஒருவரும் வெறித்திருக்கவில்லை. யோவேல் தீர்க்கதரிசி சொன்னபடி இந்தக் காரியஞ் சம்பவித்திருக்கிறது இயேசுநாதர் இரட்சகராய் இருக்கிறார் என்று பராபரன் உங்கள் நடுவிலே அவரைக் கொண்டு அனேக அற்புதங்களைச் செய்வித்தார். அவரை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரர் கைகளில் ஒப்புக்கொடுத்துச் சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டீர்கள். பராபரன் அவரை மரண உபதிகளின் கட்டை அவிழ்த்து உயிர்த்தெழும்பப்பண்ணினார், இதற்கு நாங்கள் எல்லாருஞ் சாட்சிகளாய் இருக்கிறோம். அவரை நீங்கள் காண்கிறதுங் கேட்கிறதுமாகிய இந்த ஆவியை அனுப்பி இருக்கிறார். ஆகையினாலே நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே பராபரன் உங்கள் ஆண்டவராக அபிஷேக

ஒருவர் பாஷை மற்றொருவருக்கு எப்படித் தெரியவந்தது?
பரிகாசக்காரர் இதைக்கேட்டு என்ன சொன்னார்கள்?
பேதுரு அதற்கு என்ன சொன்னான்?
யோவேல் என்பவன் ஆர்?

Digitized by Google

ம் பண்ணினார் என்பதை அனைவரும் அறிவீர்க ளாக என்றான். அதைக் கேட்டவர்கள் எல்லாரும் பயமடைந்து சகோதரரே நாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்வோம் என்று கேட்கப் பேதுரு நீங்கள் குணப்பட்டு இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுங்கள் என்றான். அப்பொழுது ஒரு மூவாயிரம் பேர் அன்றைக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௩. வேறொருமுறை பேதுருவும் யோவானும் எருசலேமின் தேவாலயத்துக்குப் போகிற பொழுது சப்பாணியாய்ப் பிறந்து நாற்பது வயதுள்ளவனாயிருந்த ஒருவன் இவர்களிடத்திற் பிச்சை கேட்க, பேதுரு வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை, எனக்குண்டானதைல் உனக்குத் தருகிறேன் என்று சொல்லி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட

பேதுரு அப்படிச் சொன்னதைக் கேட்டவர்கள் என்ன சொன்னார்கள்?
பேதுரு என்ன செய்யச் சொன்னான்?
அப்பொழுது ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்?
பேதுருவும் யோவானும் எங்கே போனார்கள்?
அவர்களிடத்திலே ஆர் பிச்சை கேட்டது?
அதற்குப் பேதுரு என்ன மறுமொழி சொன்னான்?

வென்று பிடித்துத் தூக்கிவிட்டான். உடனே அவன் கால்கள் பெலன்கொண்டு எழுந்து நடந்தான். அதைக் கண்டவர்கள் எல்லாரும் பிரமிப்படைந்து பேதுரு அண்டையிலே வந்து கூடினார்கள். அப்பொழுது பேதுரு இஸ்ரவேலரே, நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? இதை நான் எனது சுய வல்லமையினாலே செய்ததல்ல, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமே இவனுக்கு இந்தச் சருவாங்க சுகத்தைக் கொடுத்தது, ஆகையால் உங்கள் பாவங்கள் எல்லாம் நிவிர்த்தியாகும் படி அவருடைய சொல்லைக் கேட்டுக் குணப்பட்டு மனந்திரும்புங்கள், அப்படிச் செய்கிறவர்கள் அவராலே ஆசீர்வதிக்கப்படுவார்கள், அப்படிச் செய்யாதவர்கள் நிருமூலமாக்கப்படுவார்களென்றான். அதைக் கேட்ட ஆசாரியர்களும் தேவாலயத்திற் காவற்றலைவனுஞ் சதுசேயரும் விதனப்பட்டு அவர்களைப் பிடித்து மறுநாள்மட்டுங் காவலிலே வைத்தார்கள்.

சனங்கள் என்னத்துக்கு அதிசயப்பட்டார்கள்?
பேதுரு என்ன சொன்னான்?
விசுவாசிகளுக்கு என்ன நடக்கும்?
அவிசுவாசிகளுக்கு என்ன நடக்கும்?
பேதுருவையும் யோவானையும் ஆர் காவலிலே வைத்தது?

Digitized by Google

ஆயினும் அவர்களுடைய வசனத்தைக் கேட்டவர்களில் ஐயாயிரம் பேர் மட்டுக்கு விசுவாசித்தார்கள்.

௪. மறுநாளிலே சனத்தின் தலைவரும் மூப்பரும் வேதபாரகரும் வேறே அநேகருங் கூடிப் பேதுருவையும் யோவானையும் நடுவே நிறுத்தி நீங்கள் ஆருடைய வல்லமையினாலே அல்லது ஆருடைய நாமத்தினாலே இதைச் செய்கிறீர்களென்று கேட்டார்கள். அப்பொழுது பேதுரு நீங்கள் கொலைசெய்த இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் சுகமடைந்தானென்கிறது உங்களுக்கும் இஸ்ரவேற் சனம் அனைத்துக்குந் தெரிந்திருக்கக்கடவது. வீடு கட்டுகிறதற்கு ஆகாதென்று நீங்கள் தள்ளின கல்லாகிய அவரே கோடிப் பொருத்துக்கான தலைக் கல்லானார். இவரிடத்திலே யல்லாமல் வேறொருவரிடத்திலும் இரட்சிப்பில்லை, வானத்தின்கீழே இன்னும் வேறொரு நாமம் நாம் இரட்சிக்கப்படும் படி கட்டளையிடப்பட்டதுமில்லை

அவர்களை ஏன் காவலிலே வைத்தது?
அதைக் கேட்டு எத்தனைபேர் விசுவாசித்தார்கள்?
மறுபடி அவர்களை அழைத்து என்ன விசாரித்தார்கள்?
ஆர் விசாரித்தது?
பேதுரு மறுமொழியாக என்ன சொன்னான்?

Digitized by Google

என்றான். அதை அவர்கள் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டுஞ் சுகமடைந்த சப்பாணியும் அங்கே நின்றதினால் யாதொரு எதிருத்தரஞ் சொல்லக்கூடாமல் இருந்தார்கள். ஆதலால் அவர்களைப் புறம்பாக விலக்கி வைத்துத் தங்களிலே ஆலோசனை பண்ணிக்கொண்டு எல்லாருக்கும் வெளியரங்கமாகத் தெரியப்பட்ட அடையாளம் அவர்களாற் செய்யப்பட்டது, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது, ஆனாலும் அவர்கள் சனத்துக்குள்ளே அதிகமாய் இந்த நாமத்தைக் குறித்துப் பேசாதிருக்கும்படி பயமுறுத்துவோம் என்று தீர்மானம்பண்ணிக்கொண்டு அவர்களை அழைத்து நீங்கள் இன்று முதல் இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசாமலும் அதைப் போதியாமலும் இருங்களென்று கற்பித்தார்கள். அதற்குப் பேதுருவும் யோவானும் நாங்கள் பராபரனுக்குக் கீழ்ப்படிகிறதை விட்டு உங்களுக்குக் கீழ்ப்படிகிறது நியாயமோ? நாங்கள் கண்டவைகளை

அதற்கு மறுமொழி சொன்னார்களா?

அவர்கள் தங்களுக்குள்ளே பண்ணிக்கொண்ட ஆலோசனை என்ன?

பேதுருவுக்கும் யோவானுக்கும் என்ன கற்பித்தார்கள்?

Digitized by Google

யுங் கேட்டவைகளையுஞ் சொல்லாமல் இருக்கக்கூடுமோ என்றார்கள். அதினாலே அவர்களைத் தண்டிக்கும்படி யோசனைபண்ணியும் வகை ஒன்றுங் காணாமற் புறம்பே அவர்களை விட்டுவிட்டார்கள். அவர்கள் சபையாரோடேகூடி வேண்டுதல்பண்ணி மிகவும் உறுதிப்பட்டு எல்லாரும் ஒரு சமுசாரத்தின் பிள்ளைகளைப் போலிருந்து எல்லாருந் தங்கள் தங்களுக்குண்டான ஆஸ்திகளை விற்று ஒரு பொதுமுதலாக்கி அதிலே எல்லாருஞ் சரிவர எடுத்துச் செலவிட்டுவந்தார்கள்.

௫. இப்படி இருக்கிறுங் காலத்தில் அனனியாவுஞ் சப்பீராளுமென்ற இரண்டுபேர் தங்கள் ஆஸ்திகளை விற்று அந்தப் பணத்திற் சிலவற்றைப் பொதுக்கிவைத்துக்கொண்டு மற்றப்பணத்தை அப்போஸ்தலரிடத்திற் கொண்டுவந்தார்கள். அதைப் பேதுரு அறிந்து அனனியாவே! நீ ம

அதற்குப் பேதுருவும் யோவானும் என்ன சொன்னார்கள்?
அதற்காக அவர்களைத் தண்டித்தார்களோ?
பின்பு அப்போஸ்தலர் என்ன செய்தார்கள்?
அனனியா சப்பீரான் என்பவர்கள் என்னத்தை விற்றார்கள்?
பணத்தை என்ன செய்தார்கள்?

Digitized by Google

னிதருக்கல்லப் பராபரனுக்கே பொய்சொன்னா
ய் என்றான். உடனே அவன் விழுந்து இறந்தான்.
இதைக் கேட்ட அனைவரும் மிகவும் பயப்பட்
டார்கள். மறுபடி அவன் மனைவி அவர்கள
ண்டையிலே வரப் பேதுரு அவளை நோக்கி நீ
ங்கள் உங்கள் ஆஸ்தியை விற்ற பணம் இம்மா
த்திரந்தானோ என்றான். அதற்கவள் ஆம், இ
ம்மாத்திரந்தான் என்றாள். பேதுரு உனது க
ணவனுக்குச் சம்பவித்ததே உனக்குஞ் சம்ப
விக்கும் என்றான். உடனே அவளும் விழுந்து
சீவனை விட்டாள். இதுவுமல்லாமற் பலபல ஊ
ர்களிலுமுள்ள சனங்கள் இவர்கள் செய்கிற அ
ற்புதத்தைக் கேள்விப்பட்டு மாறாத வியாதிக்கா
ரரையும் பசாசு பிடித்தவர்களையும் மற்றும் பல
வருத்தமுள்ளவர்களையும் அவர்களிடத்திற் கொ
ண்டுவர அவர்கள் எல்லாரையுங் கிறிஸ்துவின் நா
மத்தைக் கொண்டு குணமாக்கிவந்தார்கள்.

இதினாலே பிரதான ஆசாரியருஞ் சதுசேய
சமயத்தாரும் அவர்கள்மேல் வயிராக்கியங்
கொண்டு அவர்களைப்பிடித்துப் பட்டணத்தின்

அவர்களுக்கு என்ன சம்பவித்தது?
சனங்கள் வியாதிக்காரரை இவர்களிடத்தில் ஏன் கொண்டுவந்தார்கள்?
அவர்களை ஆர் குணமாக்கினது?

Digitized by Google

காவற்கூடத்திலே வைத்தார்கள். அப்பொழுது தெய்வதூதன் வந்து காவற்கூடத்தின் கதவைத் திறந்து அவர்களை வெளியே அழைத்துவந்து விட்டு நீங்கள் போய்த் தேவாலயத்தில் நின்று இந்தச் சீவவார்த்தைகளை எல்லாம் அறிவியுங்களென்று சொன்னான். உடனே அவர்கள் தேவாலயத்திலே போய்ப் பிரசங்கித்தார்கள்.

௨௧. அப்படியிருக்கப் பிரதான ஆசாரியனும் அவனோடு இருந்தவர்களும் வந்து ஆலோசனைச் சங்கத்தாரையுஞ் சனத்தின் மூப்பரையுஞ் சேர்த்து வைத்துக்கொண்டு பேதுரு முதலானவர்களை அழைத்துவரும்படி ஆட்களை அனுப்ப அவர்கள் காவற்கூடத்துக்குப் போய் இவர்களை அங்கே காணாமற் திரும்பிவந்து அவர்கள் அங்கே இல்லையென்று அறிவித்தார்கள். அதைக் கேட்டவர்கள் எல்லாருங் காவற்காரர் மேலே அசாத்தியப்பட்டுக் கொண்டிருக்க ஒருவ

அதைக்கண்ட பிரதான ஆசாரியருஞ் சதுசேயரும் என்ன செய்தார்கள்?
அவர்களுக்கு ஆர் தரிசனையானது?
தேவதூதன் என்ன சொன்னான்?
பேதுரு என்ன செய்தான்?
பிரதான ஆசாரியருஞ் சனத்தின் மூப்பரும் ஆட்களை என்னத்துக்கு அனுப்பினார்கள்?

Digitized by Google

ன் வந்து நீங்கள் காவலிலே வைத்த இருவருந்
தேவாலயத்திலே நின்று போதகம்பண்ணுகி
றார்கள் என்றான். அதைக் கேட்டுச் சேனைத்த
லைவன் தன் சேவகருடனே போய் அவர்களைத்
தயவாய் அழைத்து வந்து சங்கத்தாருக்கு மு
ன்பாக நிறுத்தினான். பிரதான ஆசாரியன் அவ
ர்களை நோக்கி நீங்கள் இயேசுவைக் குறித்து
யாதொன்றுஞ் சொல்லவேண்டாமென்று நா
ங்கள் உங்களுக்குக் கற்பித்திருக்கவும் அந்த இ
யேசுவினுடைய இரத்தப் பழியை எங்கள் மே
ற் சுமத்தும்படிக்கு எருசலேமை உங்கள் போ
தகத்தால் நிறைத்தீர்களென்றான். அதற்கு அ
ப்போஸ்தலர் நாங்கள் பராபரனுக்கே யல்லா
மல் மனிதருக்குப் பயப்படோம், நீங்கள் கொ
லைசெய்த இயேசுவைப் பிதாவாகிய பராபரன்
எழுப்பி அதிபதியாகவும் இரட்சகராகவும் உயர்
த்தினார். இதற்கு நாங்களும் பரிசுத்த ஆவியுமே
சாட்சிகள் என்றார்கள். இவர்கள் அதைக் கே

இவர்கள் தேவாலயத்திலே நின்ற செய்தி எப்படி அறிய வந்தது?
சங்கத்திலே அவர்களை அழைத்து வந்ததார்?
பிரதான ஆசாரியன் அவர்களுக்கு என்ன சொன்னான்?
அவர்கள் அதற்கு என்னசொன்னார்கள்?
தாங்கள் என்னத்துக்குச் சாட்சியென்றார்கள்?

Digitized by Google

ட்டு வன்மங்கொண்டு அவர்களைக் கொன்று போட எண்ணினார்கள். அப்பொழுது கமாலியேலென்கிற பரிசேயன் எழுந்து அப்போஸதலரைப் புறம்பே விலக்கிவைத்துச் சங்கத்தாரை நோக்கி இவர்களை என்ன செய்யப் போகிறீர்கள். இவர்களை விலக்கிவிட்டுவிடுங்கள். இவர்கள் கிரியை மனிதரால் உண்டாயிருந்தால் இவ்வளவிலே நின்றுபோம், பராபரனால் உண்டாயிருந்தால் அதைத் தடுக்க உங்களாலே முடியாது, பராபரனோடே போராடத் துணியாதிருங்கள் என்றான். அவர்களோ அப்போஸ்தலரைப் பிடித்து அடித்து இயேசுவைக் குறித்து ஒன்றும் பேசாதிருங்களென்று கட்டளையிட்டனுப்ப அவர்கள் சந்தோஷித்தோடே போயித் தேவாலயத்திலும் வீடுகளிலும் ஓயாமல் அவரைக் குறித்துப் பிரசங்கித்துவந்தார்கள். இதினாலே அத்தேசத்திலுள்ளவர்களில் அனே

அதைக்கேட்டு இவர்களுக்கு என்னசெய்தார்கள்?
கமாலியேல் என்னசொன்னான்?
பின்பு இதைக்கேட்டு அப்போஸ்தலருக்கு என்னசொன்னார்கள்?
பயந்து பிரசங்கியாமல் விட்டுவிட்டார்களோ?
இவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டுச் சனங்கள் விசுவாசித்தார்களோ?

Digitized by Google

கர் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய ச
பையிற் சேர்ந்தார்கள்.

எ. அப்பொழுது சபையாருக்குள்ளே அந்
தரித்த கைம்பெண்கள் நிமித்தமாகத் தருமம்
வாங்கிப் பணஞ் சேர்க்கும்படிக்கு இஸ்தேவா
னையும் வேறே எழுபேரையுந் தெரிந்து நிய
மித்தார்கள். இஸ்தேவானே தரும விசாரணை
யை நடப்பித்ததேயன்றி ஆவியினாலே பலம
டைந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் பிரச
ங்கமாய் அறிவித்துவந்தான். அப்பொழுது சன
ங்கள் அவனுடனே தருக்கத்துக்கு வந்து எதிர்
த்து அவனோடே எதிர்நிற்க மாட்டாமற்போய்
அதின் நிமித்தம் பொறாமை அடைந்து அவனை
ப் பிடித்துக் கொண்டுபோய்ச் சங்கத்துக்கு
முன் நிறுத்தி மோசேயின் நியாயப்பிரமாணத்
துக்குந் தேவாலயத்துக்கும் விரோதமாகத்
தூஷணம் பேசுகிறானென்று சொல்லி அதற்கு
ப் பொய்ச்சாட்சிகளும் ஏற்படுத்தினார்கள். அ
தைப் பிரதான ஆசாரியன் கேட்டு அது மெ

தருமஞ்சேர்க்க ஆரைத் தெரிந்துகொண்டார்கள்?
இஸ்தேவானோடே ஆர் தருக்கத்துக்கு வந்தது?
ஏன் அவர்கள் பொறாமை அடைந்தார்கள்?
என்னத்தை ரூபிக்கச் சாட்சிதேடினார்கள்?
எப்படிப்பட்ட சாட்சிகள்?

Digitized by Google

ய்யோ என்று இஸ்தேவானைக் கேட்க அதற்கு
இஸ்தேவான் முரட்டுக் கழுத்துள்ளவர்களே உ
ங்கள் பிதாக்களைப் போல நீங்களும் எப்பொழு
தும் பரிசுத்த ஆவியோடெதிர்த்து நிற்கிறீர்கள்.
தீர்க்கதரிசிகளில் ஆரை உங்கள் பிதாக்கள் துன்
பப்படுத்தாமலிருந்தார்கள். நீதியரர் வருகை
யை முன்னறிவித்தவர்களையுங் கொலைசெய்தார்
கள். அவருக்கே நீங்கள் இப்பொழுது துரோ
கிகளுமாய் அவரைக் கொலைசெய்தவர்களுமா
யிருக்கிறீர்கள். தேவதூதரின் அணிவகுப்புக்கு
ள்ளே வேதப் பிரமாணத்தைப் பெற்றுக்கொ
ண்டிருந்தும் அதைக் கைக்கொள்ளாமல் இரு
க்கிறீர்கள் என்று சொல்ல அவர்கள் அவைக
ளைக் கேட்டுத் தங்கள் இருதயங்களிற் குற்றுண்
டவர்களாய் அவனைக் குறித்துப் பற்கடித்தார்
கள். அவனோ பரிசுத்த ஆவியினாலே நிறைந்
து வானந் திறக்கப்பட்டிருக்கிறதையும் மனித
குமாரன் பராபரனுடைய வலதுபாரிசத்திலே
நிற்கிறதையும் பார்க்கிறேனென்று சொன்ன
பொழுது அவர்கள் மிகுதியுங் கூக்குரலிட்டுத்
தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு எல்

பிரதான ஆசாரியனுக்கு இஸ்தேவான் என்னசொன்னான்?
என்னத்தைக் கண்டோம் என்றான்?

Digitized by Google

லாரும் ஒருமனப்பட்டு அவனைப் பட்டணத்துக்குப் புறம்பே தள்ளிக்கொண்டுபோய்த் தங்கள் வஸ்திரங்களைச் சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனிடத்திலே வைத்து இஸ்தேவான்மேற் கல்லெறிந்தார்கள். அவனோ கர்த்தராகிய யேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று தொழுதுகொண்டு முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தை நிறுத்தாதிருமென்று மிகவுங் குரலையிட்டு மரணமடைந்தான். அப்படி அவனைக் கொலைசெய்தது சவுலென்பவனுக்கு மிகவும் பிரியமாயிருந்தது.

அ. அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாக அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா என்னுந் தேசங்களிற் சிதறப்பட்டார்கள். சவுலோ வீடுகள் தோறும் புகுந்து கிறிஸ்தவர்களாகிய ஆண்களையும் பெண்களையும் வெளி

அதைக் கேட்ட சனங்கள் எல்லாரும் என்ன செய்தார்கள்?

இஸ்தேவான் மரணமடைகிறபோது பண்ணின வேண்டுதல் என்ன?

சவுல் என்னத்துக்குப் பிரியமாயிருந்தான்?

அதினாலே சபைக்கு என்னசம்பவித்தது?

Digitized by Google

பே இழுத்துப் போய்க் காவலிற் போடுவித்து க் கிறிஸ்து சபையைப் பாழாக்கினுன். சிதறப் பட்ட பேர்களோ எங்குந் திரிந்து தேவ வசன த்தைச் சுவிசேஷமாய்ப் பிரசித்தம்பண்ணினு ர்கள். ஒருமுறை பிலிப்பென்பவன் சமாரியா விலுள்ள பட்டணததிற் சேர்ந்து கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்து அனேக வியாதிக்கார ரைக் குணமாக்கி அசுத்த ஆவிகளைத் துரத்தி இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்தான். அ வனுடைய போதகத்தைக் கேட்ட அனேகர் வி சுவாசித்து ஞானஸ்நானம் பெற்ருர்கள். அப் படியிருக்க அந்தப் பட்டணத்திலே சீமோனெ ன்கிற ஒரு வித்தைக்காரன் இருந்தான். அவ னிடத்திலே பராபரனுடைய வல்லமை இருக் கிறதென்று சனங்கள் எண்ணியிருந்தார்கள்.

சபை சிதறப்பட்டது கிறிஸ்துமார்க்கத்துக்கு நன்மை யோ தீமையோ?

சவுல் என்ன செய்தான்?

திக்கற்றவர்களாயிருந்த அப்போஸ்தலர்கள் என்ன செ ய்தார்கள்?

பிலிப்பென்பவன் என்ன அற்புதஞ் செய்தான்?

அங்கே கிறிஸ்துமார்க்கம் பரம்புவதைக் கண்டுவந்த அ ப்போஸ்தலர் ஆர்?

சீமோன் என்று நாமமுள்ள தம்பனவித்தைக்காரனைக்கு றித்து என்ன நினைத்தார்கள்?

Digitized by Google

அவனுங் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுப் பிலிப்புவோடே கூட இருந்து அவன் செய்துவருகிற அற்புதங்களை எல்லாங் கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தான் இப்படியே சமாரியா தேசத்தார் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்களென்று மற்றும் அப்போஸதலர் கேள்விப்பட்டுப் பேதுருவையும் யோவானையும் அங்கே அனுப்பினார்கள்.

அவர்கள் வந்து பிலிப்புவோடே கூடி வேண்டுதல்பண்ணி விசுவாசமுள்ளவர்கள் மேற் கைகளை வைக்க அவர்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்படுகிறதைச் சீமோன் கண்டு அவர்களுக்குப் பணங்களைக் கொண்டுவந்து கொடுத்து இப்படியே நானுங் கைகளை வைக்கிறவனுக்கெல்லாம் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும்படிக்கான அதிகாரத்தை எனக்குந் தாருங்களென்க, பேதுரு சீமோனே, உன் பணம் உன்னோடே கெட்டுக்குட்படக் கடவது. நீ பராபரனுடைய ஈவைப் பணங்களாற் சம்பாதிக்க நினைத்தபடியால் உன் இருதயம் பராபரனுக்கு முன்பாகச் செம்மையாக இராது. நீ கச

சீமோன் அப்போஸதலரிடத்தில் என்ன கேட்டான்?
அதற்கு மறுமொழியாக என்ன சொன்னார்கள்?

Digitized by Google

ப்பான பிச்சிலும் அநியாயக் கட்டிலும் அகப்பட்டிருக்கிறபடியால் உனக்கு இந்தப் பாவம் பொறுக்கப்படும்படி நீ உன் துற்குணத்தை விட்டுக் குணப்பட்டுப் பராபரனை வேண்டிக் கொள்ளென்றான்.

௬. வேறொரு முறை பிலிப்பென்பவன் தேவதூதனுடைய உத்தரவின்படி காத்சாவுக்குப் போகிற வழியிலே போனான். எத்தியோப்பியருடைய இராசாத்தியாகிய கந்தாயியென்பவளுடைய மந்திரி தன் இரதத்தில் இருந்து எசாயா த் தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசிக்கிறதைக் கண்டு அவனண்டையிலே சேர்ந்து நீர் வாசிக்கிறதை அறிகிறீரோ என்றான்? அவற்கவன் நான் எப்படி அறியலாம்! என்னுடனே கூட இரதத்தில் வந்திருந்து இதை வெளிப்படுத்தும் என்று சொன்னான். அப்படியே இவனும் இரதத்தில் ஏறினபொழுது மந்திரியானவன் அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படும்படி கொ

பிலிப்பு காத்சாப் பட்டினத்துக்கு போகிற வழியிலே ஆரைக் கண்டான்?
எந்தப் புத்தகத்தை மந்திரி வாசித்தான்?
அதைக் கண்டு பிலிப்பு என்ன கேட்டான்?
மந்திரி என்ன சொன்னான்?

Digitized by Google

ண்டுபோகப்பட்டார். தன் மயிரைக் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தாழ்மையாய் இருக்கையில் அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது, அவருடைய சீவன் பூலோகத்தில் இருந்தெடுத்துப்போடப்பட்டதினாலே அவருடைய தலைமுறையை ஆர் விபரித்துச்சொல்வார்கள் என்ற வசனத்தை வாசித்துப் பிலிப்புவை நோக்கித் தீர்க்கதரிசி தன்னைக்குறித்தோ மற்றொருவனைக்குறித்தோ இதைச் சொன்னான்? அதை நீர் எனக்குச் சொல்லும் என்றான். அப்பொழுது பிலிப்பு அந்த வேதவாக்கியத்தில் எடுத்து இயேசுவின் சுவிசேஷத்தை அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் போகையில் ஓரிடத்திலே தண்ணீரைக் கண்டபொழுது மந்திரியானவன் இதோ தண்ணீர் இருக்கின்றதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடை என்னவென்றான். அதற்குப் பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தாற் பெற்றுக்கொள்

அவர்கள் வாசித்த வசனம் என்ன?
வசனத்தின் கருத்தை அறிந்தபோது மந்திரி என்னசொ[ன்னான்?]
அதற்குப் பிலிப்பு அவனுக்கு என்ன சொன்னான்?

ளலாம் என்றான். அதற்கு அவன் இயேசுக்கிறிஸ்துவைப் பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். பின்பு பிலிப்பு மந்திரியுடனேயுந் தண்ணீரில் இறங்கி அங்கே அவனை ஞானஸ்நானம்பண்ணுவித்தான். அவர்கள் தண்ணீரில் இருந்து ஏறின பொழுது கத்தருடைய ஆவி பிலிப்புவை எடுத்துக்கொண்டார். அது முதல் மந்திரியானவன் அவனைக் காணமற் சந்தோஷித்துடனே தன் வழியேபோனான்.

௰. இது இப்படியிருக்க இஸ்தேவானைக் கல்லெறியும்பொழுது அவர்களுடைய வஸ்திரத்தைக் காத்துவைத்திருந்த சவுல் என்பவன் பிரதான ஆசாரியனிடத்திலே போய்க் கிறிஸ்துவின் சீஷரைக் கண்டால் அவர்களைப்பிடித்து எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்குத் தத்துவச்சீட்டுப் பெற்றுக்கொண்டுபோகும்பொ

மந்திரியானவன் கிறிஸ்துவைப் பற்றி என்னசொன்னான்?
பிலிப்பு எங்கே போனான்?
எப்படிப் போனான்?
சவுல் என்ன அதிகாரத்தைப் பெற்றான்?
சவுல் கிறிஸ்தவர்களை எங்கேகொண்டுபோகும் படி நினைத்தான்?

Digitized by Google

ழுது வானத்தில் இருந்து ஒரு ஒளி தோன்றி அ
வனை வளைந்துகொண்டது. உடனே அவன்
பயந்து நிலத்திலே விழுந்தான். அப்பொழு
து சவுலே, சவுலே, நீ நம்மைத் துன்பப்படுத்
துவானேன் என்று ஒரு சத்தம் பிறக்கக் கேட்
டு ஆண்டவரே, நீர் ஆர் என்றான்? அதற்கு நா
ன் நீ துன்பப்படுத்துகிற இயேசுவே, கூருக்
கெதிராக உதைக்கிறது சேதத்தைவிளைக்குமெ
ன்க, அதைக் கேட்டு அவன் பயந்து ஆண்டவ
ரே நான் என்ன செய்ய உமக்குச் சித்தமாயி
ருக்கிறதென்றான். நீ எழுந்து பட்டணத்துக்
குப் போ, அங்கே நீ செய்ய வேண்டியது சொ
ல்லப்படும் என்றார். அவன் எழும்பிக் கண்தெ
ரியாதவனாய்க் கைக்கோல் பிடிக்கிறவனுடனே
கூடத் தமஸ்குவுக்குப் போனான். இது காரிய
ம் இப்படியிருக்கத் தமஸ்குவில் இருக்கிற அன
னியா என்பவனுக்குக் கர்த்தர் தரிசனையாகி நீ
எழுந்து சவுலென்கிறவனைத் தேடிப்போ. ந
ம்முடைய நாமத்தைப் புறச்சாதிகளுக்கும் இ

அவன் என்னத்தைக் கேள்விப்பட்டான்?
கிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிறதாவதென்ன?
அவனுக்கு என்ன கற்பித்தார்?

Digitized by Google

ஸரவேலருக்கும் முன்பாக அறிவிக்க நாம் அவனைத் தெரிந்துகொண்டோம் என்றார். அனனியாவும் அந்தப்படி எழுந்து போய்ச் சவுலைக் கண்டு நீ பார்வையடைந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் படியாகக் கத்தர் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்கள் திறக்கப்பட்டன, அவனும் ஞானஸ்நானம் பெற்றுத் திடப்பட்டுக் கிறிஸ்துவைப் பராபரனுடைய குமாரனென்று பிரசங்கித்தான். அதைக்கேட்ட யூதர் அவனை இரகசியத்திலே கொன்றுபோட நினைவாயிருந்ததைச் சீஷர் அறிந்து ஒரு கூடையிலேவைத்து மதில்வழியாய் இறக்கிவிட்டார்கள். அவன் புறம்பே வந்து பலபல தேசங்களிலுஞ் சுற்றிப்பிரசங்கித்துப் பல அற்புதங்களையுஞ் செய்துவந்தான்.

௰௧. இது நிற்கப் பேதுரு பல ஊர்களிலுஞ் சுற்றிச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகையில் உலிதா ஊரிலே எட்டுவருஷந் திமிர்வாதமா

அனனியாவுக்கு என்ன கற்பித்தார்?
சவுல் எங்கே போனான்?
சவுலைக் கண்டபொழுது அனனியா என்ன சொன்னான்?
சவுல் ஆரிடத்திலே ஞானஸ்நானம் பெற்றான்?
பெற்றபின்பு என்ன செய்தான்?
அதைக்கேட்ட யூதர் என்ன செய்தார்கள்?

Digitized by Google

யிக் கிடந்த ஐனேயா என்பவனைக் கண்டு கிறிஸ்துவின் நாமத்தைக்கொண்டு அவனைக் குணமாக்கினான். அதைக் கண்ட எல்லாருங் கிறிஸ்துவிடத்துக்கு மனந்திரும்பினார்கள். அக்காலத்திலே தபீத்தாள் என்றுபேர்கொண்ட ஒரு கிறிஸதவள் மரணமடைந்தாள். அவ்விடத்துக்குப் பேதுருபோய் முழங்காற்படியிட்டு வேண்டுதல்பண்ணித் தபீத்தாளே, எழுந்திரு என்றான். உடனே அவள் உயிர்த்தெழுந்தாள். அதைக் கண்ட எல்லாருங் கிறிஸதுவை விசுவாசித்தார்கள். அன்றியுஞ் சேசாரியாப்பட்டணத்திலே நூறு பேருக்குத்தலைவனாகிய கொருநேலி என்பவன் மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் பராபரனை நோக்கி வேண்டுதல்பண்ணிக்கொண்டுவருவான். ஒருநாள் அவன் தரிசனையடைந்து கொருநேலியுவே, உன் வேண்டுதல்களுந் தருமங்களும் பராபரனுடைய திருவுளத்தில் எண்ணப்பட்டிருக்கின்றது. ஆகையால் நீ இன்ன

ஐனேயாவை ஆர் கண்டது?
என்ன வியாதியாயிருந்தான்?
தபீத்தாளை ஆர் உயிரோடே எழுப்பினது?
அதினாலே கிறிஸது மார்க்கத்துக்கு என்ன சம்பவித்தது?
கொருநேலி எப்படிப்பட்டவன்!

Digitized by Google

ஞ்செய்ய வேண்டுவதை உனக்கு அறிவிக்கும்படிக்கு பேதுருவை அழைப்பியென்கிறதாக ஒரு தரிசனையடைந்து அதின்படியே பேதுருவிடத்திற்கு ஆட்களை அனுப்பியிருக்கையில் அங்கே பேதுருவும் வேண்டுதல்செய்துகொண்டிருக்கும்பொழுது வானந் திறந்திருக்கவும் பூமியிலுள்ள சகல வித மிருகங்கள், பட்சிகள், ஊர்வனவைகள் எல்லாம் நிறைந்திருக்கிற ஒரு கூடு பூமியில் இறக்கப்பட்டுப் பேதுருவே, எழுந்திருந்து புசியென்கிற ஒரு சத்தம் உண்டாகவுங் கேட்டு அசுத்தமானதொன்றையும் நான் புசிக்கிறதில்லை என்றான். அதற்குப் பராபரன் சுத்தமாக்கினதை நீ அசுத்தமானதென்று எண்ணாதிருவென்கிற சத்தத்தைத் திரும்பவுங் கேட்டான். உடனே கூடு வானத்துக்கு எடுக்கப்பட்டது. பேதுருவோ அந்தத் தரிசனையைக் குறித்துச் சிந்தனைபண்ணிக்கொண்டிருக்கையில் ஆவியானவர் புறச்சாதியாரான மூன்று பேர் உன்னைத்தேடுகிறார்கள், நீ ஒன்றுஞ் சந்தேகப்படாமல் எழுந்து

கொருநேலியு கண்ட தரிசனை என்ன?
பேதுருவிடத்துக்கு வந்ததார்?
பேதுரு கண்ட தரிசனை என்ன?
...ன் கண்ட தரிசனையின் கருத்தென்ன?

போ என்று கட்டளையிட்டார். அவன் எழுந்துபோய் அவர்களைக் கண்டு நீங்கள் தேடுகிற பேதுரு நான்தான், நீங்கள் வந்த காரணம் என்னவென்றான். அவர்கள் நீர் சொல்வதைக் கேட்கும்படி கொருநேலியு உம்மை அழைக்கிறான் என்றார்கள். மறுநாள் அவன் கொருநேலியுவின் வீட்டுக்குப் போய் அவனும் அவன் வமிசத்தாருங் கூடியிருக்கிறதைக் கண்டு நாசரேத்தூரிலே தோன்றிய இயேசுவைப் பராபரன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். அந்தப்படி பராபரன் அவருடனேகூட இருந்தபடியால் அவர் நன்மை செய்கிறவராகவும் பசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் விடுதலையாக்கிக் குணமாக்கவுஞ் சுற்றித்திரிந்தார். யூதருடைய நாட்டிலும் எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை ஒருமரத்திலே தூக்கிக் கொன்றுபோட்டார்கள். மூன்றும் நாளிலே பராபரன் அவரை எழுப்பிப் பின்பு அவராலே நியமிக்கப்பட்டிருந்த சாட்சி

அவன் வெளியே புறப்பட்ட பொழுது ஆரைக்கண்டான்?
அவர்கள் என்ன சொன்னார்கள்?
கொருநேலியின் வீட்டிலே ஆர் கூடியிருந்தது?
அங்கே போனபொழுது பேதுரு என்ன சொன்னான்?

Digitized by Google

களாகிய எங்களுக்கே அவர் பிரசன்னமாகும்படிசெய்து சகலருக்கும் அவரே நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படிக்குப் பராபரனால் ஏற்படுத்தப்பட்டவரென்று சனங்களுக்குச் சாட்சியாயிப் பிரசங்கம்பண்ணும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனும் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வானென்று தீர்க்கதரிசிகளும் அவரைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறார்களென்றான். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசுகையில் அவனுடைய வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார். அவர்கள் அன்னிய பாஷைகளைப் பேசிப் பராபரனைப் புகழ்ந்தார்கள். அதைப் பேதுருவுடனே கூட வந்திருந்த விசுவாசிகள் எல்லாருங்கேட்டுப் பரிசுத்த ஆவி புறத்தேசத்தார்களுக்குங் கொடுக்கப்பட்டபடியினாலே பிரமித்தார்கள். மேலும் பேதுரு சொன்னது நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்கள் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு யாவனா

அந்தச்சமயத்தில் என்ன சம்பவித்தது?
விசுவாசிகளான யூதச்சனங்கள் ஏன் அதிசயப்பட்டார்கள்?
பேதுரு விசுவாசிகளுக்கு என்ன செய்தான்?

Digitized by Google

கிலுந் தடைபண்ணலாமாவென்று சொல்லி அவர்களுக்குக் கர்த்தருடைய நாமத்திலே ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். இப்படியே புறத்தேசத்தாருஞ் சீவனை அடையும்படி குணப்படுதலை அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்தார் என்று கேள்விப்பட்டு அந்தச் சபையார் எல்லாரும் பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௰௨. அன்றியும் இஸ்தேவான் கொலையுண்டதிலே கிறிஸ்தவர்கள் எல்லாரும் பலபல ஊர்களுக்கும் போய்ச் சுவிசேஷத்தை அறிவிக்க அங்கங்கே பலரும் அதை விசுவாசித்துக் கிறிஸ்தவர்களானார்கள். அதை அப்போஸ்தலர் கேள்விப்பட்டுப் பரனபாவை அவ்விடத்துக்கு அனுப்ப அவனும் போய் அவர்களை எல்லாம் பெலப்படுத்தினான். அப்பொழுது அனேகர் சபையிலே சேர்க்கப்பட்டார்கள். பின்பு அவன் தருசு ஊருக்குப் போய்ப் பவுலையும் அழைத்துக்

இஸ்தேவானுடைய மரணத்தைக் கேட்ட சீஷர் எங்கே போனார்கள்?
என்ன செய்துகொண்டிருந்தார்கள்?
அதைக் கேள்விப்பட்ட சனங்கள் குணப்பட்டார்களா?
சனங்கள் குணப்பட்ட செய்தியைக் கேட்ட அப்போஸ்தலர்களிடத்துக்கு ஆரை அனுப்பினார்கள்?

Digitized by Google

கொண்டு அந்தியோகியாவிலே வந்து கூடிச் சு
விசேஷித்தை அறிவித்துக்கொண்டிருந்தார்கள்.
௰௫. அக்காலத்திலே ஏரோதே இராசா யோ
வானுடைய சகோதரனாகிய யாக்கோபை வெ
ட்டுவித்துக் கொன்றுபோட்டு யூதருடைய பிரி
யத்துக்காகப் பேதுருவைப் பிடித்து விலங்கு
போட்டுக் காவற்கூடத்தில் வைத்தான். அப்ப
டிப் பேதுரு காவலிலே காக்கப்பட்டிருக்கை
யிற் சபையார் அவனைக் குறித்து இடைவிடாமற்
பராபரனை நோக்கிச் செபம்பண்ணினார்கள். ஒ
ருநாள் இரவிற் கத்தருடைய தூதன் காவற்
கூடத்திலுட்பட்டுப் பேதுருவை எழுப்ப அவ
னுடைய விலங்குகள் எல்லாந் தெறித்துப்போ
யிற்று. உடனே அவன் பேதுருவையும் அழை
த்துக்கொண்டு காவல்களை எல்லாங் கடந்து
கோட்டையை விட்டு வெளிப்பட்டுத் தெருவீதி
யிலே கொண்டுவந்துவிட்டுத் தான் மறைந்து
போனான். அப்பொழுது பேதுரு பராபரனு
டைய தூதன் தன்னை ஏரோதையின் கைக்கு நீங்

அக்காலத்திலே பேதுருவுக்கு விலங்குபோட்டதார்?
ஏரோதே முன்னே என்ன பாவஞ் செய்தவன்? [து?
பேதுரு மறியலில் இருக்கிற பொழுது என்ன சம்பவித்த
தூதன் பேதுருவை எங்கேகொண்டுபோனான்?

Digitized by Google

கலர்க்கி விடுவித்தானென்று கண்டு சந்தோஷிப்பட்டு மரியாள்வீட்டுக்கு வந்து கதவிற் தட்டிக்கொண்டான். அங்கே கூட்டங்கூடி வேண்டுதல் பண்ணிக்கொண்டிருந்தவர்கள் பேதுரு கதவிற் தட்டுகிறதைக் கேட்டுப் பிரமிப்போடே எழுந்து கதவைத்திறக்க அவன் உட்பிரவேசித்துப் பராபரன் தனக்குச்செய்த தயவுகளை எல்லாம் அவர்களுக்கு அறிவித்து மறுதேசத்துக்குப் போனான்.

௰௪. இது இப்படியிருக்கப் பரனபாவும் பவுலும் அந்தியோகியாப் பட்டணத்தில் இருந்து சீப்புறுதீவிலே சேர்ந்து பலபல ஊர்களிலும் பராபரனுடைய வசனத்தை அறிவித்துப் பாப்போபட்டணத்துக்கு வந்தபொழுது கள்ளத்தீர்க்கதரிசியுமாய் ஸ்தம்பனவித்தைக்காரனுமாயிருந்த பரியேசு என்னும் ஒரு யூதன் செரிகியு பவுல் என்னும் பிரதிதுரை பராபரனுடைய வசனத்தை இவர்களிடத்திற் கேளாதபடி இவர்களோடே எதிர்த்துத் தருக்கித்தான். அப்பொழுது பவுல் கபடமும் பொல்லா

மரியாள் வீட்டிலே என்னத்தைச் செய்தார்கள்?
அவன் வீட்டிலே பேதுரு என்ன சொன்னான்?
பரனபாவும் பவுலும் எங்கே போனார்கள்?
பரியேசு என்பவன் ஆர்? [அவன் என்ன செய்தான்?

Digitized by Google

க்கும் நிறைந்த பசாசின் மகனே, சகல நீதிக்
கும் பகைஞனே, நீ கர்த்தருடைய மார்க்கங்
களைப்புரட்டுகிறதில் ஓயமாட்டாயோ? பராபர
னுடைய கை இப்பொழுதே உன்மேல் வந்தி
ருக்கின்றது, ஆதலால் நீ சிலகாலம் குருடனாய்
இருப்பாயென்றான். உடனே அவன் குருடனா
னான். அதைக் கண்டு பிரதிதுரை விசுவாசியானா
னான். அதின்மேல் அவர்கள் அந்தப்பட்டணத்
தை விட்டுப் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு
வந்து ஓய்வுநாளிலே ஆலயத்துக்குப் போயி
ருந்தார்கள். அங்கே நியாயப்பிரமாணமுந் தீர்
க்கதரிசனமும் வாசித்து முடித்தபின் ஆலயத்
தலைவன் பரனபாவும் பவுலும் பேசும்படிக்கு
உத்தரவுகொடுக்க, பவுல் எழும்பி அனேகம்
அத்தாட்சிகளினாலே இயேசுக்கிறிஸ்துவை மே
சியாவென்றும் அவரை விசுவாசியாமல் இருக்
கிறவர்கள் நிசமாகவே அழிவை அடைவார்களெ

பவுல் அவனுக்கு என்ன சொன்னான்?
அவனுக்கு என்ன சம்பவித்தது?
பிரதிதுரை விசுவாசித்தானா?
பின்பு அவர்கள் எங்கே போனார்கள்?
தேவாலயத்தில் அவர்கள் சேர்ந்தது எந்த நாள்?
அங்கே என்ன வாசிக்கப்பட்டது?
அங்கே பவுல் என்ன போதித்தான்?

Digitized by Google

ன்றும் அந்த அழிவு உங்களுக்கு வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றும் புத்திசொல்லி இருவரும் புறப்பட்டார்கள். யூதரிலும் யூதமார்க்கத்திற் சேர்ந்து தேவபத்தியாய் இருந்தவர்களிலுஞ் சிலர் அப்பொழுது பவுலுக்கும் பரனபாவுக்கும் பின்சென்றுபோக அவர்கள் பராபரனுடைய கிருபையிலே நிலைகொண்டிருங்கள் என்று புத்திசொல்லி விடுதிக்குப் போனார்கள்.

௪௫. மற்ற ஓய்வுநாளிலே அந்தப் பட்டணத்தாரில் அனேகர் பராபரனுடைய வசனத்தைக் கேட்கும்படி தேவாலயத்திலே கூடிவந்தார்கள். அதை யூதர்கள் கண்டு பொறாமையடைந்து இவர்களுடைய வசனத்துக்கு எதிரிடையாகப் பேசினபொழுது பரனபா தயிரியங்கொண்டு நீங்கள் பராபரனுடைய வசனத்தைத் தள்ளி நித்திய சீவனைப் பெறத் தகுதியற்றவர்களாய் நடக்கிறபடியால் நாங்கள் புறத்தேசத்தாரிடத்துக்குப் போகிறோ

ஆருடைய் உத்தரவின்படி போதித்தார்கள்?
மற்ற ஓய்வுநாளிலே என்ன சம்பவித்தது?
யூதர்கள் இவர்களுக்கு என்ன செய்தார்கள்?
அதற்கு அவர்கள் எவ்விடத்தை விட்டுப் புறத்தேசத்தாக்குப் போகிறோம் என்றார்கள்?

Digitized by Google

ம் என்றார்கள். அதைப் புறத்தேசத்தார் கேட்டுச் சந்தோஷப்பட்டு அனேகர் விசுவாசிகளானார்கள். அதைக் கண்ட யூதர்கள் கோபமடைந்து இவர்களை ஊருக்குப் புறம்பே துரத்திவிட இவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிறையப்பட்டு இக்கோனியப் பட்டணத்தில் யூதருடைய தேவாலயத்துக்குப் போய்ப் பிரசங்கம்பண்ணினார்கள். அதிலே யூதரிலுங் கிரேக்கரிலும் அனேகர் விசுவாசித்தார்கள். அங்கும் யூதர்கள் பகை சாதித்து இவர்களைக் கல்லெறிந்து கொன்றுபோட யோசனைபண்ணினதை இவர்கள் அறிந்து அவ்வூரை விட்டுப் புறப்பட்டு லீஸ்திராவூரிலும் அதைச் சூழ்ந்த புறங்களிலுஞ் சுற்றிச் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். அதுவன்றி அங்கே சப்பாணியாய்ப் பிறந்திருந்த ஒருவனைப் பவுல் சுகப்படுத்தினதினாலே இவர்களைத் தெய்வம் மனுரூபாய் வந்ததென்று எண்ணினார்கள். அப்பொழுது தாங்கள் அப்படிப்பட்ட

பவுலும்பரனபாவும் எங்கே போனார்கள்?
அங்கே குணப்பட்டதார்?
...ரைக் குணமாக்கினான்?
...ங்கள் இவர்களை என்ன நினைத்தார்கள்?

Digitized by Google

வர்களல்ல நாங்கள் கிறிஸ்துவின்தொண்டரெ
ன்று சொன்னார்கள்.

௰௯. அப்படியிருக்கையில் அந்தியோகியா
விலும் இக்கோனியாவிலும் இருந்த யூதர் வந்து
பவுலின் மேற் கல்லெறிந்து அவன் செத்தா
னென்று நினைத்து அவனை இழுத்துக்கொண்டு
போய்ப் பட்டணத்துக்குப் புறம்பே போட்
டார்கள். அவன் எழுந்து பரனபாவுடனே தெ
ருவை ஊருக்குப்போய்ச் சுவிசேஷத்தை அறி
வித்து அனேகரைச் சீஷராக்கினான். இவ்வித
மாக இவர்கள் தேசமெங்குஞ் சுற்றிப் பிரசங்கி
த்துச் சபையை ஸ்தாபித்து வருங்காலத்திலே தி
யாத்திரா ஊரிலே லீதியாளென்று பேர்கொண்
ட ஒரு ஸ்திரி இருந்தாள். அவளும் அவளுடைய
குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றபொ
ழுது அவள் அவர்களை நோக்கி நீங்கள் என்னை
க் கர்த்தாவினிடத்தில் விசுவாசமானவளென்

இவர்கள் அதற்கு என்ன சொன்னார்கள்?
அக்காலத்திலே பவுலுக்கென்ன நடந்தது?
பின்பு பவுல் எங்கே போனான்?
அங்கே உள்ளவர்களும் விசுவாசித்தார்களா?
பின்பு எங்கே போனார்கள்?
தியாத்திரா ஊரிலே ஆர் குணப்பட்டது?

Digitized by Google

றெண்ணினால் என் வீட்டிலே வந்திருங்களெ
ன்று மிகவும் வேண்டிக்கொண்டாள். அவர்க
ள் வேண்டுதல்செய்யப் போகும் பொழுது
பீத்தோ தேவனுடைய ஆவியைக்கொண்டிரு
ந்து குறிசொல்லுகிறதினாலே தன் எசமான்க
ளுக்கு மிகுந்த நயத்தை உண்டாக்கின ஒரு வே
லைகாரி அவர்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள்
பவுலுக்கும் மற்றவர்களுக்கும் பின்னாகச் செ
ன்று இந்த மனிதர் உன்னதமான பராபரனுடை
ய தொண்டர் உங்களுக்கு இரட்சிப்பின் மார்
க்கத்தை அறிவிக்க வந்தார்களென்று சத்தமி
ட்டுக்கொண்டு அனேகநாள்த் திரிந்தாள். அப்
பொழுது பவுல் விசனத்துடனே திரும்பி
அந்த ஆவியுடனே இவளைவிட்டுப் புறப்படும்
படிக்கு இயேசுக்கிறிஸ்துவுடைய நாமத்தினா
லே உனக்குக் கட்டளையிடுகிறேனென்றான். அ
ந்நேரம் அது அவளைவிட்டுப் புறப்பட்டுப்
போயிற்று. அவளுடைய எசமான்கள் தாங்க
ள் அவளாலே பெறுகிற நயங் கெட்டுப்போயி

அவள் என்ன கேட்டாள்?
அவர்கள் வேண்டுதல்செய்யப் போம் பொழுது அவர்களுக்கு எதிர்ப்பட்டதார்?
வவள் என்ன சொன்னாள்?
வளுக்குப் பவுல் என்ன சொன்னான்?

Digitized by Google

ர்றென்று அறிந்து பவுலையுஞ் சீலாவையும் பிடித்துச் சந்தைவெளியிலுள்ள தலைவரிடத்துக்கு இழுத்துத் துரைகளுக்கு முன்பாகக்கொண்டு போய் யூதர்களாகிய இவர்கள் நம்முடைய பட்டணத்தைக் கலங்கப்பண்ணி உரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவுஞ் செய்யவுந் தகாத முறைமைகளை அறிவிக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது சனங்கள் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினதும் அன்றித் துரைகளும் அவர்களை மிகுதியாய் அடிப்பித்துக் காவற்கூடத்தில் வைத்துக் கெட்டியாய்க் காவல்பண்ணும்படி காவற்காரனுக்குக் கட்டளையுமிட்டார்கள். அவனுக்கு இப்படிப்பட்ட கட்டளை கிடைத்ததிலே அவர்களை உள்ளுக்குள்ளான காவலறையிலே போட்டு அவர்கள் கால்களைத் தொழுவில் அடித்துவைத்தான்.

௰௭. அப்படி இருந்தும் பாதி இராத்திரியிலே பவுலுஞ் சீலாவும் வேண்டுதல்பண்ணிப் பராபரனைத் துதித்துப்பாடினார்கள். சடுதியிலே

சனங்கள் ஏன் மனக்குறைப்பட்டார்கள்?
சனங்கள் இவர்கள் மேல் என்ன குற்றஞ் சாற்றினார்கள்?
துரைகள் இவர்களுக்கு என்ன செய்தார்கள்?
அவர்கள்காவற் கூடத்தில் இருந்து என்னசெய்தார்கள்?

Digitized by Google

காவற்கூடத்தின் அஸ்திபாரங்கள் அசையத்தக்
கதாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவு
கள் எல்லாந் திறக்கப்பட்டு அவர்கள் கால்களும்
கைகளும் பூட்டப்பட்ட பூட்டுகள் தெறித்துப்
போயின. காவற்காரனோ விழித்துக் கதவுகள்
திறந்திருக்கக் கண்டு உள்ளே காவல்வைக்கப்ப
ட்டவர்கள் தப்பிவிட்டார்களென்று நினைத்துக்
கத்தியை உருவித் தன்னைக் கொலைசெய்ய எத்த
னம் பண்ணினான். பவுலோ நாங்கள் எல்லாரும்
இங்கே இருக்கிறோம், நீ உனக்குக் கேடொன்
றுஞ் செய்யாதிருவென்று மிகுந்த சத்தமாய்
க் கூப்பிட்டுச் சொன்னான். அப்பொழுது அ
வன் உள்ளே ஓடிப்போய் நடுக்கமடைந்தவனா
ய்ப் பவுலுக்குஞ் சீலாவுக்கும் முன்பாக வி
ழுந்து அவர்களை வெளியே அழைத்துப்போய்
ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான்
என்ன செய்யவேண்டுமென்றான்? அதற்கவர்க
ள் கத்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவா
சித்துக்கொள்வாயாக, அப்பொழுது நீயும் உ

அப்போது என்ன சம்பவித்தது?
காவற்காரன் ஏன் தன்னைக் கொல்ல நினைத்தான்?
பவுல் என்ன சொன்னான்?
அப்பொழுது காவற்காரன் அவர்களை என்ன கேட்டான்?

Digitized by Google

ன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி அவனுக்கும் அவனுடைய வீட்டில் இருந்த யாவருக்குங் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் அவ்விராத்திரியில் அந்நேரத்திலே தானே அவன் அவர்களைச் சேர்த்துக்கொண்டு அடியாலான காயங்களைக் கழுவினான். அன்றியும் அவனும் அவனைச் சேர்ந்த யாவரும் உடனே ஞானஸ்நானமும் பெற்றார்கள், பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துப்போய் அவர்களைப் போசனம் பண்ணுவித்துத் தானுந் தன்வீட்டார் அனைவரும் பராபரனில் விசுவாசிகளாகி மிகவும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். உதயமான பொழுது துரைகள் தலையாரிகளை அழைத்து அவர்களை விட்டுவிடும்படி சொல்லி அனுப்பினார்கள்.

௰அ. காவற்காரன் பவுலுவுடனே உங்களை விடுதலையாக்கும் படிக்குத் துரைகள் கட்டளை அனுப்பினார்கள். ஆகையால் நீங்கள் புறப்பட்

அவர்கள் என்ன சொன்னார்கள்?
காவற்காரன் அவர்களுடைய காயங்களுக்கு என்ன செய்தான்?
அந்தத் தேவ வல்லமை காணப்பட்டதினாலே என்ன நடந்தது?
பின்பு துரைகள் என்ன சொல்லி அனுப்பினார்கள்?

Digitized by Google

டுச் சமாதானத்துடனே போவீர்களாக என்றான். அதற்குப் பவுல் உரோமராச்சியத்தாராகிய எங்களை நியாயம் விசாரியாமல் வெளியரங்கமாய் அடிப்பித்துச் சிறைச்சாலையிற் போட்டு இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களா? அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடக்கடவர்கள் என்றான். இந்த வசனங்களைத் தலையாரிகள் துரைகளுக்கு அறிவிக்கவும் அவர்கள் உரோமராய் இருக்கிறார்களென்று கேட்டதினாலே பயமடைந்து அவர்களிடத்தில் வந்து அவர்களுடனே தயவாய்ப் பேசிக்கொண்டு பின்பு அவர்களை வெளியே அழைத்து வந்து பட்டணத்தை விட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்தப்படி அவர்கள் காவற்கூடத்தில் இருந்து புறப்பட்டு லீதியாளிடத்துக்குப் போய்க் கிறிஸ்துவின் சபையாரைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் புறப்பட்டுப்போனார்கள். அப்படிப் புறப்பட்டுப் போய்ப் பலபட்டினங்களையுங் கடந்து தேசலோனிக்கேக்கு வந்து பவுல் வேத எழுத்துக்க

பவுல் என்ன சொல்லி அனுப்பினான்?
களைக் கேட்டுத் துரைகள் என்ன செய்தார்கள்?

Digitized by Google

ளின் நியாயங்களை எடுத்துச் சம்பாஷித்து நான் உங்களுக்கு அறிவிக்கிற இயேசுவே கிறிஸ்துவென்று திருட்டாந்தரப்படுத்திச் சொன்னான். அங்கே அனேகஞ் சனங்கள் அவரில் விசுவாசமானார்கள்.

௰௫. விசுவாசியாத யூதர் வயிராக்கியமடைந்து சில பொல்லாதவர்களையுஞ் சேர்த்துக்கொண்டு பட்டணத்தைக் கலகம்பண்ணி அவர்களை யாசோனுடைய வீட்டிலிருந்து சனங்களுக்கு முன்பாகக் கொண்டுபோக வகைதேடினார்கள். அப்பொழுது அவர்களைக் காணக் கூடாமற் போனபடியால் யாசோனையும் வேறுசீஷரையும் பட்டணத்துத் தலைவரண்டைக்கு இழுத்து வந்து இவர்கள் எல்லாரும் இயேசுவென்கிற ஒருவனை இராசா என்றார்கள். இந்தக்கலகக்காரரை யாசோனும் ஏற்றுக்கொண்டான். இப்படி இவர்கள் இராயருடைய கட்டளைக்கு விரோதஞ்செய்கிறார்களென்று முறையிட்டார்கள். அ

தெசலோனிக்கே ஊருக்குப் பவுல் வந்து என்ன சொன்னான்?
அவர்களும் விசுவாசித்தார்களா?
விசுவாசியாதவர்கள் என்ன செய்ய வகை தேடினார்கள்?
யாசோனையுஞ் சீஷர்களையும் எங்கே யூதர் பிடித்துக் கொண்டு போனார்கள்?
என்ன குற்றஞ் சாற்றினார்கள்?

Digitized by Google

ந்தத் தலைவர் இவர்களிடத்திலே கையெழுத்து வா
ங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள். பவுலுஞ் சீலா
வும் புறப்பட்டுப் பெரோயாவுக்குப் போய்ச்
சுவிசேஷத்தை அறிவிக்க அங்கும் அநேகர் வி
சுவாசிகளானார்கள். அதையுந் தெசலோனிக்கே
யிலுள்ள யூதர் அறிந்து அங்கே போய் இவர்க
ளுக்கு விரோதமாய்ச் சனங்களை எழுப்பிவி
ட்டார்கள். அதினாலே பவுல் அவ்விடத்தை விட்
டு அத்தேனே பட்டணத்துக்குப் போய் அந்
தப் பட்டணத்தில் விக்கிரகாராதனை நிறைந்தி
ருக்கிறதைக் கண்டு தேவாலயத்தில் யூதரோடு
ம் மற்றுந் தேவபத்தியுள்ளவர்களோடுந் தனக்
கெதிர்ப்பட்டவர்களோடுந் நாடோறும் பேசி
க்கொண்டான். அப்பொழுது எப்பிக்கூராரும்
இஸ்தோயிக்கருமான ஞானிகளிற் சிலர் அவனு
டனேவாக்குவாதம்பண்ணிச்சிலர் இந்தவாயாடி
என்ன பேசப் போகிறான் என்றார்கள். சிலரோ

அதிகாரிகள் இவர்களுக்கு என்ன செய்தார்கள்?
பவுலுஞ் சீலாவும் எங்கே போனார்கள்?
பெரோயாவிலுள்ளவர்களும் விசுவாசித்தார்களா?
அதைக் கண்ட யூதர் என்ன செய்தார்கள்?
பவுல் அத்தேனேக்குப் போய் என்னத்தைப் பிரசங்கித்தான்?
கே இருந்த ஞானிகளிற் சிலர் என்ன சொன்னார்கள்?

Digitized by Google

அன்னியதேவர்களை அறிவிக்கிறவனாகக் காண்கின்றதென்றார்கள். ஏனெனில் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தான். அவனை மாரிஸ்தேவனுடைய மேடைக்கு அழைத்துக்கொண்டுபோய் உன்னாற் சொல்லப்படும் இந்தப் புதிய உபதேசம் ஏதென்று அறியலாமோ? நவமான காரியங்களை எங்கள் காது கேட்கப்பண்ணுகிறாய், ஆகையால் நாங்கள் அவைகளை அறியவேண்டும் என்றிருக்கிறோமென்றார்கள்.

௨௰. அப்பொழுது பவுல் மாரிஸ்மேடையின் நடுவிலே நின்று அத்தேனரே, எல்லாவற்றிலுந் தேவபத்தியே உங்களுக்கு மிகவும் உண்டாயிருக்கிறதென்று எனக்குத் தோன்றுகின்றது. எப்படியென்றால் நான் சுற்றித்திரிந்து வந்து உங்கள் தேவாராதனைக்கேற்றவைகளை நோக்கிப்பார்த்தபொழுது அறியப்படாததேவனுக்கென்று எழுதியிருக்கிற ஒரு பீடத்தையுங் கண்டேன். நீங்கள் அறியாமற் பணிசெய்கிறவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவை

பவுலை மாரிஸ்மேடைக்கு அழைத்துக்கொண்டுபோய் என்ன கேட்டார்கள்?

Digitized by Google

யும் உண்டாக்கின தேவன் வானத்துக்கும் பூ
மிக்கும் ஆண்டவரானதாற் கைகளாற் செய்
யப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணுகிறது
மில்லை, யாதொன்று தமக்கு வேண்டுவதாக
மனிதர் கைகளாற் பணிவிடைகொள்ளுகிறது
மில்லை, எல்லாருக்குஞ் சீவனையுஞ் சுவாசத்தை
யும் மற்றயாவையும் அவர் கொடுத்திருக்கிறார்.
அல்லாமலும் அவரே ஒரே இரத்தத்தில் இருந்
து மனிதர் எல்லாருந் தோன்றப்பண்ணி நம்மில்
ஒருவருக்குந் தூரமல்லாத பராபரனாகிய தம்
மை அவர்கள் தேடிப் பற்றிக்கொள்ளத்தக்கதா
கத் தம்மைத் தேடும்படிக்கு அவர்களுக்காக
முன் திட்டமாக்கப்பட்ட காலங்களையுங் குடி
யிருப்பெல்லைகளையுங் குறித்து அவர்கள் பூமி
யில் எங்குங் குடியிருக்கும்படி செய்தார். அவ
ரால் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இரு
க்கிறோம். அதுபோல உங்களிற் சில புலவர்க
ளும் அவருடைய வமிசத்தாராயிருக்கிறோமெ
ன்று சொன்னார்கள். ஆதலால் நாம் பராபர
னுடைய வமிசத்தாராயிருக்க, தெய்வம் மனி
தருடைய சித்திரவேலையினாலும் தோன்றுதவி

ாரிஸ்மேடையில் நின்று பவுல் என்ன பேசினான்?

னும் பொன், வெள்ளி, கல், இவைகளாற் செ
ய்யப்பட்டதற்கு ஒப்பாயிருக்கின்றதென்று நா
ம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்க
ளிற் பராபரன் கண்சாடையாய் இருந்தார். இப்
பொழுதோ குணப்படவேண்டுமென்று எவ்
விடத்திலுமுள்ள மனிதர் யாவருக்குங் கட்ட
ளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்தார்.
அதிலே அவர் தாம் நியமித்த ஒருவரைக்கொண்
டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத்
தீர்ப்புக்கொடுப்பார். அவரை மரித்தோரில் இ
ருந்து எழுப்பினதினாலே அவர் அதின் நிச்ச
யத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினாரெ
ன்றான். மரித்தோருடைய உயிர்த்தெழுதலைக்
குறித்து அவர்கள் கேட்டபொழுது சிலர் இக
ழ்ந்தார்கள். சிலர் பின்னொருவேளை இதைக்குறி
த்து உன்னிடத்திற் கேட்போம் என்றார்கள்.
அப்பொழுது பவுல் அவர்களை விட்டுப் புறப்ப
ட்டுப்போனான். தியோனீசி என்னும் நியாயா
திபதியுந் தாமரியென்று பேருள்ளஒருஸ்திரியு
ம் அவர்களுடனே கூட வேறு சிலரும் அவனை
ப் பற்றிக்கொண்டு விசுவாசிகளானார்கள்.

அவனுடைய பேச்சைக் கேட்டுச் சனங்கள் என்ன சொ
எத்தனை பேர் குணப்பட்டார்கள்? [ன்னார்கள்?

Digitized by Google

உக. பின்பு அத்தேனையை விட்டுக் கொரிந்துவுக்குப் போய்க் கூடாரஞ்செய்கிற ஒருவனுடைய வீட்டிலே இருந்து அந்த வேலையைத் தானுஞ் செய்து சீவனம்பண்ணிக்கொண்டு ஓய்வுநாடோறுந் தேவாலயத்திலே சேர்ந்து யூதருக்குங் கிரேக்கருக்குங் கிறிஸ்துவைக் குறித்துப் போதகம்பண்ணிவந்தான். அப்படி வருகையில் மக்கேதோனியா நாட்டில் இருந்து சீலாவுந் தீமோத்தேயும் அவ்விடத்துக்கு வந்தபொழுது பவுல் தன் ஆவியிலே அதிக பத்திவயிராக்கியங்கொண்டு இயேசுவானவரே கிறிஸ்துவென்று யூதருக்குக் காண்பித்தான். அவர்களோ எதிர்த்துப்பேசித் தூஷணித்தபொழுது அவன் தன் வஸ்திரங்களை உதறி உங்களுக்குக் கேடு வரும்படிக்கு நீங்களே ஏதுவாயிருக்கிறீர்கள். நான் சுத்தமாயிருக்கிறேன். இது முதல் நான் புறத்தேசத்தார்களிடத்திற் போகிறேனென்று

கொரிந்துப் பட்டணத்துக்குப் போய் ஆருடைய வீட்டிலே இருந்தான்?
அவன் எப்படிச் சீவனம் பண்ணினுன்?
அங்கே என்ன செய்தான்?
பிரசங்கத்தைக் கேட்ட சனங்கள் என்ன செய்தார்கள்?
அவனிடத்தில் ஆர் போனது? [ன்றான்?
என் பிறதேசத்துக்குப் போகிற முகாந்தரம் என்னவெ

அவர்களுடனே சொல்லி அவ்விடத்தை விட்டுத் தேவபத்தியுள்ள யூஸ்து என்பவனுடைய வீட்டிலே போனான். அந்த வீடு ஆலயத்திற்கு அடுக்க இருந்தது. மேலும் ஆலயத் தலைவனாகிய கிரிபு தன் வீட்டார் அனைவரோடுங் கூடக் கர்த்தரை விசுவாசித்தான். கொரிந்தியரில் அனேகருஞ் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு இராத்திரியிலே கர்த்தர் ஒரு தரிசனத்திலே பவுலுடனே சொன்னதாவது, இந்தப்பட்டணத்திலே அனேகம் பேர் என்னுடைய சனங்களாயிருக்கிறார்கள், ஆகையால் நான் உன்பங்கில்இருப்பேன். ஒருவனும் உனக்குத் தீமைசெய்யும்படிக்கு உன்மேற் கைபோடுவதில்லை, ஆனபடியினாலே நீ பயப்படாமற் பேசுவாயாக. மவுனமாயிருக்கவேண்டாமென்றார். அந்தப்படி அவன் ஒரு வருஷமும் ஆறுமாதமும் அங்கே தங்கிப் பராபரனுடைய வசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டுவந்தான்.

அவன் யூஸ்து என்பவன் வீட்டிலே இருந்தபொழுது ஆர் குணப்பட்டது?
அப்பொழுது பராபரன் ஆருக்குத் தரிசனையானார்?
என்ன சொன்னார்?
அங்கே எத்தனை காலமாகப் பிரசங்கித்தான்?

Digitized by Google

உஉ. பின்பு கல்வியோனென்பவன் அகாயி நாட்டிலே பிரதிதுரையானபொழுது யூதர்கள் ஒருமனமாகத் திரண்டு பவுலுக்கு விரோதமாய் எழும்பி அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோய் இவன் வேதநூலுக்கு ஒவ்வாத பிரகாரமாய்ப் பராபரனைச் சேவிக்கும்படி மனிதருக்குப் போதிக்கிறானென்றார்கள். அதற்கு உத்தரஞ் சொல்லப் பவுல் தன் வாயைத் திறக்கவுங் கலவியோன் யூதரை நோக்கி யூதரே, இது அநீதியாய் அல்லது மிகவும் பொல்லாங்கான காரியமாயிருந்தால் நான் உங்களுக்குச் செவிகொடுத்துக்கேட்க நியாயம் உண்டாயிருக்கும். இது உபதேசத்துக்கும் நாமங்களுக்கும் உங்கள் வேதநூலுக்கும் அடுத்த தருக்கமாயிருக்கிறபடியினாலே இப்படிப்பட்டவைகளைக் குறித்து நான் நியாயந்தீர்க்கமாட்டேன். ஆகையால் நீங்களே பார்ப்பீர்களாகவென்று சொல்லி அவர்களை நியாயாசனத்தை விட்டுப் போகப்பண்ணினான். அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனே

கல்வியோன் அந்த நாட்டுக்குத் துரையான பொழுது இவனிலே என்ன குற்றஞ் சாற்றினார்கள்?
கல்வியோன் என்ன சொன்னான்?

Digitized by Google

யைப் பிடித்து நியாயாசனத்துக்கு முன்பாக விட்டு அடித்தார்கள். அதைக் குறித்துக் கல்லியோன் விசாரணைபண்ணுமலிருந்தான்.

௨௫. மறுபடி அவன் எபேசில் வந்து தங்கி அதில் இருந்து சேசாரியாவுக்குப் போய் எருசலேமைச் சேர்ந்து அந்தியோகியாவிலே சிலகாலம் இருந்து கலாத்தியாவையும் பிரிகியாவையுங் கடந்து அங்கங்குள்ள சீஷர் எல்லாரையுந் திடப்படுத்திவந்தான். பின்பு பவுல் அவ்விடத்தை விட்டு எபேசுபட்டணத்துக்கு வந்து அவர்களுடைய ஆலயத்திலே தேவமார்க்கத்தைக் குறித்துத் திட்டமாய்ப் பேசிப் பின்பு சீஷரையுஞ் சேர்த்துக்கொண்டு திறன்னு என்பவனுடைய பள்ளிக்கூடத்திலே இரண்டு வருஷிஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தான். அல்லாமலும் பவுலுடைய சரீரத்தில் அணிந்த உடைகளினலும் அவனுடைய வாக்கினலும் பசாசுகள் பயந்தோடுகிறதையும் வியாதிக்காரர் குணமா

கிரேக்கர் ஆலயத்தலைவனைப் பிடித்து என்ன செய்தார்கள்?

பவுல் வேறெந்தெந்த இடங்களுக்குப் போனான்?

திறன்னு எனபவனுடைய பள்ளிக்கூடத்திலே எவ்வளவு காலம் இருந்தான்?

அங்கே இருக்கையிற் பராபரன் இவனைக்கொண்டு என்ன அற்புதங்களை நடப்பித்தார்?

Digitized by Google

கிறதையும் ஸ்கேவா என்னும் ஆசாரியனுடை
ய குமாரர் எழுபேர்கேள்விப்பட்டு இயேசுவி
ன் நாமத்தைக்கொண்டு பசாசுகளைத் துரத்தத்
துணிந்து பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் நா
மத்தைக் கொண்டு நீ இவனை விட்டுப் புறப்படு
ம்படிக்கு ஆணையிடுகிறோமென்றார்கள். அப்
பொழுது பசாசு பவுலையும் இயேசுவையும் அ
றிவேன், நீங்களோ ஆரென்று சொல்லி அவர்
களுடைய புடைவைகளையுஞ் சின்னபின்னமா
கக் கிழித்து அவர்களையுங் காயப்படுத்திப்போ
ட்டது. அதினாலே அவ்வூரவர்கள் எல்லாரும்
கத்தராகிய இயேசுவின் நாமத்துக்கு மிகவும்
பயப்பட்டார்கள். மேலும் இயேசுவின் நாம
த்தை அந்தரங்கத்தில் விசுவாசித்திருந்த எல்லா
ரும் வெளியரங்கமாய் அறிக்கையிட்டார்கள்.
அதைக் கண்ட மாயவித்தைக்காரரிலும் அனே
கர் தங்கள் புத்தகங்களை எடுத்துச் சுட்டுப்போ
ட்டுக் கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள். அந்தப்

அதைக் கண்ட ஸ்கேவாவுடைய பிள்ளைகள் என்னசெ
ய்தார்கள்?
அவர்களுக்கு என்ன சம்பவித்தது?
சனங்கள் என்னத்துக்குப் பயப்பட்டார்கள்?
அப்பொழுது மாயவித்தைக்காரர் என்ன செய்தார்
கள்?

Digitized by Google

புத்தகங்களுக்கு விலை ஆறுயிரத்து நானூற்றை மீபத்தெட்டுப் பவுண்டாயிருந்தது. மக்கேதோனியா நாட்டுக்குத் தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் அனுப்பித் தான் ஆசியா நாட்டிலே சில காலமாக இருந்தான்.

உச. அப்பொழுது தேமேத்திரி என்று நாமமுள்ள ஒரு தட்டான் தியானாள் தேவிக்காக வெள்ளிக்கோவில்களைச் செய்து தொழிலாளிகளுக்கு மிகுந்த பிழைப்பை உண்டாக்கிவந்தான். அவர்களையும் அந்தத் தொழிலைச் செய்கிற மற்றவர்களையும் அவன் கூட்டிவைத்து அவர்களுடனே தொழிலாளிகளே, நமக்குப் பிழைப்பு இந்தத்தொழிலினாலே வருகின்றதென்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் கண்ட அளவுக்குங் கேட்ட அளவுக்கும் அந்தப் பவுல் என்பவன் கைவேலையாய்ச் செய்யப்பட்டவைகள் தேவர்கள் அல்லவென்று சொல்லி எபேசிலும் ஆசியா நாட்டிலும் அனேக சனங்களுக்குப் போதித்

பவுல் மக்கேதோனியாவுக்கு ஆராரை அனுப்பினான்?
பவுல் எங்கே இருந்தான்?
தேமேத்திரி என்னுந் தட்டான் என்ன குறைசொன்னான்?
தியானாள் என்பவள் ஆர்?

து அவர்களை மாறுபாடாக்கினான். அதினாலே நம்முடைய தொழிலும் மேன்மையற்று மகா தேவியாகிய தியானாளுடைய கோவிலும் மதிப்பில்லாததாய் ஆசியாத்தேசத்தார் முதற் பூச்சக்கரத்திலுள்ள யாவராலுஞ் சேவிக்கப்படுகிற அவளுடைய மகிமை அழிந்துபோகிறதற்கும் ஏதுவாயிருக்கின்றதென்றான். அதை அவர்கள் கேட்டு மிகுந்த கோபமடைந்து எபேசியருடைய தியானாளே பெரியவளென்று சத்தமிட்டார்கள். பட்டணம் முழுதுங் கலக்கத்தினால் நிறைந்தது. மேலும் அவர்கள் பவுலுடனே கூடப்பிரயாணமாய் வந்த மக்கேதோனியராகிய காயுவையும் அரிஸ்தருக்குவையும் இழுத்துக்கொண்டு ஒருமனமாக வேடிக்கை ஸ்தலத்துக்குத் துள்ளிமிதித்தோடினார்கள். அப்பொழுது பவுலும் அந்தக் கூட்டத்துக்குப் போக மனதாயிருந்தான். சீஷரோ அவனைப் போக விடவில்லை. மேலும் அவனை அங்கே போகாம

பவுலினாலே தியானாளுக்கு என்ன சம்பவித்ததென்று தேமேத்திரி சொன்னான்?

அதைக்கண்ட சனங்கள் என்ன சொன்னார்கள்?

அங்கே அவர்கள் ஆரைப் பிடித்து வேடிக்கைத்தலத்துக்குக் கொண்டுபோனார்கள்?

அங்கே ஏன் போகவில்லை?

Digitized by Google

விருக்கச் சொல்லி வேண்டிக்கொள்ளும்படிக்
கு அவனுடைய சினேகிதராகிய ஆசியாத்தே
சத் தலைவரிற் சிலர் அவனிடத்துக்கு ஆளனுப்
பினார்கள்.

௨௫ அன்றியுங் கூட்டங் கலக்கமுள்ளதாகவு
ம் அதில் அனேகர் தாங்கள் கூடிவந்த காரண
ம் இன்னதென்று அறியாதபடியினாலே பலவித
மாய்க் கூக்குரலிட்டார்கள். அப்பொழுது யூ
தர்கள் அலெக்சந்தர் என்பவனை முன்னே போ
கத்தள்ளக் கூட்டத்திலுஞ் சிலர் அவனை முன்
னே இழுத்தார்கள். அவன் கையினாற் குறிப்
புக் காட்டிச் சனங்களுக்கு உத்தரவுசொல்ல வி
ரும்பினான். அவனை யூதனென்று அவர்கள் அறி
ந்தபொழுது எல்லாரும் எபேசியருடைய தி
யானாளே பெரியவளென்று இரண்டுமணி நே
ரமளவும் ஒரு மொழியாய்க் குரலையிட்டார்க
ள். பின்பு மணியகாரனானவன் சனங்கள் பே
சாமல் இருக்கும்படி அமர்த்தி எபேசியரே,
எபேசுப்பட்டணம் மகாதேவியாகிய தியானா
ளுக்கும் வானத்திலிருந்து விழுந்த சொரூபத்

அலெக்சந்தர் ஆர்?
இரண்டு மணி நேரம் அளவாகச் சனங்கள் என்ன செய்தார்கள்?

Digitized by Google

துக்கு கோவில் பரிசாரகியாயிருக்கிறதை அறி
யாதவன் உண்டா? அது எதிர்ப்பேசப் படாத
காரியமானபடியினாலே நீங்கள் ஒன்றும் பதறி
ச்செய்யாமல் அமைந்திருக்கவேண்டும். இவர்
கள் உங்கள் கோவிலைக் கொள்ளையிடுகிறவர்க
ளுமல்ல, உங்கள் தேவியைத் தூஷணித்தவர்க
ளுமல்ல, இப்படி இருந்தும் இவர்களை இங்கே
கொண்டுவந்தீர்கள். தேமேத்திரியுக்கும் அவ
னைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் ஒருவன்மே
ல் யாதொரு காரியம் உண்டாயிருந்தால் நியா
யத்துரைகள் நியாயம்விசாரிக்கும் நாட்களில்
அவர்களிடத்திலே ஒருவருக்கொருவர் விரோத
மான பிராதுபண்ணக்கடவர்கள். நீங்கள் வே
றொருகாரியத்தை விசாரித்தால் அது நியாயச
ங்கத்திலே தீர்க்கப்படுமே, இன்றைக்குண்டான
கலக்கத்துக்காக நாம் உத்தரவு சொல்ல அழை
க்கப் படுவதற்கு ஏது உண்டாயிருக்கின்றது. இ
ப்படிக் கலகம்பண்ணுவதற்கு நிமித்தம் இல்
லாதபடியால் நாம் அதைக்குறித்து உத்தரவு
சொல்லமாட்டோம் என்று சொல்லி அவர்களை
அனுப்பிவிட்டான். கலகம் அமர்ந்த பின்பு ப

அந்தச் சொரூபம் எங்கே இருந்து விழுந்ததாம்?
அதைக் குறித்து ஆர் விசாரிக்க வேண்டும் என்றான்?

Digitized by Google

வுல் சீஷரைத் தன்னிடத்தில் அழைத்து உத்தரவு வாங்கிக்கொண்டு மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போய் அந்தப் புறங்களிலே திரிந்துகொண்டு சீஷருக்கு அநேக வார்த்தைகளாற் புத்திசொல்லிக்கொண்டு கிரேக்க தேசத்திலே சேர்ந்தான். அங்கே மூன்று மாதஞ் சஞ்சரித்த பின்பு அவன் கப்பலேறிச் சீரியா நாட்டுக்குப் போக மனதாயிருக்கும் பொழுது யூதர்கள் அவனுக்குத் தீமை செய்ய இரகசியமாய் யோசனை கொண்டிருந்தபடியால் மக்கெதோனியா நாட்டின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணினான். அப்பொழுது ஆசியாத்தேசம் வரைக்கும் அவனோடே கூடப் போனவர்கள் அவனுக்கு முன்னாகப் போய்த் துரோவாப்பட்டணத்திலே பவுல் வரும்படி காத்திருந்தார்கள். புளியாத அப்பப் பண்டிகை நாளுக்குப் பின்பு அவன் கப்பலேறிப் பிலிப்புப்பட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவாப் பட்டணத்திலே அவர்களிடத்தில் வந்து அங்கே ஏழுநாட் சஞ்சரித்தான்.

கலகம் அமர்ந்த பின்பு பவுல் எந்தெந்த இடங்களுக்குப் போனான்?

Digitized by Google

௨௯. வாரத்து முதனாளிரவிலே நெடுநேரமாகப் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் பொழுது ஐத்திக்கு என்று பேர்கொண்ட ஒரு வாலிபன் மேல்வீட்டின் மூன்றாம் மெத்தையிலிருந்து நித்திரைத்தூக்கத்தினாலே தவறிக் கீழே விழுந்து மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கி அவனைக்கட்டி அணைத்து அவன் பிழைப்பான். நீங்கள் கலக்கப்படாதிருங்களென்று சொல்லி ஏறிப்போய் விடியற்காலமளவும் பிரசங்கித்துக்கொண்டிருந்தான். அவனோ உயிருள்ளவனாக வந்தான். பின்பு பவுல் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் பெந்தேக்கோஸ்துப் பெருநாளைக்கு எருசலேமிலே சேரவேண்டுமென்ற எண்ணத்துடனே பல இடங்களுக்குங் கால்நடையாகப் போய்ச் சுவிசேஷத்தை அறிவித்துக்கொண்டு எபேசுவிலே சேர்ந்து சபையின் மூப்பரை அழைத்துத் தான் எருசலேமுக்குப் போகிறதையும் அங்கே தனக்குச் சம்பவிக்குங் காரியங்களையும் இவர்கள் அந்த

பவுல் பிரசங்கிக்கும் பொழுது ஒரு வாலிபனுக்கென்ன சம்பவித்தது?

பெந்தேக்கோஸ்தென்னும் விருந்தை எங்கே ஆசரிக்க எண்ணியிருந்தான்?

வுல் எந்த ஊர்வழியாய்ப் பயணம் பண்ணினான்?

Digitized by Google

ச்சபையை நடத்த வேண்டிய பிரமாணங்களை
யுஞ் சபையிலே சம்பவிக்கப் போகிற காரியங்
களையுங் குறித்துச் சொல்லி அவைகளுக்கு மிக
வும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்று
ம் மிகுந்த அன்போடே எச்சரித்துப் புறப்ப
ட்டுக் கப்பல் ஏறிப்போய்க் கோஸ் உரோது
முதலிய பட்டணங்களைச் சேர்ந்து அவ்விடங்
களிற் சுவிசேஷத்தை அறிவித்துச் செசாரியாப்
பட்டணத்துக்கு வந்து பிலிப்பென்பவனுடை
ய வீட்டுக்குப் போய்ச் சிலகாலம் அங்கே தங்
கியிருக்கையில் ஆகாப் என்கிற ஒரு தீர்க்கத
ரிசி யூதேயாவிலிருந்து வந்து பவுலைக் கண்டு எ
ருசலேமிலுள்ள யூதர்கள் உன்னைப் பிடித்துக்
கட்டிப் புறத்தேசத்தார் கைகளில் ஒப்புக்கொ
டுப்பார்களென்று அறிவித்தார். சீஷர் அதை அ
றிந்து அவன் எருசலேமுக்குப் போகாதபடிக்
குத் தடை சொல்ல, அவன் இயேசுவின் நாமத்

எபேசுவிலே என்ன செய்தான்?
எபேசுவில் இருந்து கப்பலேறி எங்கே இறங்கினான்?
எந்தெந்த இடங்களிலே சுவிசேஷத்தை அறிவித்தான்?
ஆருடைய வீட்டிலே விடுதியாய் இருந்தான்?
அவனிடத்துக்கு ஆர் வந்தது?
தீர்க்கதரிசி என்ன சொன்னான்?
அதைக் கேட்டுச் சீஷர் என்ன சொன்னார்கள்?

Digitized by Google

துக்காகக் கட்டுண்பது மாத்திரமோ! மரிப்பத ற்குந் துணிந்திருக்கிறேனென்று மறுத்துப் பு றப்பட்டதினாலே மற்றச் சீஷரும் அவனுடனே எருசலேமுக்குப் போய் இயாக்கோபென்பவ னிடத்திற் சேர்ந்தபொழுது அவன் எல்லாரை யும் அங்கீகரித்துக்கொண்டு புறத்தேசத்தாரு க்குள்ளே அனேக ஆயிரம் பேர் விசுவாசிகளா னதையும் பராபரன் அவர்களுக்குச் செய்த வைகளையும் விபரித்துச்சொன்னான்.

௨௭. அதைக் கேட்ட எல்லாரோடுங் கத் தாவைத் தோத்திரித்து அவ்விடம் விட்டு அ னேக சீஷரோடே கூடத் தேவாலயத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அந்நாட்களிலே ஆசியா த் தேசத்திலிருந்து வந்த யூதர்கள் தேவாலய த்திலே அவனைக் கண்டு சனங்களைக் கூட்டி அ வனைப் பிடித்துக்கொண்டு இஸ்ரவேலரே, வந் து உதவிசெய்யுங்கள். இவனே நம்முடைய ச

அதற்கு பவுல் என்ன சொன்னான்?
அவன் புறப்பட்டு எங்கே போனான்?
இயாக்கோபின்வீட்டில் இருக்கையில் என்னத்தைக் குறி த்துக் கேள்விப்பட்டான்?
அதைவிட்டு மறுபடி எங்கேபோனான்?
அவனைத் தேவாலயத்திலே கண்ட சனங்கள் என்ன சொ ன்னார்கள்?

Digitized by Google

னத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் இந்த த் தலத்துக்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்துவருகிறானென்று சொல்லிப் பின்னும் எபேசியனாகிய திரோப்பிமூ அவனுடனே கூடப் பட்டணத்திலே இருக்கக் கண்டபடியினாலே அவனையும் பவுல்தானே தேவாலயத்திலே கிரேக்கரையும் அழைத்துவந்து இந்தப் பரிசுத்த தலத்தை அசுசிப்படுத்தினான் என்று கூரவையிட்டார்கள். அப்பொழுது பட்டினம் முழுவதும் கலக்கமுண்டாயிற்று. மேலுஞ் சனங்கள் கூட்டமாய் ஓடிவந்து பவுலைப் பிடித்துத் தேவாலயத்துக்குப் புறம்பே இழுத்து அவனைக் கொலைசெய்ய வகைதேடுகையில் எருசலேம் முழுவதுங் கலக்கமடைந்திருக்கிறதென்று சேனாபதி கேள்விப்பட்டு உடனே போர்ச்சேவகரையும் அவர்களுடைய தலைவரையும் சேர்த்துக்கொண்டு அவர்களிடத்துக்கு ஓடினான். சேனாபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபொழுது பவுலு

திரோப்பிமூ என்பவன் ஆர்?

அவனைத் தேவாலயத்திலே ஆர் அழைத்துவந்ததென்று நினைத்தார்கள்?

பவுலைப் பிடித்து என்ன செய்தார்கள்?

Digitized by Google

வை அடியாமல் விட்டார்கள். அப்பொழுது சேனாபதி சேர்ந்து அவனைப் பிடித்து இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி இவன் யாவனென்றும் என்ன செய்தானென்றும் விசாரித்தான். அதற்குச் சனங்கள் பலவிதமாய்ச் சொன்னார்கள். அப்பொழுது கலக்கத்தினாலே அவன் நிச்சயத்தை அறியக்கூடா திருந்தபடியால் அவனைக் கோட்டைக்குக் கொண்டுபோகச் சொன்னான். அவன் படிகள் மேல் ஏறிவந்தபொழுது கூட்டம் பின்னே சென்று அவனைக் கொலைசெய்யும் என்று குரவையிட்டுக்கொண்டு உக்கிரமாய் இருந்தபடியினாலே சேவகர் அவனைத் தூக்கியெடுத்துக் கொண்டுபோனார்கள். அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோக எத்தனமாயிருக்கையில் அவன் சேனாபதியை நோக்கி நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமோ என்றான். அதற்கவன் கிரேக்கப் பாஷை உனக்குத்தெரியுமோ? இந்தக் காலத்துக்கு முன்னே கலக்கம் உண்டாகின

ஆர் அவர்கள் கைக்கு விலக்கிவிட்டது?
சேனாபதி பவுலை என்ன செய்தான்?
எங்கே கொண்டுபோனான்?
னாபதியிடத்தில் பவுல் என்ன கேட்டான்?

Digitized by Google

லாயிரங் கொலைபாதகரை வனாந்தரத்திலே கொண்டுபோன எகிப்த்தான் நீயல்லவோ என்கிறான்.

௨௮. பவுல் சொன்னது கிலீக்கியா நாட்டிற் பேர்பெற்ற தருசுபட்டணத்தானாகிய யூதன் நான் சனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்றான். அப்படியே உத்தரவு கிடைத்த பின்பு பவுல் படிகளின் மேலே நின்று கையினாலே சனங்களை அமர்ந்திருக்கும்படி குறிப்புக் காட்டி மிகுந்த அமைதல் உண்டான பொழுது எபிரேயப் பாஷையிலே உரத்த சத்தமாகத் தன்னுடைய சரித்திரங்களையுந் தான் மனந்திரும்பினதையும் எடுத்துப் பேச, அவர்கள் கேட்டு இப்படிப்பட்டவனை உயிரோடே வைக்கிறது நியாயமல்லவென்று கலாதிபண்ணினார்கள். சேனாபதி அதைக் கண்டு அவனைக் கோட்டைக்குள்ளே பிடிப்பித்து வைத்துக்கொண்டு அவர்கள் கூக்குரலிடுகிறதற்குக் காரணமென்ன என்று அறியும்படி

சேனாபதி என்னென்ன கேட்டான்?
பவுல வேறென்ன கேட்டான்?
பின்பு சனங்களுக்கு என்ன சொன்னான்?
கேட்ட சனங்கள் என்னசொன்னார்கள்?
அப்பொழுது பவுல் என்னசொன்னான்?

Digitized by Google

டி அவனைக் கட்டி அடிக்கக் கட்டளையிட்டான். அப்பொழுது பவுல் அவனை நோக்கி உரோமனாகப் பிறந்திருக்கிற என்னை நீங்கள் இப்படிச் செய்வது நியாயமோ என்றான். அதைச் சேனாபதி கேட்டுப் பயந்து உடனே அவனுடைய கட்டுக்களை அவிழ்த்துப் பிரதான ஆசாரியரையுஞ் சங்கத்தாரையுங் கூட்டி அவனுடைய காரியத்தை விசாரித்த பொழுது அவன் சகோதரரே, என் மனது எவ்விதத்திலும் நற்சாட்சி கொடுக்கத்தக்கதாகப் பராபரனுக்கு முன்பாக நடந்துவந்தேன் என்றான். அப்பொழுது பிரதான ஆசாரியன் இவனுடைய வாயிலே அடியுங்களென்றான். அதற்குப் பவுல் சாந்து பூசப்பட்ட சுவரே, பராபரனே உன்னை அடிப்பாரென்றான். அதைக் கேட்டுப் பக்கத்தில் நின்றவர்கள் பிரதான ஆசாரியனைச் சபிக்கிறாயா என்றார்கள். அதற்குப் பவுல் இவன் பிரதான ஆசாரியராயிருக்கிறாரென்று நான் நினைக்கவி

சேனாபதி இவனை என்னசெய்யக் கற்பித்தான்?
என்னத்தின் நிமித்தம் அவனைத் தண்டியாமல் விட்டுவிட்டது?
பிரதான ஆசாரியன் என்னசொன்னான்?
அதற்குப் பவுல் என்னசொன்னான்?
க் கேட்ட சனங்கள் என்ன சொன்னார்கள்?

Digitized by Google

ல்லை. நான் பரிசேயர்வமிசத்திற் பிறந்த பரிசே யனாயிருக்கிறேன். மரித்தோர் உயிர்த்தெழுப்பு வார்களென்று சொன்னதின் நிமித்தம் இப்பொ ழுது நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்றான். அப்பொழுது உயிர்த்தெழுதல் இல்லையென்று எண்ணியிருக்கிற சதுசேயரும் அது உண்டெ ன்று சொல்லுகிற பரிசேயரும் வேற்றுமைப் பட்டுத் தருக்கித்துக்கொண்டார்கள். அப்படி யே அவர்களுக்குட் கலக்கம் உண்டானதைக் க ண்டு அவனை விலக்கிக் கோட்டைக்குக் கொ ண்டுபோய் மறியல்வைத்தார்கள். அப்பொ ழுது பராபரன் அவனுக்குத் தரிசனையாகி நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடு த்ததுபோல உரோமை புரியிலுஞ் சாட்சிகொ டுப்பாயென்று திடப்படுத்தினார்.

௨௧. மறுநாள் யூதரில் நாற்பது பேர் அள வுக்கு இரகசியமாய்க் கூடிப் பவுலுவைக் கொ

பவுல் சனங்களுக்கு என்ன மறுமொழி சொன்னான்?
அந்தச் சமயத்திற் பரிசேயருக்குஞ் சதுசேயருக்கும் எ ன்னத்தைப்பற்றித் தருக்கம் உண்டாயிற்று?
அப்பொழுது பவுலுவை எங்கே வைத்தார்கள்?
பராபரன் பவுலுக்குத் தரிசனையாகி என்ன சொன்னார்?
மறுநாள் எத்தனை யூதர் ஒன்றாய்க் கூடிச்சபதமிட்டார் கள்?

Digitized by Google

ல்லுமளவும் நாம் புசிப்பதில்லையென்று சப
தமிட்டுக்கொண்டு பிரதான ஆசாரியரிடத்திற்
போய்த் தங்களுடைய சபதத்தை அறிவித்து
நீங்களும் பிரதான ஆசாரியருமாகச் சேனாப
தியிடத்திற் போய்த் தந்திரமாகப் பவுலை
வெளியே அழைப்பியுங்கள் உடனே நாங்கள்
அவனைக் கொன்றுபோடுகிறோம் என்றார்கள்.
அதைப் பவுல் கேள்விப்பட்டறிந்து சேனாப
திக்கு அறிவித்தான். சேனாபதி இருநூறு
போர்ச்சேவகரையும் எழுபது குதிரைக்கார
ரையும் இருநூறு விற்காரரையுங் கூட்டிப் ப
வுலைப் பத்திரமாகக் காத்துக்கொள்ளச்
சொல்லிப் பெலிக்ஸுவிடத்துக்கு ஒரு காகித
மும் எழுதி அனுப்பிவிட்டான். அந்தப்படி அ
வர்கள் அவனை அழைத்துக்கொண்டு போய்ப்
பெலிக்ஸுவிடத்திலே ஒப்புவித்தார்கள். அவ
ன் காகிதத்தை வாசித்துக்கொண்டு உன்னுடை
ய நியாயம் விசாரிக்க யூதர் வருமளவும் மறிய

அவர்கள் என்ன யோசனைபண்ணிக்கொண்டார்கள்?

பவுல் இந்தச் சதியோசனையை அறிந்து ஆருக்குச் சொன்னான்?

இதைக் கேள்விப்பட்டுச் சேனாபதி பவுலை எங்கே அனுப்பினான்?

பவுலுக்குப் பெலிக்ஸு என்ன கட்டளை கொடுத்தான்?

Digitized by Google

யில் இருவென்று கட்டளையிட்டான். சில நா
ளைக்குப் பின் பெலிஸ்குவும் மனைவியும் பவுலு
வை அழைத்து விசாரித்த பொழுது கிறிஸ்துவி
ன் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் மறுகாரியங்
களைக் குறித்தும் அவன் சொல்லக் கேள்விப்ப
ட்டுப் பயமடைந்து இப்பொழுது நீ போக
லாம் இனிமேல் எனக்குச் சமயம் உண்டான
பொழுது உன்னை அழைப்பிப்பேன் என்று
சொல்லி மறியலுக்கு அனுப்பிவிட்டான். பி
ன்பு பெஸ்து என்பவன் இவனுடைய இடத்
துக்குத் துரையாக வந்து எருசலேமுக்குப்
போன பொழுது யூதர் எல்லாரும் அவனை அ
ழைப்பித்து வழியிலே கொன்றுபோட யோ
சனைபண்ணி அவனிடத்துக்கு வந்து அவ
னுடைய நியாயம் விசாரிக்க அவனை எருசலே
முக்கு அழைக்க வேண்டுமென்று கேட்டதற்
குப் பெஸ்து அவன் காக்கப்பட்டிருக்கிறான்.
நான் அங்கேபோம் பொழுது உங்களிற் திரமு

பெலிஸ்கு முன்பாகப் பவுல் என்னத்தை எடுத்துப் பேசி
பெலிஸ்கு பவுலுக்கு என்ன சொன்னான்? [னான்?
பெலிஸ்கு இடத்துக்குத் துரையாக வந்ததார்?
அக்காலத்திலே யூதர் பண்ணின யோசனை என்ன?
பெஸ்துவிடத்தில் என்ன கேட்டார்கள்?

Digitized by Google

ள்ளவன் அங்கேவரலாமென்று சொல்லிச் சில
நாளையிற் பின்பு செசாரியாவுக்குப் போனான்.
அவன் போன பொழுது யூதர் எல்லாரும் அவ
ன்மேல் அநேக குற்றங்களைச் சாற்றியும் எல்
லாம் வீணாயிருந்தபடியாலும் அவன் இராய
ருக்கு அபயமிட்டபடியினாலும் அவன் இரா
யரிடத்துக்குப் போம்படியென்று உத்தரவு
கொடுத்தான்.

௩௰. நாட்சென்றபின் அகிரிப்பா பெஸ்துவி
டத்துக்கு வந்து பவுலுடைய சங்கதிகள் எல்
லாவற்றையுங் கேள்விப்பட்டுப் பவுலைமறிய
லில் இருந்து அழைப்பித்து அவனை நோக்கி நீ
உன் காரியத்தைப் பேசலாம் என்று சொல்ல
அவன் தன்னுடைய பழைய சரித்திரம் எல்லா
வற்றையும் எடுத்துப் பேசினதுமன்றித் தான்
கண்ட தரிசனையையுந் தன்னுடைய குணப்ப
டுதலையுந் தன்னுடைய பிரசங்கத்தையும் இன்

அதற்கு பெஸ்து என்னசொன்னான்?
யூதர் அவனிடத்திற் போய்ச் சொன்ன குற்றம்பெருமா
னதாயிருந்ததா?
பின்பு பவுல்தான் எங்கேபோக உத்தரவு கேட்டான்?
அகிரிப்பா என்பவன் ஆர்?
அவன் எங்கே வந்தான்?
அவன் என்ன கேள்விப்பட்டான்?

Digitized by Google

னவிதமென்று அறிவித்துப் பின்னும் நான் பிரசங்கிக்கிற கிறிஸ்துவின் சங்கதிகள் ஒரு இரகசியமான இடத்திலே நடந்ததல்ல, இவைகள் இந்த இராயருக்கும் மறைவாயிருக்க மாட்டாது. இவரும் விசுவாசிக்கிற தீர்க்கதரிசிகள் குறித்திருந்த பிரகாரமே சகலமும் நடந்தேறியிருக்கிறதென்றுஞ் சொன்னான். அப்பொழுது அகரிப்பா பவுலே, கிறிஸ்தவனாகிறதற்கு என்னையுங் கிட்டமுட்டச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல் இராசாவே, நீர்மாத்திரமல்ல என் வசனங்களைக் கேட்ட எல்லாரும் இந்தக் கட்டுக்கள் தவிர என்னைப் போலாகும்படிக்குப் பராபரனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். அதைக் கேட்ட இராசாவுந் துரையுங் கூட உட்கார்ந்தவர்களும் இந்த மனிதன் விலங்குக்காகிலுங் கொலைக்காகிலும் ஏதுவான யாதொன்றையுஞ் செய்யவில்லை. இவன் இராயருக்கு அபயமிட்டபடியால் இத்தாலி

பவுலை அழைப்பித்து என்ன கேட்டான்?
அதற்கு இவன் என்ன உத்தாரங் கொடுத்தான்?
அகரிப்பா என்ன சொன்னான்?
மறுபடி இவன் என்ன சொன்னான்?
அப்பொழுது இராசாவுஞ் சனங்களும் என்ன பேசிக் கொண்டார்கள்?

Digitized by Google

ய தேசத்துக்குப் போகட்டுமென்று தீர்மா
னம்பண்ணினார்கள். அவன் கப்பலேறிப் பல
தீவுகளையுங் கடந்து கிரேத்தாதீவின் கீழ்ப்புற
த்திலே சேர்ந்திருக்கையிற் பவுல் கப்பற்கார
ரை நோக்கி இந்தக் கப்பலிலுள்ள சரக்குக்களு
க்கு மாத்திரமல்ல நம்முடைய சீவனுக்குங் கூட
ச்சேதம் வர ஏதுவாயிருக்கும் என்றான். சில
நாட்சென்றபின் பெருங்காற்றும் பெரும்மழையு
ம் உண்டாகிக் கப்பல் அமிழ்ந்திப்போக ஏது
வாயிருக்கையில் அதில் இருந்த சாமான்களை எடு
த்துக் கடலில் எறிந்தார்கள். பின்பு அனேகநா
ட் சூரியனும் நட்சத்திரங்களுங் காணப்படாமலி
ருந்தபடியால் ஒருவனுக்காகிலுந் தப்பிக்கொள்
வோமென்ற எண்ணம் உண்டாயிருந்ததில்லை.
அப்பொழுது பவுல் அவர்களை நோக்கி எல்லா
ருந் திடன்கொள்ளுங்கள். கப்பற்சேதமேயன்
றி ஒருவருக்கும் பிராணசேதம் வராதென்
று சொல்லி அப்பத்தை எடுத்துப் பராபரனை
த் தோத்திரித்து அதைப் பிட்டு எல்லாரும் பு
சித்தார்கள். பின்பு கப்பல் உடைந்து துண்டு

பவுல் கப்பலேறி இத்தாலியாவுக்குப் போகிறபொழு
து நடந்த சங்கதிகள் என்ன?

ண்டாகப் போக அந்தத் துண்டுகளைப் பற்றி மேலித்தாதீவிலே போய்ச்சேர்ந்தார்கள்.

௩௧. அப்பொழுது குளிர்காய்ந்துகொண்டிருக்கையில் ஒரு விரியன்பாம்பு பவுலுடைய கையைச் சுற்றிக்கொண்டது. அவர்கள் அதைக் கண்டு இவன் வீக்கங்கொண்டு சடுதியாய் மரிப்பானென்று நினைத்திருந்தார்கள். அவனோ யாதொரு வருத்தமும் இல்லாதிருந்தான். பின்பு புபிலி என்பவனுடைய தகப்பன் வருத்தமான வியாதிகொண்டிருக்கையிற் பவுல் அவன்மேற் கைகளைவைத்து வேண்டுதல்பண்ண அவன் சுகமானான். அதைக் கண்டு அந்தத் தீவிலே இருந்த அனேக வியாதிக்காரர் அவனிடமாக வந்து அவ்விதமாகவே குணமடைந்தார்கள். அப்படிச் சிலநாள் அங்கே இருந்து பின்பு புறப்பட்

கப்பல் உடைந்தபொழுது எப்படித் தப்பிக் கரைசேர்ந்தார்கள்?
மெலித்தாதீவிற் குளிர்காய்ந்திருக்கையில் என்ன சம்பவித்தது?
அதைக் கண்ட சனங்கள் என்ன நினைத்தார்கள்?
பவுல் சாகாமல் இருந்ததென்ன?
அங்கே என்ன அற்புதஞ் செய்தான்?
ஆருடைய தகப்பனைக் குணமாக்கினான்?
வேறுரைக் குணமாக்கினனே?

Digitized by Google

டுப் பல ஊர்களையுங் கடந்து உரோமாபுரியி லே சேர்ந்து சபையாரைக் கண்டு பராபரனை த் தோத்திரித்துத் திடன்கொண்டான். அதின் மேல் அயன் தனக்குக் காவலாக இருந்த சேவ கனிடத்திலே தான் தனித்திருக்கும்படி உத்தர வு பெற்றுக்கொண்டு யூதருக்குட் பிரதானமா னவர்களைக் கூட்டி மோசேயின் வேதநூலிலுந் தீர்க்கதரிசனங்களிலும் எடுத்து இயேசுவுக்கு உரியவைகளை அவர்களுக்குப் போதித்தான். அ தைச் சிலர் ஏற்றுக்கொண்டார்கள். சிலரோ விசுவாசியாதிருந்தார்கள். இதைப் பவுல் கண் டு இந்தச் சனங்கள் கண்ணினாலே காணாமலுங் காதினாலே கேளாமலும் இருதயத்திற் சிந்தியா மலும் மனந்திரும்பாமலும் என்னாலே ஆரோ க்கியமடையாமலுங் கடின இருதயமுடையவர் களாய் இருக்கிறார்களென்று எசாயாத் தீர்க்க தரிசிசொன்ன பிரகாரமாக இவர்கள் இருக்கை யாற் பராபரனுடைய இரட்சிப்புப் புறத்தேச

பின்பு பவுல் எங்கே போனான்?
ஆரைக் கண்டான்?
தன்னைக் காத்த சேவகனிடத்தில் என்ன கேட்டான்?
யூதரின் பிரபுக்களைக் கூட்டி என்னத்தைப் போதித்தான்?
கேட்டவர்கள் எல்லாரும் நம்பினார்களா?
பாதவர்களுக்கு என்ன சொன்னான்?

Digitized by Google

த்தாருக்கு அனுப்பப்பட்டதென்றும் அவர்களே அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் அறிந்துகொள்வீர்களாக என்றான். அதைக் கேட்டு யூதர்கள் இவனிற் குற்றஞ்சாற்ற வழிகாணமற் தங்களிலே தருக்கித்துக்கொண்டு போய்விட்டார்கள். பின்பு பவுல் விடுதலையடைந்து ஒருவீட்டிலே இரண்டு வருஷமாக இருந்து பராபரனுடைய இராச்சியத்தைக் குறித்துப் பிரசங்கித்துக்கொண்டு மிகுந்த தயிரியத்தோடும் இயாதொரு தடையில்லாமலிருந்தான்.

௩௨. இந்தப்பிரகாரமாக மற்ற அப்போஸ்தலருஞ் சீஷரும் பலபல இடங்களுக்குப் போயிச் சுவிசேஷத்தை அறிவித்துச் சபைகளை ஸ்தாபித்தார்கள். அதினாலே தீர்க்கதரிசிகளும் கிறிஸ்துநாதரும் அப்போஸ்தலரும் சொல்லியிருந்தபடி தோட்டத்திலே மரங்கள் நாட்டப்பட்டவிதமாய் உலகமுற்றும் இடை இடையே பலபல இடங்களிலுஞ் சுவிசேஷம் அறிவிக்கப்ப

யூதர்கள் என்னசெய்தார்கள்?
இரண்டு வருஷமாக எப்படி இருந்தான்?
மற்றும் அப்போஸதலர்கள் என்னசெய்தார்கள்?
தீர்க்கதரிசிகளும் கிறிஸ்துநாதரும் அப்போஸதலருஞ் சொல்லியபடி சபை வளரத் தொடங்கிற்று?

Digitized by Google

ட்டுக் கொஞ்சக் காலத்துக்குள்ளாகச் சபை விருத்தியடையத் தொடங்கிற்று. அந்தப்படியே அக்காலந்தொடுத்து இக்காலம் மட்டுமுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரத்தையும் அதின் வாழ்வையும் பொருளாக எண்ணாமற் கிறிஸ்துவின் மகிமையையே மேன்மையாக எண்ணி உலக முழுதுஞ் சுவிசேஷத்தைப் பிரசித்தப்படுத்த வற்பட்டிருக்கிறார்கள். அதற்குக் கிறிஸ்துநாதரும் உதவி செய்துவருகிறார். இனிச் சூரியன் உதிக்கிற திசைதொடங்கி அது அத்தமிக்குந் திசைவரைக்கும் பராபரனுடைய நாமம் மகிமைப்படுமென்றும் முழங்கால் யாவும் முடங்குமென்றும் நாவியாவும் இயேசுக்கிறிஸ்து கத்தரென்று அறிக்கையிடும் என்றுஞ் சொல்லப்பட்டது நிறைவேறிவருகின்றது.

கிறிஸ்தவர்கள் என்னத்தைப்பார்க்கிலும் என்னத்தை அதிகம் மேன்மையாக எண்ணுவார்கள்?
கிறிஸ்தவர்கள் என்னசெய்ய உடன்படுகிறார்கள்?
அதற்கு உதவி செய்கிறவர் ஆர்?
முன்சொல்லிய எந்தவாக்கியங்களின்படி அவைகள் நிறைவேறிவருகின்றது?

வேதாகமத்தின் அட்டவணை.

பழைய ஏற்பாடு.

மோசேயின் ரு. ஆகமம்
யோசுவாவின் புத்தகம்
நியாயாதிபதிகளின் புத்தகம்
ரூத்தின் சரித்திரம்
க. உ. சாமுவேல்
க. உ. இராசாக்கள்
க. உ. நாளாகமம்
எஸ்றாவின் புத்தகம்
நேகேமியாவின் "
எஸ்தரின் "
யோபுடைய சரித்திரம்
வேதசங்கீதம்
நீதிமொழிகள்
பிரசங்கியின் புத்தகம்
உன்னதப்பாட்டுக்கள்
ஏசாயாவின் தீர்க்கதரிசனம்
ஏரேமியாவின் தீர்க்கதரிசனம்
ஏரேமியாவின் புலம்பல்
ஏசேக்கியேலின் தீர்க்கதரிசனம்
தானியேலின் "
ஓசேயாவின் "
யோவேலின் "
ஆமோசின் "
ஒபதியாவின் "
யோனாவின் "
மீகாவின் "
நாகூமின் "
ஆபக்கூக்கின் "
செப்பனியாவின் "
ஆகாயின் "
சகரியாவின் "
மல்கியாவின் "

புதிய ஏற்பாடு

மத்தேயுவின் சுவிசேஷம்
மாற்கு "
லூக்கா "
யோவான் "
அப்போஸ்தலர் நடபடி
உரோமர்
க. உ. கொரிந்தர்
கலாத்தியர்
எபேசர்
பிலிப்பியர்
கொலோசர்
க. உ. தெசலோனிக்கேயர்
க. உ. தீமோத்தேயு
தீத்து
பிலேமோன்
எபிரேயர்
இயாக்கோபு
க. உ. பேதுரு
க. உ. ௩. யோவான்
யூதா
வெளிப்படுதல்

Digitized by Google

சத்திய வேதம் பழைய புதிய ஏற்பாடென்னும் இரண்டு பகுதியாயிருக்கின்றது.

பழய ஏற்பாட்டின் விபரம்.

மோசே க. ஆகமத்தில் உலகசிருட்டிக்கிரமமும், ஆதிம
ிதர் பாவஞ்செய்ததும், அவர்களுக்கு வந்ததண்டனையும்,
ரட்சக்ரை வாக்குப்பண்ணினதும், மனிதருடைய விருத்தி
ம், அவர்களுடைய துன்னடையும், சலப்பிரளய சங்கார
ம்,அதற்கு நோவாமுதல் எண்மர்காக்கப்பட்டதும், அவ
களது பெருக்கமும், பாஷைபலபட்டதும், அவர்கள் கூட்
ம்பிரிந்ததும், சத்தியமார்க்கங் காக்கப்படவும், இரட்சக
க்குச்செனனவமிசம் உண்டாகவும்,ஆபிரகாமைத்தேவன்
தரிந்ததும், அவனுடைய சரித்திரமும், அவன் மகன் ஈசா
ின் சரித்திரமும், ஈசாக்கின மகன் இயாக்கோபின் சரித்தி
மும், இவன் மகன யோசேப்பின் சரித்திரமும்அடங்கும்.

இரண்டாம் ஆகமத்தில் இஸ்ரவேலர் எகிப்த்திலே சிறை
ானதும், அவர்களைக் கானானுக்குக் கொண்டுபோகத்
தவன் மோசேயை அனுப்பினதும், அவன் செய்த அற்
தங்களும், எகிப்த்தாருக்கு வந்த உபத்திரமும், இஸ்ர
லருடைய பிரயாணமும, பிரயாணத்தில் நடந்த சரித்
ரமும், வேதபிரமாணத்தைப் பெற்றதும் அடங்கும்.

மூன்றும் ஆகமத்தில் ஆசாரிய முறைமையும், தேவாராத
ப்பிரமாணமும், சபைக்கடுத்த பிரமாணமும் அடங்கும்.

நான்காம்ஆகமத்தில்இஸ்ரவேலரைத் தொகையிட்டு ஒழு
குசெய்ததும், அவர்கள் தேவனுக்கும் மோசேக்கும வி
ாதமாய்ப் பலமுறைசெய்த கலகங்களும், அதற்கு வந்
தண்டனைகளும், அவர்கள் வனாந்தரத்திலே நாற்பதுவ
ஷங் திரிந்ததும், பீலேயாமுடையசெய்கையும் அடங்கும்.

ரு. ஆகமத்தில் முன் அவர்களுக்கு நடந்த செய்கைகளையு

Digitized by Google

ம், பெற்றகற்பனைகளையும், மோசே ஞாபகப்படுத்திச்சொன்ன புத்திகளும், அவனுடைய மரணமும் அடங்கும்.

இந்த ஐந்து ஆகமங்களுக்குள் ௨௲௫௱௫௰௩ வருஷச் சரித்திரம் காணப்படும். கிறி. 1451

யோசுவாவின் ஆகமத்தில் அவன் இஸ்ரவேலரைக் கானானுக்குக் கொண்டுபோனதும், அவர்களுக்குள் நடந்த யுத்தங்களும், கானானைப் பங்கிட்டதும், யோசுவா அவர்களுக்குச் சொன்ன புத்திகளும், அவனும் எலியேசரும் மரித்ததும் அடங்கும். கிறி. 1443

நியாயாதிபதிபாரம்பரை. இதிலே நியாயாதிபதிகளும் சபையின் மூப்பரும் இஸ்ரவேலருடைய வியாச்சியங்களைத் தீர்த்து அவர்களை நடத்தினதும், தேவன் அவர்களுக்குச் செய்த தண்டிப்பும் இரட்சிப்பும் சொல்லப்படும். இது யோசுவாவின் மரணம் முதல் சிமிசோனுடைய மரணம்வரைக்குஞ் சென்ற ௩௱௫ . வருஷச் சரித்திரம். கிறி. 1095

ரூத்தின் ஆகமம், அவளுடைய சரித்திரத்தைச் சொல்லும்.

சாமுவேல் முதலாம் ஆகமத்தில் அவனுடையபிறப்பும், அவன் நியாயாதிபதியாயுந் தீர்க்கதரிசியாயும் நடந்துகொண்டதும், ஏலியின் குடும்பம் அழிந்ததும், சவுல் இராசாவானதும், தாவீதின் நடையும், கோலியாத்தின் மரணமும், தாவீதுபட்ட துன்பமும், சவுலுடைய மரணமும் அடங்கும். இது ௮௰. வருஷச் சரித்திரம். கிறி. 1055

சாமுவேல் இரண்டாம் ஆகமத்திலே தாவீது இராசாவானதும், அவன் சத்துருக்களைச் சயித்ததும், சத்தியமார்க்கம் எங்குஞ்செல்ல எத்தனம்பண்ணினதும், இஸ்ரவேலர் செய்த பாவங்களும், அவர்களுக்குவந்த தண்டனையும், அவர்களுக்குச் செய்த தயவுகளும் அடங்கும்.

இராசபாரம்பரை முதலாம் ஆகமத்திலே தாவீது செய்த

Digitized by Google

சத்திய வேதம் பழய புதிய ஏற்பாடென்னும் இரண்டுபகுதியாயிருக்கின்றது.

பழய ஏற்பாட்டின் விபரம்.

மோசே க. ஆகமத்தில் உலகசிருட்டிக்கிரமமும், ஆதிமனிதர் பாவஞ்செய்ததும், அவர்களுக்கு வந்ததண்டனையும், இரட்சகரை வாக்குப்பண்ணினதும், மனிதருடைய விருத்தியும், அவர்களுடைய துன்னடையும், சலப்பிரளய சங்காரமும், அதற்கு நோவாமுதல் எண்மர்காக்கப்பட்டதும், அவர்கள் பெருக்கமும், பாஷைபலபட்டதும், அவர்கள் கூட்டம்பிரிந்ததும், சத்தியமார்க்கங் காக்கப்படவும், இரட்சகருக்குச்செனனவமிசம் உண்டாகவும், ஆபிரகாமைத்தேவன் தெரிந்ததும், அவனுடைய சரித்திரமும், அவன் மகன் ஈசாக்கின் சரித்திரமும், ஈசாக்கின மகன் இயாக்கோபின் சரித்திரமும், இவன் மகன் யோசேப்பின் சரித்திரமும் அடங்கும்.

இரண்டாம் ஆகமத்தில் இஸ்ரவேலர் எகிப்த்திலே சிறையானதும், அவர்களைக் கானானுக்குக் கொண்டுபோகத் தேவன் மோசேயை அனுப்பினதும், அவன் செய்த அற்புதங்களும், எகிப்த்தாருக்கு வந்த உபத்திரமும், இஸ்ரவேலருடைய பிரயாணமும, பிரயாணத்தில் நடந்த சரித்திரமும், வேதபபிரமாணத்தைப் பெற்றதும் அடங்கும்.

மூன்றும் ஆகமத்தில் ஆசாரிய முறைமையும், தேவாராதனைப்பிரமாணமும், சபைக்கடுத்த பிரமாணமும் அடங்கும்.

நான்காம்ஆகமத்தில்இஸ்ரவேலரைத் தொகையிட்டு ஒழுங்குசெய்ததும், அவர்கள் தேவனுக்கும் மோசேக்கும விரோதமாய்ப் பலமுறைசெய்த கலகங்களும், அதற்கு வந்த தண்டனைகளும், அவர்கள் வனாந்தரத்திலே நாற்பதுவருஷந் திரிந்ததும், பிலேயாமுடையசெய்கையும் அடங்கும்.

... ஆகமத்தில் முன் அவர்களுக்கு நடந்த செய்கைகளையு

Digitized by Google

ம், பெற்றகற்பனைகளையும், மோசே ஞாபகப்படுத்திச்சொன்ன புத்திகளும், அவனுடைய மரணமும் அடங்கும்.

இந்த ஐந்து ஆகமங்களுக்குள் ௨௲௫௱௫௧ வருஷச் சரித்திரம் காணப்படும். கிறி. 1451

யோசுவாவின் ஆகமத்தில் அவன் இஸ்ரவேலரைக் கானானுக்குக் கொண்டுபோனதும், அவர்களுக்குள் நடந்த யுத்தங்களும், கானானைப் பங்கிட்டதும், யோசுவா அவர்களுக்குச் சொன்ன புத்திகளும், அவனும் எலியேசரும் மரித்ததும் அடங்கும். கிறி. 1443

நியாயாதிபதிபாரம்பரை. இதிலே நியாயாதிபதிகளும் சபையின் மூப்பரும் இஸ்ரவேலருடைய வியாச்சியங்களைத் தீர்த்து அவர்களை நடத்தினதும், தேவன் அவர்களுக்குச் செய்த தண்டிப்பும் இரட்சிப்பும் சொல்லப்படும். இது யோசுவாவின் மரணம் முதல் சிமிசோனுடைய மரணம்வரைக்குஞ் சென்ற ௩௱௪. வருஷச் சரித்திரம். கிறி. 1095

ரூத்தின் ஆகமம், அவளுடைய சரித்திரத்தைச் சொல்லும்

சாமுவேல் முதலாம்ஆகமத்தில் அவனுடையபிறப்பும், அவன் நியாயாதிபதியாயுந் தீர்க்கதரிசியாயுந் நடந்துகொண்டதும், ஏலியின் குடும்பம் அழிந்ததும், சவுல் இராசாவானதும், தாவீதின் நடையும், கோலியாத்தின் மரணமும், தாவீதுபட்ட துன்பமும், சவுலுடைய மரணமும் அடங்கும். இது அய. வருஷச் சரித்திரம். கிறி. 1055

சாமுவேல் இரண்டாம் ஆகமத்திலே தாவீது இராசாவானதும், அவன் சத்துருக்களைச் சயித்ததும், சத்தியமார்க்கம் எங்குஞ் செல்ல எத்தனம்பண்ணினதும், இஸ்ரவேலர் செய்த பாவங்களும், அவர்களுக்குவந்த தண்டனையும், அவர்களுக்குச் செய்த தயவுகளும் அடங்கும்.

இராசபாரம்பரை முதலாம்ஆகமத்திலே தாவீது செய்தி

Digitized by Google

ஆளுகையும், அவனுடைய மரணமும், அவன் குமாரனாகிய சாலோமோன் தேவாலயங்கட்டினதும், அவன் பாவஞ்செய்ததும் அவனுடைய மரணமும், இஸ்ரவேலர் இரண்டிராச்சியமாகப் பிரிந்ததும், அவர்களுடைய இராசாக்கள் செய்த நன்மை தீமையும், எலியாத் தீர்க்கதரிசி அவர்களுக்குச் சொன்ன தீர்க்கதரிசனமும் அடங்கும். இது ௱௨௮ வருஷச் சரித்திரம்.

இராச பாரம்பரை இரண்டாம் ஆகமத்திலே யூதராச்சியத்தை ஆண்ட இராசாக்களுங் குடிகளும் நடந்த நடபடியும் ஆசிரியருடைய இராசாவாகிய சல்மனேசா இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜயித்து சமாரிய நகரத்தைப் பிடித்து இஸ்ரவேலரைச் சிறையாக்கிக்கொண்டு போக அவர்கள் இராச்சியம் அழிக்கப்பட்டு ௱௩௰. வருஷத்திற்பின், நேபுகாத்நேசர் இவர்களைப் பிடித்து அடிமைகளாக்கிப் பாபிலோனுக்குக் கொண்டுபோனதும், எலியா, எலிசா, யோனா, யோவேல், ஆமோஸ், ஒசேயா, எசாயா, மிகா, நாகூம், ஏரேமியா, ஆபகூக் என்னுந் தீர்க்கதரிசிகள் இரண்டிராச்சியத்தாருக்குஞ் சொன்ன புத்திகளும், கிறிஸ்துவையும் அவருடைய இராச்சியத்தையும் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனங்களும் அடங்கும். இது யோசேபாத்து மரணம் முதல் எருசலேம் நகரத்தழிவு வரைக்கும் சென்ற ௩௱௫௪ வருஷச்சரித்திரம்.

நாளாகமங்களிலே உலக சிருட்டிப்பு முதல் யூதர்கள் பாபிலோன் தேசத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டுத் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போன காலம் வரைக்குஞ் சென்ற ௩௲௪௱௬௮ வருஷக்காலத்துச் சரித்திரங்களும், யூதேயா இராச்சியத்தின் இராசாக்களுடைய நடக்கைகளும, ஆதாம் முதல் எஸ்ராவென்பவன் வரைக்கும் இருந்த வமிசத்தாருடைய அட்டவணைகளும் அடங்கியிருக்கின்றன.

...வின் ஆகமத்தில் யூதர்கள் பாபிலோன் தேசத்து

Digitized by Google

க்கு அடிமைப்பட்டுப்போய், எ௰. வருஷமட்டான பின்பு தங்கள் தேசத்துக்குத் திரும்பிவந்து தேவாலயங் கட்டத் தொடங்கினதும், சத்துருக்களாலே வந்த தடைகளுங் காணப்படும். கிறி. 457.

நேகேமியாவின் ஆகமம், ஏஸ்ராவுக்குப் பின்பு௰உ. வருஷத்துக்குள்ளே யூதர்களுக்குச் சம்பவித்தவைகளைச் சொல்லும். கிறி. 424

எஸ்தரின் ஆகமம், உலகம் உண்டாகி ௩௫௱௪௪, வருஷம் முதல், ௩௫௱௪௨. வருஷம் வரைக்கும் எஸ்தருக்கும் மொர்தேகாய் முதலிய யூதருக்குஞ் சம்பவித்தவைகளைச் சொல்லும். கிறி. 452

பாட்டாகமங்களின் விபரம்.

யோபின் ஆகமம், யோபின் வாழ்வையும், அவனுக்கு வந்த உபத்திரவத்தையும், அவன் காண்பித்த தேவபத்தியையும், பொறுமையையும், அவனுக்கு மறுபடி வந்த வாழ்வையுஞ் சொல்லும்.

வேத சங்கீதம், இது தாவீதிராசனும் ஆசாப்புமுதலிய பலரும் செய்த சன்மார்க்கப்பாட்டுகள் அவைகள் நமக்குப் பிரமாணமாயுந் தேவதுதியாயுந் தேவபத்திக்குந் நீதிக்கும் அன்புக்கும் விசுவாசத்துக்கும் முயற்சிதருவதாயும் இருக்கின்றது. அவைகள் இயேசுநாதரையும் அவருடைய சபையின் மகத்துவத்தையும், வேதத்தின் முக்கியத்தைக்காட்டுகிறவைகளாயுந் தேவன் மனிதருக்குச்செய்த இரக்கங்களையுந், தேவனுடைய இலட்சணங்களையுந், தேவாராதனைசெய்யும், விதத்தையுங் காண்பிக்கிறவைகளாயும் இருக்கின்றன.

நீதிமொழியாகமம், சாலோமோன் இராசா தேவபத்திக்குஞ் சன்மார்க்கத்துக்கும் ஏதுவாகச் சொன்னவாக்கியங்கள் அதிலே நம்மைத் தேவனுடனே ஐக்கமாக்கத்தக்க புத்திகள் அடங்கியிருக்கும்.

பிரசங்கியின் ஆகமம், சாலோமோன் இராசாத் தன் சீவி

Digitized by Google

யரந்தத்திலேதான் உலகத்தை இச்சித்ததற்காக் மனஸ்தா பப்பட்டுத் தேவனை அவாவினபொழுது சொன்ன பிரசங்க ங்கள். அவை நமது மனதைத் தேவனிடத்திற் திருப்பவும் உலக இச்சையை மறப்பிக்கவுந் தகுதியுள்ளவைகள்.

உன்னதப் பாட்டாகமம், கிறிஸ்துவுக்குஞ் சபைக்கும் உண்டான சம்பந்தத்தை ஒருமணவாளனும் மணவாட்டி யும் பேசிக்கொள்ளும்விதமாயச் சொல்லப்பட்டிருக்கும்.

தீர்க்கதரிசன ஆகமத்தின்விபரம்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனம், இவன் உசியா, யோத்தாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் காலத்தில் தீர்க்கதரிச னஞ் சொல்ளுன். அதிலே அவன் யூதருக்குச் சொன்ன உறு தியான புத்திகளும், பலபட்டினங்களுக்கும், வரவிருந்த அழி வுகளும், இயேசுநாதருடைய பிறப்பு, மரணம், ஆளுகை, மகி மைமுதலானவைகளுங்குறித்துச்சொன்ன தீர்க்கதரிசனமு ம் அடங்கும். இவன் ௩௲௨௱௯௮ வருஷம் முதல் ௩௲௩௱௯ வருஷம்வரைக்குந் தீர்க்கதரிசனஞ் சொன்ளுன். கிறி 698

ஏரேமியாவின் திரக்கதரிசனம். இவன் ௩௲௩௱௭௯ வரு ஷம் முதல் ௩௲௪௱௰௬ வருஷம் வரைக்கும் யோசியா, யோயாக்கீம், சேதேக்கியா என்னும் இராசாக்களுடைய காலத்திலே திர்க்கதரிசனஞ் சொன்ளுன். அதிலே அவன் சொன்ன உறுதியான புத்திகளும் எருசலேமின் அழிவும் யூ தர் சிறைப்படுவதும் அவர்கள் விடுதலையாவதும் கிறிஸ்து வின் நாட்களில் நடப்பதும அடங்கும். கிறி. 586

துக்கப்பாட்டாகமம். இதிலே பாபிலோனர் எருசலேம் நகரத்தைச் சுட்டு யூதரைச் சிறையாக்கிக்கொண்டுபோ ம்பொழுது ஏரேமியாத் தீர்க்கதரிசி தனது தேசத்தாருக் குக் கேடு வந்ததைப் பற்றிப் புலம்பி அவர்கள் பாவங்களுக் --- மனஸ்தாபப்பட்டு அவர்களுக்கு நன்மைவரும்படி வே கொண்டது காணப்படும்.

Digitized by Google

ஏசேக்கியேலின் தீர்க்கதரிசனத்திலே யூதர் சிறையாக்கப்பட்ட பின்பு, ௩௲௪௱௰. வருஷம்முதல் ௩௲௪௱௯௰. வருஷம் வரைக்கும் ஏசேக்கியேல் சொன்ன தீர்க்கதரிசனம் அடங்கும். அவன் பிற்காலத்தில் யூதர் தங்கள் தேசத்துக்குத் திரும்புவார்களென்றுந், தேவாலயம் மறுபடி கட்டப்படுமென்றும், அம்மோனர், மோவாபர், ஏதோமர், பெலிஸ்தர், எகிப்த்தர் முதலிய பலரும் தண்டிக்கபபடுவார்களென்றும், மேசியாவுடைய ஆளுகையில் அதிக சவுக்கியம் உண்டாகுமென்றுஞ் சொன்னான். கிறி. 594.

தானியேலின் தீர்க்கதரிசனம். இவன், ௩௲௩௱௯௮. வருஷம் முதல், ௩௲௪௱௭௰, வருஷம் வரைக்குந் தீர்க்கதரிசனஞ் சொன்னான். அவன் சொன்ன ஆகமத்துட் சிலதீர்க்கதரிசனமாகவும் சில சரித்திரமாகவும் இருக்கின்றன. அதிலே பாபிலோன், பார்சு, கிரேக்க, உரோமையென்னும் இராச்சியங்களைக்குறித்தும், கிறிஸ்துநாதருடையவருகையைக் குறித்தும், உறுதியான தீர்க்கதரிசனஞ் சொல்லப்பட்டிருக்கும். கிறி. 534

ஓசேயாவின் தீர்க்கதரிசனம். இவன் இஸ்ரவேலர் சிறைப்படுவதற்கு முன்னே ௩௲௨௱௰௮ வருஷம்முதல் ௩௲௨௱௭௯ வருஷம்வரைக்கும் தீர்க்கதரிசனம் சொன்னான். இதிலே இஸ்ரவேலருடைய விக்கிரகாராதனை முதலான துன்மார்க்கங்களுக்காக அவர்களைக் கடிந்துகொண்டதும், குணப்படும்படி அவர்களை ஏவினதும், குணப்படாதவர்களுக்கு வருந் தண்டனையும், கிறிஸ்துவினுடைய இராச்சியத்தின் சலாக்கியமும் காணப்படும். கிறி. 725

யோவேலின் தீர்க்கதரிசனம். இவன் ௩௲௨௱௮௪ வருஷம் முதல், ௩௲௩௱௪௪ வருஷம்வரைக்கும் யூதர்களுக்குள்ளே தீர்க்கதரிசனஞ் சொன்னான். யூதருடைய அக்கிரமங்களினாலே அவர்களுக்குக் கேடுவருமென்பதும், திரளானவெட்டுக்கிளிகளாலே அவர்களுடைய தேசம் அழிக்கப்படுமென்பதும்

Digitized by Google

ளுணப்பட்டுக் கத்தர்லைவ் வேண்டிக்கொள்ள அவர்களை எழுப்பி விட்டதும், குணப்படுகிறவர்களுக்கு வரும் ஆசிர்வாதங்களும், தேவ ஆவியைக்குறித்துங் கிறிஸ்துவினுடைய இராச்சியத்தைக் குறித்தும் சொன்ன தீர்க்கதரிசனமும் அடங்கும். கிறி. 660

ஆமோசின் தீர்க்கதரிசனம். இவன் ஏசாயா, ஓசேயா, யோவேல் என்பவர்களுடைய காலத்திலே இஸ்ரவேலர், சீரியர், பெலிஸ்தர், அம்மோனர், மோவாபர் என்பவர்களுக்கு வரும் ஆக்கினையை அறிவித்ததுமன்றி அவர்கள் புறதேசத்தாருக்குச் சிறைப்படுவார்களென்பதையும், கிறிஸ்துவின் ஆளுகை வரும் என்பதையும், இஸ்ரவேலர்திரும்பச் சவுக்கியம் அடைவார்களென்பதையும் அறிவித்தான். கிறி.785

ஒபதியாவின் தீர்க்கதரிசனம். இவன் ௩௲௪௱௰௯. வருஷத்திலே தீர்க்கதரிசனஞ் சொன்னான். அதிலே யூதருக்குப்பகைளுராகிய ஏதோமியருக்கு வரும் கேடும், கிறிஸ்துவின் ஆளுகை எங்கும் பலப்படுவதும் அறிவித்திருக்கும். கிறி, 588

யோனாவின் தீர்க்கதரிசனம். இவன் ௩௲௱௪௮. வருஷத்திலே தீர்க்கதரிசனஞ்சொன்னான். அதிலே நினிவேக்கும்யோனாவுக்கும் நடந்த சங்கதிகள் சொல்லப்படும். கிறி. 856

மீகாவின் தீர்க்கதரிசனம். இவன் ஏசாயாத் தீர்க்கதரியின் காலத்திலே தீர்க்கதரிசனஞ் சொன்னான். அதிலே அவன் சொன்ன புத்திகளும், சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் வரும் அழிவும், கிறிஸ்துநாதர் இன்ன விடத்திற் பிறப்பாரென்பதும் காட்டியிருக்கும். கிறி 699

நாகூமின் தீர்க்கதரிசனம். இவன் ௩௲௨௱௮௪ வருஷத்திலே தீர்க்கதரிசனஞ் சொன்னான். அதிலே நினிவேநக

Digitized by Google

ரத்தார் மறுபடி துன்மார்க்கத்துக்குத்திரும்பினதினாலே அ ந்தக்கரம் அழியும்படி கைவிட்டது சொல்லப்படும்
கிறி. 720

ஆபக்கூக்கின் திர்க்கதரிசனம். இவன், ௬௱௱௨௰. வருஷத்திலே திர்க்கதரிசனம் சொன்னான். அதிலே அவன் யூதர் செய்த பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டதும், கலுதேயர் இவர்களுக்குச் செய்த உபத்திரங்களும், கலுதேயர் ஆக்கினைப்படுவார்களென்று அறிவித்ததும், அவன் செய்த விண்ணப்பமும் அடங்கும். கிறி. 612

செப்பனியாவின் திர்க்கதரிசனம். இவன், ௬௱௱௯௰. வருஷத்திலே திர்க்கதரிசனஞ் சொன்னான். அதிலே அவன் யூதரைக் கடிந்து அவர்களுக்கு வரும் தண்டனையை அறிவித்ததும், அவர்களைச் சூழவிருந்த பெலிஸ்தரும், மோவாபரும், அம்மோனரும், ஆசீரியரும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், விக்கிரகாராதனே அழியக் கிறிஸ்துவின் ஆளுகை பலப்படுமென்பதும், யூதர் மனந்திரும்பி மறுபடியும் அங்கீகரிக்கப்படுவார்களென்பதுஞ் சொல்லப்படும். கிறி. 609.

ஆகாயின் திர்க்கதரிசனத்திலே யூதர்கள் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டும்படி அவர்களைத் தூண்டிவிட்டதும் கிறிஸ்து வருவாரென்பதும் காட்டியிருக்கும்.
கிறி. 518

சகரியாவின் திர்க்கதரிசனத்திலே, தேவாலயம் கட்டும்படி யூதரை முயற்சிபண்ணினதும், அவர்களுக்குச்சொன்ன புத்திகளும், சுவிசேஷம் பலப்படுங்காலத்தில் உண்டாகுஞ் சந்தோஷமும், சுவிசேஷம் புறத்தேசத்தாருக்குள் விருத்தியாவதும், சத்துருக்களுக்கு வருந் தண்டனையுங் காண்பிக்கப்படும். கிறி. 518

மல்கியின் திர்க்கதரிசனத்திலே, யூதருக்கு அவன் சொன்

ன புத்திரருங்கிறிஸ்து வருங்காலங் கிட்டவென்பதும், அவருக்குமுன் ஒரு தாளுபதி வருவாரென்பதும், கடைசி நாட் பயங்கரமென்பதுங் காணப்படும். இவன் ௪௱௨௰ வருஷமளவிலே தீர்க்கதரிசனம் சொன்னான். கிறி. 420

புதிய ஏற்பாட்டின் விபரம்.

மத்தேயு முதலிய நான் குசுவிசேஷங்களிலும், யோவானிஸ்நானனுடைய சரித்திரமும், கிறிஸ்து நாதருடைய உற்பத்தி முதல் அவர் மரித்து உயிர்த்தெழுந்த நாள்வரையும் நடந்த சங்கதிகளும், அவர் நமக்குச் செய்த இடேற்றமும், அவர் போதித்த போதகங்களும், அற்புதங்களும் அடங்கும்.

நடபடி ஆகமத்திலே அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதும், அவர்களுக்கு நடந்த சங்கதிகளும், அவர்கள் சொன்ன போதகங்களும், செய்த அற்புதங்களும் அடங்கும்.

பவுல், பேதுரு, யாக்கோபு, யோவான், யூதா என்பவர்கள் எழுதின நிருபங்களிலே அவர்கள் கிறிஸ்து சபைக்குச் சொன்ன போதகங்கள் அடங்கும்.

யோவான் சொன்ன வெளிப்படுத்தலிலே கிறிஸ்து மார்க்க விருத்தியையும், அவர் மறுபடி வருவதையும், அவர் நடுத்தீர்ப்பதையும், அவருடைய விரோதிகளுக்கு வருந் தண்டனையையும், அவரைப் பற்றினவர்களுக்கு வருஞ் சுகத்தையும் தீர்க்க தரிசனமாகச் சொல்லியிருக்கும்.

முற்றிற்று.

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

3 2044 038 360 806

Digitized by Google

Digitized by Google